

நேசம்
ன்.சீதாலெட்சுமி
நேசம் ★
நிமிடத்துள்
நேசம்
ன்.சீதாலெட்சு

## நூல் விவர அட்டவணை

| | |
|---|---|
| நூலின் பெயர் | : நிமிடத்துள் நேசம் |
| ஆசிரியர் | : என்.சீதாலெட்சுமி |
| உரிமை | : ஆசிரியருக்கு |
| மொழி | : தமிழ் |
| முதல் பதிப்பு | : செப்டம்பர், 2012 |
| தாள் | : 11.6 kg. வெள்ளைத் தாள் |
| நூலின் அளவு | : 1 x 8 கிரவுன் |
| அச்சு எழுத்து | : 11 புள்ளி |
| மொத்தப் பக்கங்கள் | : 252 |
| பைண்டிங் | : சாதா அட்டை |
| நூல் வெளியிடுவோர் | : அருணோதயம்<br>5/3, கௌடியா மடம் சாலை,<br>இராயப்பேட்டை,<br>சென்னை - 600 014. |

**விலை: ரூ.100.00**

| | |
|---|---|
| கணினி அச்சு | : வேலன் லேசர் - 94441-01753 |
| அச்சிட்டோர் | : ஜீ.எம்.கிராபிக்ஸ்,<br>சென்னை-14. |


# நிமிடத்துள் நேசம்

## பதிப்புரை

தமிழ் நாவல் ஆசிரியர்கள் வரிசையிலே குறிப்பிடத்தக்கவராகப் புகழ்பெற்றுத் திகழ்பவர் திருமதி. என்.சீதாலெட்சுமி அவர்கள்.

படிப்பவர்களெல்லாம் வரிக்குவரி ரசித்துப் பாராட்டி எழுதுவதைப் பார்க்க மிக்க மகிழ்ச்சியாக உள்ளது. நல்ல சிந்தனைகளுக்கும் நல்ல கதைகளுக்கும் மக்களின் வரவேற்பு இருக்கும் என்பது தெளிவாகிறது.

நிறைய எழுதத் தூண்டும் வாசகர்களின் பாராட்டுதல்களுக்கும், மேலும் மேலும் சுவையாக எழுதும் ஆசிரியைக்கும் எங்களின் வாழ்த்துக்களும், பாராட்டுக்களும் என்றும் உண்டு.

மேலும் மேலும் நல்ல எழுத்துக்களைத் தந்து வாசகர்களுக்கு மகிழ்ச்சி ஊட்டுங்கள்.

- அருணோதயம் அருணன்

# நிமிடத்துள் நேசம்

## மணி மாலை 5:59

''தீப மங்கள ஜோதி நமோ நமோ

தூய அம்பல லீலா நமோ நமோ

தேவி குஞ்சரி பாதா நமோ நமோ... ம்ம்ம்... அப்தம் என்னம்மா வரும்?''

''அருள்...''

''ஹான்... அருள் தாராய்!''

''ம்ம். கக்கண்டு தா... கக்கண்டு... கக்கண்டு...'' - தன் செல்ல மகள் ஸ்ரீஷா, அவளுக்கே உரிய மழலையில்

ஸ்லோகத்தை அவசரமாய் சொன்னதன் ரகசியம் புரிந்தவளாய் சிரித்தாள் ஜானகி.

அவள் கேட்ட கற்கண்டை கை நிறைய அள்ளிக் கொடுக்க மனம் உந்தியபோதும், நல்ல பழக்கங்களைப் புகட்டும் தாயவளாய் ''வெற்றிவேல் முருகனுக்கு ஹரோ ஹரா-ன்னு சொல்லு கண்ணு'' என்றாள் மகளிடம்.

ஸ்ரீஷாவின் தலையோ மறுப்பைக் காட்டும் விதமாய், வலமும் இடமுமாய் மின்னல் வேகத்தில் சிலும்பியது!

வலது கையை ஏந்தியவாறு வைத்து, இமைகள் எனும் இறக்கையை படபடவென அடித்துக் கொண்டு, ஒரு காலால் தரையில் பாலன்ஸ் செய்துகொண்டு ''க்கக்கண்டு தா...'' என்றாள் மகள், உதட்டைச் சப்பியவாறே.

'அப்பா... மாதிரியே பிடிவாதம்' என்று மனதிற்குள் எண்ணியவள், நான்கு கற்கண்டு துண்டுகளை மகளின் சிட்டுக் கைகளுள் வைத்தாள்.

''ஹையா...'' என்று குதித்த கன்று, அதை ஒரே வினாடியில் உள்ளே தள்ளி, கடக்முடக் என்று மென்று, ''சூப்பர்'' என்று கமெண்ட் கொடுத்துவிட்டு, வெளியே ஓடியது.

''அம்முக்குட்டி, வெளிய ஓடாதடா! அம்மா உம்மாச்சி கும்பிட்டு வரவரைக்கும், இங்கேயே இரு. சொல்றதைக் கேளு...'' என்று ஜானகி குரல் கொடுக்கும்போதே,

''பீஸ்...மா! ராகுல் கூட வெளாடுறேன்... ஹைட் அண்ட் சீக் கேம் தா... விழாம வெளாடுறேன்'' - மகள் வெளிக்கதவருகே இருந்து பதிலுக்குக் குரல் கொடுத்தாள்!



தான் அடுத்துக் கேட்கப் போகும் கேள்விகளை யோசித்து, அதற்கும் சேர்த்தே பதில் சொன்ன சின்ன மகளை மீண்டும் அவளது தந்தையுடன் ஒப்பிட்டது ஜானகியின் மனம். ஆனால், ஒரே வித்தியாசம் - மகளது பதில்கள் தன் கேள்விகளுக்காக... ஆனால் அவளது தந்தையதோ... ஹ்ம்ம்... அவனிடம் கேள்வி கேட்கும் தைரியம் தனக்கு உண்டா என்ன... ஏன் சரிவர பேசும் தைரியம் கூட இந்த நான்கரை வருடங்களில் வரவில்லையே!

தன் யோசனையின் பாதையில் அவள் தடம் பதித்து, வேகமாய் ஓடும் முன்னர், ''ம்மா...'' என்ற பூக்குரல் தடை விதித்து, ''கதவு திறந்து விடுங்கம்மா...'' என்று ஆணையிட்டது!

இனி ஒவ்வொரு நிமிடத் தாமதத்திற்கும், மகளின் உற்சாக ஸ்ருதி குறைந்து கொண்டே வந்து, முகாரி ஸ்ருதி ஏறிக்கொண்டே போகும் என்பதை உணர்ந்தவளாய், இடுப்பில் சொருகி இருந்த சாவியை எடுத்து வந்து, வீட்டின் இரும்புக் கதவைத் திறந்து விட்டாள்.

வசிப்பது மும்பையின் புறநகர் வட்டாரம் என்பதாலும், சுற்றிலும் தமிழ் குடும்பங்கள் நிறைய உள்ளன என்றாலும் யாரையும் சீக்கிரத்தில் நம்பிவிட வேண்டாம் என்ற கணவனின் எச்சரிப்பாலும், ஜானகி எப்போதுமே வீட்டின் இரும்புக் கதவையும், கூடவே மரக் கதவையும் சேர்த்தே பூட்டிக் கொண்டு இருப்பாள்.

இப்போது, விளக்கேற்றும் வேளை என்பதால் மரக் கதவை மட்டும் திறந்துவிட்டு, இரும்புக் கதவைப் பூட்டியே வைத்திருந்தாள். மும்பையில் அதிகரிக்கும் குற்றங்களின் தாக்கம்!

மகளுக்குக் கதவைத் திறந்து விட்டவள், ''என் அம்முக்குட்டி அப்பா சொல்ற பேச்சைக் கேட்பதானே?'' எனக் கூறி, மகள் ஓடிவிடாமல் இருக்க அவளது வலது கையைத் தன் வசம் வைத்துக் கொண்டாள்.

''தனக்குச் செல்லம் என்பதை விடவும், தந்தையின் பெயரை இழுத்தால் மகள் நின்று கேட்பாள்'' என்பது அந்தத் தாயின் கணிப்பு.

அதைப் பொய்யாக்காமல் ''ஓ, கேட்பாளே!'' என்று அவளும் தலையை பலமாய் ஆட்ட,

''அம்முக்குட்டி, நம்ம வீட்டுக்குப் பக்கத்திலேயே விளையாடணும். கீழ போகக் கூடாது என்னடா... அப்பாவுக்குத் தெரிஞ்சா கோவிப்பாங்க...'' என்று தந்தை சொன்னதாய் சொல்லவும்,

மறுப்பென்ற பேச்சுக்கே இடமில்லாமல் ''ஓ.கே.மா... இங்கவே வெளாடுறேன்'' என்று உடனே ஒத்துக் கொண்ட மகவு.

''ஒன் ஹவ(ர்)ல வீட்டுக்கு வந்திடணும், இல்லமா?'' என்று தலையைச் சாய்த்து, சொல்வது சரிதானே என்பது போல் கேட்டது.

''ஆமாடா குட்டி!'' என்று வாய் சொல்லும்போதே, ''குட்டிம்மா, ஒன் ஹவர் தான் டைம். அதுக்குள்ளே வந்திடணும்'' என்று தன் கணவன் சொல்வது நினைவிலாட, முகமும் பூரிப்பாய் மலர்ந்தது.

தந்தை என்றதும், தான் விளையாடப் போகும் நேரத்தில் அவன் என்ன சொல்லுவான் என்று யூகித்து, அந்தக் கேள்விக்கான பதிலைச் சொன்ன மகளின் கெட்டிக்காரத் தனத்தை, அந்தத் தாயின் மனம் சிலாகித்தது!



தன் இரண்டே முக்கால் வயதுக்கு மீறிய அறிவுக் கூர்மை இருந்தபோதும், பேச்சில் இந்த 'ர' மட்டும் ததிகினத்தோம் தான்! சில சமயங்களில் சரியாய் வரும் 'ர', பற்பல சமயங்களில் 'த'வாய் மாறிவிடும். திருத்தினாலும், வேண்டுமென்றே 'த'வென்றே கூறி, கண் சிமிட்டிச் சிரிக்கும் செல்லக் கழுதை!!

எப்போதுமே, தன் பிள்ளை செய்யும் குறும்புத் தனத்தில் லயிக்கும் தாய், அதை தன் சொந்தங்களுடன் பகிர்ந்து கொள்ள ஆசை கொள்வாள் தானே! அதைப் போலவே, ஜானகியும் ஆசை கொண்டாள்!

ஆசை கொண்டு என்ன பயன்? சொந்தமென்று அவளுக்குத்தான் யார் இருக்கிறார்கள்?

தாய்... தந்தை... மாமியார்... நாத்தனார்... ஏன் கணவன் கூட சொந்தமற்றவன் போலல்லவா நடந்து கொள்கிறான்?

ம்ஹூம். ஒரேடியாய் அப்படிச் சொல்லிவிட முடியாது! மும்பை பயணத்திற்கு முன்னர் அவளை ஓர் வேலைக்காரியை விடக் கேவலமாய் நடத்திக் கொண்டிருந்த புகுந்த வீட்டு உறவுகள், கடந்த இரண்டு... இரண்டரை வருடங்களாய் ஓர் மனுஷியாய் மதித்துப் பேசுகின்றனர்!

உருகி வழியவில்லை என்றாலும் ஒதுக்கியும் வைக்கவில்லை!

அதற்கான காரணம்... தங்கள் மகனின் அன்பு மனைவியாய் ஜானகி போனதால் அல்ல!

மகனின் வெறுப்புக்குத் தான் ஆளாகி விட்டோம்... மருமகளோடாவது உறவு நீடிக்க வேண்டுமே என்ற பயத்தில்!

''நான் நலம். நீ நலமா?'' என்றிருக்கும் உறவில், எங்கே மகளின் மழலையைப் பகிர்வது? அதுவும், ஒளிவு மறைவில்லாமல்?

ஆதலால்... அவளுக்கென்றிருக்கும் ஒரே சொந்தம் மகள் தான்!

இந்த எண்ணம் வந்ததும், ''ம்ஹூம்'' என்று மகளைப் போல் வேகமாய் சிலும்பியது தலை.

மகள் மட்டுமல்ல... அவளது தந்தையும் சொந்தம் தான்... என்னவொன்று மகளிடம் பேசுவது போல் அருவியாய் தன்னிடம் பேச மாட்டானே ஒழிய, அவ னால் தான் அவளுக்கு இந்த இரண்டரை வருடங் களேனும் சந்தோஷமாய் இருக்கின்றன. அதற்கு முன்னர்... சாகும் நிலையில் கூட தண்ணீர் தராத பாலைவனமாய் அல்லவா இருந்தது வாழ்வு!

கணவன் மட்டுமில்லையென்றால்... அவள் இறந்து, அவளுக்குத் திதி கொடுக்கக் கூட ஆள் இல்லாமல் போயிருக்கும்!?

வேராளாய் ஒதுங்கி நின்ற கணவன், தன்னவனாய் அருகே நிற்பது போன்ற பிரம்மை தோன்றிவிட, ஒதுக் கத்தைக் காட்டினாலும் அவனுடன் சேர்ந்து வாழும் இவ்வாழ்வு தனக்கு நிலைக்க வேண்டும் என்று மனதார கடவுளைப் பிரார்த்தித்தாள்.

அன்று வியாழக்கிழமை என்பதால், சாய்பாபாவை துதிபாடி, அந்த சாயீசனுக்கு அரிசி பாயசம் படைத்து, அவள் எழவும், ''அம்மா...'' என்று பிள்ளை வெளியே குரல் கொடுக்கவும் சரியாக இருந்தது. நடுநடுவே,



விளையாடும் பிள்ளையை எழுந்து சென்று பார்க்கவும் அவள் மறந்திருக்கவில்லை.

''அதற்குள் ஒரு மணி நேரம் ஆகிவிட்டதா?'' என்று வியந்து மணி பார்த்தவள், ஒரு மணி நேரம் முடிவதற்கு ஐந்து நிமிடங்கள் இருப்பதை உணர்ந்து, மகளை மெச்சிக் கொண்டாள்!

கதவைத் திறந்த தாயிடம் தூக்கச் சொல்லி கை நீட்டிய ஸ்ரீஷா, ''ஒன் ஹவர் ஆச்சாமா... ராகுல் அண்ணா கிட்ட சொன்னேன்... ஒன் ஹவர் ஆவும் போது சொல லச் சொல்லி... அவன் சொல்லவே இல்லை... நானே வந்துட்டேன்...'' என்றாள் ஐயமாக.

''ஒரு மணி நேரம் ஆக, இன்னும் அஞ்சு நிமிஷம் இருக்கு...'' என்று ஜானகி சொல்லியது தான் தாமதம்.

''நா போய் வெளாடுறேன்'' என்று தாயின் இடுப்பி லிருந்து இறங்க முற்பட்டாள் மகள்.

''ஃபைவ் மினிட்ஸ் தான்டா இருக்கு... நீ போய் விளையாட்டை ஆரம்பிக்கிறதுக்குள்ள முடிஞ்சிடும்...'' என்று அவள் சொல்ல, சிறு உதடு பிதுக்கலுடன் ஒத்துக் கொண்ட மகள், சட்டென, ''ஹையா... அம்மா இங் கிலீஷ் பேசிட்டா'' என்று கைகொட்டிச் சிரித்தது.

''பைவ் மினிட்ஸ்'' எனத்தான் சொன்னது. ''இங்கிலீஷ்'' வார்த்தையாம்! கிண்டல் பண்ணுகிற அழகைப் பாரு!'' என்று சந்தோஷமாய் நொடித்த மனம்,

''நான் வெறும் மூணாம் கிளாஸ் தான் படிச்சிருக் கேன்... அதுக்கு மேல படிக்க வைக்க உனக்கு மாதிரி எனக்கு எங்கப்பா நல்லவரா இல்லையே!'' என்று கூறத் துடித்தது.

ஆனால், தன் சோகங்களை மகளிடம் பகிர்ந்து கொள்ள வெட்கி, ''அம்மாவைக் கிண்டல் பண்றியா... போ... உன் கூட டூ...'' என்று லேசாய் கண்ணைக் கசக்கினாள் அன்னை.

''அச்சோ, ச்சும்மா சொன்னேமா... அலாத'' என்ற மகள், தாயின் கன்னங்களில் மென்மையாய் முத்தம் வைத்தாள்.

தாயும் பதிலுக்கு ஓர் அழுத்தமான முத்தத்தைக் கொடுத்துவிட்டு, அவளைத் தூக்கியவாறே உள்ளே சென்று, முகம் - கை - கால் கழுவிவிட்டு, சாய் நாதனின் அருள் பெற்ற பாயசத்தைக் கிண்ணத்தில் ஊற்றி ஸ்பூன் போட்டுக் கையில் கொடுத்தாள்.

இரண்டு வாய் பாயசம் உள்ளே போனது ''உனக்கு?'' என்று தாயை வினவியது, அவளது வயிற்றில் உதித்த வெண்முத்து!

''இதோ...'' என்றவள் தானும் ஓர் கிண்ணத்தை எடுத்துக் கொண்டு, மகளின் அருகே சோபாவில் அமர்ந்தாள்.

பாயசமே கவனமாய் இருந்த மகளிடம் ''நல்லா இருக்காடா?'' என்று அவள் வினவியதற்கு, வார்த்தையால் பதில் சொல்லும் நேரத்தைக்கூட மகள் வீணாக்க விரும்பவில்லை போலும்... ''பிரமாதம்' என்ற முத்திரையை மூன்று விரல்களைக் கொண்டு காட்ட முயன்று, அது முடியாமல் இரண்டு... மூன்று... நான்கு... ஐந்து என்று தன் பிஞ்சு விரல்களால் வண்ணக் கோலமிட்டாள் அவள்.

''சரி... சரி சாப்பிடு'' என்று ஜானகி சிரிக்க,



''சாப்பிட்டேனே! இன்னும் கொஞ்சு தாமா...'' என்று கைகளைக் குவித்துக் கெஞ்சினாள் மகள்.

மீண்டும் கிண்ணம் நிறைய ஊற்றிக் கொடுத்ததும், முன் போன்ற உற்சாகத்துடன் உண்ண ஆரம்பித்தவளுக்கு, அரைக் கிண்ணம் காலியானதும் அதன் மேலிருந்த மோகம் கொஞ்சம் கொஞ்சமாய் குறையத் தொடங்கியது.

அதன் அறிகுறியாய், சோபாவை விட்டு இறங்கி, ஒற்றை படுக்கையறை கொண்ட அந்த வீட்டைச் சுற்றி வந்தவாறே அதை சுவைத்தாள்.

ஓடிக்கொண்டும், நடந்து கொண்டும் உண்டதால், கிண்ணத்திலிருந்த பாயசம் கைகளில் அப்பிவிட, ''அய்யே...'' என்று முகத்தைச் சுளித்தவள், சட்டென வரவேற்பறையின் சுவரில், டி.வி. அருகே துடைத்து விட்டாள். பிங்க் வண்ணச் சுவரில், கோதுமை வண்ணத்திலிருந்த பாயசம் அழகாய் பதிய, அதில் ஈர்க்கப்பட்டு, தன்னை ஓர் குட்டி ரவிவர்மாவாய் பாவித்துக் கொண்டு மேலும் மேலும் வரைந்தாள்.

''ஒரு இடத்தில் உட்கார்ந்து சாப்பிடு, கண்ணு'' என்று மகளிடம் சொல்லிக் கொண்டே இருந்த ஜானகி,

அவள் பாயசத்தை வண்ணமாக்கி, சுவரை கார்டு போர்டாக்கிக் கொண்டிருந்த மகளைக் கண்டதும் ''என்ன வேலை செய்ற?'' என்று கூவியவாறே, மின்னல் வேகத்தில் மகளை அங்கிருந்து நகர்த்தினாள்.

இந்த நேரம் அவளது கணவன் இருந்திருந்தால், ''பிள்ளைன்னா அப்படித்தான் சுவரில வரைவா... சும்மா அவளை அடக்கிட்டே இருக்கக்கூடாது'' என்று

மனைவிக்கு அறிவுரை கூறுவது போல், சுவற்றிடம் பேசியிருப்பான்.

அவனது வார்த்தையை மீறி எந்தவொரு செயலையும் செய்யும் துணிவற்றவள் என்பதால், ஜானகியும் அடங்கிவிடும் சுபாவம் கொண்டவள் தான்.

ஆனால், சுவற்றில் கிறுக்கும் பழக்கம் மட்டும் ஜானகியால் ஏனோ சகித்துக் கொள்ள முடியாது.

அவன் அலுவலகம் கிளம்பிச் சென்றதும், மகளுக்கு உணவூட்டும் வேளையில் ''அம்முக்குட்டிக்கு பிடிச்ச ரோஸ் கலர் - சுவர்ல - கிறுக்கினா... அப்புறம் சுவரு கறுப்பு கலர்ல ஆகிடும்... அப்புறம் அம்மு இருக்க வீடு கறுப்பு கலர்-ல பேய் வீடு மாதிரி இருக்குன்னு எல்லோரும் கேலி பண்ணுவாங்க... நம்ம வீட்டை அவங்க கேலி பண்ண நமக்கு கஷ்டமா இருக்கும் தானே... அதனால, சுவத்தில கிறுக்கக் கூடாதுடா அம்மு'' என்று மெல்ல மெல்ல சொல்லிப் புரிய வைப்பாள்.

தலையையும் கண்ணையும் உருட்டி, உருட்டி, ''சரிமா... சரிமா'' என்று கேட்கும் பிள்ளை, தந்தை வந்து ''அப்பாக்கு A எழுதிக் காண்பிடா கண்ணு'' என்று சொன்னதும், வேகமாய் செல்வது சுவரிடம் தான்!

ஸ்லேட் என்று ஒன்றிருப்பதே அப்பாவிற்கும் பிள்ளைக்கும் மறந்துவிடும்!

இருவருமாய் அமர்ந்து கொண்டு, சுவர் முழுதும் பெரிய A, சின்ன A என்று கிறுக்கித் தள்ளுவார்கள். A இல் ஆரம்பிக்கும் விளையாட்டு, பூனை வரைவோமா... யானை வரைவோமா... அம்மா வரைவோமா என்று நீண்டு கொண்டே போகும்.



சமையலறையில் வேலை செய்து கொண்டே அவர்கள் அடிக்கும் கொட்டத்தை கவனிக்கும் ஜானகிக்குத் தான், நெஞ்சம் பொருமும்.

அதற்காக, பொருமும் நெஞ்சத்தை வெளியிட்டு ''சுவத்தைக் கெடுக்காதீங்க'' என்று சொல்லவும் முடியாது அவளால்!

வார்த்தைகளை அடக்கிக் கொண்டு, தன் போக்கில் வேலை செய்பவள், அப்பாவும் பெண்ணும் மதிய உறக்கத்திற்குச் சென்றதும், சோப்புத் தூள் கலக்கிய தண்ணீருடன் துணியை எடுத்துக் கொண்டு, சுவற்றை துடையோ துடை என்று துடைத்தெடுத்து விடுவாள்.

ஒரு நாள், ''உங்கம்மா துடைக்கிற துடையில, சுவத்தில இருக்க செங்கலையும் மீறி, பக்கத்து வீட்டு செங்கலே பேர்ந்து வந்திடும் போல'' என்று கணவன் கூறிய பின்னரும், ஜானகி இந்தப் பழக்கத்தை விட்டாள் இல்லை!

''சித்திரமும் கைப்பழக்கம், செந்தமிழும் நாப்பழக்கம்'' என்பது போல், இப்போதும் அப்பழக்கம் விருட்டென தலை தூக்கிவிட, சுவற்றில் மகள் வரைந்திருந்த பாயசக் கோலத்தை மின்னல் வேகத்தில் துடைத்தெடுத்தாள்.

''ஒரு நிமிஷம் அசந்து மறந்து இருந்தா... ஏதாவது பண்ணிடுவியே!'' என்று மகளை லேசாய் கடிந்து கொண்டே அவள் வேலை பார்க்க,

சின்னக் குட்டியோ முகத்தை மூஞ்சூராய் சுருக்கிக் கொண்டு தாயின் அருகே குத்துக்காலிட்டு அமர்ந்திருந்தது.

''மகளை விடவும் இந்த வீடு... அப்படியென்ன பெரிது?'' என்று ஜானகியே பல தரம் தன்னுள் கேள்வி எழுப்பியதுண்டு.

இது ஒன்றும், அவள் தந்தை அவளுக்கு சீதனமாய் கொடுத்த வீடில்லை!

இந்த வீட்டை வாங்க, அவளது தாலிக் கொடியை அடமானம் வைத்து அவள் பணம் கொடுக்கவில்லை!

ஏன் இந்த வீட்டிலிருக்கும் ஒரு பொருளைக்கூட அவள் கொண்டு வரவில்லை!

இதையெல்லாம் மீறி, அவளுக்கு இந்த வீட்டின் மீது ஒரு பிடிப்பு... ஒரு பெருமை.. ஒரு ஆசை...

திருமணத்திற்கு நான்கு ஆண்டுகள் முன்பே, அதாவது அவளது கணவன் மும்பைக்கு வந்து நான்கு மாதங்களிலேயே வாங்கிய வீடு என்பதாலா?

இல்லை, இந்த வீடு வாங்குவதற்காக யாரிடமும் கை ஏந்தாமல் - ஏன் அவனது தந்தையிடம் கூட கை ஏந்தாமல் - அவனே லோன் போட்டு வாங்கினான் என்பதாலா?

இல்லை, மும்பை மாநகரில் வீடு வைத்திருப்பதே ஒரு பெருமைக்குரிய விஷயம் என்பதாலா?

இல்லை, மாட்டுக்கொட்டகையில் படுத்துறங்கிக் கொண்டிருந்த தன்னை இந்த வீட்டில் அவன் கொண்டு வந்து வைத்ததாலா?

ஏதோ ஒன்று. ஜானகிக்கு இந்த வீடென்றால் உயிர்! இந்த வீட்டின் சொந்தக்காரரான கணவன் என்றால் உயிர்மூச்சு!



அதனாலேயே, வீட்டை மிகவும் சுத்தமாப் பராமரிப்பாள் அவள்! தினமும் இரு முறை வீடு பெருக்கி, ஒரு முறை வீடு துடைத்து, வாரம் ஒரு முறை டி.வி. ஃப்ரிட்ஜ், அடுப்பு மேடை, சோபா என்று அனைத்தையும் சுத்தம் செய்து... என்று. அவளது வீடு பராமரிக்கும் பட்டியல் சற்றே நீளம் தான்!

பாயசம் அப்பிய சுவர் என்ன நெயில் பாலிஷ் தடவை நகமா? கையை விட்டு வராமல் அடம் பிடிப்பதற்கு? வேகமாகவே வேலை முடிந்தது!

சோப்பு தண்ணீர் நிரம்பிய ஜக்கை எடுத்துக் கொண்டு திரும்பியவள், தன் முகத்தையே பார்த்தவாறு அமர்ந்திருந்த பிள்ளையைக் கண்டதும் முகம் இளகினாள்.

தாயின் முகத்தில் சிரிப்பைக் கண்டதும், ''கோபம் போச்சாமா...'' என்றது குழந்தை.

'எனக்கு கோபம் வரும் என்பதே, நீ சொல்லித் தான் எனக்குத் தெரிகிறது!' என்றெண்ணியவள், ''போயே போச்சே!'' என்று மகளை இடுப்பில் இடுக்கிக் கொண்டாள்.

அவளை அணைத்தவாறே குளியலறைக்குள் சென்றவள் ''இனிமே, சுவத்தில கிறுக்காதே! என்னடா?'' என்றாள் கொஞ்சலாய்.

பதிலுக்கு ''ஓ.கே.ம்மா. இனிமே செய்யவே மாட்டேன்'' என்ற மகவு, அடுத்த நாளே க்ரையான் எடுத்துக் கொண்டு அறை அறையாகச் சுற்றி வரும் என்பதை அறியாதவளா என்ன?

அதனால், மேலும் அழுத்திக் கூறாமல், இரவு உணவைத் தயார் செய்ய ஆயத்தமானாள்!

# மணி மாலை 7:15

காலையில் உணவுண்ணும் வேளையில் ''அம்மா... இட்டிலியே தானா... எனக்கு பூதி தா வேணும்'' என்று அடம் செய்திருந்த மகளையும்,

''இப்போ இந்த இட்லியை ஒழுங்கா சாப்பிட்டா, நைட்டுக்கு... பூரி... உருளைக் கிழங்கு... தயிர் பச்சடி... எல்லாம் செஞ்சு தருவா அம்மா. ம்ம் சாப்பிடு... சாப்பிடு...'' என்று அவளைக் கொஞ்சும் சாக்கில், இரவு தனக்கு என்ன வேண்டுமென்று சொல்லிவிட்டுச் சென்ற கணவனையும் மனதில் வைத்து, உருளைக் கிழங்குகளை நன்றாக கழுவிவிட்டு, குக்கரில் இட்டு மூடினாள், ஜானகி.

கோதுமை மாவை எடுத்து, அளவாய் தண்ணீர் ஊற்றிக் கொண்டிருக்கையில், ஸ்ரீஷாவின் பொறுமை பறந்திருந்தது.

''இதக்கி விடுமா... இதக்கி... இதக்கிவிடு...'' என்று தாயின் இடுப்பிலிருந்து தவ்விய மகள், ஜானகியின் கையிலிருந்த தண்ணீர் செம்பைத் தட்டிவிட, அளவாய் ஊற்ற வேண்டிய நீர் மினி குளமாய் மாறி, பூரிக்கு வேண்டிய மாவை கோதுமை தோசைக்கு வேண்டிய மாவாய் ஆக்கிவிட்டிருந்தது.

அவசரமாய் இறங்கிய மகளைத் திட்டத் துடித்த நாவை ''தண்ணீரை செம்பில் எடுக்காமல், டம்ளரில்



எடுத்திருந்தால் இந்த பிரச்னை வந்தே இருக்காதே? செய்யும் தப்பை நீ செய்துவிட்டு, வளரும் பிள்ளையின் துறுதுறுப்பைக் குறை சொல்லாதே!'' என்ற அறிவு மணி மூளைக்குள் அடித்து, நிறுத்தியது.

இது தானாய் அடித்த மணியல்ல. பல முறைக்கும் மேலாக, கணவனாகப் பட்டவன் ஓங்கி அடித்திருந்த வீர மணி!

சாலையில் செல்லும்போது கல் தடுக்கி விட்டால், ''கல் தடுக்கி விட்டுடுச்சு'' என்று காரணம் சொன்னாலே மூக்கிற்கு மேலே கோபமும் வரும் அவனிற்கு.

''கண்ணை எங்கேயோ வச்சுக்கிட்டு நடந்தது உன் தப்பு! அதுக்கு எதுக்கு கல் மேல பழி போடறே!'' என்று சூடாய் வந்துவிழும் வார்த்தைகள். அவளிடம் மட்டுமல்ல, அவனது தாய்... இரு சகோதரிகள்... தந்தை... என்று யாரையும் வைத்துப் பேசும் பழக்கமே அவனுக்குக் கிடையாது.

அப்படிப்பட்டவனை... யாருக்கும் அஞ்சாதவனை... சென்ட்டிமென்ட்டில் தாக்கி... அவன் மனதிற்குப் பிடிக்காத தன்னை மணம் செய்து... என்னென்னவோ நடந்து முடிந்து விட்டது! ஹ்ம்ம்! யானைக்கும் அடி சறுக்கும் என்பது உண்மையே!

அவனுக்கு சறுக்குவது இருக்கட்டும்... இப்போது தண்ணீரை ஊற்றி, இரவு சமையலை ஒரேயடியாய் சறுக்கடித்து விட்டாயே என்று மூளை எச்சரிக்கை மணி அடிக்க, என்ன செய்வது என்று ஒரு நிமிடம் குழம்பியவள், கூட கொஞ்சம் மாவைப் போட்டு பூரி மாவாகவே பிசைந்து எடுத்து விட்டாள்.

அடுத்த நாள், தன் கணவனுக்கான மதிய உணவாய் சப்பாத்தியை போட்டுவிட வேண்டியதுதான். கொண்டைக்கடலை கறியும், சப்பாத்தியும் என்றால் மும்பைக்காரர்கள் போல் அவனுக்கு மிக பிரியம்! என்ன, காலை ஏழு மணிக்கு அவன் கிளம்புவதற்குள் போட்டு எடுக்க வேண்டும்! நாள் முழுதும் உழைப்பவனுக்காக, அரை மணி நேரம் கூடுதலாய் உழைப்பதில் சங்கடம் ஏதுமில்லை!

அவள் மாவுடன் கீழே அமரும்போது, ''ம்மா... நா வதையவா?'' என்ற கேள்வியுடன், ஸ்ரீஷா மீண்டும் சமையலறைக்குள் நுழைந்து விட்டாள்.

சோம்பி இருக்கும் வேளையில், டி.வி. பார்ப்பது கூடாது என்பது ஸ்ரீஷாவுடைய தந்தையின் கொள்கை... அவனும் செய்யமாட்டான், பெண்ணையும் அப்படி பழக்கியிருந்தான். ஒன்று அவளை வெளியே விளையாட விடுவான், இல்லை பேப்பரோ ஸ்லேட்டோ இல்லையென்றால் இருக்கவே இருக்கிறது சுவர் அதில் வரைய விடுவான்.

''போப்பா... போர் அடிக்குது!'' என்று ஸ்ரீஷா முகம் சுளிக்கும்போது, மின்னல் வேகத்தில் பூவோ... பொம்மையோ... வீடோ... ஏதோ ஒன்றை வரைந்து, ''இதை கலர் பண்ணு!'' என்று கொடுத்து விடுவான்.

வண்டி வண்டியாய் இருக்கும் க்ரையான், ஸ்கெட்ச், வாட்டர் கலர் என்று மகளரசியும் பிரித்து மேய்ந்து விடுவாள்.

''இந்த ஸ்கெட்ச் பென்சில்களை விலைக்குப் போட்டாலே, இருநூறுகள் தேறும் போலவே!'' என்று ஜானகி எண்ணுவதும் உண்டு.



''அவள் வேண்டுமென்று வாய் திறந்து கேட்பதற்கு முன்னரே, வாங்கி வந்து குவித்தால் என்னதான் செய்வது!?'' என்று அவனிடம் சொல்லத் தான் நினைப்பாள், ஆனால் முடியாமல் திரும்பி விடுவாள்! அவனைப் பார்த்தாலே, ஒரு பயம்... வீட்டை விட்டு விரட்டி விடுவானோ என்ற அச்சம்...

மனைவியின் உணர்வுகளை மதிக்கிறானோ இல்லையோ மகளின் சின்ன முகச் சுளிப்பை அவனால் பொறுக்கவே முடியாது!

''அப்பா... இந்த ரெட் கலர் தீர்ந்து போச்சு... ஆரஞ்சு கலர் மாதியே அடிக்குது... புதுசு வேணும்...'' என்று மகள், ஸ்கெட்ச் பென்சிலைக் கையில் வைத்துக் கொண்டு. நாணிக் கோணி நின்றால் போதும், தந்தையாண்டவன் உருகிப் போவான்.

''நாளைக்கு வாங்கிட்டு வரேண்டா'' என்று கூறுபவன், அந்த வார்த்தையை என்றுமே மீறியதில்லை.

மனையாள் விஷயத்திலும் இப்படியா என்றால்... ஹ்ம்ம் ஜானகி முயன்றே பார்த்ததில்லையே!

வீட்டுச் செலவுக்கு என்று அவன் கொடுக்கும் பணத்திற்குள் அனைத்துச் செலவுகளையும் சுருக்கிக் கொள்பவள், ஓரிரு மாதம் கூடக் குறைய வந்தாலும் அவனிடம் போய் நிற்க மாட்டாள்.

வீட்டுச் சாமான் வாங்குவதற்கென்று ஒரு நாளை நிர்ணயித்து, அன்று மனைவியையும் - மகளையும் அழைத்துச் செல்வான். அதுதான், அவன் வீட்டிற்குச் செய்யும் ஒரே வேலை! அதுவே, ஜானகிக்குப் பெரும்

பெருமையாய் இருக்கும்! மகளை ஏந்திய கணவன் முன்னே நடக்க, அவனது வேக நடைக்கு ஈடுகொடுத்து பின்னே ஓடும்போது கூட, ''இவன் என் கணவன்'' என்ற பெருமை நெஞ்சை நிறைக்கும்!

எண்ணங்களின் முடிவாய் ஓர் பெருமூச்சு வர, ''சொல்லும்மா... என்ன வதைய?'' என்று தாயின் தொடையில் பென்சிலால் கோலம் போடத் துவங்கி விட்டிருந்தாள் பெண்.

''ஏதாவது வரை கண்ணு!''

''ஏதாவதுன்னா?''

''ஹ்ம்ம்... பூ வரை.''

''போமா... நிறைய பூ வதைஞ்சாச்சுது!''

''ஹ்ம்ம்... அப்போ மரம்...''

''ஐயோ... ஐயோ... இங்க பாது...'' - தன்னிடமிருந்த டைரியைப் புரட்டியவள், ''எத்தனை இதுக்கு பாதுமா... தேங்கா மதம்... பூ மதம்... ச்சும்மா மதம்...'' என்று சான்றுகள் வேறு எடுத்து நீட்டினாள்.

''தேங்கா மதம் இல்லைடா... தென்னை மரம் சொல்லணும்'' என்று ஜானகி திருத்தியது, ஸ்ரீயின் மனதில் பதியவே இல்லை.

''சொல்லும்மா... என்ன வதைய?'' என்று மீண்டும் ஆரம்பித்தாள்.

''வீடு...''

''அதுவும் வதைஞ்சாச்சுது!''



''சரி... குளம் வரை... அதில பூ... வாத்து... தவளை எல்லாம் இருக்க மாதிரி...''

ஸ்ரீஷாவுக்கு ஒரே உற்சாகம். புருவங்கள் உச்சி மேடு வரை போக, வாயோ அளவிற்கு அதிகமாய் பிளந்திருக்க, ''யுரேகா!'' என்பது போல் முகத்தை வைத்திருந்தவள், ''ஹான் சூப்பர்! நான் வதையுறேன்... வதைஞ்சுட்டு காட்டுதேன்...'' என்றாள் தாயிடம்.

கூடவே, ''ம்மா... பாக்காதேமா... நா முடிச்சுட்டு தா காட்டுவேன்...'' என்று தாயின் புறமிருந்து லேசாய் திரும்பி அமர்ந்து கொண்டாள்.

அதன் பின்னும் தாய் பார்த்து விடுவாள் என்ற எண்ணம் தோன்றியதோ என்னவோ, பாட்டிகளைப் போல் கால் நீட்டி அமர்ந்து கொண்டு, முட்டிக் காலில் டைரியை வைத்து, முதுகை வளைத்து, நன்றாகக் குனித்து வரையத் துவங்கினாள்.

மகளின் செயல்களை ஒரு புன்னகையுடன் பார்த்திருந்த ஜானகி, தன் வேலையில் மும்முரமாய் இறங்க, அரை மணி நேரம் ஸ்ரீஷாவின் ''ஹான்... வாத்து எப்பிடி இருக்கும்? அதுக்கு மூக்கு இதுக்குமா? காது வாலு?'' ''தவளை என்ன கலர்-லமா இருக்கும்?'' ''என்ன பூ... ரோஸ் பூவா? ப்ளூ பூ வதையவா? ஹான் இல்லைல்ல எல்லோ பூ வதையுதேன்...'' என்ற குரல்களின் நடுவே கரைந்து போனது.

மணி ஏழரையைத் தாண்டி, சில பல நிமிடங்கள் கடந்ததுதான் தாமதம், ஸ்ரீஷாவின் கவனம் படம் வரைவதிலிருந்து மீண்டு, தந்தையிடம் தாவியிருந்தது.

கையிலிருந்த டைரியை அப்படியே போட்டுவிட்டு, வெளிக்கதவின் அருகே சென்றவள், ''ம்மா... அப்பா வதுவாங்க... கதவு ஓபன் பண்ணு...'' என்றாள் தாயிடம் திரும்பி.

''அப்பா வந்ததும் திறக்கலாம், கண்ணு! இப்போ... வந்து இதை வரைஞ்சு முடி!'' என்று ஜானகி சொன்னது எதுவும் ஸ்ரீயின் காதில் விழுவதாய் இல்லை.

''ம்ஹூம். அப்பா வதுவாங்க... ஒபன் பண்ணும்மா...'' என்று காலைத் தரையில் உதைத்துக் கொண்டு, அடமாய் நின்றாள்.

''இவளுக்கு மட்டும் எப்படித்தான் தந்தை வரும் நேரம் தெரியுமோ? மணி ஏழரையைத் தாண்டிவிட்டால், தந்தையைத் தவிர வேறெதுவுமே மனதில் நிற்காது... அவன் பத்து நிமிடம் தாமதமாய் வந்தால் கூட... பொறுக்க மாட்டாளே!'' என்று சலித்துக் கொண்டு, வீட்டின் மரக்கதவை மட்டும் திறந்து விட்டாள் ஜானகி.

கதவைத் திறந்து கொண்டிருந்த தாயைத் தள்ளிக் கொண்டு, முன்னே வந்தவள், பூட்டியிருந்த இரும்புக் கதவைக் காட்டி, ''இது...'' என்றாள் கேள்வியாக.

''அப்பா வந்ததும் தான் திறப்பேன். அம்முக்குட்டி! அப்பா கோச்சுப்பாங்க...'' என்ற ஜானகி, உள்ளே செல்ல முற்படவும்,

''ம்ம்... அம்மா...'' என்றாள் மகள், சிணுங்கலாய்.

''ம்ஹூம். கதவு திறந்திருந்தா, அப்பா வந்ததும் என்னைத் தான் திட்டுவாங்க. நான் மாட்டேன்பா...'' என்றுவிட்டு ஜானகி நகர்ந்துவிட, வேறு வழியின்றி



கிரில் கம்பிகளின் வாயிலாக தந்தை வருகிறானா என்று பார்க்க ஆரம்பித்தாள் பெண்.

கால் மணி நேரம் தான் கழிந்திருக்கும். ''அப்பா காணோம்...'' என்று சமையலறைக்கும், வெளிக்கதவுக்குமான அவளது நடை துவங்கியது.

முதலில், கவலையாய் இருந்த குரல், நேரம் கடக்கக் கடக்க, அழு நிலைக்கு ஆழ்த்தப்பட்டது.

''ம்மா... அப்பா காணோம்... அப்பா காணோம்...'' என்று அழுகை முற்றும் நிலையில், ஜானகி உருளைக் கிழங்கு மசாலாவையும் தயிர் பச்சடியையும் செய்து முடித்திருந்தாள்.

ஏழரை என்பது எட்டு மணி ஆகலாம் என்ற நினைப்பில், ''கண்ணு, இங்க வா... அப்பா வர வரைக்கும் நாம பூரி போடலாம்... பூ மாதிரி போடுவோம்...'' என்று மகளை இடுப்பில் தூக்கிக் கொள்ள முற்பட்டாள்.

''வேணாம், போ... அப்பா தர வேணும்... அப்பா காணோம்...'' என்ற ஸ்ரீஷா, தாயின் பிடியை ஒரே அழுத்தத்தில் விலக்கிவிட்டு ஒரே ஓட்டமாய் கதவிடம் சென்று நின்றுகொண்டாள்.

பசியோடு இருக்கும் பெண்ணிற்கு, எதற்கெடுத்தாலும் அழுகை வரும் என்பதால் வேகமாய் இரு பூரிகளை இட்டு, எண்ணெயில் போட்டெடுத்தவள், தட்டில் வைத்துக் கொண்டு மகளிடம் சென்றாள்.

''அம்முக்குட்டி... பூரி பாரு... குட்டி குட்டி பூரி... அப்பா மாதிரியே குண்டு குண்டு பூரி... ஒரு வாய் சாப்பிடுடா...'' என்று அவள் கெஞ்ச,

''ம்ஹூம்... அப்பா வேணும்... அப்பா காணோம்...'' என்று முரண்டியது, இளம் கன்று.

''அப்பா வந்திருவாங்க... நீ சாப்பிடு...'' ஜானகி மேலும் ஓர் வாய் உணவை, ஸ்ரீயின் வாயருகே கொண்டு செல்ல, அவள் தலையை வேகமாய் சிலுப்பியதில் சட்டென இரும்புக் கம்பியில் முட்டிக் கொண்டாள்.

''ஹா...'' என்று அலறிய மகள், வலியில் துடித்துவிட, ''என்னடா குட்டி!'' என்று ஜானகியும் துடித்து விட்டாள்.

கையிலிருந்த தட்டைக் கீழே வைத்து விட்டு, மகளை இடுப்பில் ஏந்திக் கொண்டவள், வேகமாய் நெற்றியில் தேய்த்துவிட ஆரம்பித்தாள்.

வலியுடன் சேர்த்து, வேகமான அழுத்தமும் சேர்ந்து கொள்ள, ''வேணாம்... வலிக்குது...'' என்று மகள் அங்கேயும் இங்கேயும் திரும்ப, அதை மீறி, ஒருவாறாக புடைக்கத் துவங்கியிருந்த இடத்தை அவள் தேய்த்து விட்டதும், பெண்ணரசியின் அழுகை மெல்ல குறைந்தது.

சிறு சிணுங்கலுடன் தாயின் தோள் வளைவில் முகம் புதைத்திருந்த மகளின் தலையை மெல்ல வருடிக் கொடுத்த ஜானகி, மீண்டும் உணவை எடுத்துப் புகட்ட ஆரம்பித்தாள்.

வலியில் சுருண்டிருந்த அந்த வேளையிலும் ''ம்ஹூம். அப்பா தா ஊட்டணும்... அப்பா காணோம்...'' என்று மறுத்தது. அந்தப் பாசப் பறவை.

மதிய உணவைத் தாயிடம் வாங்கிக் கொள்ளும் பெண்ணிற்கு, இரவு உணவை தந்தையிடம் வாங்கியே



ஆக வேண்டும்! எத்தனை மணி ஆனாலும், எவ்வளவு பசி எடுத்தாலும், தந்தை வராவிட்டால் ஒரு வாய் உணவு கூட உள்ளே செல்லாது!

''வேணாம்... வேணாம்...'' என்ற பாட்டுடன், ''அப்பா வேணும்...'' என்ற பாட்டும் இணைந்து கொள்ள, மணி எட்டைக் கடந்திருந்தது.

மணி எட்டரையை நெருங்கும் வரையிலும் கூட, ஜானகி தெம்பாகத்தான் இருந்தாள். எப்படியும் வந்து விடுவான்... அதிக வேலையாய் இருக்கலாம்... இல்லை யாரையேனும் வழியில் சந்தித்திருக்கலாம்... தவிர்க்க முடியாத காரணம் என்ற ஒன்று கண்டிப்பாக இருக்கும் என்றே எண்ணினாள். ஏனென்றால், வீட்டிலிருக்கும் மனைவி தவிப்பதைவிடவும், மகள் தன் வருகையை எதிர்பார்த்திருப்பாள் என்ற எண்ணம் அவனை வேக மாய் வரவைத்துவிடும்.

அந்தத் திடம், மணி எட்டே முக்காலை தாண்டும் போது கொஞ்சம் கொஞ்சமாய் குறையத் துவங்கியது.

கடிகாரத்தின் முறகள், ஒன்பதை நெருங்கியதும், மனம் தடதடவென அடித்துக் கொண்டது.

அவனது கைப்பேசிக்கு அழைக்கலாம் என்றால், வீட்டில் தொலைப்பேசி இல்லை. அவளிடமும் கைப் பேசியும் இல்லை.

ம்ஹூம். தொலைப்பேசி இல்லை என்று ஒரேயடியாய் சொல்ல முடியாது. இருக்கிறது, ஆனால் உயிரற்று கிடக்கிறது. இரண்டு நாட்கள் முன்னர் பெய்த மழையின் விளைவு!

மகள் அழுதே கரைய, தாயோ தவிப்பில் தோய்ந்தாள்!

# மணி இரவு 9:00

காலையில் அலுவலகம் சென்ற கணவன் இன்னமும் வீடு திரும்பாததில், கிராமத்துப் பைங்கிளியான ஜானகி நெஞ்சம் பதைத்தாள்.

பிறந்த ஊரான திருநெல்வேலியை விட்டு, ஆயிரத்தி ஐநூறு கிலோ மீட்டர் தொலைவிலிருக்கும் மும்பையில் தனித்துவிடப்பட்ட பாவைக்கு, கணவனின் நிலையை அறிந்த கொள்ளும் வழியும் தெரியவில்லை.

இத்துடன், மகளின் அழுகையும் சேர்ந்துகொள்ள, மிகவும் பயந்து போனாள் அந்த இளம் தாய்.

தனக்கென்று இருக்கும் உறவுகளுள், அவளது நேசத்திற்குப் பாத்திரமானவன் எங்கே சென்றான் என்று நேசமனம் நொந்தது!

ஒன்பது மணி தாண்டி, பத்து நிமிடங்கள் கடந்ததும், பக்கத்து வீட்டில் போன் கடன்வாங்கியாவது அவனது கைப்பேசிக்கு அழைத்துப் பேசி விடுவது என்ற முடிவுடன், அவனது கைப்பேசி எண் குறித்திருந்த சிறு டைரியை எடுத்துக் கொண்டு வெளியே வந்தாள்.

''அப்பாக்காமா போன் பண்ணப் போதோம்?'' - ஸ்ரீ கேட்க.

''ஆமா... மஞ்சுளா ஆன்ட்டி வீட்டில போய் பேசுவோம்'' என்றாள் ஜானகி.



''மஞ்சுளா ஆன்ட்டியா... அவா திட்டுவாவே! வேணாம்மா... ராகுல் அண்ணா வீட்டுக்குப் போலாம்...'' என்றாள் மகள்.

ஜானகிக்கும் அதே தயக்கம் தான்! ஜானகி வீட்டிற்கு அடுத்த வீட்டுக்காரியான மஞ்சுளாவின் வாய், சும்மாவே படு நீளம்! எப்போதுமே, தன்னிடமிருப்பதை பெருமை பீத்தி, பிறரிடம் இருப்பதை ஏகத்திற்கும் மட்டம் தட்டுவாள்!

அதுவும், ஜானகி என்றால் தொக்கு தான்! அந்தக் காலத்து பி.யூ.சி... ஹ்ம்ம் மெட்ராஸில் பி.யூ.சி. படித்த அவளுக்கு, திருநெல்வேலி அருகே இருக்கும் கீழப் பட்டம் என்ற கிராமத்து பள்ளியில் படித்த ஜானகியைப் பார்த்தால், பிச்சைக்காரி போல் தோன்றும் போலும்!

ஜானகியின் சேலை தொட்டு, அனைத்தையும் கேலி பண்ணுவாள். இந்தக் கேலியை, ஜானகியின் மகளான ஸ்ரீஷாவிடமும் தொடர்ந்ததன் விளைவு தான், ஸ்ரீயின் பேச்சு!

ஆனால், இப்போது அவளிடம் தான் போய் நிற்க முடியும். ராகுலின் வீட்டில் எட்டரை மணிக்கே, விளக்கை அணைத்துப் படுக்கச் சென்று விடுவார்கள். அவர்களை ஒரு போனுக்காக எழுப்புவதா என்றிருந்தது ஜானகிக்கு.

''மஞ்சுளா ஆன்ட்டி என்ன சொன்னாலும், அம்முக்குட்டி பதில் பேசக்கூடாது. நாம, அப்பாவோட பேசுறது தான் முக்கியம்'' என்று மகளுக்குச் சமாதானம் சொல்லி, பக்கத்து வீட்டிற்கு அழைத்துச் சென்றாள் தாய்.

அழைப்பு மணியை அடித்து விட்டுக் காத்திருந்த நேரத்தில், ''ஹய்யோ... இங்கே வந்தது தவறோ'' என்று ஜானகியின் மனம் அடித்துக் கொண்டது!

தவறே என்பதை மெய்ப்பிப்பது போல், சிறு கொட்டாவியுடன் வெளியே வந்த மஞ்சுளா, ''என்ன இந்த நேரத்தில?'' என்று கேட்டதிலேயே, அவளது எரிச்சலின் அளவு ஜானகிக்குப் புரிபட்டது.

ஜானகி பதில் சொல்வதற்கு முன்னர், ''ஆன்ட்டி, எங்கப்பா இன்னும் வீட்டுக்கு வதலை...'' என்றாள் ஸ்ரீஷா அழுகையுடன்.

''அதுக்கு நான் என்ன பண்ணனும்? உங்கப்பனைத் தேடிக் கொடுக்கணுமா?'' - சூடாய் கேட்டாள் மஞ்சுளா.

அழும் பிள்ளையிடம் இப்படித் தடித்தனமாய் பேச வேண்டுமா என்று மனம் குமுறினாலும், வந்த காரியத்தின் வீரியத்தை உணர்ந்து,

''அவங்க போனுக்கு ஒரு தடவை கூப்பிட்டுத் தாங்கக்கா. எங்க இருக்காருன்னு விவரம் தெரிஞ்சுக்கிட்டு, போய்டுறேன்'' என்றாள் ஜானகி, கெஞ்சுதலாய்.

உடனே ''சரி'' என்று சொல்லாமல், ''ஹுக்கும், உங்க வீட்டு போன் என்னாச்சு?'' என்று நொடித்தாள் மஞ்சுளா.

'என் வீட்டு போன் வேலை செய்தால் உன்னிடம் ஏன் இடி படப் போகிறேன்' என்று மனதிற்குள் எண்ணிய ஜானகி,

''வேலை செய்யலைக்கா. ரெண்டு நிமிஷம் கூட பேச மாட்டேன்கா... எங்க இருக்காங்கன்னு மட்டும் கேட்டுட்டு வச்சுடுறேன்'' என்றாள் மீண்டும் வேண்டுதலாய்.



''சரி... சரி... இங்கேயே இரு. எங்க வீட்டுக்காரருக்கு ஒன்பது மணிக்கு மேல வெளி ஆளுங்க வீட்டுக்குள்ள வந்தா பிடிக்காது...'' என்றவள், உள்ளே செல்ல, ஜானகி பதைப்புடன் காத்திருந்தாள்.

போனை எடுத்து வந்தவள், ''புது போனு... ஐயாயிரம் ரூபாயைக் கொட்டிக் கொடுத்து வாங்கிட்டு வந்திருக்காரு... நீ பாட்டுக்கு கீழே போட்டுடாதே'' என்ற கட்டளையுடன், ஜானகியிடம் நீட்ட,

வலது கையில் போனை வாங்கிக் கொண்டு, பிள்ளையை ஏந்தியிருந்த இடது கையைத் திருப்பி, சின்ன டைரியில் கைப்பேசி எண் பார்த்தாள்.

''புருஷனோட போன் நம்பர் கூட மனப்பாடமா தெரியாதா? ஹ்ம்ம் நீயும் தான் என்ன பண்ணுவே, மூணாம் கிளாஸே தத்தி தத்தி பாஸ் பண்ணியிருப்பே... ஆமா, மூணாம் கிளாஸ் வரைக்கும் படிச்சிருக்கியா... இல்லை சும்மா பந்தாவுக்குச் சொல்றியா?'' கிண்டல் செய்கிறாளாம்!

ஆனால், அதையெல்லாம் பொருட்படுத்தும் நிலையில் ஜானகி இருக்கவில்லை.

தன் போக்கில், எண்களை டைரியில் பார்ப்பதும், போனிலிருக்கும் எண்களை அழுத்துவதுமாய் தடுமாறிக் கொண்டிருந்தாள்.

''ம்மா... தா... நா அப்பாக்கு போடுதேன்'' என்று தாயிடமிருந்து வாங்கிய ஸ்ரீஷா, வேகமாய் அப்பாவின் எண்களை அதில் அழுத்தினாள்.

அந்த களேபரத்திலும், பெண்ணின் நினைவாற்றலை எண்ணி ஜானகிக்குப் பெருமையாகவே இருந்தது!

கைப்பேசியை ஸ்ரீஷா காதருகே கொண்டு சென்றதும் ''ஹே... பார்த்து பார்த்து... புது போன்... கீழ போட்டு றாதே'' என்று மஞ்சுளா, அநியாயத்திற்கு அதிர்ச்சியைக் கொட்டினாள், குரலில்.

''நா கெட்டியா புடிச்சுதுப்பேன். விழாது'' என்ற ஸ்ரீஷா, கைப்பேசியை உன்னிப்பாய் கவனித்தாள்.

அதற்குள், ''ஒரு தங்கச் செயின் போட்டுக்கக் கூடாது... நாலு வருஷமா இந்த மஞ்சக் கயிறையே போட்டுட்டு இருக்கியே... தங்கத்தில் தாலி செஞ்சு போட்டுட்டா, புருஷன் ஆயுள் கூடுமாம்'' என்று புது தத்துவம் ஒன்றை அவள் கூற,

'புருஷனின் ஆயுள் தங்கத்திலா இருக்கிறது? எந்த நேரத்தில் என்ன பேச்சு பேசுகிறாள்?' என்று ஜானகிக்கு கோபமே வந்துவிட்டது.

''அதெப்படி உனக்குக் கோபம் வரலாம்?'' என்று கடவுளுக்குக் கோபம் வந்துவிட்டது போலும், ''ம்மா... அப்பா போன் பீ பீ கேக்குதுமா...'' என்றாள் ஸ்ரீஷா அழுகையுடன்.

''குடு கண்ணு... அம்மா போடறேன்'' என்று ஜானகி வாங்குவதற்கும்,

''சீக்கிரம் பேசி முடிங்க, மனுஷி தூங்க வேண்டாம்...'' என்று மஞ்சுளா துரிதப்படுத்துவதற்குமான இடைவெளியில்,

''ப்பா...'' என்று கூவினாள் ஸ்ரீஷா.

''ம்மா... ம்ம்மா... அப்பா வந்தாச்சு...'' என்று துள்ளியவள், ஒரே தாவலில் தாயிடமிருந்து வீட்டை நோக்கி



வந்து கொண்டிருந்த தந்தையிடம் தாவி விட்டிருந்தாள்.

அவர்களது தவிப்பு உடனே வடிந்து விட்டதில் மஞ்சுளாவிற்கு ஏக வருத்தம்.

அதை வெளிக்காட்ட முடியாமல், ''நாலு குடித்தனம் இருக்க வீட்டில, இந்தக் கத்தா கத்துவே! பிள்ளையை வளர்த்திருக்க அழகைப் பாரு'' என்று ஓங்கி ஓர் அதட்டல் போட்டாள், அவள்.

ஆனால், அவளது குத்தல் பேச்சுக்களைக் கேட்கும் மனநிலையில் ஜானகி இருக்கவில்லை!

கணவன் - எந்தவித பாதிப்புமில்லாமல் வீடு திரும்பி விட்டான் என்பதே பெருத்த நிம்மதியை அளித்தது!

தன் மேல் காதல் கொண்டு மணந்தவன் இல்லை என்றபோதிலும், அவள் அவன் மேல் கொண்ட நேசம் உண்மையல்லவோ! அந்த நேசம், கோபத்தை மட்டு மல்லாது எல்லா உணர்வுகளையும் மட்டுப்படுத்திவிட, ''தேங்க்ஸ் அக்கா'' என்ற ஒற்றை வார்த்தையுடன், மஞ்சுளாவின் வீட்டை விட்டு நடந்து விட்டாள்.

தங்கள் வீட்டினுள் நுழைந்தால், தந்தையும் மகளும் சோபாவில் அமர்ந்து கொஞ்சிக் கொண்டிருந்தார்கள்!

''இந்தப் பிள்ளை அழுத அழுகையென்ன? இப்போது கெக்கே பிக்கே என்று சிரிக்கும் அழகென்ன?'' என்று செல்லமாய் சலித்தவாறே, சமையலறைக்குள் செல்ல முற்பட்டாள்.

அப்போது ''நான் தான் வந்திருவேன் இல்ல... எதுக்குத் தேவையில்லாம அந்தம்மா வீட்டுக்குப் போய்

பேச்சு வாங்குறே?'' என்றான் ஸ்ரீராமன் - ஜானகியின் கணவன்.

அவன் குரலிலிருந்த எரிச்சலும், கோபமும் ஜானகி யின் பயத்தின் அளவை அதிகரித்ததில், நாக்கு மேலண் ணத்தில் ஒட்டிக் கொண்டது.

''அது... அதுங்க அத்தான்... எப்பவும் ஏழரை மணிக்கு வந்திடுவீங்களா... இன்னைக்கு வரலைன்னதும்... பாப்பா வேற ஓயாம அழுதாளா...'' - திக்கலும் திணறலுமாய் வந்து விழுந்தன வார்த்தைகள்.

''அழுதா என்ன? எப்படியும் அப்பா வந்திடுவாங் கன்னு சமாதானம் செய்ய வேண்டியது தானே? எல்லாம் ஒருத்தன் சொல்லிக் கொடுக்கணும். ச்சை...'' என்றான் அவன், கையாலாகாத கோபத்துடன்.

''கையாலாகாத்தனம் தன்னைத் திருமணம் செய்து கொண்டதால்'' என்பதை உணர்ந்த ஜானகிக்கு, கண்ணீர் முட்டிக் கொண்டு வந்தது.

ஆனால், கண்ணீர் ஒரு துளி கண்ணை விட்டு வந் தாலும், செய்து வைத்த உணவின் ஒரு கவளம் கூட அவன் வயிற்றில் போகாது!

அவ்வளவு பிடிவாதம்!

கண்ணீரைக் கண்டாலே காரணமற்ற கோபம் தான்! ருத்ரதாண்டவம் ஆடி, அதற்கான தண்டனையாய் தன் வயிற்றையே தண்டித்து விடுவான்!

முயன்று கண்ணீரை அடக்கிக் கொண்டு, சமைய லறைக்குச் சென்றாள், ஜானகி.



'இதென்ன புதிதாய் நடப்பதா? எப்போதும் உள்ளது தானே? எதற்கு அழ வேண்டும்?' என்று தன்னைத் தானே சமன்படுத்திக் கொண்டு, பூரிகளை இட்டவள், அப்பாவும் மகளும் பேசுவதைக் கூர்ந்து கவனிக்கத் துவங்கினாள்.

''அம்முக்குட்டி... இன்னைக்கு அப்பா உனக்கு என்ன வாங்கிட்டு வந்திருக்கேன் சொல்லு?''

''ஹ்ம்ம்... க்ரையானாபா...''

'எப்போ பார்த்தாலும் க்ரையான்... க்ரையான்...' - மனதினுள் சலித்தாள் ஜானகி.

''ம்ஹூம். க்ரையான் கிடையாது...'' தந்தை மறுத் ததும்,

''அப்போ... ப்ளூ ஸ்கெட்ச் பென்?'' புருவத்தை உயர்த்தி மகள் பரபரப்பது ஓரக் கண்ணில் தெரிந்தது ஜானகிக்கு.

''ம்ஹூம். கலர் பண்ற சாமான் இல்லைடா... வேற சொல்லு...''

''ஹையா... பொம்மையாபா... பார்பி பொம்மை?'' புதிதாய் கண்டு பிடித்தாள் பெண்.

''பர்பில பொம்மையா? கடிச்சுத் திங்கற மாதிரி இருக் குமோ? இனிக்குமா பொம்மை?'' - ''பார்பி பொம் மையை'' ''தேங்காய் பர்பியாக்கி'' தன் சிந்தனையை ஓட்டிக் கொண்டிருந்தாள் ஜானகி.

''ம்ஹூம் இல்லை. நீ கரெக்ட்டா சொன்னா, அப்பா உனக்கு ஒரு சாக்கி தருவேனே!'' தந்தை ஆசை காட்ட,

''ம்... ஹ்ம்ம்... ஹ்ம்... என்னப்பா... தெதியலைலையே... அப்பா சொல்லுங்கப்பா... சொல்லுங்கப்பா...'' அவனது கழுத்தைக் கட்டிக் கொண்டு, கொஞ்சினாள், அந்த வீட்டின் சின்னச் சிட்டு.

''அப்போ... அப்பா தான் சாக்கிச் சாப்பிடுவேன். உனக்குக் கிடையாது...'' தந்தை நமட்டுச் சிரிப்பு சிரிக்க,

''பீஸ் பா...''

''ஹ்ம்ம்... பீஸ்-னா பட்டாணிடா... சுண்டல்-ல போடுவாங்களே அந்த பட்டாணி... அதுவா வேணும் உனக்கு...''

''இல்லைப்பா... பீஸ் சொன்னேன்...'' என்று கைகளைக் குவித்துக் கெஞ்சுவது போல் ஜாடை காட்டினாள், மகள்.

''அதுக்குப் பேர் 'ப்ளீஸ்'. 'பீஸ்' இல்லை. ஒழுங்கா சொல்லு...'' தந்தை திருத்த,

''ம்ம்... ஹ்ம்ம்... ப்ல்ல்லீஸ்... ப்ல்ல்லீஸ்...'' என்று அழுத்தி அழுத்திச் சொன்ன மகளின் மழலையின் தாயவள் திளைத்திருக்க,

''சொல்லுங்கப்பா... என்ன வாங்கிட்டு வந்தீங்க?'' என்று தந்தையை மேலும் உந்தினாள் மகள்.

''டண்ட... டொய்ங்...'' என்று ராகம் இழுத்தவாறே, தன் லேப்டாப் பையிலிருந்து ஒரு கவரை எடுத்தவன், அதிலிருந்து ஓர் அழகிய நீல வண்ண ஆடையை மகளின் முன்னே ஆட்டினான்.

''ஹையா... புது டெஸ்! பாப்பாக்கா?'' - சின்னவள், கன்னத்தில் கைவைத்து வியக்க,



''பாப்பாக்கே தான்! இங்க பாரு... ஏஞ்சல் டிரஸ்டா...'' என்று உடையை விரித்துக் காட்டினான்.

கையில்லாத அந்த உடையில், ஒற்றைக் கயிறாய் வந்த தோள் பகுதி முத்துக்களால் வேயப்பட்டிருக்க, மார்பில் முத்து வேலைப்பாட்டுடன் தேவதைகள் குதித்தோட, மார்பிற்குக் கீழே லேஸ் வைத்த அந்த உடை, விரித்திருந்த ஒரு குடையைப் போல் அழகாய் படர்ந்து நின்றது.

''ரசனை மனம் கொண்டவன்!'' என்று ஜானகி மனதினுள் மெச்ச.

அவளது வாரிசோ ''சூப்பதா இதுக்குப்பா... என் செல்ல அப்பா!'' என்று தந்தையின் கழுத்தை ஊஞ்சலாக்கி, ஆனந்த நடனமாடினாள்.

அவளது குண்டு கன்னத்தில் அழுத்தமாய் ஓர் முத்தம் வைத்தவன், இன்னொரு டப்பாவை பையிலிருந்து எடுத்து, அவள் முன்னே பிரித்தான்.

''ஹையா குலாப் ஜாமூன்!'' என்று ஸ்ரீஷா குதிக்க,

'என்ன விசேஷம்? புது டிரஸ், ஸ்வீட் என்று தூள் பறக்கிறதே!' என்றெண்ணினாள் ஜானகி. எல்லாமே எண்ணம் மட்டும்தான், வாயைத் திறந்து கேட்பது என்பதே கிடையாது!

ஒரு குலாப் ஜாமூனை வாயில் அடைத்துக் கொண்ட ஸ்ரீ, கண்ணை விரித்து, கையால் 'சூப்பர்' என்று அபிநயம் பிடித்து, கன்னத்தில்... தாடையில்... கழுத்தில் என்று வடியத் தொடங்கிய ஜீராவை துடைத்து, உண்டு முடிக்க சரியாக ஐந்து நிமிடம் பிடித்தது.

அவளது கன்னத்தையும், கைகளையும் துடைத்து விட்டவாறே, ''அம்மாட்ட கொடுத்திட்டு வா...'' என்று அனுப்பினான் ஸ்ரீராமன்.

மகள் எடுத்து வந்ததை, சந்தோஷத்துடன் எடுத்துக் கொண்ட தாய் ''என்ன விசேஷம்னு... அப்பாகிட்டே கேளு கண்ணு'' என்று மகளின் காதில் ரகசியம் பேசி அனுப்பி வைத்தாள்.

தந்தையிடம் ஓடிய மகளும், அவனது காதைத் தன் புறம் இழுத்து ''என்ன விசேஷம்பா?'' என்றாள். வார்த்தைகள் தடுமாறினாலும், தாய் உபயோகித்த அதே ரகசிய குரலை மகளும் உபயோகிக்க, ஸ்ரீராமன் வாய் விட்டுச் சிரித்தான்.

''அப்பாக்கு ப்ரோமோஷன் கிடைச்சிருக்குடா... மேனேஜர்ல இருந்து சீனியர் மேனேஜர் ஆகிட்டேன் அப்பா!'' என்றான் சந்தோஷமாய்.

உள்ளறையிலிருந்து கேட்டிருந்த ஜானகி அடைந்த பெருமைக்கு அளவே இல்லை! திறமைசாலியான கணவனுக்குக் கிடைத்த வேலை உயர்வை, கள்ளமில்லா அந்தப் பேதை மனம் அனுபவித்து மகிழ்ந்தது.

சராசரி மனைவியாய் இருந்தால், வேலை உயர்வைத் தன்னிடம் நேராக சொல்லவில்லை என்று முகம் திருப்பியிருப்பாள்! ஆனால், ஜானகி சராசரி மனையாள் அல்லவே! அதற்கும் உயர்வா என்று கேட்டால்... இல்லை கண்டிப்பாக இல்லை... சராசரி மனுஷியின் சுகங்கள் அனைத்தும் மறுக்கப்பட்ட ஓர் அறிவு ஜந்து!

கோபமோ வருத்தமோ சுத்தமாய் இல்லாமல், கணவனின் வெற்றியே பிரதானமாய் இருக்க, மாலையில் செய்த பாயசத்தை எடுத்துக் கொண்டு, வரவேற்பறைக்குச் சென்றாள், அந்த உத்தம மனைவி.



''இனிப்பான செய்தி சொல்லியிருக்கீங்க! இனிப்பு சாப்பிடுங்க, அத்தான்!'' என அவள் நீட்ட, அவன் வாங்கிக் கொண்டான்.

ஒன்றும் சொல்லாமல் அவன் வாங்கிக் கொண்டதே, அன்றைய தினத்தின் ஆயிரமாயிரம் அணைப்புகளுக்கும், நூற்றுக்கணக்கான முத்தங்களுக்கும் ஈடாகின.

''பாயசம் நல்லா இருந்துச்சுப்பா... சாயி சாமிக்கு வச்சது'' - மகளும் கூடுதல் தகவல் கொடுக்கவே, சிறு சிரிப்புடனே உண்டான் அவன்.

வந்த வேலை முடிந்தது என்பது போல் ஜானகி உள்ளே செல்ல எத்தனிக்க, ஸ்ரீஷா பேசினாள்.

''அப்பா... அம்மாக்கு புது டெஸ் கொடுங்கப்பா...'' என்று தந்தையை அவள் உந்த, இருவருமே அதிர்ந்து போயினர்.

வாங்கி வராத அவனும், எதிர்பார்க்காத அவளும் தயங்கி நிற்க, மகளோ ''கொடுங்கப்பா... எனக்கு மாதியே அம்மாக்கும் ஏஞ்சல் சாரி வாங்கிட்டு வந்தீங்களா? கொடுங்க... கொடுங்க...'' என அவள் நச்சரிக்க,

என்ன சொல்வது என்று தெரியாமல், ஸ்ரீராமன் சங்கடத்தில் நெளிந்தான்!

இதுநாள் வரை, மனைவிக்கென்று ஏதாவது வாங்கியிருந்தால் தானே, இன்று வாங்கி வருவதற்கு!?

வேலை உயர்வைப் பற்றி அறிந்ததும், மகளுக்குப் புது டிரஸ் வாங்க வேண்டும் என்றெண்ணியவனுக்கு,

மனைவிக்கென்று எதுவுமே வாங்கத் தோன்றவில்லை. ஸ்வீட் பாக்கெட் வாங்கிச் சென்றால், மகளுடன் சேர்ந்து அவளும் உண்டு கொள்வாள் என்ற அளவில் தான் இருந்தன, அவனது எண்ணங்கள்!

மகள் முன்னே கணவன் சங்கடமாய் உணர்வதைப் பொறுக்காத, பத்தினி தங்கம் ''ஷ், சும்மா இரு அம்முக் குட்டி. வா... அம்மாவோட வந்து சாப்பிட எல்லாம் எடுத்துவை... அப்பாவும் நீயும் சாப்பிடணும் இல் லையா?'' என்று மகளின் கவனத்தைத் திருப்ப முயன் றாள்.

''போமா...'' என்று தலையை வேகமாய் சிலுப்பிய கன்று.

''அப்பா... நாளைக்கு வதும்போது அம்மாக்கு ஏஞ்சல் சாரி, அப்தம் மஞ்சுளா ஆன்ட்டி போட்டிருக்க மாதி செயின் எல்லாம் வாங்கிட்டு வதணும் ஓ.கே.யா... அந்த ஆன்ட்டி அம்மாவோட செயினைப் பாத்துக் கேலி செஞ் சாங்க... நா பாத்தேன்...'' என்று சேலையுடன் தங்கத் தாலிக்கும் தந்தையிடம் அடிபோட்டாள்.

''ஆம் / இல்லை'' என்று பதில் கூறாமல், கணவன் தயங்கிய அந்த ஓர் நிமிஷம், ஆறறிவு ஐந்து என்றாலும் ஜானகியின் மனதை ரணப்படுத்தவே செய்தது!

''சமாதானத்திற்காக கூட, வாங்கி வருகிறேன் என்று சொல்லவில்லையே!'' என்று வருந்திய நெஞ்சத்தின் வடிகாலாய், தொண்டை அடைத்துக்கொள்ள, மெல்லச் செருமி அதை சரி செய்து கொண்டவள், ''அம்மு... இங்கவா... உன்னோட ஆப்பிள் ப்ளேட் எடுத்திட்டுப் போய் வை... அப்பா ஊட்டிவிடுவாங்க'' என்று மகளை



அழைத்துக் கொண்டு, சமையலறைக்குள் சென்று விட்டாள்.

ஸ்ரீராமன் - இரு பெண்களையும் வெறித்திருந்தான்!

## மணி இரவு 9:30

ஸ்ரீராமனின் எண்ண அலைகளுள் விழுந்த கல் லென, ''அப்பா... சாப்பிட வாங்க'' என்று அழைப்பு விடுத்தாள், அவனது மகள்.

தன் பிஞ்சுக் கரங்களால், ஆப்பிள் வடிவிலிருந்த தனது தட்டையும், தந்தை உபயோகப்படுத்தும் பெரிய தட்டையும் எடுத்து வந்து வரவேற்பறையில் டி.வி.யின் முன்னே வைத்தாள்.

செய்த சின்ன வேலையே பெரிதாய் தோன்றியது போலும், மகளரசி ''ஹப்பா...'' என்பதோட நிமிர, அப்போதும் ஸ்ரீராமன் அமர்ந்த இடத்திலேயே இருந் தான்.

''அப்ப்ப்பாபாபாபா...'' - ஸ்ரீஷா கால்களை உதைத் துக் கொண்டு, குரலில் உந்துதலை அளவிற்கு அதிக மாகக் கொண்டு வந்து கத்தவும்,

''இதோ... இதோ... வந்துட்டேன்டா... டிரஸ் மாத் திட்டு டூ மினிஸ்ட்-ல வந்திடுறேன்'' என்றவன், வேக மாய் உள்ளறையின் பக்கம் திருப்பினான்.

படுக்கையில் அழகாய் மடித்து வைக்கப்பட்டிருந்த கைலி, முகம் துடைக்கவென ஓர் வெள்ளைத் தூவாலை, மாற்றிக் கொள்ள ஓர் பனியன் என்றிருந்த எதிலும் சிறு துளியாய் கூட அழுக்கிருக்கவில்லை. வாங்கியபோதை விட, இப்போது கூடுதல் வெள்ளையாய் இருப்பது போன்ற பிரம்மை கூடத் தோன்றியது.

பொங்கிப் பெருகி வந்த எண்ண அலைகளை மகள் தடுத்திருந்தபோதும், சின்னதாய் எழும்பவே செய்தன அவை!

துண்டை எடுத்துக் கொண்டு, குளியலறைக்குள் போனவனுக்கு, அடுத்த சின்ன அலையின் சில்லிப்பில் கால் நனைத்த உணர்வு!

குளியலறை கதவிலோ, சுவற்றிலோ, ஏன் தரையில் பதிக்கப்பட்டிருந்த டைல்ஸ்களிலும் பெயருக்குக் கூட அழுக்கு இடுங்கி இருக்கவில்லை! அப்படியொரு சுத்தம்! வரவேற்பறை தரைக்கு ஈடாக மின்னின என லாம்!

ஆனால்... இவை பொன்னென மின்னுவது ஜானகி யின் வருகையின் பின்னரே!

அதற்கு முன்னர், மாதம் ஒரு முறை பாத்ரூம் கழுவ வென ஓர் வடநாட்டு பெண்ணை வேலைக்கு வைத் திருந்தான். அவளோ சம்பளத்துக்கு செய்பவள் - ஓரளவு சுத்தத்தை தானே எதிர்பார்க்க முடியும். ஜானகி வந்த பின்னர், ''வீட்டில் ஒருத்தி இருக்கும்போது, எதற்கு வீணாய் ஓர் வேலைக்காரி...'' என்ற எண்ணம் தோன்ற, அவளை நிறுத்தி விட்டிருந்தான்!



'மனைவி' என்று கூட்டி வந்தவளுமே, அதற்கு எதிர்ப்பு தெரிவிக்காமல் பாந்தமாய் பொருந்தி விட்டிருந் தாள்.

அவன் குளிப்பதற்கு ஏற்ப, கை பொறுக்கும் சூடாய் கலந்து வைக்கப்பட்டிருந்த வெந்நீரில் கை வைத்த போது, 'மனைவி வந்ததும் வேலைக்காரியை நிறுத்து வது என்றால்... அம்மாவைப் போல்... அக்காக்களைப் போல்... தானும் ஜானகியை சம்பளமில்லா வேலைக் காரியாய் அல்லவா எண்ணியிருக்கிறோம்!' என்ற உண்மை, வெந்நீரில் இருந்த சூட்டையும் மீறி நெஞ்சி னுள் ஓர் கோடிழுத்தது!

பழைய வாழ்வின் மிச்சங்களும் சொச்சங்களும் கச்சை கட்டிக் கொண்டு மனதில் நுழையும் தருவாயில், மீண் டும் மகள் கத்தினாள்.

''இதோ வந்துட்டேன்டா அம்முக்குட்டி!'' என்ற பதில் சொன்னவனுக்கு, அதற்கு மேல் மகளும், அவளது பசியும் மட்டுமே பிரதானமாய் தெரிந்தது.

மின்னலை விடவும் வேகமாய் உடை மாற்றி, அவன் உணவின் முன்னே அமர்ந்தபோது, ''பச்சிக்குது'' என்று தந்தையின் தொடையில் ஒய்யாரமாய் சாய்ந்து கொண் டாள்.

சூடாய் அடுக்கி வைக்கப்பட்டிருந்த பூரிகளில் இரண்டை அவளது தட்டில் வைத்து, தோதான காய் களைத் தொட்டு அவன் ஊட்டிவிட, அன்றைய தினத் தில் நடந்த அனைத்து நிகழ்வுகளையும் தந்தையுடன் பகிர்ந்து கொள்ளத் துவங்கினாள், அவனது செல்வ மகள்.

''ப்பா... அம்மா பீத்துரட் சூப் தந்தா... பிங்க் கலர்-ல இருந்துச்சு... நாளைக்கு ஆதஞ்சு கலர்-ல பண்ணச் சொன்னேன்'' - என்பதில் தொடங்கி,

''ப்பா... இன்னைக்கு ராகுல் அண்ணா கூட வெளாடினேன்... ஒன் ஹவர்-ல வந்துட்டேனே...'' போன்ற முக்கியத் தகவல்களைப் பகிர்ந்து,

''அப்புதம்... டி.வி. பக்கத்தில வதைஞ்சேனா... அதுக்கு அம்மா திட்டினா... இப்பிடி பண்ணக் கூடாது சொன்னா...'' - தாயைப் போட்டுக் கொடுக்கும் வேலை வரை செவ்வனே செய்து முடித்தாள்.

''சின்னக் கழுதை! ஒரு விஷயம் விடாம அப்பாகிட்ட சொல்லிடணும். இல்லைன்னா தின்ன சோறு செரிக்காது!'' என்று அலுத்துக் கொண்டே, அடுத்த நடை பூரிகளை எடுத்து வந்தாள் ஜானகி.

மூன்று பூரிகளுக்கு மேல் உள்ளே சென்றதும், ''போதும்... போதும்... போதும்'' என்று ''போதும்''மை ஏலம் விட்டுவிட்டு, சோபாவில் ஏறிப் படுத்துக் கொண்ட பெண்ணின் பின்னே, தந்தையும் உணவுண்ண அமர்ந்தான்.

வட்ட வட்ட நிலவுகளாய் கிளம்பியிருந்த பூரிகளும், சுவையில் பதமாய் இருந்த உருளைக்கிழங்கும், புளிப் பென்ற பேச்சுக்கே இடமில்லாமல் இருந்த தயிர் பச்சடியும் பசிக்கு இதமாய் இருக்க, ஸ்ரீராமனின் கையும் வாயும் பூரியைத் தவிர வேறெதையும் மதிப்பதாய் இல்லை.

வேகமாய் சென்ற பூரிகளின் எண்ணிக்கை பத்தை நெருங்கும்போது தான், அவனுக்குப் பசியே ஓரளவிற்கு மட்டுப்பட்டது.



மேலும் இரண்டை அனாயாசமாய் உள்ளே தள்ளிய பின்னர், கை கழுவ எழுந்து கொண்டவனின் முன்னே, மேலும் இரண்டை வைத்து ''சின்னச் சின்ன பூரி தான்... சாப்பிடுங்க அத்தான்...'' என்றாள் மனையாள்.

''இல்ல போதும்!'' என்று அவன் எழுந்துகொள்ள, அவள் அவனது எச்சில் தட்டை எடுத்து சுத்தம் செய்வது, கைகழுவும் இடத்திலிருந்து ஓரக்கண்ணில் பட்டது.

''சாப்பிட்ட தட்டைக் கூட எடுக்க முடியாத சோம்பேறி ஆகிவிட்டோமா?'' என்று மனிதாபிமான மனம் கேள்வி எழுப்ப,

''தானாய் ஆகவில்லை! அவளாய் தான் ஆக்கி விட்டிருக்காள்!'' என்று பதில் சொன்னது, ''கணவன்'' என்ற கர்வ மனம்.

கையைத் துடைப்பதற்கென அவன் கைலியை மேலே இழுக்கும்போது, ''அப்பாகிட்ட இந்தத் துண்டைக் கொடு, கண்ணு!'' என்று மனைவி, மகளை ஏவுவது கேட்டது ஸ்ரீராமனுக்கு.

''சமையற்கட்டிற்குள் இருப்பது போல் தான் இருக்கிறது... ஆனாலும் அனைத்தையும் கவனிக்கிறாளே? இவளைப் போய்... ஒன்றும் தெரியாத மண்ணாந்தை... பட்டிக்காடு... தலையாட்டி பொம்மை... என்னவெல்லாம் சொல்லியிருக்கிறான்...'' - அவனது எண்ணங்கள், துவட்டிக் கொண்டிருந்த துண்டுக்குள் துகள்களாய் விழ, அவையே அவனது முகத்தை நெருடுவது போன்ற உணர்வு ஏற்பட்டது.

தலையை உலுக்கிக் கொண்டு, டி.வி.யின் முன்னே அவன் அமர்ந்ததும், அதற்காகவே காத்திருந்தவள் போல் மகளும் தந்தையின் மடியில் அமர்ந்து கொண்டாள்.

ஸ்ரீராமன் - தொலைக்காட்சியில் ஓடிய செய்தியினுள் கவனத்தை விட்டிருக்க, தந்தையைத் திணறடிப்பதை முக்கிய வேலையாய் செய்தாள் மகள்.

''எப்போ அப்பா அந்த ஏஞ்சல் டெஸ் போட?''

''நாளைக்குப் போடவா? பீஸ்... பீஸ்... ம்ம்... இல்ல ப்ல்ல்லீஸ்.''

''அப்பா... சொல்லுங்கப்பா... என்னைக்குப் போட?''

''ஹான்... அம்மாக்கு ஏஞ்சல் சாரி வாங்கிட்டு வதீங்களா? நானும் அம்மாவும் ஒதே மாதி போட்டுப் போம்...''

''நீங்களும் ஏஞ்சல் ஷர்ட் வாங்கிக்கோங்க...''

''நீங்க ஏன்பா... அம்மாக்கு வாங்கிட்டு வதலை? அம்மா பாவம்... அம்மாக்கிட்ட கொஞ்சூண்டு சாரி தான் இதுக்கு...''

''என்னோட செல்ப்-ல நெதைய டெஸ் இதுக்கு... ஆனா அம்மாக்கு ஸெல்ப்பே இல்ல... பெட்டி தா இதுக்கு... அதுவும் பெட்டி பழசா போச்சு... நான் இன்னைக்கு இழுத்தேனா... உடைஞ்சு போச்சுது... அம்மா பாவம்...'' - பெண்ணின் பேச்சில் கவனமில்லாமல் இருந்த நிலை மாறி, அவளது ஒரோர் வார்த்தைகளும் நடுநெஞ்சில் நறுக்கென ஆணி இறக்கியது!

பெண் வளர வளர, அவள் நெஞ்சில் ஆணித்தரமாய் பதியும் வித்தியாசங்களையும், அதற்குக் காரணமான தன்னையும் அவன் ஆராய்ந்து கொண்டிருக்கும்போது,

''அம்முக்குட்டி, இந்தா பால்...'' என்று அங்கு வந்து நின்றாள், அவன் எண்ணங்களின் தலைக்காவேரி.



''அத்தான்... உங்களுக்கு...'' என்று மற்றொரு டம்பளரை அவனிடம் நீட்டியவள்,

''அம்முக்குட்டி... மணி பத்தாகப் போகுது. சும்மா வெட்டிக்கதை பேசாம... பாலைக் குடிச்சிட்டு சீக்கிரம் படுக்கணும்... சரியாடா கண்ணு!'' என்று மகளிடம் மட்டுமே பார்வையை வைத்தவாறே சொல்லிவிட்டு, திரும்பிச் சென்றாள்.

குருட்டாம் போக்கில், ரிமோட்டை அவன் அழுத்த, மாறிய சேனலில் கடற்கரையில் நடக்கும் ஓர் திரைப் படப் பாடல் ஓடிக் கொண்டிருந்தது. அதன் மெல்லிசையில் ஈர்க்கப்பட்டு, மாறிக் கொண்டிருந்த சேனல்களுக்கு மாறாத ஓய்வு கொடுத்து, பாலை அவன் அருந்த ஆரம்பிக்கையில்,

ஒரே மடக்கில் பாலை அருந்தி முடித்த ஸ்ரீஷா, அடுத்த வில்லங்கத்தை துவங்கி வைத்தாள்.

''அப்பா... இந்தப் பாட்டுல வதும் பீச்சுக்குத் தானே நாம போனோம்...'' - போன மாசம் சென்றதை நினைவில் வைத்துக் கொண்டு பெண் கேட்க,

''இதே பீச் இல்லைடா... இது மாதிரி இன்னொரு பீச்...''

''ஹோ... அந்த பீச் பேரு என்ன?''

''ஜூகு பீச்...''

''அப்போ இந்த பீச்...''

''ஹ்ம்ம் தெரியலையேடா...''

''அப்புதம் எப்படி... இந்த பீச் இல்ல சொன்னீங்க?'' - தாடையில் ஆட்காட்டி விரலைத் தட்டி அவள் கேட்க,

''அறிவாளி குட்டி!'' என்று மகளின் கன்னம் பிடித்துக் கொஞ்சி, ''இந்த பீச்-ல நிறைய பாறை... பாறையா இருக்கா... நாம போன பீச்-ல பாறையே இருக்காது... அதான் சொன்னேன்...'' என்று விளக்கம் கூறினான், தந்தை.

''ஹோ.. ஓ.கே...'' என்று அப்போதும் சந்தேகமாகவே ஒப்புக் கொண்ட மகள்,

''ப்பா... ப்பா... நாம போன பீச்சுக்குப் போவோமாபா... பீஸ்... ஹ்ம்ம்... ப்ல்ல்லீஸ்...'' என்று தந்தையின் கழுத்தைக் கட்டிக் கொண்டு அவள் கொஞ்ச,

அவள் கொஞ்சிய அழகைவிடவும், ''பீஸ்'' என்பதை ''ப்ளீஸ்'' என்று திருத்திய அழகில் கவரப்பட்டு,

''ஹோ போலாமே! எங்க வீட்டு மகாராணி சொல்லிட்டப் பிறகு... மறுப்புக்கே இடமில்லையே! கண்டிப்பா போகலாம்!'' என்றான் தந்தையும், மகளின் கன்னத்தில் முத்தமிட்டவாறே.

''ஹையா... ஜாலி!'' என்று குதூகலித்த மகள்,

''நாளைக்குப் போவோமா?'' என்றாள் சின்னச் சிட்டாய் தலை சரித்து.

''நாளைக்கா?'' என்று ஸ்ரீராமன் தயங்க,

''ம்ம். நாளைக்கு!'' என்று வயதுக்கு மீறிய அழுத்தத்துடன் வந்தது ஸ்ரீஷாவின் பதில்.

'நினைச்சதும் போகணுமா? வர வர... பிடிவாதம் அதிகமாகிறது' என்றெண்ணிய ஜானகி,



மகளிடம் பால் டம்ப்ளரை வாங்கியவாறே ''குட்டி, அப்பா சனி... ஞாயிறுல கூட்டிப் போவாங்க. சும்மா இரு!'' என்றாள், தாயாக.

''ம்ஹூம். நாளைக்கே... நாளைக்கே... நாளைக்கே... தண்ணில போகணும்...'' குரலில் அழுகையைக் கொண்டு வர பிரம்மப் பிரயத்தனப் பட்டுக் கொண்டிருந்தாள், ஜானகி என்ற சிப்பிக்குள் உதித்த முத்தாரம்.

''சொன்னா கேளு...'' ஜானகி அதட்டத் துவங்கும் முன்னரே.

''சரிடா குட்டி! நாளைக்கே போகலாம்!'' என்று முடித்து விட்டான் ஸ்ரீராமன்.

''இம்மெனும் முன்னர் அவள் கேட்பதை நடத்திக் கொடுத்தால், பிடிவாதம் வளராமல் குறையவா செய்யும்?'' என்று குறை பட்ட மனதை வெளிக்காட்ட முடியாமல், அவள் நகர்கையில்,

''நீயும் அம்மாவும் நாளைக்கு ட்ரைன்-ல கிளம்பி, அந்தேரி ஸ்டேஷன் வந்திடுறீங்களா? அப்பாவும் அங்க வந்துடுறேன்... எல்லோருமா ஜூகு பீச் போகலாம்!'' - மகளிடம் பேசுவது போல் மனைவியிடம் வினவினான் ஸ்ரீராமன்.

இது.. அவ்வப்போது நடப்பது தான். ஸ்ரீஷாவிற்கு விவரம் தெரிந்த நாளிலிருந்து, பீச் என்றால் அவளுக்குக் கொள்ளை பிரியம்! அதுவும், அப்பாவின் கரங்களை இறுகப் பற்றிக் கொண்டு, கரையைத் தொடும் அலையின் ஜில்லிப்பான தண்ணீரில் கால் வைப்பது என்றால் அளவிட முடியாத சந்தோசம்!

வார நாட்களை விடவும் சனி மற்றும் ஞாயிற்றுக் கிழமைகளில் கூட்டம் அலை மோதும் என்பதால், தனக்கு வேலை குறைவாக இருக்கும் வார நாட்களில், மனைவியையும் மகளையும் வீட்டிலிருந்து வரச் சொல்லிவிட்டு, அந்தேரி ஸ்டேஷனில் அவர்களுடன் இணைந்து கொள்வது, ஸ்ரீராமனின் பழக்கமே!

அவர்களது வீடிருக்கும் ஐரோலி ஏரியாவிலிருந்து அந்தேரி செல்ல, நேர் ரயில் இருந்தது ஒரு காரணம் என்றால்,

ஸ்ரீராமனின் அலுவலகம் இருக்கும் நரிமன் பாயிண்ட்டிலிருந்து ஐரோலி வந்து, மனைவியையும் மகளையும் அழைத்துக் கொண்டு மீண்டும் அந்தேரி செல்வதென்றால், குறைந்தது இரவு பத்தை எட்டி விடும் என்பது மறு காரணம்.

ஆம், நரிமன் பாயிண்ட்டிலிருந்து ஐரோலி வர இரண்டு மணி நேரம் - மீண்டும் ஐரோலியிலிருந்து அந்தேரி வர ஒன்றரை மணி நேரம் - மொத்தமாய் மூன்று மணி நேரம் வீணாவதை விட, ஜானகியும் ஸ்ரீஷாவும் நான்கு மணிக்குக் கிளம்பி ஐந்தரை - ஆறு மணிக்குள் அந்தேரி வந்து விட்டால் ஸ்ரீராமனும் அலுவலகத்திலிருந்து ஐந்து மணிக்குக் கிளம்பினாலே போதுமானது.

முதல் இரண்டு முறைகள், ஜானகியின் மீது கொண்ட அவநம்பிக்கையாலும், பட்டிக்காட்டு பைங்கிளியை பட்டிணத்தில் தொலைத்து விட்டால்... அவள் தொலைவதை விடவும் தன் பெண்ணின் பாதுகாப்பும் அல்லவா



கெட்டுப் போகும் என்ற எண்ணத்தினாலும், ஸ்ரீராமனே வீடு வந்து கூட்டிச் சென்றான்.

ஆனால், நீண்ட நேரப் பயணத்தில் உண்டான அசதியினால், பெண்ணின் ஆகாசத் துள்ளலுக்கு ஈடு கொடுக்க முடியாத வருத்தம் அவனை இந்த முடிவுக்கு வர வைத்திருந்தது.

அதற்குத் தான் எத்தனை எத்தனை அறிவுரைகள்! எத்தனை எத்தனை குண்டூசிக் குத்தல்கள்! எத்தனை எத்தனை ''பார்த்து.... பத்திரமா வாங்க...''கள்!

முதலில், ஜானகியை அழைத்துக் கொண்டு ஐரோலி ரயில் நிலையம் சென்று, அங்கே டிக்கெட் வாங்குவதைப் பற்றி ஒரு அரை மணி நேர வகுப்பு!

அடுத்ததாய், ட்ரைன்-இல் பிள்ளையை வைத்துக் கொண்டு ஏறுவதற்கு ப்ராக்டிகல் டெமோ!

பின்னர், ரயிலில் பயணம் செய்யும்போது யாரிடமும் அனாவசியமாய் பேசக் கூடாது என்பதற்கு ஒரு முழு நீள அறிவுரை அறிக்கை!

தொடர்ந்து, வண்டலா ரயில் நிலையத்தில் பதினைந்து நிமிடங்கள் நிற்கும் வண்டி, திரும்ப எடுக்கப்படும்போது வந்த திசைக்கு எதிர்த் திசையில் பயணிக்கும் என்ற எச்சரிக்கை!

அடுத்ததாய், ஐரோலி ரயில் நிலையத்திற்கும் அந்தேரி ரயில் நிலையத்திற்கும் இடையே எத்தனை நிறுத்தங்கள், அதன் பெயர்கள் என்னென்ன என்பதைக் கொண்ட குறிப்பேடு!

முடிவில், அந்தேரி ரயில் நிலையத்தை அடைந்ததும், எங்கே நிற்க வேண்டும் என்ற சிறு குறிப்பு!

இவையனைத்தையும் ஒரு முறைக்குப் பல முறையாக மனைவிக்கு விளக்கியதோடு மட்டுமல்லா மல், ஒரு நாள் அவர்களோடு அவனும் பயணம் செய்து, ஜானகியின் புரிதல் தன்மையை சோதித்தப் பின்னரே, மனைவியையும் மகளையும் தனியே ரயிலில் பயணம் செய்ய அனுமதித்தான், அந்தப் பாசக்காரக் கணவன்!

சின்னப்பிள்ளைக்குச் சொல்வது போல், கணவன் ஒவ்வொன்றாய் விளக்குவது, ''நம்மை என்ன வடிகட் டின மக்கென்று நினைத்தானா?'' என்று சிறு கோபத்தை உண்டு பண்ணினாலும், இதை சாக்காய் வைத்தாவது கணவன் தன்னிடம் ''தானாய்'' பேசுகிறானே என்று சந்தோசம் கொள்ளும், அந்தப் பேதையின் மனது!

வீட்டிற்கு மளிகை சாமான் வாங்குவதைத் தவிர வேறெங்குமே அவனுடன் ஜோடியாய் சென்றிராத அவளுக்கு, மாதம் ஒரு முறையோ... இரு மாதங்களுக்கு ஒரு முறையோ நடக்கும் இந்த கடற்கரை சுற்றுலா மிக பிடித்தம்!

மகள் வெளியே சந்தோசித்து மகிழ, தாயவளோ நேசம் கொண்ட தன் பேதை நெஞ்சுக்குள் துள்ளிக் குதிப்பாள்!

என்றும் ஒரே மனம் கொண்டவளாய், இன்றும் ஜானகி யின் மனம் துள்ளியது!

''நாளைக்கு எத்தனை மணிக்குக் கிளம்பணும், அத்தான்! நாலு மணிக்குக் கிளம்பவா? இல்லை அதுக்கு முன்னமேவா?'' என்று இன்னாரென வார்த்தைகளால், தன் சந்தோஷத்தை அறிவித்தாள் ஜானகி.



''அஞ்சு மணிக்குக் கிளம்பினா போதும்!'' - சட்டென நறுக்கரித்தாள் கணவன்.

தான் காட்டிய அதிகப்படி ஆர்வம் பிடிக்கவில்லையோ என்ற சந்தேகம் எழுந்தது, ஜானகிக்கு!

''சரி அத்தான்... வீட்டுக்கு வர இருட்டிடுமேன்னு கேட்டேன்...'' என்று இழுத்தவளின் முகமும் குரல் போல் வாடியிருந்தது!

எப்போதும் போல், அவளது சோக முகத்தை அலட் சியம் செய்ய முடியாமல் ஏதோ ஒன்று தடுக்க, ''எனக்கு நாளைக்கு ஒரு முக்கியமான மீட்டிங் இருக்கு. அது முடியவே அஞ்சு மணி ஆகிடும்... உடனே கிளம்பவும் முடியாது... அதான்!'' என்று நீண்ட விளக்கம் ஒன்றை முன் வைத்தான், ஸ்ரீராமன்.

ஜானகிக்கு அப்படியே துள்ளிக் குதிக்க வேண்டும் போலிருந்தது!

பின்னே, தன்னை மதித்து... தன் சோகத்தை மதித்து... அதற்கு கணவன் விளக்கம் சொல்லியிருக்கிறான் என்றால் சும்மாவா? தலைகால் புரியாத சந்தோஷத்தில் மிதந்தாள் அவள்!

கூடவே, ''அப்படியே லேட் ஆகிட்டாலும் ஒரு டாக்ஸி பிடித்து வீட்டுக்கு வந்திடலாம்'' என்று அவளது கவ லைக்கு அவள் சமாதானம் சொல்லவும், இது கனவோ என்றுகூட ஜானகிக்குத் தோன்றியது!

அவன் பார்க்காத வண்ணம், தன் கையைத் தானே கிள்ளிக் கொண்டவள், சட்டென உறைத்த சுரணையின் காரணமாய், தன்னுள்ளே வெட்கினாள்!

''சரி அத்தான்... சரி அத்தான்...'' என்று நூறு 'சரி'யை வாய்விட்டுப் போட்டவள்,

''ஆனாலும் நிஜம் தான்! டாக்ஸியில் வருமளவுக்கு... நீயும் பெரியாளாகிட்டே போ!'' என்று தன்னைத் தானே தட்டிக் கொடுத்துக் கொண்டே, தன் இரவு உணவைத் தட்டிலிட்டாள்.

''கடற்கரைக்குச் செல்ல வேண்டும்'' என்ற தனது ஆசையை உடனடியாய் நிறைவேற்றிய தந்தையைக் கட்டிக் கொண்ட ஸ்ரீஷாவின் கண்கள், சீக்கிரத்திலேயே தூக்கத்தில் சுழல ஆரம்பித்தன!

தோளில் போட்டுத் தட்டிக் கொடுத்தவாறே, பெண்ணைப் படுக்கையறைக்கு இட்டுச் சென்ற ஸ்ரீராமனின் கண்களில், ஜானகியின் கைகள் பழைய சாதத்துடன் மோரை ஊற்றிப் பிசைவது தெரிந்தது!

பிள்ளையுடனே அடுக்களைக்குள் சென்றவன், ''ஏன் பழைய சாதம் சாப்புடுறே? பூரி இல்லையா? பிசையும் போதே, பூரிக்கு நிறைய மாவு பிசைய வேண்டியது தானே?'' என்றான் கேள்வியாக.

எதிர்பார்க்கவே இல்லாத நேரத்தில் கேட்ட கணவனின் குரலில்... அதுவும் அவன் கேள்வியின் சாரத்தில்... ஏகத்திற்கும் அதிர்ந்து போய் திரும்பினாள், ஜானகி!

இவனுக்குப் பைத்தியம் கியித்தியம் பிடித்து விட்டதோ என்றுகூட ஒரு நிமிடம் தோன்றிய அவளுக்கு!

பின்னே, மனைவியின் மனதை மதிக்காதவனுக்கு, அவளது வயிற்றைப் பற்றி என்ன கவலை?! அதுவும், புதிதாக!



# மணி இரவு 10:15

''பிரசவத்தின்போது, பிறந்த புது மலரான ஸ்ரீஷாவை மட்டும் பார்த்துவிட்டு, தன்னைத் தூர நின்று வெறித்து விட்டுச் சென்றவன் தானே நீ! இப்போதென்ன அக்கறை?'' என்று சூடாய் கேட்கத் தோன்றிய நாவைப் பற்களால் அழுத்தி,

''மதியம் வச்ச சாதம்... குட்டியும் சூப்பை குடிச்சிட்டு சாதத்தைச் சாப்பிட மாட்டேனுட்டா... நீங்களும் கொஞ்சம் மீதம் கொண்டு வந்துட்டீங்க...'' - துண்டு துண்டாய் வந்து விழுந்தன விளக்கங்கள்.

''நான் உண்ணாமல் வைத்த உணவா? இந்நேரம் வீணாகியிருக்குமே!'' - லேசாய் துணுக்குற்றவன்.

''சாதத்தைக் கொட்டிவிட்டு, பூரியை உண்ணு!'' என்று சொல்லுவான் என்றா எண்ணினீர்கள்! ம்ஹூம் இல்லை!

''வெறுமனே சாதத்தைச் சாப்பிடாம ரெண்டு பூரியைச் சாப்பிட்டிருக்கலாமே!?'' என்றதோடு நகர்ந்து விட்டான், அவன்.

கணவனின் அக்கறையில் சற்றே என்றாலும் நெகிழத் தொடங்கியிருந்த மனம், அவனது கடைசி வாக்கியத்தில் வாத்தியாரிடம் பிரம்படி வாங்கிய கையாய் கன்றிப் போனது!

ஊமையடி பட்ட மனதிற்கு மருந்தென பழைய சோற்றை உண்டவள், பாத்திரங்களைக் கழுவி, அடுப்பு மேடை துடைத்து, மின் விளக்குகளை அணைத்துவிட்டு, படுக்க வந்தபோது, ஸ்ரீராமன் விழித்திருந்தான்.

ஒரு கையில் அந்த வாரம் வந்த தமிழ் வாரப் பத்திரிகையும், மறு கை தன் மேல் கால் போட்டுத் தூங்கும் மகளின் தலையை வருடிக் கொண்டும் என்றிருந்தவன், மனைவியின் வருகையை மதிக்கக் கூட இல்லை.

எதிர்பார்த்தால் அல்லவோ ஏமாற்றங்களும், வருத்தங்களும்! எதிர்பார்ப்பின்றியே வாழப் பழகியிருந்தவளுக்கு, வித்தியாசமாய் படவுமில்லை!

அங்கிருந்த பாயை எடுத்துப் போட்டவள், சின்னத் தலைகாணியும் பழைய போர்வையும் எனத் தன் உறக்கத்திற்கு விழா மேடை இட்டாள்.

கணவனுக்கு முகம் காட்டிப் படுத்தவள், இரண்டு நிமிடங்கள் கூட அதிகம் என்பது போல் படுத்ததும் உறங்கிப் போனாள்!

வாங்கி வந்த பத்திரிகையை நுனி முதல் அடி வரை ஆராய்ந்துவிட்டு, ஸ்ரீராமன் நிமிர்ந்தபோது மணி பதினொன்று முப்பது ஆகியிருந்தது.

தொடர்ந்து வந்த கொட்டாவிகளின் நடுவே, பெரிய விளக்கை அணைத்து, நைட் லாம்ப்பை போட்டு விட்டுத் திரும்பியபோது, மனைவியின் கபடற்ற முகத்தை ஒரு நிமிடத்திற்கு மேலாகப் பார்த்திருந்தான்.

அடர்ந்து படர்ந்த நெற்றிக்கு, இடது கையை மகுடமாக்கிக் கொண்டு படுத்தபோதும், தூக்கம் அவனை



தாவதற்கு முன்னர் பழைய நினைவுகளின் மிச்சங்களுள் தன்னைத் தொலைக்கத் துவங்கினான், அந்தப் பொறியாளன்.

தீபாலி!

அவனது சந்தோஷத்தின் ஊற்றாய் இருந்தவள்!

பின்னர், தன் வேதனைகளின் வேராகவும் ஆகிப் போனவள்!

ஏழு வருடங்களுக்கு முன்னர், பிறந்து வளர்ந்த திருநெல்வேலி மண்ணை விட்டு, வேலைக்கென அவன் மும்பைக்குள் காலடி எடுத்து வைத்தபோது அறிமுகமானவள்!

இருவருமே, ஒரே கம்பெனியில் ஒரே நாளில் ஒரே மாதிரியான வேலையில் ஒன்றாய் சேர்ந்தனர்! பத்துக்கு மேற்பட்ட ஆண் பணியாளர்களுக்கு நடுவே ஒற்றை பெண்ணாய் நின்ற அவளது கம்பீரம், தான் ஸ்ரீராமனை ஈர்த்தது!

தத்தம் திறமைகளை, இருவரும் செவ்வனே நிரூபிக்க, ''தரமேற்பார்வை (குவாலிட்டி)'' துறையில் தீபாலியும், ''டெலிவரி ஹான்ட்லிங்'' துறையில் ஸ்ரீராமனும் பணி நியமனம் செய்யப்பட்டனர்.

மற்ற துறைகளை விட, இந்த இரு துறைகளும் தான் இரு கரம் சேர்ந்தாற்போல் இருக்கும் துறைகள்! தீபாலி பொருட்களின் தரத்தைப் பரிசோதித்து அனுப்பிய பின்னர் தான், ஸ்ரீராமன் அதை வாடிக்கையாளர்களுக்கு அனுப்பி வைக்க முடியும். இதுவே, அலுவலகத்தில் இருவரையும் அடிக்கடி சந்திக்க வைத்தது!

தீபாலியின் அறிவுக்கூர்மை... எதையும் சட்டென கிரகித்துக் கொள்ளும் ஆற்றல்... அவளது நினைவாற்றல்... கற்றதைக் கசடற கற்ற அவளது நேர்த்தி... என்று ஸ்ரீராமனைப் பலதும் ஈர்த்தது என்றால்,

ஸ்ரீராமனின் கம்பீரத் தோற்றம்... பெண்களிடம் அவன் வைத்திருக்கும் மரியாதை... வேலையில் அவன் காட்டும் ஆர்வம்... தவறுகள் நேர்ந்து விடக் கூடாதே என்ற கூடுதல் கவனம்... தன் கீழே வேலை செய்யும் கடைநிலை ஊழியர்களிடம் அவன் காட்டும் பரிவு... என்று தீபாலியின் மனமும் அவன் புறம் சாய்ந்தது!

வேலைக்குச் சேர்ந்த ஒரு வருடத்திலேயே, ''உன்னோடு வாழ்ந்தால் வாழ்க்கை இனிக்கும் என்று நினைக்கிறேன்'' என்று ஒருவர் மற்றவரிடம் பகிர்ந்து கொள்ள, அங்கே காதல் உதயமானது!

வேலை நேரம் போக, களைத்திருந்த நேரத்தில் கூட இருவரும் காதல் கிளிகளாய் மும்பையின் முக்கிய இடங்களைக் கை கோர்த்து சுற்றி வந்தனர்!

இன்ப மயமாய் சென்று கொண்டிருந்த வாழ்க்கையில், துன்பத்தைக் கொண்டு வரும் விண்ணப்பத்தை முதலில் வைத்தது தீபாலிதான்!

அன்றொரு நாள், அவனும் அவளுமாய் வேலையிலிருந்து கிளம்பி, ரோட்டோரக் கடையில் பானிப்பூரி வாங்கி உண்டுவிட்டு, செம்பூர் கோவிலுக்குச் சென்றனர்.

பிரார்த்தனை முடிந்து கோவிலில் ஓரமாய் அமர்ந்த போது, ஸ்ரீராமனின் கையைத் தன்னுள் எடுத்துக் கொண்டு, ''ஸ்ரீ...'' என்று ராகம் இழுத்த தீபாலியின் மீது,



அன்றைக்கு அவன் உயிரையே வைத்திருந்தான் என்பது நிஜம்!

''என்ன தீபு...'' என அவனும் கொஞ்ச,

''நா ஒண்ணு கேட்கவா...'' வழக்கமான கம்பீரக் குரலைக் கைவிட்டுக் குழைந்து நெளிந்தாள் அவள்.

''அடடே! இதென்ன பெர்மிஷன் எல்லாம் பலமா இருக்கு...'' என்று பலமாய் சிரித்தவன்,

''கேட்கிறவங்க யாரா இருந்தாலும்... இதுதான் என் கருத்துன்னு அடிச்சு சொல்ற தீபுக்குட்டியைத் தான் எனக்குப் பிடிக்கும்! இப்படித் தொட்டதுக்கும்... துலங்கினதுக்கும் பெர்மிஷன் கேட்கிற தீபாலியை இல்ல...'' அவன் அனுமதி கொடுக்க,

''நாம கல்யாணம் பண்ணிக்கலாமா...? எனக்கு இந்த லைப் போரடிச்சிடுச்சு... நீ வேற இடத்தில... நா வேற இடத்தில... ப்ச்... நினைச்சா பார்த்துக்கூட முடியாம...'' அவள் ராகம் இழுக்க,

''பார்க்க முடியாமலா? தினமும் ஆபீஸ்-ல பார்த்துக்கிறோமே?'' - அவன் நமட்டுச் சிரிப்புச் சிரித்தான்.

''போப்பா... ஆயிரம் பேர் முன்னாடி பார்த்துக்கிட்டு என்ன புண்ணியம்? ஒரு கிஸ் கூடக் கொடுக்க முடியாது'' - சற்றும் யோசிக்காமல் வந்தது பதில்.

எப்போதுமே அவள் அப்படித்தான் - உள் ஒன்று வைத்துப் புறம் ஒன்று பேசும் பழக்கமே கிடையாது. மனதில் எண்ணியதை எந்தவிதமான பாசாங்குமில்லாமல் வெளியே கொட்டிவிடுவாள். தன் குணம் போலவே

அவளுக்கும் இருப்பதையும் கணக்கிட்டுத்தான், இருவரும் இணைந்து வாழ்ந்தால் நன்றாக இருக்கும் என்றெண்ணினான் ஸ்ரீராமன்.

"அதுக்கென்ன... ஆபீஸ்ல ஒரு பிளையிங் கிஸ் கொடு! இப்போ ரியல் கிஸ் கொடு!" அவள் புறம் சாய்ந்து கொண்டு அவன் கொஞ்ச,

"ஷ்... ஸ்ரீ... பி சீரியஸ் யா! நாம எப்போ கல்யாணம் பண்ணிக்கலாம்?! நான் எங்க வீட்டில இன்னைக்கே சொல்லிடுறேன்... நீயும் சீக்கிரம் சொல்லுப்பா... அடுத்த வாரத்திலேயே கல்யாணத்தை வச்சுக்கலாம்... பெட்டிப் படுக்கையெல்லாம் கட்டிக்கிட்டு, நான் உங்க வீட்டுக்கே வந்துடுறேன்!" - வேகமாய் திட்டமிட்டாள் தீபா.

"ஹே... ஹே... இரு இரு... ஒரு வாரத்தில் கல்யாணமா? அய்யாவ என்னன்னு நினைச்சே? திருநெல்வேலி ஜில்லாவிலேயே எங்க குடும்பத்துக்கு இருக்க மரியாதை தெரியாம பேசுறயே?" என்று காலரைத் தூக்கி விட்டுக் கொண்டவன்.

"வீட்டுக்கு ஒரே ஆண் வாரிசும்மா! என்னோட கல்யாணம் ஊரே வியக்கிற மாதிரி நடக்க வேண்டாம்!" என்றான் கெத்தாக.

"எப்படி நடந்தா என்ன? உனக்கு நான்... எனக்கு நீன்னு எழுதி வச்சாச்சு... ஊர் பாக்க நடந்தா என்ன? வெறும் குடும்பத்துக்குள்ள நடந்தா என்ன? சும்மா போர் அடிக்காம, சீக்கிரம் கல்யாணத்தை நடத்திற வழியைப் பாரு மேன்!" என்று தீபாலி உத்தரவு போட,

"மேடத்துக்கு எதுக்கு இம்புட்டு அவசரம்?" என்று தீபாவின் கன்னம் பிடித்துக் கொஞ்சினான், ஸ்ரீராமன்.



"ஹே... ப்ளீஸ் ஸ்ரீ! எனக்கு உன்கூடவே இருக்கணும் போல இருக்கு... ப்ளீஸ்யா" - அவன் தோள் சாய்ந்தவளின் குரல் ஏங்கிற்று!

அவளது அக்குரல் புதுவிதமான உணர்வை உடம்பினுள் புகுத்த, "கண்டிப்பாடா... சீக்கிரமே... ரொம்ப சீக்கிரமே என் வீட்டு மகாராணியா என்னோட செல்ல தீபு வந்திடலாம்!" என்று அவளுக்கு உறுதி கொடுத்தவன், வரும் வார இறுதியிலேயே ஊருக்குச் சென்றான்.

தீபாலி என்ற அத்தியாயத்தைத் தன் வாழ்வில் தொடங்குவதற்காக அவன் செல்ல, அங்கு நடந்ததோ "மூடு விழா!"

ஊரில் முக்கியக் குடும்பம் ஒன்றின் ஒரே ஆண் வாரிசு, கோடிகளைத் தொடும் சொத்துக்களின் அதிபதி, வீட்டின் செல்லப் பிள்ளை, மூன்று மாதம் சென்று வரும் செல்வன் - இக்காரணங்கள் போதாதா? ஸ்ரீ ராமனுக்குத் தடபுடலாய் வரவேற்பு நடந்தேறியது!

தந்தை நீலகண்டனே திருநெல்வேலி ரயில் நிலையத்திற்கு கார் எடுத்துக் கொண்டு வந்திருக்க, தாய் - வீரலட்சுமி, மூத்த சகோதரி - காந்திமதி, இளைய சகோதரி - லீலாவதி என்று அனைவரும் வீட்டு வாசலில் நின்று "வா தம்பி!" என்று வாயார வரவேற்றனர்.

சகோதரிகள் இருவரது பிள்ளைகளும் "மாமா" என்று அன்பாய் தாவ, அவனும் அவர்களுக்கு வாங்கி வந்த பொருட்களை எடுத்துக் கொடுத்து, தன் பாசத்தைக் காட்டினான்.

இனிமையாய் கழிந்தது காலை வேளை மட்டுமே!

உணவு முடிந்ததும், ''அம்மா... உன்கிட்ட ஒரு விஷயம் பேசணும்!'' என்று தாயிடம் சென்று நின்றான், ஸ்ரீராமன்.

எப்போதுமே, அந்த வீட்டில் வீரலக்ஷ்மியின் ஆச்சி தான்! நீலகண்டன் திருநெல்வேலியில் பிறந்திருந் தாலும் தஞ்சாவூரில் செய்த தலையாட்டி பொம்மையே! வீரலக்ஷ்மியே, அவரது தலையை வலுக்கட்டாயமாய் இடமும் வலமும் ஆட்டிவிட்டாலும், மேலும் கீழுமா கவே ஆட்டிப் பழகியவர்! சுருங்கச் சொன்னால், ''ஆமாம் சாமி ஆசாமி!''

மேலும், வீரலக்ஷ்மிக்குத் தன் மகள்களை விடவும் மகனிடம் அதீதப் பிரியம்! ''ஸ்ரீராமா!'' என்ற அழைப்புக்கே இடமில்லாமல் ''தம்பி'', ''கண்ணப்பா'', ''ராஜா'' போன்றவற்றிலேயே பாசமாய் பயணிப்பாள், தாயவள்!

அதனாலேயே, தன் காதல் விஷயத்தைத் தாயிட மிருந்தே துவங்கினான், அவன்!

அவன் கூறப்போகும் விஷயத்தை உணராத தாயுமே! ''சொல்லு ராஜா!'' என்றார் வாஞ்சையாக.

ஒளித்து மறைத்துப் பேசத் தெரியாதவன் என்பதால், ''என்னோட வேலை பார்க்கிற தீபாலிங்கிற பெண்ணை நான் விரும்புறேன். அவளுமே என்னைக் காதலிக்கிறா! பெத்தவங்க சம்மதத்தோட கல்யாணம் பண்ணிக்க நினைக்கிறோம்!'' நேரடிக் குண்டாய் விஷயத்தைப் படாரென உடைத்தே விட்டான்!

''என்னது...'' - ஒட்டு மொத்தக் குடும்பமே அதிர்ந் ததில், வீடே ஸ்தம்பித்தது!



இப்போது கூட, தேங்காய் உடைப்பது போல் வெட்டு ஒன்று துண்டு ரெண்டாய் விஷயத்தை உடைத்திருக்கக் கூடாதோ என்ற எண்ணம் தோன்றுவது உண்டு!

புடலங்காய் வெட்டுவது போல் - காயில் விஷமேறி இருக்கிறதா என்று சிறு துணுக்கை உண்டு பார்த்து விட்டு, பின்னர் அதை நன்றாய் கழுவி, இரண்டாய் நறுக்கி, உள்ளே இருக்கும் பஞ்சு போன்ற விதைகளைக் களைந்துவிட்டு, பின்னர் நறுக்குவார்களே - அதைப் போல், பக்குவமாய் சொல்லியிருக்க வேண்டுமோ என்றெண்ணினான், ஸ்ரீராமன்.

''சம்மந்தமே இல்லாமல் புடலங்காயின் நினைப்பு ஏன் வந்தது?'' - பழைய நினைவுகளிலிருந்து மீண்ட ஸ்ரீராமனுக்கு எழுந்த முதல் கேள்வி இதுவே!

நடந்து முடிந்த விஷயங்களை விடவும், ''புடலங் காய்''யே மனதில் பிரதானமாய் இருக்க, ''என்ன... என்ன...'' என்று தேடிய மூளை, ''அட ச்சை, இன்னைக்கு கத்திரிக்காய் புளிக் குழம்பிற்குத் தோதாய் வைக்கப்பட் டிருந்த புடலங்காய் செய்த வினை!'' என்று தன்னைத் தானே நொந்து கொண்டது.

இன்று காலையில், பரபரப்பாய் காய் வெட்டிக் கொண்டிருந்த ஜானகியிடம் ''அம்மா... நீ தானே... காய் எதுவும் வீண் பண்ணக்கூடாது சொல்லியிதுக்கே? இப்போ... நீயே இதெல்லாம் கீழே போட்டுட்டே?'' என்ற ஸ்ரீஷா குட்டியின் விசாரணையைத் தொடர்ந்த நிகழ்வுகள் படமென ஓடின!

''இது விஷம் கண்ணு! இதைப் போட்டு சமைக்கக் கூடாது!''

''விஷமா... அப்படின்னா என்ன?''

''விஷம்னா... கசப்பான மருந்து!''

''அப்பிடியா! அப்போ... நா இதும்புவேனே... அப்போ குடிச்சுவேனே ஒது மதுந்து... அதுவும் கசக்கும்... உவ் வேவா இதுக்கும்... அதுவும் விஷமா? அப்போ... அதைத் ததாதே மா...பீஸ்!'' - என்று பதிலுரைத்த மகளின் மழலையைத் தான் ரசித்தது நினைவு வர, அருகே படுத் திருந்த மகளின் நெற்றியில் ஓர் முத்தம் வைத்தான்!

விட்ட இடத்திலிருந்து மீண்டும் அதே உரையாடல் நெஞ்சில் ஓடியது!

''சரியான ஆளு! இருமல் மருந்து உனக்கு விஷமா? அது உடம்புக்கு நல்லது!''

''பொய்... பொய்... கசப்பான மதுந்து சொன்னியே!''

''சரி... சரி... ஒழுங்கான பதில் வரவரைக்கும் விட மாட்டியே!'' என்று அலுத்துக் கொண்டாலும்,

''விஷம்னா... கசப்பான மருந்தில்லை... அம்மா தெரியாம சொல்லிட்டேன்... விஷம்னா கெட்ட மருந்து! கெட்ட மருந்து சாப்பிட்டா இருமல் வந்து... காய்ச்சல் வந்து... வயிறு வலி வந்து... எல்லாம் வந் திடும்! அதான், அதைச் சாப்பிடக் கூடாது!''

''ஹோ!'' - ஒப்புக் கொண்டவளாய் தலையாட்டிய ஸ்ரீஷாவின் தலை மறைந்ததும், சத்தமின்றி ஜானகி வெளியிட்ட நெடுமூச்சு, இப்போது வந்து தன் மீது பாய்வது போலிருந்தது, ஸ்ரீக்கு!

சட்டென திரும்பி, கீழே படுத்திருந்த மனைவியைப் பார்த்தான்!



ஐந்து வருடங்கள் முன்னே பார்த்ததற்கு, இப்போது கொஞ்சம் அழகாய் இருந்தாள்!

சதையே இல்லை என்பது போல், எலும்பை மட்டுமே சுமந்து கொண்டு சுத்தித் திரிந்தவளுள் ஒரு சுற்றுக்கு அட்லீஸ்ட் சதைப் பற்று வைத்திருந்தது!

முகம் கூட மலர்ந்திருப்பது போலிருந்தது!

மிரண்ட கண்கள்! காய்த்துப் போன கைகள்! வேலை செய்து பழகிய உடம்பு! முக்கியமாய் நெற்றியில் இருக்கும் வெட்டுத் தழும்பு! - மாறாமல் இருந்தவை யின் எண்ணிக்கை மாற்றத்தை மிஞ்சியது!

அந்த வெட்டுத் தழும்பு தான் - 'ஸ்ரீஷா' என்ற விதைக்கு அச்சாரம்!

எத்தனை வருடங்கள் ஆனாலும்... எத்தனை ஜென் மங்கள் எடுத்தாலும்... அவனால் மறக்க முடியாத ஓர் நாள்! ஆனால், அவனே மறக்க விரும்பும் ஓர் அவமானம்!

அவமானமா? எதற்கு? ஸ்ரீஷாவைப் பெற்றதற்கா!

ம்ஹூம் கண்டிப்பாக இல்லை! அவன் வாழ்வின் பொருளானவளே எப்படி அவமானமாக முடியும்!

அவனது அவமானம் - அவனது நடத்தை!

அடிபட்டுக் கிடந்த ஓர் பேதைப் பெண்ணிடம்... அவளது சம்மதம் வாங்காமல்... சை... சை... என்ன ஒரு கொடுமை!

மனைவியே என்றாலும் அவளது இணக்கமில்லாமல்... அவளை...

ஏதோ நல்லது செய்பவன் போல்... தர்மகர்த்தா போல்... நியாயஸ்தன் போல்... நினைத்தாலே அருவெறுப்பாய் இருக்கிறது!

யாரிடமோ விட்ட சவாலுக்காக அவளை வென்று... இல்லையில்லை சரியாகச் சொல்லப் போனால் அவளது உடலை வென்று... தன் ஆணாதிக்கத்தை நிரூபித்து...

ஆனால், அன்றோ... ''என் மனைவியுடன் நான் உறவு கொள்ளாமல் இருப்பதால் தானே அவளை வதைக் கிறீர்கள்! கயிறளவில் திணிக்கப்பட்ட உறவை உடலள வில் இறுக்குகிறேன்!'' என்ற வீராப்பு தான் மேலோங்கி யிருந்தது!

உடலளவில் பிணைக்காமல் மனதளவில் இறுக்கி இருக்க வேண்டுமோ...

கொட்டிய பாலுக்கு வருந்தி என்ன பயம்? பால் என்ன பாயசமாகவா ஆகிவிடப் போகிறது?

## மணி இரவு 11:30

அதற்கு மேல், ஸ்ரீராமனால் படுத்துறங்க முடிய வில்லை! சட்டென எழுந்து விட்டான்!

அவன் விலகிய வேகத்தில், ஸ்ரீஷாவின் தூக்கம் களைந்துவிட, லேசாய் சிணுங்கினாள் பெண்ணரசி.

''குட்டிம்மா... தாச்சுக்கோ! தாச்சுக்கோ!'' என்று ஸ்ரீராமன் தட்டிக் கொடுக்கும்போதே, ''என்னடா அம்மு... தூங்கு கண்ணு!'' என்று ஜானகியும் எழுந்து விட்டாள்.

கணவன் அமர்ந்திருந்த பக்கத்திற்கு எதிர்ப்பக்கமாய் சென்றவள், நின்ற நிலையில் குனிந்தவாறே மகளின்



முதுகை வருடிக் கொடுக்க, தாயின் கையை உணர்ந் ததும் 'ம்மா' என்று அவள் புறம் புரண்டு படுத்த கன்று, கைகளால் தாயின் ஸ்பரிசத்திற்காக துழாவியது.

''அம்மா இங்க தான் கண்ணு இருக்கேன்!'' - வாஞ் சையாய் மகளின் தலையை கோதிவிட்டு, மீண்டும் உறங்க வைக்க அவள் முயல, மகளோ ''ம்ம்... ம்ம்... ம்ம்...'' என்று தாயைத் தூக்கச் சொல்லி, கைகளை நீட்டிக் கொண்டு எழுந்து அமர்ந்தாள்.

''தூங்கு ராஜாத்தி! இப்போ எதுக்கு எழுந்தீங்க?''

''வா... அப்பா தூங்க வைக்கிறேன்...''

''இங்க வாடா...'' என்று ஸ்ரீராமன் அழைத்தது எதுவும் ஸ்ரீஷாவின் மனதில் பதியவில்லை.

''தாய்'' மட்டுமே பிரதானமாய் இருக்க, ''தூக்குமா... தூக்கு...'' என்று அழுகை அதிகமானது.

வினாடி தாமதிக்காமல் மகளை ஏந்திக் கொண்ட ஜானகி ''என் குட்டிக்கு என்ன அழுகை? என் ராஜாத்திக் குட்டி அழலாமோ!'' என்றவாறே முதுகை வருடிக் கொடுக்க,

''ம்மா... பெதிய யானை வந்துச்சு... ஸ்ரீ பாப்பா... அம்மா... அப்பா... எல்லாம் அடிச்சுச்சு! யானை வேணாம்... யானை வதுது... யானை வேணாம்...'' என மகள் கூறிய பின்னர் தான், அவளது அழுகையின் காரணம் புரிந்தது பெற்றவர் இருவருக்கும்.

''யானை எதுவும் பண்ணாதுடா... அது வந்தா... அப்பா அடிச்சிடுறேன்'' என்று ஸ்ரீராமன் பதில் சொல்ல,

''ம்ஹூம்... பெரிய யானை... அடிக்கவே முடியாது!'' என்று அடித்துப் பேசிய மகள், தாயின் தோளில் பதிந்திருந்த முகத்தை நிமிர்த்தி, தன் பயத்தைத் தாயிடம் விளக்க முற்பட்டாள்.

வட்டமாய் விரிந்திருந்த கண்களில் பயம், பெரிது என்று காண்பிப்பதற்காக விரிக்கப்பட்ட கைகளில் நடுக்கம் என்று பயத்தில் தேய்ந்திருந்த மகளின் முகத்தை மீண்டும் தோளில் அழுத்தியவாறே, தன் படுக்கையான பாய்க்கு வந்த ஜானகி, கீழே அமர்ந்து மகளை மடியில் இட்டுக் கொண்டாள்.

''ஸ்ரீ பாப்பா... பயப்படக் கூடாதாம்! அம்மா ஒரு கதை சொல்வேனாம்... அதைக் கேட்டதும் பாப்பாவோட பயம் எல்லாம் போயே போயிடுமாம்...'' - பெண்ணின் நெஞ்சில் மெல்ல தட்டிக் கொடுத்தவாறே பேசினாள் ஜானகி.

''ம்ம்... யானை...''

''யானை வராதுடா! உனக்கு கதை வேணுமா வேணாமா?''

''ம்ம்...''

''பாப்பாக்கு பிள்ளையார் சாமி தெரியுமா தெரியாதா?''

''ம்ம்... கத...''

''கதை தான் சொல்லுகிறேன்... சொல்லு... தெரியுமா தெரியாதா?''

''தெதியும். குண்டு சாமி!''

''சமத்துக் குட்டி! பிள்ளையார் சாமியோட முகம் எப்படிடா இருக்கும்?''

''ம்ம்... ம்ம்... கத சொல்லும்மா...''

''கதை தான் சொல்லுறேன்... நீ சொல்லு... நம்ம மாதிரியா இருப்பாங்க பிள்ளையார் சாமி? பிள்ளையார் சாமிக்கு பெரிய காது... பெரிய மூக்கு... பெரிய வாய்... பெரிய கண்... யாரை மாதிரி இருப்பாங்க?''



''ஹான்! யானை மாதிதி!''

''ஹ்ம்ம். ஆமா யானை முகத்தோட இருப்பாங்க பிள்ளையார் சாமி! பாப்பாவைப் பிடிக்க வந்தது யானை இல்லைடா... பிள்ளையார் சாமி...''

''அப்பியா... ஆனா எதுக்குப் பிடிக்கணும்?''

''இன்னைக்குப் பாப்பா 'பீச்'க்குப் போகணும் சொல்லி அடம் பிடிச்சீங்களே! டி.வி.ல பார்த்த உடனே பீச் போகணும்... பீச் போகணும் சொல்லி அப்பாகிட்ட அடம் பண்ணீங்க இல்லையா... பிள்ளைங்க அடம் பண்ணினா பிள்ளையார் சாமிக்குப் பிடிக்காது... அதான் வந்து பயமுறுத்தி இருக்காரு!''

''பாப்பா அடம் பண்ணா... பிள்ளையார் சாமி பிடிச்சுப்பாதா?''

''ஆமா... பிடிச்சுப்பாரு!''

''இனிமே, ஸ்ரீ பாப்பா அடமே பண்ண மாட்டா... பிள்ளையார் சாமி, ஸ்ரீ அடமே பண்ண மாட்டேன்... என்னைப் பிடிக்காத! நா அப்பா - அம்மாவோடவே இதுக்கேன்!''

''சமத்துப் பொண்ணு! தூங்கு... இனிமேல் பிள்ளையார் என் பிள்ளையை பயமுறுத்தவே மாட்டார்!''

''ம்ம்...'' என்று கூறி, ஒரு வினாடி கண்ணை மூடிக் கொண்ட ஸ்ரீஷா,

''பாப்பா தானே அடம் செய்தா? எதுக்கு அப்பா... அம்மா எல்லாம் பிடிச்சா சாமி? பாட் சாமி... இல்லைமா?'' என்றாள் யோசனையாக.

''தூக்கக் கலக்கத்தில்கூட, தெளிவாய் தான் இருக்கிறாள்!'' என்றெண்ணிய ஸ்ரீராமன் லேசாய் சிரிக்க, ஜானகி அதற்கும் பதில் வைத்திருந்தாள்.

''பாப்பா அடம் பண்ணினதும், அப்பாவும் அம்மாவும் ''இப்படியெல்லாம் பண்ணக் கூடாது பாப்பா... சனிக்கிழமை போகலாம்''ன்னு சொல்லாம, உடனே ''சரி'' சொன்னோம் இல்லையா... அதுக்குத்தான் அம்மாவையும் அப்பாவையும் பிடிச்சுக்கட்டாரு!''

''அப்பிடியா? அப்பிடியா?'' என அவள் இருமுறைக்கும் மேலாக கேட்டதற்கு, சளைக்காமல் ''ஆமா'' சாமி போட்டாள் ஜானகி.

கண்ணில் சிறு சிரிப்பு இருந்தாலும், மகள் கண்டு பிடித்து விடுவாள் என்பதற்காக, முகத்தை மிகவும் சீரியஸாகவே அவள் வைத்திருந்ததைப் பார்க்க, ஸ்ரீராமனுக்கு சிரிப்பாய் வந்தது!

ஒரு வழியாக, மகள் உறங்கியதும், அவளைத் தூக்கிக் கொண்டு ஜானகி எழ எத்தனிக்க, ''நான் தூக்கிக்கிறேன்'' என்றவன், மகளை வாரிக் கொண்டு, படுக்கைக்கு வந்தான்.

விளக்கை அணைப்பதற்குக் கூட காத்திராமல், ஜானகி ஐந்தே நிமிடங்களுள் உறங்கிவிட, அங்கே உறக்கத்திற்குத் தவமிருப்பது ஸ்ரீராமனின் வேலையாகிற்று!

படுக்க மனமில்லாமல், கட்டிலில் சாய்ந்து அமர்ந்தவனுக்கு, இப்போது பத்திரிகையை எடுக்கும் மனமும் இல்லை!

விட்டத்தை வெறித்துக் கொண்டிருந்தவனின் குருட்டு யோசனையைக் கலைக்கும் வண்ணம், ஸ்ரீஷா அவனை நெருங்கிப் படுத்துக் கொள்ள, மகளிடம் சென்றது எண்ணத்தின் அலைவரிசை, அங்கிருந்து மனைவியிடமும்!



என்ன அழகாய் மகளின் பயத்தைப் போக்கினாள்! அவள் பயத்தைப் போக்கியது போலவும் ஆகிற்று... அவள் செய்தது தப்பு என்று சொன்னது போலவும் ஆகிற்று... கூடவே அவனுக்கும் ஓர் குட்டு வைத்தது போலவும் ஆகிற்று!

ஜானகியா என்றிருந்தது அவனுக்கு?

இவளுக்கு கழுத்து என்ற உறுப்பு வளைந்தே படைக்கப் பட்டதோ என்றெண்ணும் அளவிற்கு, குனிந்த தலை நிமிராமல்...

என்ன திட்டினாலும், எதிர்த்துப் பேசாமல்... ஹ்ம்ம் அந்தப் பழக்கம் இன்றும் மாறவில்லை தான்... அவனது குரல் உயர்ந்தால் அவளது குரல் மெலிந்து... தேய்ந்து... இல்லாமலே போய்விடும்...

என்ன வேலை சொன்னாலும், ''சரி அத்தை...'', ''சரி அண்ணி...'' என்று மண்டையை மண்டையை ஆட்டிக் கொண்டு... மாடு போல உழைத்துக் கொண்டு...

தினமும் பழைய சோறும்... மோர் மிளகாயும் உண்டு... ஹ்ம்ம் இதுவும் தான் மாறவில்லை... மற்றவரின் வயிற்றுக்காக தன் வயிற்றை அரைப்பதமாய் நிரப்பிக் கொள்ளும் பழக்கம்!

திருமணமான புதிதிலிருந்த ஜானகிக்கும், இப்போதிருக்கும் ஜானகிக்கும் இடையே இருந்த வித்தியாசங்களைக் கணக்கிடத் துவங்கியவன், ''அவளது குணம் இம்மியும் மாறவே இல்லை!'' என்ற முடிவுக்கு வந்தான்.

''தான் பெற்ற பெண்ணிடம் சற்று இயல்பாய்... மனதில் பட்டதை சொல்லும் அளவில் அவள் இருப்பதே

மாற்றம் போல் தோன்றியிருக்கிறது!'' - அந்த முடிவின் விளைவாய் மற்றொரு ஆணி நெஞ்சைப் பதம் பார்த்தது!

''அம்மா மருமகளைப் படுத்தினாள்... அக்கா வேலை ஏவினாள்... அப்பா கரித்துக் கொட்டினார்...'' என்று பிறர் மீது தப்பு சொல்வதை விடவும்,

என்ன மாதிரியான சூழ்நிலையில் திருமணம் செய்திருந்த போதும், கட்டிய மனைவியைக் கைவிட்டு, மும்பைக்கு ஓடிவந்தது அவன் தப்பல்லவோ!

ஆனால், அன்றைய தினம்... அவனுக்கு ஜானகியின் முகம் பார்க்கக் கூட எரிச்சலாய் வந்தது!

அவளைப் பார்த்திருந்தால், தீபாலிக்கு செய்த துரோகம் தலை விரித்தாடுவது போல் ஓர் பிரம்மை தோன்றவே, தாலி கட்டி முடித்த வினாடி, திருநெல்வேலியிலிருந்து மும்பைக்கு ரயிலேறி விட்டான்!

அவனது திருமணம்... திருமணம் போலவா நடந்தது...

வீதி முழுக்கத் தோரணம் கட்டி...

வாசலை அடைத்துக் கோலமிட்டு...

ஊரை வளைத்துப் பத்திரிகைக் கொடுத்து...

ஊரார் உறவினர் என்று ஒன்று கூடி...

மேள தாள காதைப் பிளக்க...

வாணவேடிக்கை ஊரை அண்ணாந்து பார்க்க வைக்க...

ஹ்ம்ம் இதில் எதுவுமே இல்லை!



எளிமையாக கோவிலில் நடத்தப்பட்டதா என்றால் அதுவுமில்லை!

ஆஸ்பத்திரியில்... விஷம் குடித்துவிட்டுப் படுத்திருந்த தாய் - தந்தையின் படுக்கையருகே, ஓர் சாமி படத்தை வைத்து, ஓர் மஞ்சக் கயிறுடன்... யாருக்குமே இப்படியொரு திருமணம் நடந்தேறியிருக்காது!

ஸ்ரீராமன் - தனது காதல் விஷயத்தைக் கூறிய தினமே - அவனது திருமணமும் நடந்து முடிந்திருந்தது!

தீபாலியின் குணநலன்களை சொல்லும் அவகாசத்தைக் கூட, அவனது குடும்பம் கொடுக்கவில்லை!

''அடப்பாவி! எங்க தலையில குண்டைத் தூக்கிப் போட்டுட்டியே!'' என்று தாயார் தலையில் அடித்துக் கொண்டு அலற,

''இதுக்குத்தான் மும்பைக்குப் போக வேண்டாம்ன்னு தலை... தலையா அடிச்சுக்கிட்டோம். கேட்டியா? ஊர்லேயே இருந்து வட்டிக்கடையைப் பார்த்திட்டு இருந்திருந்தா... இந்தப் பிரச்சனையே வந்திருக்காது!'' என்று தந்தை சத்தம் போட,

சகோதரிகள் இருவரும், தங்கள் பங்கிற்குத் தத்தம் கணவன்மார்களை ஊரிலிருந்து அழைத்து வரும் வேலையைச் செய்தனர். தாங்கள் சொல்வதை விடவும், வீட்டு மாப்பிள்ளைமார் சொன்னால் சரியாக இருக்கும் என்று எண்ணினார்கள் போலும்!

ஆனால், தன் பிடியில் உடும்பென இருந்த ஸ்ரீராமனை யாராலும் அசைக்க முடியவில்லை!

''உங்களது சம்மதத்தோடு தான் திருமணம்!'' என்று வசனம் பேசாமல்,

''அவள் தான் வாழ்க்கைத் துணை. இது உங்களுக்குப் பிடித்தால் எனக்கு சந்தோசம்... இல்லையென்றால் உங்களை மீறிக் கல்யாணம் பண்ணிக் கொண்டேன் என்ற பேரோடு வாழ்ந்துவிட்டுப் போகிறேன்!'' என்று நெஞ்சு நிமிர்த்தி நின்றான், அவன்.

பெற்றோர் முக்கியம் தான்... அவர்களின் அர்த்தமற்ற ஜாதி வெறிக்காக... வெட்டி கௌரவத்திற்காக தனக்குப் பிடித்தவளை விட்டுக் கொடுப்பதா என்ற எண்ணம் அவனுக்கு!

அது மட்டுமல்லாமல், கெஞ்சினால் மிஞ்சுவேன்... மிஞ்சினால் கெஞ்சுவேன் என்ற ரகத்தைச் சேர்ந்தவர்கள் அவன் வீட்டினர்!

தான் முறுக்கிக் கொண்டு நின்றால், அவர்களது பிடிவாதம் தளர்ந்துவிடும் என்று மிதப்பில் அவன் இருக்க, நடந்ததோ வேறு!

''நீங்க சம்மதிக்கலைன்னா நா இப்பவே மும்பை கிளம்புறேன்!'' என்று நின்றவனை, ஒரேடியாய் ஆடிப் போக வைக்கும் வண்ணம், வீரலட்சுமியும், நீலகண்டனும் மண்ணெண்ணெயைக் குடித்து, தங்களது மறுப்பைத் தீயெனக் காட்டினர்.

''நீ மட்டும் எங்களை மீறிக் கல்யாணம் பண்ணிக் கிட்ட... நாங்க ரெண்டு பேரும் செத்திடுவோம்!'' என்று தாயார் மிரட்டியதை, ''பயமுறுத்தல்'' என்ற அளவில் மட்டுமே எடுத்துக் கொண்டது தவறு என்று உறைத்தது!

நெஞ்சைப் பிடித்துக் கொண்டு, ''என் உயிரை விடவும்... என் மானம் தான்டா பெருசு... உனக்காக, என்



சொந்தபந்தம் முன்னே என்னால தலை குனிஞ்சு நிக்க முடியாது! அதுக்கு... பிள்ளை வேற ஜாதிப் பெண்ணை விரும்புறான்னு தெரிஞ்சதுமே, வீர லெட்சுமி உயிரை விட்டுட்டாங்கிற பேரு எனக்குப் போதும்'' என்று தாயார் பேசியது, அப்படியே படமாய் விரிந்தது!

தொடர்ந்து ''அய்யயோ! அம்மா - அப்பா உயிரை விட உனக்கு எவளோ ஒருத்தி தான் பெருசா போயிட்டாளா...'' என்று பெரிய அக்கா அலறியது, இன்றும் அவன் காதில் ரீங்காரமிட்டது!

''முதல்ல, ஹாஸ்பிடல் போகலாம்... மாமா நீங்க வண்டியை எடுங்க...'' என்று ஸ்ரீராமன் துரிதப்படுத்த.

''ம்ஹூம் மாப்பிள்ளை... எடுக்காதீங்க! அவன்... நாங்க சொல்ற பேச்சைக் கேட்கிறதா இருந்தா... நாங்க ஆஸ்பத்திரிக்கு வரோம். இல்லைன்னா.. இப்படியே எங்க உயிரு போகட்டும்!'' - வீரலெட்சுமி பிடிவாதமாய் சோபாவில் அமர்ந்திருந்தாள்.

''என்னம்மா இது? முதல்ல நீங்க ஆஸ்பத்திரிக்கு வாங்க... அப்புறம் பேசிக்கலாம்...'' ஸ்ரீராமன் பதறினான்.

வீட்டினர் மட்டுமல்லாமல் வேலையாட்கள் அனைவரின் முன்னிலையிலும், தர்மசங்கடமாய் அமைந்த சூழலை நோகவும் முடியாமல், தீபாலியை விடவும் முடியாமல், அதற்காக தாயின் உயிரைக் குடிக்கவும் முடியாமல், தவித்துப் போனான் அவன்.

''ப்ளாக்மெயில் பண்றீங்களாமா? நானும் இதே மாதிரி... மருந்தைக் குடிச்சிட்டு சாகக் கிடந்தா என்ன செய்வீங்கலாம்? ப்ளீஸ்மா... வாங்க!''

''அதான் நா முந்திக்கிட்டேனே!'' - விட்டேற்றியாய் பதில் சொன்னாள், அவனைப் பெற்றவள்.

ஏற்கனவே, இதய நோயாளியான தந்தை நெஞ்சைப் பிடித்துக் கொண்டு மயங்கிவிழ, ஸ்ரீராமனின் நெஞ்சுத் துடிப்பு தடதடத்து ஓடியது!

''அய்யோ... அம்மா சொல்றாங்கன்னு நீங்களும் பார்த்திட்டு இருக்கீங்களே... தூக்குங்க மாமா...'' என்று அக்காள் கணவன்களை அவன் ஏவ, மூவருமாய் நீல கண்டனை தூக்கியபோது, தன் பெரிய உடம்பைக் கொண்டு அவர்களைத் தடுத்தார் வீரலெட்சுமி.

''பிள்ளை அவனுக்கே இம்புட்டு பிடிவாதம் இருக் கையில... பெத்தவுங்க எங்களுக்கு இருக்காதா? யாரா வது கையை மேல வச்சீங்க, உள்ளே ஊத்திக்கிட்ட மண்ணெண்ணெயை வெளிய ஊத்திக்கிட்டு, அவன் முன்னாடியே செத்துப் போறோம்! கொள்ளி போடுற வேலையும் அவனுக்கு மிச்சம்... அந்த சிறுக்கியைக் கட்டிக்கிட்டு நிம்மதியா இருக்கட்டும்!'' என்று அவர் சாபம் கொடுக்க, செய்வதறியாது நின்றான் மகன்.

''மச்சான், இப்போதைக்கு அவங்க உயிரு தான் முக்கியம். அவங்களுக்கு இணக்கமா பேசி... ஆஸ்பத் திரிக்குக் கூட்டிப் போற வழியைப் பாருங்க. உயிர் பிழைச்சதும், நீங்க என்னன்னாலும் பண்ணிக்கோங்க...'' என்று ஒருவரும்,

''அவங்களோட பிணத்து மேல, உங்க கல்யாணம் நடந்ததுன்னா... வாழ்க்கை முழுசும் ரணமாப் போயிடும் மச்சான்! அவங்களை உயிர் பிழைக்க வச்சுட்டு, பக்கு



வமா எடுத்துச் சொல்லிப் புரிய வைங்க...'' என்று மற் றொருவரும் ஸ்ரீராமனின் மூளையை மழுங்கடிக்க,

''உங்களை மீறி என்னோட கல்யாணம் நடக்காது. தயவு செஞ்சு, ஆஸ்பத்திரிக்கு வாங்க!'' என்று காலில் விழாத குறையாக தாயையும் தந்தையையும் அவன் கெஞ்சியதில், அதிக சேதமின்றி இருவரது உயிரும் மீட்கப்பட்டது!

''அதுதான் உயிர் பிழைத்தாயிற்றே! இனி... நம் பிடிவாதத்தில் நாம் நிற்போம்!'' என்று அவனை ஆசுவாசப்பட விடாமல், ஜானகியைக் கூட்டி வந்து நிறுத்தி ''கட்டுடா தாலியை!'' என்று விட்டார், வீர லெட்சுமி!

''என்னம்மா இது? உங்களோட அராஜகத்திற்கு அளவே இல்லையா? நீங்க சொல்ற பெண்ணைக் கல்யாணம் பண்ணிக்கிறேன்னு தான் சொல்லிட்டேனே? அப்புறம் என்ன? பொறுமையா பொண்ணு பார்த்து... ஊரைக் கூட்டிக் கல்யாணம் பண்ணலாம் இல்லையா? எதுக்கு இவ்வளவு அவசரம்?'' என்று ஸ்ரீராமன் அதிர,

''நான் உன்னைப் பெத்தவடா! நீ என்ன நினைக் கிறன்னு எனக்குத் தெரியாது? இப்ப தான் இதுங்க ரெண் டும் பிழைச்சிடுச்சுங்களே! மெல்ல நழுவி... மும்பைக்குப் போய்... அவளைக் கட்டிக்கலாம்ங்கிற நினைப்புத் தானே? நீ என்ன மிதப்பில இருந்தாலும்... நான் மதிக் கிறதா இல்லை! இப்போ... இங்க... இந்த நிமிஷமே, இவ கழுத்தில தாலியைக் கட்டுற! இல்லைனா, போட்டிருக்க ட்ரிப்ஸ்... மருந்து எல்லாத்தையும் பிச்சு எறிஞ்சுடு வேன்!'' - பலமாய் பயமுறுத்தினார் தாயார்.

''இதெல்லாம் அநியாயம்மா? என்னோட மனசுக்கு மதிப்பே இல்லையா?''

''இல்லைடா... என் மானத்தை விட... உன் மனசு எனக்குப் பெருசில்லை!'' - அழுத்தமாய் மறுத்தார் வீரலெட்சுமி.

''என்னால... இன்னொரு பெண்ணைக் கல்யாணம் செய்துக்க முடியாதும்மா!''

''அப்ப, எனக்கும் உங்க அப்பாக்கும் இன்னைக்குத்தான் கடைசி நாளுன்னு நினைச்சுக்கோ! எங்களை அள்ளிப் போட்டுட்டு, நீ எக்கேடும் கெட்டுப் போ!''

''அம்மா...''

''என்னடா அம்மா! பெத்து வளத்த நான் முக்கியமில்லை... ஒரு வருஷம் முன்னாடி வந்த இன்னொருத்தி முக்கியமா?''

''.....''

''கட்டுறியா இல்லையா?'' என்றவர், கையிலிருந்த ட்ரிப்ஸை கழட்டி எறியவும், குப்பென ரத்தம் பாய்ச்சி அடித்தது!

அரை மணி நேரம் பெரும் களேபரமாய் இருந்தது!

தனக்கு யோசனை சொன்ன அக்கா கணவர்கள் இருவரையும் முறைப்பது தவிர, அவனுக்கு வேறு வழி எதுவும் தெரியவில்லை.

''ரொம்பக் கஷ்டப்பட்டு, உள்ள இருந்த மண்ணெண்ணெயை வெளிய எடுத்திருக்கோம்! இன்னொரு அதிர்ச்சியை... இரண்டு பேரோட உடம்பும் கண்



டிப்பா தாங்காது... அதனால, கொஞ்சம் பார்த்துப் பதமா பேசுங்க!'' என்று மருத்துவர் வேறு, ஸ்ரீராமனை அழைத்துச் சொல்ல, தலையைப் பிடித்துக் கொண்டு அமர்ந்து விட்டான்.

ஒரு முடிவுக்கு வந்தே ஆக வேண்டும் என்ற எண்ணத்துடன், தாய் கண் விழிக்கக் காத்திருந்தான்.

அவரது முகத்தில் சற்றே தெளிவைக் கண்டதும், ''அம்மா... கொஞ்சம் யோசிச்சுப் பாருங்க... இந்தப் பொண்ணை எனக்கு யாருன்னே தெரியாது!''

''அவ... நம்ம மரகதம் அத்தை இருக்கா இல்லையா அவளோட அண்ணனுக்கு சொந்தக்காரப் பொண்ணு! நமக்கு சொந்தம் தான்!'' - பேச்சைக் கத்தரித்தார் தாயார்.

''சொந்தம் தான்... ஆனா, நா அவளைப் பார்த்ததே இல்லையேமா!''

''உன் அக்காங்க ரெண்டு பேரும்... உங்க மாமாவைப் பார்த்தது கூட கிடையாது! அப்படித்தான் இதுவும்!'' - வீண் விதண்டாவாதம் செய்தார் மூத்தவர்.

''அவளுக்கு என்னைப் பிடிச்சிருக்கோ இல்லையோ! நீங்க பாட்டுக்கு ஏற்பாடு செய்றீங்க?''

''அந்த அனாதைக் கழுதைக்கு எம் மகனைப் பிடிக்காமப் போகுமா... என்ன...? அம்மையும் இல்லை... அப்பனும் குடிச்சே ஒழிஞ்சு போறான்... அப்படியிருக்கும்போது, இந்த சம்பந்தம் அவளுக்குக் கடவுள் போட்ட பிச்சை!'' - பணத்திமிரில் வார்த்தைகள் தடித்தனமாய் வந்து விழுந்தன.

தாயின் பேச்சில் முகம் சுளித்த ஸ்ரீராமன், ''அம்மா... தயவு செஞ்சு இப்படிப் பேசாதீங்கம்மா! ஏழைங்கன்னா

அவங்களுக்கு மனசே இருக்கக் கூடாதா என்ன? அவளோட சம்மதம் முக்கியம்மா...'' - ஜானகிக்காக பார்ப்பது போல், தன் வாழ்வைக் காக்க முயன்றான்.

''அதெல்லாம் அவ சம்மதிச்சுட்டா...''

''எப்போ கேட்டீங்க? ஆமா... அவ எங்கிருந்து திடீர்ன்னு முளைச்சா?'' - ஜானகியின் வருகை குறித்த ரகசியத்தை அறிய முற்பட்டான், அவன்.

''அந்தக் கழுதை... நம்ம வீட்டில தான மூணு மாசமா வேலை செஞ்சுக்கிட்டு கிடக்கு!'' அலட்சியத்தில் கோணியது வீரலெட்சுமியின் முகம்.

''என்னம்மா இது? அம்மாவும் இல்லை... அப்பாவும் சரியில்லை... அதையாவது விட்டுடலாம்... நம்ம வீட்டில வேலைக்கு இருக்கப் பொண்ணைப் போய்...'' - அம்மாவின் டாம்பீகத்தை வைத்தே, காரியம் சாதிக்கப் பார்த்தான் அவன்.

''என்ன பண்றது? நீ பண்ணி வச்சிருக்கக் கூத்துக்கு... நான் ஊரை வளைச்சா பொண்ணு தேட முடியும்... ஊரு பெரிய மனுஷன் எவனும், ஒரே நாளில கல்யாணத் துக்கு ஒத்துக்க மாட்டானே!'' - அதற்கும் மகனையே குற்றம் சொன்னாள், தாய்.

''அதான்மா நானும் சொல்றேன்... கொஞ்சம் பொறு மையா பொண்ணு பாருங்க...''

''எதுக்கு? அதுக்குள்ளே என் மனசைக் கரைச்சிட லாம்ன்னு பார்த்தியா? இது கல்லுடா.. லேசில கரையாது!'' - என் முடிவே பிரதானம் என்று நின்றார் அவரும்.



''உங்க மனசை மாத்த மாட்டேன்மா... ஆனா இப்போ கல்யாணம் வேணாம்!''

''இதே வாய்தானே... எனக்கு அந்த தீபாவோ... கோபாவோ அவளைக் கலியாணம் பண்ணி வைங்கன்னு வந்து நின்னுச்சு!'' - அவன் வார்த்தைகளை வைத்தே மடக்கினாள், பெற்றவள்.

''ஐயோ! இந்தத் திடீர் கல்யாணம் வேணாம்மா... கொஞ்சம் பொறுமையா...'' அவன் முடிப்பதற்குள், தாய் இடைப்புகுந்தாள்.

''நீ மும்பைக்குப் போயிட்டா... உன்னைப் பிடிக்க முடியாது! கேட்க நாதியத்தவ என்றாலும் அவ நம்ம ஜாதி பூவு... அத்தோட, சொந்தம் விட்டுப் போகக் கூடாதுன்னு ஏழைன்னாலும் சொந்தக்காரப் பெண் ணையே மருமகளா ஏத்துக்கிட்டா இந்த வீரலெட் சுமின்னு ஊரும் சமாதானம் ஆகிடும்! அதனால, இப் பவே தாலியைக் கட்டுற வழியைப் பாரு... இல் லைனா...'' என்றவர், இதற்கு மேல் என் வாய் பேசாது கை தான் பேசும் என்பது போல், ட்ரிப்ஸின் பக்கம் கையை நீட்டினார்.

பிறகென்ன, ஸ்ரீராமன் ஜானகியின் மணாளன் ஆனான்!

அவளது முகத்தைக் கூடப் பார்க்காமல், அவன் கட் டிய தாலியை வாங்கிக் கொண்ட அவளும் நிமிர்வதாய் இல்லை!

சந்தோஷமாய் வாழ்த்திய தாயை உறுத்து விழித்து ''இப்போ... உங்களுக்கு சந்தோசம் தானே? ஜாதி... மானம்... கௌரவம்ன்னு என்னோட மனசை சுக்கு நூறா

உடைச்சுட்டீங்க! இந்த மனசோட என்னால இவளோட வாழ முடியாது! நான் போறேன்... திரும்பி வர மாட்டேன்!'' என்று ஆவேசத்தைக் கொட்டிவிட்டு வந்தவன் தான், ஆறு மாதத்திற்கு மேலாகியும், அழைப்புக்கு மேல் அழைப்பு வந்தும் மும்பையிலிருந்து நகரவில்லை.

நடுவே, தங்கள் திருமணத்திற்கு சம்மதம் வாங்கச் சென்றவன் தானே ஓர் திருமணம் செய்து வந்திருப்பதை அறிந்த தீபாலி, முகத்தில் காரித்துப்பாத குறையாக அவனிடம் பேசியது தனிக்கதை! அவள் வேலையை விட்டுச் சென்றது, அதன் கிளைக் கதை!

தீபாலியின் கோபத்திற்குப் பயந்து, தனக்குத் திருமணமான விஷயத்தை மறைத்து, அவளுடன் உறவாட அவனும் விரும்பவில்லை!

பிடித்ததோ பிடிக்கவில்லையோ... வாழ்வில் ஓர் திருமணம்தான்! அது கோணலாய் அமைந்தது தன் தலைவிதி என்று வாழ்க்கையை ஓட்டிச் சென்ற காலம் அது!

கொடுமை மயமான அக்காலத்தை எக்காலமும் நீடிக்க விடாமல், அவனது மூத்த அக்கா கணவனிடமிருந்து ஓர் அழைப்பு வந்தது!

## மணி இரவு 12:00

அந்த நடுநிசி வேளையிலும், உள்ளத்தில் ஊசியாய் இறங்கியது அன்றைய உரையாடல்!



''நீயெல்லாம் மனுஷனாய்யா?'' என்று தொடங்கியது அந்த அழைப்பு!

நான்கரை வருடங்களான பின்னரும், சகோதரி கணவனின் எண் கைப்பேசியில் மின்னினால், ஸ்ரீராமனின் உடம்பில் ஓர் சிலிர்ப்பு ஓடி மறையும்!

வாங்கிய திட்டுக்களின் விளைவோ! கொஞ்சமா நஞ்சமா... அரை மணி நேரத்திற்கு அவர் மட்டும் பேச, ஒரு வார்த்தை கூட மறுத்துப் பேச முடியாமல், அவன் திணறிய நேரம் அது!

தன் மனிதாபிமானத்தை கேள்வி கேட்டவரிடம், ''என்னாச்சு மாமா? ஏன் இப்படி பேசுறீங்க?'' என்று கேட்டவனிடம்,

''நீ பிடிக்காம தான்... அந்தப் பொண்ணைக் கல்யாணம் பண்ணிக்கிட்டே! நா இல்லைன்னு சொல்லலை.. ஆனா அதுக்காக, அவளை அப்படியே அம்போன்னு விட்டுறதா?''

''அந்தப் பொண்ணு என்னய்யா பாவம் பண்ணுச்சு?''

''உங்க அம்மாவும் அக்காக்களும் அவளைப் போட்டு வதைக்கிறதைப் பார்த்தா நெஞ்சே கொதிக்குது!''

''வேலைக்கு வச்சிருந்தப்பவே ஆளாளுக்குப் படுத்துடுவாங்க... இப்போ... அவங்களோட பணக்காரப் பையனுக்குப் பணக்காரப் பொண்ணு கிடைக்கலைன்னு இந்தப் பொண்ணைப் போட்டு படுத்தி எடுக்கிறாங்க...''

''உங்க அக்காங்க எல்லோரும் ஏழு மணிக்குக் குறைஞ்சு எழுந்து நீ பார்த்திருக்கியா? அந்தப் பொண்ணு... காலையில நாலு மணிக்கே எழுந்துச்சுக்குது!''

''மாட்டுக் கொட்டகை கழுவி, மாடுங்களுக்குத் தண்ணி காட்டி, பால் கறந்து... வீட்டு மருமக செய்ற வேலையா இது? மாட்டைப் பார்த்திட்டு இருந்த துரை சாமியைத் துரத்திவிட்டு, ஜானகியையே எல்லாம் செய்யச் சொல்றாங்க...''

''அதை முடிச்சா... சமையல் வேலை... துணி துவைக்கிறது... கூட்டுறது... துடைக்கிறது...''

''நடுநடுல உங்க அம்மாவுக்கு கால் பிடிச்சு விடுறது... என்ன வேலை செஞ்சு கிழிச்சாங்கன்னு அவளைக் கால் அமுக்கி விடச் சொல்றாங்களே! சை!''

''இதில, உங்கப்பா வேற... அவ செய்ற ஒரொரு வேலையிலையும் பொம்பளை மாதிரி குறை கண்டு பிடிச்சிட்டு... பொண்டாட்டிகிட்ட காட்ட முடியாத டாம்பீகத்தை மருமககிட்ட காட்டுறார் போல... என்ன குடும்பமடா...''

''உங்க அக்காங்க ரெண்டு இருக்குதே... பிசாசுங்க... பிள்ளைங்களுக்கும் புருஷனுக்கும் தன் கையால பலகாரம் செஞ்சு கொடுக்க முடிஞ்சதுன்னா செய்யணும்... இல்லைன்னா சும்மா இருக்கணும்... அதை விட்டுட்டு, அந்தப் பொண்ணைக் கூட்டிட்டு வந்து, பலகாரம் செய்யச் சொல்லி முதுகை உடைக்குதுங்க...''

''மாடு மாதிரி உழைக்கிறா சரி... அதுக்கு ஏத்த ஆகாரமாவது தரலாம் இல்லையா? சாப்பாட்டுக்கே பஞ்சப்பட்டவங்க மாதிரி, இரண்டு கரண்டி சாதம் கொடுக்கிறாங்க... அதுவும் பழைய சாதம்!''

''சாப்பாட்டை விடுய்யா! அந்தப் பொண்ணு எங்க படுத்திருக்குத் தெரியுமா? உங்க வீட்டு சமையல் காரம்மா படுத்திருக்குமே... அங்க!''



''சை... இம்மியும் மனுஷத்தன்மையே இல்லாம பொம்பளைங்களா இவங்க?''

''என்ன ஏதுன்னு கேட்கப் போனா என்னை... அந்தப் பொண்ணோட சேர்த்துப் பேசி! கருமம்! அந்தப் பொண்ணுக்கு அண்ணன் முறையாகணும்யா... நான்! என்னைப் போய்?''

''நாக்கில நரம்பில்லாம பேசின உங்க அம்மாவை அப்படியே அறையணும் போல இருந்துச்சு... பெரியவங்களாச்சேன்னு சும்மா இருந்தேன்...''

''கூடச் சேர்ந்துகிட்டு ஒத்து ஊதின உங்க அக்காவையும் ரெண்டு விட்டுருப்பேன்... ஆனா, நான் அதைச் செய்யலை! ஏன் தெரியுமா?''

''கட்டின பொண்டாட்டியைக் கை நீட்டி அடிக்கிறது மிருகத்தனம்ன்னு நினைக்கிறவன், நான்!''

''ஆனா... நீ! கட்டின பொண்டாட்டியை கைவிட்டு... அவளை அடிமையாக்கிட்டு வந்திருக்கே!''

''உனக்குப் பிடிக்காத கல்யாணம்ங்கிறது உண்மைதான்... அதுக்காக, அந்த அப்பாவிப் பொண்ணை சாகடிக்கிற உரிமையை உனக்கு யாரும் தரலை! அதை முதல்ல புரிஞ்சுக்கோ!''

பதில் பேசவே இடம் கொடாமல், தன் மனதின் கோபம் முழுவதையும் கொட்டி முடித்தார், ஜானகியின் நலன் விரும்பி!

பேசிய வார்த்தைகளின் சூடு தணிய, சற்று நேரம் பேசாமல் இருந்தவர், மீண்டும் பேசினார்.

''மச்சான், ஒண்ணு சொல்லுங்க... இன்னும் அந்த மும்பைக்காரப் பொண்ணோட இணக்கமா இருக்கீங்களா? அதான், இந்தப் பக்கம் வரதில்லையா? அப்படி ஏதாவது இருந்தா மறைக்காம சொல்லிடுங்க! எப்பாடு பட்டாவது, அந்தப் பொண்ணை அந்த நரகத்தில இருந்து மீட்டு, ஏதாவது அனாதை ஆசிரமத்தில சேர்த்துடறேன்! இருக்க சொச்சக் காலமாவது நிம்மதியா இருந்திட்டுப் போகட்டும்!'' - கோபம் அடங்கியதன் விளைவாய், ஏக வசனமும் உயர்த்திய குரலும்... மரியாதை அழைப்பும் தன்மையான குரலுமாய் மாறியிருந்தது!

அதுவரை பேசாமலிருந்த ஸ்ரீராமன், சிறு சிரமத்துடன் பதில் சொன்னான்.

அப்போதும், அடைத்திருந்த தொண்டையை லேசாய் செரும வேண்டியதாய் இருந்தது!

''இல்லை மாமா... தீபாலியைப் பார்த்தே ஆறு மாசத்துக்கும் மேலாச்சு!''

''அவளைப் பார்த்தாலும்... பழகினாலும்... தாலின்னு கட்டின பிறகு, இன்னொரு பெண்ணோட சல்லாபிக்கிற சபலப்புத்தி உள்ளவன் இல்ல நான்...''

''ரொம்ப சந்தோசம் மச்சான்! ஆனாலும்... கட்டின பொண்டாட்டியோட சல்லாபிக்கக் கூடாதுன்னு சட்டம் எதுவுமில்லையே மச்சான்!'' - சரியாய் குறி பார்த்து அம்பை எய்தார் அவர்.

ஸ்ரீராமனிடம் இருந்து பதில் வராமல் போகவே, ''அவளை மனைவியா நடத்தினா எனக்கு ரொம்ப சந்தோசம். அது முடியலைன்னா, ஒரு சராசரி மனுஷனுக்கான சக துக்கங்களையாவது அவளுக்குக் கொடுங்க!'' என்றார் அவர், சாதுர்யமாய்.



''கண்டிப்பா மாமா! இனிமேல் பார்த்து நடந்துக்கிறேன்!''

''அவளை மும்பைக்குக் கூட்டிப் போயிடுங்களேன், மச்சான்!''

''ம்ம் சரி மாமா! அடுத்த வாரம் ஊருக்கு வரேன்... வந்து முடிவு பண்ணிக்கலாம்!'' என்றவன், சொன்ன சொல் மாறாமல் ஊருக்குக் கிளம்பிச் சென்றான் - யாரிடமும் தன் பயண விவரம் தெரிவிக்காதவனாய்!

அவனது வருகை அறியப்படாத ஒன்றாய் அமைந்ததில், பல உண்மைகள் அவன் முகத்துக்கு நேரே வீசி எறியப்பட்டன!

இரண்டு மணி நேரங்கள் தாமதமாய் வந்த ரயிலும் காரணமாய் அமையவே, அவன் வீட்டினுள் காலடி எடுத்து வைத்தபோது, ''இதுக்குப் பேரு பணியாரமா? உன் தலை மாதிரி இருக்கு... ஒண்ணுக்கும் பெறாமசை... எல்லாம் எங்க தலையெழுத்து... அந்தக் கிறுக்குப் பய, காதல் கல்யாணம்ன்னு வந்து நின்னதால, உன்னை மருமகளாக்கிக்கிட்டு நாங்க பாடு படறோம்! எல்லாம் எங்க தலை வேதனை!'' என்று ஏக வசனத்தில் கத்திக் கொண்டிருந்த தாயார், ''இந்தா... இதைக் கொண்டு போய் மாட்டுக்குக் கொட்டு... அது கூடச் சாப்பிடுமோ என்னமோ!'' என்று தட்டை விட்டெறிந்தார்! குறி தப்பாது பறந்த அவ்வெள்ளித் தட்டும், ஜானகியின் இடது பக்க நெற்றியை பதம் பார்த்து நின்றது!

வலியில் அவள் கூவிய ''அம்மா''வை விட, கோபத்தில் அவன் கூவிய ''அம்மா'' ஓங்கி ஒலிக்க, அனைவருமே அதிர்ந்து போயினர்!

''ராஜா... என் கண்ணப்பா... வந்துட்டியா... அப்பனே முருகா! என் மகனை என்கிட்டே கொண்டு வந்து சேர்த்துட்டியா!'' என்று பாச வார்த்தைகள் கூறிக் கொண்டே வந்த வீரலெட்சுமியைக் கவனிக்காதவன் போல், ஸ்ரீராமன் ஜானகியிடம் சென்றான்.

பார்க்க ஆளின்றி, ரத்தம் வழிந்தோடிய நெற்றியை அழுந்தப் பிடித்துக் கொண்டு, தாங்க முடியாத வலியின் காரணமாய் உதட்டைக் கடித்துக் கொண்டு நின்றிருந்தவளின் முன்னே சென்றவன், ''அடி பலமா பட்டுடுச்சா? கையை எடு!'' என்றான் அதிகாரமாய்.

கணவன் அருகே வந்ததும்தான் ஜானகிக்கு அவனது வருகையே உறைத்தது போலும்!

''அத்.. அத்தான்...'' என அவள் திக்க,

''கையை எடு!'' என்று மீண்டும் விழுந்தது அதட்டல்.

அவள் கையை விலக்கிய மாற்றமில்லாமல், ரத்தம் குபுக்கென பாய்ந்தோட ''கடவுளே!'' என்று தலையில் கை வைத்தவன், மனைவியின் கை பிடித்து, வெளிக் கதவு நோக்கி நடந்தான்.

''என்ன தம்பி... வந்ததும் வராததுமா வெளிய போற? வந்து வயிறார சாப்பிடு!'' என்று குறுக்கே வந்த வீரலெட்சுமி,

''என்ன மசமசன்னு நிக்கிறே? அடிபட்ட இடத்தில காபித்தூளை அள்ளிப் பூசிக்கிட்டு... தம்பிக்கு சாப்பாடு எடுத்து வை!'' என்று மருமகளையும் ஏவினார்.



''அவ தலையில இருந்து ரத்தம் ஊத்துதுமா!'' - பல்லைக் கடித்தான் ஸ்ரீராமன்.

ஆனால், அவனுக்கு மாறாய் ''சரி, அத்தை'' என்று மண்டையை ஆட்டிய ஜானகி, கணவனின் பிடியிலிருந்த தன் கையை விடுவிக்க முயன்றாள்!

''ஏய்... நா முக்கியமா? இல்லை உங்க அத்தை முக்கியமா? நீயே முடிவு பண்ணிக்க!'' என அவன் கர்ஜிக்க,

மருண்ட பார்வை ஒன்றை இடமும் வலமுமாய் ஓட்டியவள், அவனிடமிருந்து விலகும் முயற்சியை கைவிட்டு, சிலையென சமைந்து நின்றாள், அவன் மனையாள்.

''என்ன தம்பி... ஒரு மார்க்கமா பேசுறே!'' - நீலகண்டன் சந்தேகத்துடன் இடைப்புகவும், ஸ்ரீராமன் பொங்கி விட்டான்.

''இதுநாள் வரையும் பேசாம இருந்ததோட விளைவு தான்... இது!'' என்று ஜானகியின் நெற்றியைக் காட்டியவன்,

''அவளைப் பிடிக்காம தான் கல்யாணம் பண்ணிக்கிட்டேன். அந்த ஒரு காரணத்துக்காக... என்னோட மனைவியை... இந்த வீட்டு மருமகளை... வேலைக்காரி மாதிரி... இல்லையில்லை அடிமை மாதிரி நடத்துற உரிமையை யாரு கொடுத்தா?'' - அவன் கை நீட்டிக் கேள்வி கேட்க, அங்கே அதிர்ச்சியுடன் கூடிய அமைதி நிலவியது.

''நீங்க பார்த்து கட்டி வச்ச பொண்ணு தானே? நானா தேடிக் கூட்டிட்டு வந்தவ இல்லையே? அப்புறம்

என்ன? அவ... ஏழைங்கிற இளக்காரமா?'' - இடைவெளியில்லாமல் பொரிந்தான் அவன்.

''நீங்க கூட இப்படி நடந்துப்பீங்கன்னு நான் நினைக்கவே இல்லைப்பா! சை!'' - என அவன் அருவெறுப்பை முகத்தில் கொண்டு வர,

''என்னடா விட்டா பேசிட்டே போறே? தாலி கட்டின மார்க்கமில்லாம, ஊரும் வேண்டாம் உறவும் வேண்டாம்ன்னு கிளம்பிப் போனவன் தானே? இப்போ... என்ன பொண்டாட்டி மேல அக்கறை பொங்கி வழியுது!'' - வீரலெட்சுமி கழுத்தை நொடிக்க,

''தப்புதான்!'' - உடனே ஒப்புக் கொண்டான்.

''திணிக்கப்பட்ட உறவுன்னாலும், அவ தான் எனக்கு வாழ்நாள் முழுசுக்கும்ன்னு முடிவான பிறகு... அவளை உங்ககிட்ட விட்டுட்டுப் போனது என்னோட தப்பு தான்!''

''ரொம்பப் பேசாதடா... பொண்டாட்டி... பொண்டாட்டின்னு உருகிறவன்... ஒரு நாளாவது அவளோட வாழ்ந்தியாடா?'' என்று வீரலெட்சுமி ஆணி வேரைப் பிடிக்க,

''இப்போ என்ன? நான் அவளோட வாழணும்! அது நடந்துட்டா... அவளை மனுஷியா நடத்துவீங்க இல்லை? வாழறேன்... வாழ்ந்து காட்டுறேன்!'' என்று சூளுரைத்தவன்,

தன்னைப் பற்றிய பேச்சு வார்த்தையில், தன்னிடம் ஒருவர் கூட அபிப்ராயம் கேட்காத விந்தையை நொந்தபடி நின்றிருந்த ஜானகியை அழைத்துக் கொண்டு மருத்துவமனை சென்றான்!



அன்றைய இரவில் நடந்தேறியது தான் - அவனிடமே அவனைத் தலை குனிய வைக்கும் அவமானம்!

கோழி குண்டு விளையாடியவன் முதன் முதலில் கிரிக்கெட் மட்டை பிடித்து பந்தை அடிக்கும்போது, பந்து அவன் அருகிலேயே 'பே' என்று விழித்துக் கொண்டு நிற்குமே, அது போல் ஸ்ரீராமனின் எண்ண ஓட்டமும் பறந்து வந்த வேகத்திற்கு ஈடு கொடுக்க முடியாமல், சட்டென நின்று, அவனை உறுத்த விழித்தது!

அவ்வளவுதான், ஸ்ரீராமன் எழுந்து விட்டான்! முன்பு போல், தன் நடமாட்டத்தினால் மகள் விழித்துக் கொள்ளாமல் இருக்க, அவளை மெல்ல விலக்கிப் படுக்க வைத்து விட்டு அவன் எழுந்து கொள்ள, அவன் சிந்தனையைக் குறுக்கிடவென்று ஏதும் நடக்கவில்லை.

தூக்கம் பிடிக்காமல், அந்த அறையை மெல்லிய காலடிகள் கொண்டு அளந்தவனின் கண்களில், ஜானகியின் சிறிய பெட்டி பட்டது - ஸ்ரீஷாவின் ''அம்மாவோட பெட்டி பழசா போச்சுப்பா'' என்ற அடைமொழிக்கு ஆளான பெட்டி!

பிறந்து ஒரு வாரமே ஆனா ஸ்ரீஷாவைத் தூக்கிக் கொண்டு அவனுடன் வந்தவளின் மறுகையிலிருந்த அதே பெட்டி!

அவனது உடைகள் - அந்த சுவரலமாரியின் முதல் இரண்டு தட்டுக்களை நிரப்பியிருக்க, ஸ்ரீஷாவிற்கென்று அவன் வாங்கிக் குவித்த ஆடைகள் அடுத்த இரண்டு தட்டை ஆக்கிரமித்து இருக்க, கடைசி தட்டில் ஸ்ரீஷா

வின் விளையாட்டுச் சாமான்கள் குவித்து வைக்கப் பட்டிருந்தன.

ஸ்ரீஷா சொல்லவில்லை என்றால்... இந்த வித் தியாசம் அவனுக்கு உறைத்திருக்க வாய்ப்பே இல்லை!

ஜானகி - அவனுக்குப் பிடிக்காத மனைவி!

பிடிக்காத போதும், அவளுக்கு ஒரு குழந்தையைக் கொடுத்து, தாய் என்ற ஸ்தானத்திற்கு அவளை இட்டுச் சென்றதோடு, கணவனெனும் கடமை முடிந்தது!

உண்ண உணவு, உறங்க இடம், முக்கியமாய் மாமியார் - நாத்தனாரின் பிக்கல் பிடுங்கல் இல்லாத வாழ்க்கை, வருடத்திற்கு இருமுறை எடுத்துக் கொடுக்கும் துணி - இவைதான் ஜானகிக்காய் அவன் செய்வது! அதில் தப்பேதுமில்லை என்பது அவனது எண்ணம்!

''நான் இன்னொருத்தியை காதலித்தேன் என்று தெரிந்தும், என்னை மணந்தவள் இதற்கு மேல் எதையும் எதிர்பார்க்கக்கூடாது!'' என்று அவளது எதிர்பார்ப் பிற்கான கோட்டையும் அவனே வரைந்தது தான் அங்கே விந்தை!

ஆனால், இப்போது அந்த வித்தியாசங்களை மகள் சுட்டிக் காட்டத் தொடங்கவும், மனம் அரித்தது!

தப்பு செய்து விட்டோமோ என்று துடித்தது!

இதுநாள் வரை, ஸ்ரீஷா சின்னக் குழந்தை! தந்தை வாங்கி வரும் பொருட்களில் ஆரவாரம் கொண்டு, அதிலேயே மூழ்கிவிடுபவள், அதற்கு மேலாய், அவள் எதற்கும் கவலைப்பட்டதில்லை!



சாக்லேட், இனிப்பு பதார்த்தங்கள் என்று அவன் வாங்கி வரும்போது, ''அம்மாக்கு...'' என்று கேட்டு தாயிடம் கொண்டு போய் கொடுப்பாள்! அவள் கேட்பதை எதிர்பார்த்து, மகளுக்கு வாங்கும்போது மனைவிக்கென்றும் ஒரு பங்கை வாங்கி வருவான் அவன்!

துணி... நகை... போன்ற பெரும்போட்டு விஷயங் களில் இந்த அனுபவம் இல்லாததால், அவனுக்கு அது இந்நாள் வரை உறுத்தவே இல்லை!

குற்றவாளிக் கூண்டில் ஏற்றி மகள் தன்னிடம் கேள்வி கேட்கவும், சிறுமை படுத்தப்பட்டவன் போல் உணர்ந் தான் அவன்!

## மணி அதிகாலை 1:00

உறக்கம் படிய மறுத்த மன்னவனின் கண்கள், உறக்கத்தின் பிடியிலிருந்த மனையாளின் முகத்தில் படிந்து மீண்டன.

''மஞ்சுளா ஆன்ட்டி மாதிரி செயின்!''

கட்டிய தினத்தன்று தாலி எப்படி இருந்ததோ... அவன் அறியான்? ஆனால், இப்போது பொன்னை விடவும் அதிகமாய் மின்னியது அந்த மஞ்சள் கயிறு! அவள் போற்றி பாதுகாப்பதன் விளைவோ!

கழுத்தைத் தொடர்ந்து காது, கை, கால்கள் என்று சுற்றி வந்தன ஆடவனின் கண்கள்!

காமமற்ற அந்த ஆராய்ச்சி பார்வையில் - அரை கிராம் கூட இருக்க முடியாத காதணியும், பிளாஸ்டிக் வளையல்களும், கொலுசில்லா கால்களும், தேய்ந்து போன மெட்டியும்... ஹ்ம்ம்...

சட்டென குனிந்து தன்னைப் பார்த்தான்! கழுத்தில் இரண்டு பவுனுக்கு தங்கச் சங்கிலி! வலது கை மோதிர விரலில் வைர மோதிரம்! எப்போதும் மணிக்கட்டில் மின்னும் ஃபாசில் வாட்சின் ஸ்பரிசம், கை வழியே சென்று நெஞ்சில் ''சுயநலம்'' எனும் மருந்தை சரக்கென இறக்கியது!

ஸ்ரீஷா பிறக்கும் வரை... தன் வாழ்வு இப்படியாகி விட்டதே என்ற வேதனை! ஸ்ரீஷா பிறந்த பின்னர்... ஸ்ரீஷா மட்டுமே! இதன் நடுவே, ஜானகி என்பவள் வேற்று மனுஷியாய் நின்று போனாள்!

ஏதோ பெரிதாய் தவறு செய்துவிட்டது போல் மனம் தவித்துப் போனது!

மனதின் தள்ளாட்டம் கால்களில் தடுமாற்றத்தைப் புகுத்திவிட, லேசாய் தடுமாறியவன் கீழே படுத்திருந்த ஜானகியின் கால்களில் இடறி கீழே விழப் போனான்!

அவன் சுதாரித்து நிற்கும் முன்பே, ''என்ன... என்ன அத்தான்... என்ன...'' என்று பதறிக் கொண்டு எழுந்து விட்டாள், அவனது துணையாள்.

''ஒண்ணுமில்லை... எதுக்கு இந்தப் பதறு பதறி... பிள்ளையை எழுப்பி விடுறே!'' - தன் மேலிருந்த கோபத்திற்கு ஜானகியை வடிகால் ஆக்கினான்.



அந்த அரையிருட்டிலும், அவளது முகத்தில் பயம் படர்வதை அவனால் காண முடிந்தது!

அதற்காகத் தன்னையே அவன் நொந்தது ஒரு கணமே!

மறு நிமிடமே, ''சை... எதுக்கு எடுத்தாலும் ஏன் இப்படி பயந்து சாவுறே?! நான் என்ன புலியா சிங்கமா? விழுந்து பிராண்டிடுவேனா என்ன? இப்படிப் பயந்தே தான், வாழ்க்கை நரகமாக்கி வைச்சிருக்கே!'' என்றான் கோபமாக.

''இதென்ன கூத்து! உயிரை உலுக்கும் படி கத்தினால் பயப்படாமல் இருக்க முடியுமா?'' மனதில் எண்ணியதை ஜானகி சொல்லவில்லை.

ஆனால், அந்த மௌனமும் அவனுக்கு எரிச்சலையே ஊட்டியது!

''வாயைத் திறந்து ஏதாவது பேசித் தொலையேன்? ஊமைக் கோட்டான்!'' - தடித்து விழுந்தன வார்த்தைகள்.

''அது... அது... வந்து ஒண்ணுமில்லை'' என்று ஆரம்பித்தவள், அதற்கும் ஏதாவது திட்டு விழுமோ என்ற எண்ணம் தோன்ற ''படுக்கலையா... மணி ஒன்னாச்சே!'' என்றாள் காரணம் போல.

''ம்ம்.. நீ படு...'' என்றான் அவன், அறையை விட்டு வெளியே சென்றவாறே.

''பேசாவிட்டால் பேசவில்லை என்கிறான்... பேசினால் பேசாமல் செல்கிறான்... என்ன கொடுமை ஜானகி இது!'' என்று தலையில் அடித்துக் கொண்ட ஜானகிக்கு உறக்கமே வரவில்லை.

தூக்கம் வராமல் கணவன் உலாத்தும்போது, தான் மட்டும் குறட்டை விட்டு உறங்குவது, மகா பாதகச் செயல் போல் தோன்றியது!

ஆனால், எழுந்து போகவும் பயம்!

அவன் சொல்வது போல், பயம் கொள்ள அவனொன்றும் புலியோ சிங்கமோ இல்லை! வெறுமே, மதம் பிடித்த யானை! எதைப் பிடித்துக் கொண்டு, எப்போது ஆடுமோ தெரியாது?

பயத்தைப் பாசம் வென்றுவிட, மெல்ல எழுந்து வெளியே வந்தாள் ஜானகி! சுட்டெரித்தாலும் கொண்டவனும் சூலில் உதிக்காத பிள்ளை அல்லவோ!

சோபாவில் அமர்ந்து, தலையை அதன் குஷனில் அண்டக் கொடுத்திருந்தவனின் கண்களில் மனைவியின் தயக்க நடை கண்ணில் பட்டது!

''என்ன!'' என்று ஒற்றை வார்த்தையில் இருந்தது எரிச்சல் மட்டுமே!

''சூடா ஒரு டம்பளர் பால் கலந்து தரவா அத்தான்? நல்லா தூக்கம் வரும்!'' என்று மெல்லிய குரலில் அக்கறையைத் தேக்கி, அவள் வினவவும்.

''வேண்டாம்!'' - இப்போது வந்த ஒற்றை வார்த்தையில் சிறு இறக்கம்!

மனைவிக்கோ, அந்த ''வேண்டாம்'' பசியின் எதிரொலியாய் தெரிந்தது. குரல் எழுப்பாமல், சூடாய் பால் கலந்து, மிளகும் மஞ்சளும் தட்டிப்போட்டு, அவன் பின்னே சென்று நின்றாள்.



விட்டத்தில் வட்டமிட்ட பிரவுன் வண்ண மின்சார நிலவை வெறித்திருந்தவன், அரவம் உணர்ந்து திரும்பினான்.

அவன் பேசும் முன்னர், ''என் மேல இருக்க கோபத்தில வயித்தைக் காயப் போடாதீங்க, அத்தான். இந்தப் பாலைக் குடிங்க அத்தான்'' - ஒருவாறு தைரியத்தை வரவழைத்துக் கொண்டு, திக்கித் திணறி சொல்லி முடித்தாள் ஜானகி.

''உன் மேல கோபம்ன்னு யார் சொன்னா? நீயா எதையாவது கற்பனை பண்ணிக்கிட்டு உளறிக் கொட்டாதே!'' - சுள்ளென பேசினாலும், மனைவியின் கையிலிருந்த பானத்தை வாங்கிக் கொண்டான், ஸ்ரீராமன்.

''..........''

''எனக்குப் பாலைக் குடிக்கத் தெரியும்! எதுக்கு என் முகத்தைப் பார்த்திட்டே இருக்கே? போ... போய் படு!'' - நெருப்புக் கங்கை கீரிடமாக்கி, தீக்குச்சிகளாய் வந்தன வார்த்தைகள்.

இத்தனை வருடங்களில் பார்த்ததை விடவும், இன்று சூடு அதிகமாய் இருந்தது!

தங்களுள் நடந்த பேச்சு வார்த்தைகள் என்று பார்த்தால்... அவற்றுள் நீளமானது இது ஒன்றுதான்! அதனாலேயே சூடாய் இருந்தது போலும்!

அவனது கோபத்திற்கு என்ன காரணம் என்பதை அவளும் அறிந்திருந்தாள் - ஸ்ரீஷாவின் புடவை பற்றிய பேச்சு!

பெண்ணின் மூலம், தானே அவற்றுக்கு அடி போடுவ தாய் எண்ணி விட்டான் போல்!

ஸ்ரீஷாவிடம் அவனைப் பற்றி அவளால் எப்படி தப்பாய் சொல்லிக் கொடுக்க முடியும்? தந்தையின் மீது அவளுக்கு வெறுப்பு தோன்றிவிடாதா?

தந்தையிடம் பற்றில்லாமல் வளர்ந்த தன்னைப் போல், தன் மகளும் ஆவதா? ம்ஹூம்!

அப்படி அடி போடுவதென்றால், இத்தனை வருடங் கள் காத்திருக்க வேண்டுமா என்ன?

அந்த எண்ணம் தனக்கு சிறிதும் இல்லை என்பதை விளக்கிவிட வேண்டும் என்ற எண்ணம் தோன்ற ''அத்தான்...'' என்றாள் இழுத்தார் போல.

''என்ன?''

''இல்ல... இன்னைக்குப் பாப்பா சேலை... தாலிச் சங்கிலின்னு...''

''இப்போ என்ன அதுக்கு?''

''இல்ல... அது பாப்பாவா தான் கேட்டா... நா... நா... சொல்லிக் கொடுக்கலை... நீங்க தப்பா நினைக்கா தீங்க...''

அவ்வளவு தான் ஸ்ரீ ராமனின் கோபம் எல்லை கடந்தது!

''நான் சொன்னேனா? நீ சொல்லிக் கொடுத்து... அவ என்கிட்ட கேட்டான்னு நான் சொன்னேனா? என்னை என்னடி நினைச்சே?'' - பால் டம்ளர் சுவற்றில் வீசி எறியப்பட, ஜானகியின் தோள்களைப் பற்றி உலுக்க ஆரம்பித்தான்!



வார்த்தைகள் ஸ்தம்பித்து, உணர்வுகள் வெடவெடக்க, உடல் தளர, மருண்டப் பார்வையால் மதம் கொண்ட வனின் மனதை மிதித்தாள்!

ஆயிரம் அடிகள் கொடுக்காத வலியை, அந்தப் பார்வை கொடுத்துவிட, சட்டென அவளை விட்டான்.

தடுமாறி விழப்போய், மெதுவாய் சுதாரித்து நின்ற ஜானகியுள் சந்தோஷமும் வருத்தமும் சரி பாதியென கலந்திருந்தன!

தன்னைக் கணவன் தவறாக நினைக்கவில்லை என்ற சந்தோஷம்!

ஆனால், கணவனின் மனத்தைக் குடையும் விஷயத் தின் மூலம் - 'தான்' என்ற வருத்தம்!

வெடித்துவிடும் போலிருந்த தலையைக் கையில் ஏந்திக் கொண்டு, சோபாவில் அமர்ந்திருந்தவனின் முன்னே சென்றவள், மெல்ல அவன் முன்னே மண்டி யிட்டு அமர்ந்தாள்.

''அத்தான்... இது நாள் வரை... நா இப்படிப் பேசினதே இல்லை... ஆனா... ஆனா... இப்போ பேசியே ஆகணும் போல...'' என்றவள், கைகளை ஏந்தினார் போல் வைத்துக் கொண்டு அவனிடம் பேச ஆரம்பித்தாள்.

''உங்க மனசில வேற யாரோ இருக்காங்கன்னு தெரிஞ்சும்... உங்களைக் கட்டிக்கிட்டது தப்புதான்...''

''எனக்கு அப்போ வேற நாதி இருக்கலை அத் தான்...''

''கல்யாணம் வேணாம்ன்னு சொல்லிட்டா... வீட்டை விட்டு துரத்திடுவாங்களோன்னு பயமா இருந்துச்சு...''

''எனக்குன்னு யாருமே இல்லை அத்தான்... நா என்ன பண்ணுவேன் சொல்லுங்க?''

''எப்படியும் உங்களைக் கல்யாணம் பண்ணினா... அந்த வீட்டுல நிரந்தர வேலைக்காரியாவாவது இருக்கலாம்ன்னுதான்...''

''ஆனா... நீங்க திரும்பி வந்து... ஸ்ரீஷா பிறந்து... நா இங்க வருவேன்னு நினைக்கவே இல்லத்தான்...''

''எனக்கு இந்த வாழ்க்கையே போதும்னாலும், உங்களுக்கு என்னை மாதிரி ஒருத்தியோட வாழ்றது தண்டனையா தான் இருக்கும்...''

''உங்க தகுதிக்கு நா ஏத்தவளே இல்லைத்தான்... என்னோட நீங்க கஷ்டப்பட வேண்டாம்...''

''மத்தவங்களோட சந்தோஷத்துக்காக, என்னை சகிக்க வேண்டாம்...'' என்று பேசிக் கொண்டே சென்றவளின் முகத்திலிருந்த வேதனைக் கோடுகள் வேகமாய் அதிகரித்தன.

''எனக்குத் தெரியும்! அத்தையோட கொடுமையில இருந்து என்னைக் காப்பாத்தணும்ன்னு தான் நீங்க என்னைத் தொட்டீங்கன்னு...''

''புருஷன் ஆசையா தொடுறானா? கோபமா தொடுறானா? கடமைக்குத் தொடுறானான்னு ஒரு பொண்ணுக்குத் தெரியும் அத்தான்!''

''நீங்க தொட்டப்ப... எனக்கு உங்க கண்ணில காமமோ... காதலோ தெரியலை... கடமை தான் இருந்தது....''

''ஏழைப்பட்டவளாலும், புருஷன் ஆசையா தொடணும்ன்னு தான் எந்தப் பொண்ணுக்கு ஆசையிருக்கும்...''



''ஆனா... என்னோட ஆசை நிறைவேறவே போறதில்லைன்னு எனக்கு நிச்சயமா தெரிஞ்சது... அதான் மறுக்காம உங்களோட வாழ்ந்தேன்...''

''அந்த நாளெல்லாம், மனசு முழுக்க... ரணமா தான் காந்துச்சு!''

''யாரு மேலையும் ஆசை வைக்காத எனக்கே அப்படியிருக்கும் போது, ஒரு பொண்ணை மனசார விரும்பின உங்களுக்கு எப்படி இருந்திருக்கும்?''

''பாப்பா உண்டானதும்... ரொம்ப சந்தோஷப்பட்டேன் அத்தான்! எதுக்குத் தெரியுமா? என்னால உங்களுக்கு ஒரு சந்தோஷத்தைக் கொடுக்க முடிஞ்சதேன்னு தான்!''

''பாப்பா பிறக்கும்போது... நா செத்துடுவேன்னு தான் ரொம்பவும் எதிர்பார்த்தேன்... ஆனா... உங்க கெட்ட நேரத்துக்குப் பிழைச்சுட்டேன்...'' - கத்திரிக்காயை விலை பேசி, அது பேரத்துக்குப் படியாதது போல், உணர்ச்சியற்ற குரலில் பேசிக் கொண்டே போனாள்.

''அப்புறமும், நீங்க பாப்பாவோட என்னைக் கூட்டி வந்ததும் ஒரு ஆயாவாதான் இங்க வந்தேன்...''

''உங்களுக்கு சமைச்சுப் போட்டு... பாப்பாவுக்கும் எல்லாம் பண்ணிக்கிட்டு... ரெண்டு பேரோட ஒரே வீட்டில வாழ்றதே போதும்ன்னு மூணு வருஷத்துக்கும் மேலாக சுயநலமா இருந்துட்டேன்!'' - தன்னையே வெறுத்தக் குரல் மீண்டும் அமலுக்கு வந்தது.

''இப்போ தான்... பாப்பாவோட பேச்சு உங்களை இந்தளவுக்குப் பாதிச்சு இருக்கிறதைப் பார்க்கிறப்போ...

தப்பு பண்ணிட்டேன்னு தோணுது!'' - பந்தென தொண்டைக்குள் அடைத்திருந்த வேதனையை வெளியேற்ற எண்ணி, மெல்லச் செருமினாள், ஜானகி.

''பிள்ளையை உங்க கையில் கொடுத்திட்டு... அப்படியே போயிருக்கணும்... ப்ச்... இருக்கிறதை வச்சு சந்தோஷமா இருக்கலாம்ன்னு நினைச்சு...''

''ஆனா... நீங்க என்ன நானா? இருக்கிறதை வச்சு சந்தோஷமா இருக்கிறதுக்கு? நீங்க ராஜா... அத்தான்! எனக்காக... நீங்க வருத்தப்படறதை என்னால பார்க்க முடியலை...'' - அகல விரித்த கண்களை அகழியாக்கி, திரண்டு வந்த கண்ணீரை அதனுள் புதைத்து வைக்க முற்பட்டாள்.

''நான் போறேன் அத்தான்... ஸ்ரீஷாவை உங்ககிட்ட விட்டுவிட்டுப் போறேன்... என்னை ஏதாவது ஆசிரமத்தில வேலைக்குச் சேர்த்துவிடுங்க... எப்படியோ பொழைச்சுக்கிறேன்!'' - அகழியில் மிதக்கும் முதலைகளாய், கண்ணீருக்குள் ஆதாரம் தேட முயன்றது அப்பேதை நெஞ்சம்.

''பாப்பா... அம்மா எங்கன்னு கேட்டா... செத்துப் போயிட்டான்னு சொல்லுங்க...'' - பாசத்தில் பரிதவித்து ஸ்ரீஷாவிற்கு பாலூட்டிய மார்பு!

''என்னைவிட அவளுக்கு உங்களைத் தான் பிடிக்கும்... கொஞ்ச நாளில மறந்திடுவா...''

''ஹ்ம்மா... அப்புறம்... உங்களுக்கும் எனக்கும் எந்த ஒட்டுமில்ல உறவுமில்லன்னு எழுதிக் கொடுத்துடறேன்... நீங்க உங்களுக்குப் பிடிச்ச பொண்ணா...''



இதுவரை அவள் பேசுவதை ஒரு விதமான வருத்தத்துடன் கேட்டுக் கொண்டிருந்தவன், இந்த வார்த்தையில் வேகம் கொண்டான்.

தன் முன்னே யோசித்து நின்றவளைக் குன்றாக்கி, மலையாய் எழுந்து நின்றவன், ''என்னோட கை பட்ட முதல் பொண்ணும் நீ தான்! கடைசி பொண்ணும் நீ மட்டும் தான்!'' என்றான் கலங்கியிருந்த கண்களில் கலங்கரை விளக்கமாய் ஊடுருவி!

விழிகளில் சந்தோஷம் மின்ன, அவனையே பார்த்திருந்தவள், சட்டென வாட்டம் கொண்டவளாய் ''தாலி கட்டிட்டோமேன்னு நீங்க கல்யாணமாகியும் பிரம்மச்சாரியா இருக்க வேண்டாம் அத்தான்...'' என்றுரைத்தாள்.

ஆனால், அவளுக்குப் பதில் சொல்ல அவன் அங்கே நின்றிருக்கவில்லை.

படுக்கையறை நோக்கி நடந்தவன், ஓர் வினாடி நின்று, நிதானமாய் திரும்பி, தீர்க்கமாய் ஓர் பார்வை பார்க்க, ஜானகியின் பேச்சு நீரில் இட்ட அணையாய் தடைபட்டது.

அவள் அமர்ந்த நிலையிலேயே இருக்க, படுக்கையறை கதவு வரை சென்றவன், மீண்டும் சோபா அருகே வந்து ''வா... வந்து படு!'' என்றான் மென் குரலில்.

எழாத நிலையில் எட்டாத கவிதைகள் படித்தன அவளது கண்கள்!

''ஹ்ம்ம்... எழுந்திரு! உள்ள போய் படு! நா லைட் அமர்த்திட்டு வரேன்!'' என்றான் அவனோ, கவிதை படிக்கத் தெரியாதவனாய்!

தான் உயிரைக் கொடுத்துப் பேசியதற்கு பயனற்றுப் போனது போல் தோன்றியது ஜானகிக்கு! அவன் நல்லதற்காகத் தானே, தன் மகளையே தியாகம் செய்ய விரும்பினோம் என்ற எண்ணம் தோன்ற, ''அத்தான்... நா பேசினது...'' என அவள் இழுக்க,

''எனக்கு காது கேட்கும்!'' என்றான் அவன் பதிலாய்.

அவள் வாய் பிளந்து நிற்க, ''போ உள்ளே!'' என்றான் அவன், அதுதான் முக்கியம் போல.

''ல்ல... நா சொன்னதுக்கு... நீங்க ஒண்ணுமே சொல்லலையே!''

''உன்னோட கேள்விக்கு நான் பதில் சொன்னதா எனக்கு ஞாபகம்!''

''ல்ல... வேணும்னா வெளிய...''

''உள்ள போன்னு சொன்னேன்!'' - அதற்கு மேல், ஜானகி அங்கே நிற்கவில்லை. படுக்கையறைக்குள் பரவசமாய் பிரவேசித்தாள்!

## மணி அதிகாலை 2:00

உள்ளே சென்றால், அவர்களது செல்வமகள் விழித்துக் கொண்டு, அறைக்குள் பரவியிருந்த அரையிருட்டை மலங்க மலங்க துளாவிக் கொண்டு, படுக்கையில் அமர்ந்திருந்தாள்.



''என்னடா குட்டி!'' - ஜானகி தவித்துக் கொண்டு விரைய, பெண்ணோ இரு கைகளையும் நீட்டித் தாவினாள்.

''ஏன்மா! இன்னைக்கு அடிக்கொருக்கா தூக்கத்திலிருந்து முழிச்சுக்கிறே!'' என்ற ஜானகியின் கைகள் முதுகை வருட, விளக்குகளை அணைத்துவிட்டு உள்ளே வந்த ஸ்ரீராமன் ''என்னோட செல்ல பாப்பா ஏன் அழறா?'' என்றான் பெண்ணின் முதுகு விசும்பலில் ஏறி இறங்குவதைப் பார்த்து.

''ப்பா...'' - தந்தையின் குரல் கேட்கவும், ஓர் கை நீட்டி அவனை அருகே அழைத்தாள் மகள்.

''என்ன குட்டி!'' என அவனும் வர, அவனது பனியனைப் பிடித்து இழுத்தவள், ''ப்பா வேணும்!'' என்றாள் அழுகையுடன்.

''சும்மா சும்மா சிணுங்கக் கூடாது அம்மு! அப்பா கிட்ட போகணும்னா... அழாம கேட்க வேண்டியது தானே!'' என்ற ஸ்ரீராமன் கை நீட்டி மகளை ஏந்திக் கொள்ள முற்பட, கன்றோ தாயின் கழுத்தைக் கட்டிக் கொண்டு ''ம்மா... வேணும்!'' என்றது.

''என்னம்மா? ஏன் இப்படிப் புரியாம பண்றே?'' - ஜானகி சொல்ல, சிறு அழுகை பெரிய அழுகையாய் மாறியது.

''பாப்பாக்கு பயமா இருந்துச்சு... ப்ளாக்கா இதுந்துச்சு... பூதம் வந்துச்சு... அப்பா காணோம்... அம்மா காணோம்...'' - துண்டு துண்டாய் பதில் சொன்னாள், மகள்.

பிறந்த இரண்டே முக்கால் வருடங்களில், 'கனவு' என்று ஒன்று வந்து, அதை நினைத்து ஸ்ரீஷா அழுவது இதுதான் முதல் தடவை!

அதனாலேயே, ''என்னாச்சு இன்னைக்கு? ஏதாவது போய் படம் பார்த்தாளா?'' என்றவாறே மகளை வாங்கினான்.

தாயின் கழுத்தில் இருந்த இடம் கரம் அழுத்தமாய் தாயை வளைக்க, இரு கால்களாலும் தாயின் இடுப்பை சிறை செய்து கொண்டு, தந்தையிடம் வர மறுத்தாள் பெண்.

''இல்ல அத்தான். காலையில் பதினொரு மணிக்குத் தான் டோரா பார்க்கணும்ன்னு சொன்னான்னு போட்டு விட்டேன். மத்தபடிக்கா, நீங்க வந்ததும் பார்த்தா... அவ்வளவு தான்! ஆனா... ஏன் அழறான்னு புரியலையே?'' - தாயும் மகளுடன் சேர்ந்து கொண்டு தவித்தாள்.

''ஸ்ரீ குட்டிக்கு என்ன பயம்? அப்பா தான் பக்கத்திலேயே இருக்கேனே?'' - தன் கரங்களைப் பற்றியிருந்த பெண்ணின் பிஞ்சுக் கைகளில் மெல்ல முத்தம் வைத்தான் ஸ்ரீராமன்.

''இல்ல... பாப்பா பார்த்தா... அப்பா இல்ல... அம்மாவும் இல்ல... காணாம போய்ட்டா... பூச்சாண்டி பிடிச்சுட்டுப் போய்ட்டான்...'' மகள் விசும்ப,

தாங்கள் இருவரும் நடத்திய பேச்சு வார்த்தையின் போது, மகள் விழித்துத் தங்களைத் தேடி இருக்கிறாள் என்பதை உணர்ந்தனர் பெற்றோர்.



''சரி டா... சரி டா... அதான் அப்பாவும் அம்மாவும் வந்துட்டோமே! தாச்சுக்கலாமா? அம்மாட்ட தாச்சுக்கிறியா? அப்பாட்டவா?'' - கொஞ்சலில் பெண்ணின் மனதை மாற்ற முயன்றாள் தாய்.

''தெண்டு போதும்... அப்புதும் காணாம போய் வீங்க!'' - காலை உதைத்துக் கொண்டு, வீரிட்டு அழத் தொடங்கினாள் அவர்களின் ஒரே மகவு!

''சரி... சரி... ரெண்டு பேருமே உன் பக்கத்தில இருக்கோம்!'' என்று சட்டென சமாதானம் சொன்ன தந்தை, ''வா!'' என்றான் பெண்ணிடம்.

இடமும் வலமுமாய் தலையை வேகமாய் ஆட்டிய ஸ்ரீஷா, ''அம்மா மடில'' என்றாள்.

உடனே ஒத்துக்கொண்டு, நின்ற இடத்திலேயே பாயில் அமரப் போன ஜானகியை ''அங்க... கட்டில்ல... இங்க வேணாம்...'' - அதுக்கும் அழுகை.

''ஷ! பாப்பா எதுக்கு எடுத்தாலும் அழுதா அப்பாக்குப் பிடிக்காது! அழாம பேசு!'' - ஸ்ரீராமன் குரலை உயர்த்தி, அதட்டினான்.

அவ்வளவுதான்! ஸ்ரீஷாவின் அழுகை அடுத்த வீட்டிற்குக் கேட்கும் அளவிற்கு ஓங்கி ஒலித்தது!

புரியாத அழுகை! சொல்வது கேட்காத அழுகை!

ஜானகிக்கு மகளின் அழுகையை விடவும், தான் கட்டிலில் அமர்ந்தால் கணவன் எங்கே படுப்பான் என்பதில் கவலை! ஏற்கனவே, ஒரு மணி வரையில் முழித்துக் கொண்டு வீட்டை அளந்திருக்கிறான்! இப்போதேனும் படுத்தால் அல்லவா காலையில் வேலைக்குச்

செல்ல முடியும்! இந்தப் பெண்ணானால்... தன்னைக் கட்டிலில் அமரச் சொல்லிப் படுத்துகிறாளே என்றிருந்தது அவளுக்கு!

அந்த வீட்டில், கட்டில் ஒன்றும் அவள் தீண்டத் தகாத பொருள் இல்லை தான்!

ஆனால், ஜானகியாகவே ஸ்ரீராமன் இல்லாத சமயங்களில் பெண்ணைத் தூங்கச் செய்வதற்காக மட்டுமே அதில் அமர்வது!

ஸ்ரீஷாவும் தந்தையைக் கண்டு விட்டால், தாயை உறக்கத்திற்குத் தேட மாட்டாள்! இப்போது என்றில்லை, ஒரு மாத சிசுவாய் இருந்தபோதே, முகம் பார்த்துச் சிரிப்பவள், தந்தையின் இதமான கதகதப்பில் உறங்கப் பழகிக் கொண்டாள்!

அதனால், ஸ்ரீராமன் இருக்கும் வேளைகளில் ஜானகிக்கு கட்டிலில் வேலை இருக்கவில்லை!

எதற்கும் முதல் முறை என்ற ஒன்று வேண்டுமல்லவா? புரியாத அழுகைக்கு இன்று அடிக்கல் நாட்டி, கொடி அசைத்து வைத்த மகளை அதட்டவும் முடியாமல், கட்டிலில் அமரவும் முடியாமல் தவித்துப் போனாள் அக்குடும்பத் தலைவி!

மகளின் அழுகையா? கணவனின் தூக்கமா? என்று கேள்வி கேட்ட மூளைக்கு, 'கணவன்' என்று மனம் பதில் சொல்ல,

''பாப்பா... அப்பா மேல தூங்கட்டும்டா... அம்மா உன்னைத் தாச்சுப் பண்ணிட்டு அப்பா பக்கத்தில படுக்க வைக்கிறேன்!'' என்ற வாக்கியத்தை ஜானகி முடிக்கவில்லை.



''ம்ஹோஊம்... ம்ஹோஊம்...'' ஸ்ரீஷாவின் ''ம்ஹூம்'' அழுகையில் பிரேக் டான்ஸ் ஆடியது.

அவள் அழுகையில் ஆடிய ஆட்டத்தை ஸ்ரீராமன் வார்த்தையில் ஆடினான் - ''ஏன்... நான் கட்டிலில் படுத்தா நீ உட்கார மாட்டியா? எரிச்சலைக் கிளப்பிட்டு இருக்காதே ஜானகி! என்னைக்காவது, இங்க உட்காராத... இதைப் பண்ணாத அப்படின்னு நான் சொல்லியிருக்கேனா? நீயாவது ஏதாவது கற்பனை பண்ணிக்கிட்டு... சை!'' என்றவன், அழுத்தமாய் தலையைக் கோதிவிட்டுக் கொண்டான்.

பெண்ணின் ''ம்மா... ம்மா...'' என்ற அழைப்பை விடவும், கணவனின் முகத்தில் இருந்த எரிச்சல் கோடுகள், ஜானகியை வேகமாய் கட்டிலில் அமர வைத்தது!

ஸ்ரீஷா கட்டிலின் வலப்புறமும், ஸ்ரீராமன் இடப்புறமும், அவன் பக்கமாய் இருக்கும் தரையில் ஜானகியும் என்று உறங்குவது வழக்கம். இப்போது தன் படுக்கையருகே நின்றிருந்த ஜானகி, சட்டென அமர்ந்ததில் ஸ்ரீஷா வலப்புறம் படுத்திருக்க, ஜானகி கட்டிலின் நடுவே அமர்ந்திருந்தாள்.

கணவன் மேலும் ஏதும் பேசும் முன்னர், முகளின் நெஞ்சில் மெல்ல தட்டிக் கொடுத்தாள் ஜானகி.

பெண்ணோ, ''ம்மா... தாச்சு பாட்டு!'' என்றாள் அரைக்கண்ணைத் திறந்து கொண்டு.

''சரியான கழுதை!'' என்று உள்ளே வைதபோதும், மகள் கேட்டதைச் செய்யாதிருக்க முடியவில்லை. சிறு

பிள்ளையில், தூளியில் இட்டு ஆட்டும்போது பாதும் பாட்டை மெல்லப் பாடினாள்.

''கண்ணே கமலப்பூ!

உன் காது ரெண்டும் பாதிரிப் பூ!

பெண்ணே கண் மலரு!''

ஸ்ரீஷாவின் கண்கள் லேசாய் சொருகத் தொடங்கின.

அதுவரையிலும், அறைக்குள்ளேயே குறுக்கும் நெடுக்குமாய் நடந்து கொண்டிருந்த ஸ்ரீராமனின் கண்களும் அதில் சொருக, லேசாய் கண்ணைத் தேய்த்து விட்டான்!

''பாப்பா தூங்கிட்டா அத்தான்... நீங்க படுங்க!'' என்ற ஜானகியால் எழ முடியவில்லை!

ஸ்ரீஷாவின் கைகள் ஜானகியின் பருத்திச் சேலையை இறுகப் பிடித்திருந்தன!

''இல்ல... அவ விடமாட்டா... நீ உட்காரு!'' என்று அவன் சொல்லும்போதே, இதுவரை இருந்த அமைதியைக் கிழித்துக் கொண்டு கேட்ட அவனது குரலில் ''ப்பா...'' என்ற சிணுங்கல் பெண்ணிடமிருந்து உதயமானது.

கணவன் கட்டிலுக்கு வரவும், ஜானகி பெண்ணின் கையிலிருந்த சேலையை விலக்க முயன்றதில், பெண்ணின் தூக்கம் கலைந்ததோடு மட்டுமல்லாமல் அழகையும் பாக்ரௌண்ட் மியூசிக் போல் இசைக்கத் தொடங்கியது.

மட்டுப்பட்டிருந்த கோபம் தலைக்கேற, ''என்னதான்டி உன்னோட பிரச்சனை? என்னோட ஒரே கட்டில்ல



படுத்தா... உன் கற்பா போய்டும்? நான் உன் புருஷன் தானே? உன்னைத் தொட்டு, ஒரு பிள்ளையைக் கொடுத்தவன் தானே? என்னமோ... பக்கத்து விட்டுக்காரன் மாதிரி ஒரேடியா சீன் போடறே!'' - எகிறி விட்டான் அவன்.

ஜானகிக்கு அழுகையில் தொண்டை அடைத்தது!

தனக்கு அப்படியொரு எண்ணமே கிடையாது என்று சொல்லி விடும் வேகத்தில், ''எனக்கு உங்களோட... உங்க பக்கத்தில... அது பாய்னாலும் சரி... கட்டில்னாலும் சரி... படுத்துக்க ரொம்ப... ரொம்பவே இஷ்டம் தான்! ஆனா, உங்களுக்குப் பிடிக்காதோ... சங்கோஜமா இருக்குமோன்னு தான்...'' என்றாள் ஜானகி, விம்மிக் கொண்டு வந்த அழுகையை அடக்கியவாறே.

திருமணம் ஆனது தொட்டுப் பேசிக் கொள்ளாததன் பயன்! யார் மனதில் என்ன இருக்கிறது என்பதே இருவருக்கும் தெரியவில்லை!

ஸ்ரீராமன் - ஜானகிக்குப் பிடிக்கவில்லையோ என்றெண்ணியிருக்க, ஜானகியோ ஸ்ரீராமனை மனதில் வைத்து ஒதுங்கி இருக்கிறாள்!

ஆனால், அதைப் பேசித் தெளிவு படுத்தும் நேரம் இதுவல்ல! பெண்ணின் அழுகைக்கு முற்றுப்புள்ளி வைத்தாக வேண்டும்!

''அவ தான் அழுது ஊரைக் கூட்டுறா இல்லையா! உட்கார்ந்து... அந்தத் தாலாட்டைப் பாடேன்!'' - ஸ்ரீராமன் கத்த, ஜானகி அமர்ந்தாள்.

பெண்ணின் கரங்கள் மெல்ல தளர்ந்திருக்கவே, அவளது கரங்களை விலக்கிக் கொண்டு, மீண்டும்

அறையில் நடை பயின்றவனின் கண்கள் ஜானகியின் மென் தாளத்தில் அநியாயத்திற்குச் சொக்கின.

அப்போது பார்த்து, ஸ்ரீஷாவும் ''அப்பா... பக்கத்தில... வாங்க... ப்பா... ப்பா...'' என்று தூக்கத்திலேயே அழைக்க,

சட்டென கட்டிலில் படுத்தவன், கையை நீட்டி மகளின் தலையை மெல்ல வருடிக் கொடுத்தான்.

ஜானகிக்கு அப்படியே மூச்சடைத்தது! பெண்ணிற்கு கணவனுக்கும் இடையே சிறையெடுக்கப்பட்ட சீதா தேவியாய் அமர்ந்திருந்தவளுள் அசோகா வனத்து சோகமில்லை! பட்டாபிஷேக பெருமிதம்!

''குட்டி விடுற மாதிரி தெரியலை... அப்படியே படு ஜானகி!'' என்றவன், ஒண்ணுக்கு ரெண்டாய் கொட்டாவிகளை வெளியிட்டான்.

பெண்ணும் உறங்கிவிட, கணவனும் உறங்கிவிட, ஜானகி தான் முழித்துக் கொண்டு அமர்ந்திருந்தாள்.

கட்டிலின் வலப்புறமிருந்த பெண்ணைத் தாண்டிக் கொண்டு இறங்கலாம் என்றால் சிறு அசைவில் கூட தூக்கம் களைந்து அழுபவள் போன்ற தோற்றத்துடனே படுத்திருந்தாள் அவள்!

கணவனின் பக்கம் பார்க்கக் கூட அவளுக்கு அச்சமாய் இருந்தது! எழுந்து கொண்டு, தமிழில் மட்டுமல்லாது சமஸ்கிருதத்திலும் அர்ச்சனை செய்துவிடுவான்!

சரி, கட்டிலின் கால் வழியாக இறங்கலாம் என்றால், கட்டிலின் முனைவரை நீண்டிருந்த ஸ்ரீராமனின்





நீலக்கால்கள், கொஞ்சமாய் நகர்ந்து ஜானகி அமர்ந்திருந்த இடத்தில் அணைபோல் தொக்கி நின்றன.

செய்வது அறியாமல் அவள் தவித்திருக்க, மல்லாக்கப் படுத்திருந்த ஸ்ரீராமன் சற்றே ஒருக்களித்துப் படுக்கும்போது ''நீ இன்னும் தூங்கலையா? அப்படியே படு... ஜானகி!'' என்றான் மீண்டும்.

அவள் காட்டிய சிறு தயக்கத்தில், ஸ்ரீராமனின் முகத்தில் கோபம் படர்ந்தது!

அவ்வளவுதான், ஜானகி மறுநிமிடம் கட்டிலில் தலை சாய்த்திருந்தாள்! ஏனோ, ஸ்ரீராமனுக்கு அவளது செய்கையால் சிரிப்பே பிரதானமாய் வந்தது!

பெண்ணின் தலையை வருடிக் கொண்டிருந்த அவனது கரங்களின் கீழே தலையை வைத்து, அவனுக்கும் மகளுக்கும் புரள்வதற்கு இடம் கொடுப்பவள் போல், ஜானகி தன்னைச் சுருட்டிக் கொண்டு படுத்திருந்தாள்.

தூக்கம் தான் அறவே வர மறுத்தது!

இரு பக்கமிருந்த உறவுகளும், ஆனந்தமாய் துயில் கொண்டிருக்க, ஒரு விதமான தயக்கத்துடனே படுத்திருந்தவளும் ஒருவாறாய் உறங்கத் துவங்கினாள்!

கணங்களோ, நிமிடங்களோ, நேரங்களோ - இவற்றுள் எவை கடந்தனவோ - ஏதோ வித்தியாசமாய் பட, மெல்ல கண் திறந்தவளுக்கு, தன் இடுப்பைச் சுற்றியிருந்த கணவனின் கரங்களைக் கண்டதும் மூச்சு முட்டியது!

## மணி அதிகாலை 4:00

தான் காண்பது கனவா நினைவா என்று ஜானகிக்கு சந்தேகமாய் இருந்தது!

லேசாய் கிள்ளிப் பார்த்தால் சுரணையும் இல்லை! கனவு தான் போலும்! ஹ்ம்ம்... ஆனாலும் இடுப்பில் கனமாய் தெரிகிறதே!

வயிறு ஒரு இன்ச் உள்ளே இறங்கினாற் போலிருப் பதை அவளால் உணர முடியும்போது, கிள்ளினால் ஏன் வலிக்கவில்லை!

ஹ்ம்ம்... இன்னொரு முறை கிள்ளிப் பார்ப்போம் என்றெண்ணியவள், மீண்டும் கிள்ளினாள்.

அப்போதும் வலிக்கவில்லை! இதென்னடா விந்தை யாய் இருக்கிறது!

மீண்டும் ஒரு முறை!

மீண்டும் ஒரு முறை!

ம்ஹூம்... வலிப்பேனா என்றது!

ஆர்வத்திலும் கோபத்திலும் வேகமாய் மீண்டும் ஒரு முறை!

''ஆஆஆ!'' - என்று வீறிட்டது அவளல்ல! ஸ்ரீராமன்!

''ஹய்யையோ! இதுவரை... அவன் கையையா கிள்ளிக் கொண்டிருந்தோம்! முரட்டுத் தேகமாய்



தென்படும்போதே, அறிவிருக்க வேண்டாம்! கடவுளே எழுந்து விட்டானே!'' - ஜானகி பீதியில் உறைந்து போனாள்.

''மன்னிச்சுக்கோங்க அத்தான்... என் கையுன்னு நினைச்சு... தெரியாம அத்தான்... நா கீழ படுத்துக்கவா அத்தான்... தெரியாம அத்தான்... மன்னிச்சுக்கோங்க!'' - ஸ்ரீராமன் கேள்வி கேட்க ஆரம்பிக்கும் முன்னரே, ஜானகி பதிலும் சொல்லி மன்னிப்பும் கேட்டு விட்டாள்.

தூக்கக் கலக்கத்தில் இருந்தவனுக்கு, அவளது விளக்கத்தை விடவும், மிக அருகில் தென்பட்ட அவளது மதிமுகம் மயக்கத்தை உண்டு பண்ணியது!

பல நாட்களாய் தூரவே நின்றிருந்த மனையாள், கண்ணுக்கு நேரே கணநேரக் கவிதை பாடவும், கள்வனானான் அந்தக் கணவன்!

என்னதான், மனதில் வேறுபாடுகள் இருந்தபோதும், அவனும் மனிதனே அல்லவோ! சொல்லப்போனால், ஓர் சராசரி மனிதனே அல்லவோ?

''மறுமுறையும் வரம்பு மீறக்கூடாது'' என்ற கட்டுப் பாட்டுடன் இத்தனை ஆண்டுகள் இருந்தவனுக்கு, மனைவியின் நேற்றைய பேச்சு ஓர் உண்மையை உணர்த்தியிருந்தது! அதாகப்பட்டது - அவளுக்கு அவனது அருகாமை பிடித்திருக்கிறது!

அவளுக்கும் பிடித்திருக்கிறது என்ற உந்துதல் மட்டும் துணையிருக்க, அவளுடன் மனம் விட்டுப் பேச வேண்டும் என்று நேற்றிரவு எண்ணியது சுத்தமா மறந்து போனது!

பல வருடங்களாய் அடக்கி வைக்கப்பட்டிருந்த தாப உணர்வு தலை தூக்க, மருண்ட கண்களுடன் தன்னை யாசித்துக் கொண்டிருந்த ஜானகியின் முகத்தை இழுத்து, வெளுத்திருந்த அவளது உதடுகளைக் கைதியாக்கி, தன் உதடுகள் எனும் சிறையில் அடைத்தான்!

கணவனின் திடீர்த் தாக்குதலில், ஜானகி உறைந்து போனாள்!

வட்ட விழிகள் பெருவட்டமாய் ஜொலிக்க, உலகம் மறந்தது!

மூச்சுக்குள் அவனது மூச்சு அனலாய் கூட, அக்னி பிளம்பென சிவந்து போனாள்!

நிமிடங்களை வினாடிகளாக்கித் தொடர்ந்த அந்த முத்தச் சரித்திரம், ஒரு கட்டத்தில் இளைப்பாற, கைகள் அந்த வேலையை எடுத்துக் கொண்டன.

ஸ்ரீராமனின் ஆண்மை ததும்பிய தேகம், ஜானகியின் அல்லிக்கொடி மேனியைச் சுற்றி வளைத்தது!

அவளை மேலும் மேலும் அவன் இறுக்க, மனையவளின் பெண்மை நெகிழ்ந்திருக்க, அதற்கு மாறாக தாய்மையோ விழித்துக் கொண்டது!

மகவின் இருப்பை உணர்த்தும் பொருட்டு, அவள் லேசாய் விலக முற்பட, ஸ்ரீராமன் அவளது விலகலில் விழிப்புக் கொண்டான்!

''என்ன?'' என்பது போல் அவன் பார்க்கவும்,

சிறு சங்கடத்துடன், ''பாப்பா...'' என்று மெல்ல இழுத்தாள் ஜானகி.



ஆட்பட்டிருந்த தாப வலை, ஒரே நிமிடத்தில் பிய்ந்து கொள்ள, அழுத்தமாய் ஒரு முறை தலையைக் கோதியவன், ''சாரி ஜானகி!'' என்றான் உளமார்ந்த குரலில்.

''ஐயோ... எதுக்கு அத்தான் சாரி?'' அவள் பதற,

''இல்ல... இந்த முறையும் உன்னோட சம்மதம் கேட்காம...''

''என்கிட்டே என்ன அத்தான் சம்மதம் கேட்கிறீங்க? நா உங்க பொண்டாட்டி அத்தான்... வாடின்னா வந்திட்டுப் போறேன்! இதில என்கிட்டே என்ன கேட்கிறது?''

''ம்ஹூம் இல்லை! கேட்டிருக்கணும்! ஸ்ரீஷா பிறக்கிறதுக்கு முன்னாடியே கேட்டிருக்க வேண்டியது!''

''என்ன அத்தான்... பெரிய வார்த்தையெல்லாம் பேசுறீங்க?''

''இல்ல... நேத்து நீ சொன்ன பாரு... எந்த ஒரு பொண்ணுக்கும் அவ புருஷன் ஆசையாய் தொட்டாத் தான் பிடிக்கும்ன்னு... எனக்கு அப்படியே சவுக்கால அடிச்ச மாதிரி இருந்தது!''

''ஐயோ... இல்ல அத்தான்! உங்களைக் குறை சொல்லலை, அத்தான்! அந்த நேரத்தில, அத்தைகிட்ட இருந்து என்னைக் காப்பாத்தணும்ங்கிற நினைப்பு தானே உங்க மனசில இருந்தது! அதுக்கு வழி தேடினீங்க... அவ்வளவுதான்!''

''கொஞ்சம் யோசிச்சுப் பார்த்திருந்தா... வேற மாதிரி அம்மா வாயை அடச்சிருக்கலாம்! கல்யாணம் ஆன

துமே, உன்னை இங்க கூட்டிட்டு வந்திருக்கணும்... உடனே இல்லாட்டியும், கொஞ்ச நாளில உன் மனசும் சரி... என் மனசும் சரி... ஒத்துப் போயிருக்கும்! அதுக்கு அப்புறம்...'' - வாக்கியத்தை முடிக்காமல்... முடிக்க முடியாமல் நிறுத்தியவன், எழுந்து அமர்ந்தான்.

ஜானகிக்கு என்ன பேசுவது என்றே தெரியவில்லை!

தனக்காக கணவன் வருந்துவது அவளுக்கு சுத்தமாய் பிடிக்கவில்லை! ஆனால், சமாதானம் சொல்லவும் வழியில்லை!

''ப்ச். ஸ்ரீஷாவும் நீயும் இங்க வந்த பிறகாவது... உன்னைப் புரிஞ்சுக்க முயற்சி பண்ணியிருக்கணும்... ஆனா... ஆனா... உனக்கு என்னைப் பிடிக்கலையோ... வலுக்கட்டாயமா கல்யாணம் செய்துகிட்ட என்னோட வாழ உனக்கு இஷ்டமில்லையோ... பிள்ளைக்காக வேற வழியில்லாம இந்த வீட்டில இருக்கியோன்னு நினைச்சிட்டு, உன்னை ஒதுக்கியே வச்சுட்டேன்!''

''ஸ்ரீஷாக்காக ரெண்டு பேரும் சேர்ந்து இருக்கலாம்... மத்தப்படி, இந்த உறவு பேரளவில் தான்னு நானே முடிவு பண்ணி வச்சிருந்திருக்கேன்!''

''ஆனா... உனக்கு என்னைப் பிடிச்சிருக்கு... அதை நான் உணரக் கூட இல்லை பாரேன்...''

''சை... எவ்வளவு மூடத்தனமா இருந்திட்டேன்!''

''உன்னோட கொஞ்ச நேரம் உட்கார்ந்து பேசியிருக்கணும்! உன் மனசில என்ன இருக்குன்னு தெரிஞ்சுக்க முயற்சி பண்ணியிருக்கணும்!''

''நான் நினைக்கிறேன்... எங்க உன்னோட பேசினா... நீ வெளிய போறேன்னு சொல்லிடுவியோ... ஸ்ரீஷா



வுக்கு அம்மா இல்லாம போய்டுவாளோங்கிற பயம் போல எனக்கு!''

''எவ்வளவு பெரிய தப்பு! எத்தனை கால தாமதம்!''

''உன்னோட மனசு என்னமா வலிச்சிருக்கும்? ரொம்ப சாரி ஜானகி!'' - வருத்தம் மேலோங்கிய குரலில் அவன் சொல்லி முடித்தபோது, ஜானகிக்கு மனம் விம்மியது!

''தன் மனதின் விருப்பத்தைக் கணவன் மதிக்கிறான்'' என்பது பலாப்பழச் சுளையாய் இனிக்க, ''தனக்காக அவன் வருந்துவது'' பலாப்பழ முள்ளாய் நெஞ்சை அறுத்தது!

அவனது வருத்தத்தை உடனே போக்கிவிடும் வண்ணம், ''என்னமோ நான் மட்டும் கஷ்டப்பட்ட மாதிரி பேசுறீங்களே? உங்களுக்கும் தானே வேதனையா இருந்திருக்கும்!'' என்றாள் ஜானகி, வேகமாக.

அதற்கு என்ன பதில் சொல்வதென்று ஸ்ரீராமனுக்கும் தெரியவில்லை!

அதற்கு மேல், இந்த விஷயத்தில் என்ன பேசுவது என்று ஜானகிக்கும் புரியவில்லை!

இருவரும் அமைதியெனும் போர்வையை தலை வரை இழுத்துப் போர்த்திக் கொள்ள, அன்னியோனம் எனும் சுவாசம் உள்ளே வர முடியாமல் பாதி வழியில் சிக்கித் தவித்தது!

சற்று முன்னர், தன் மேனியை ஆரத் தழுவியிருந்த கணவனின் கரங்கள், இப்போது அவனது முகத்தைத் தாங்கியிருப்பதைப் பார்த்த ஜானகிக்குப் பாவமாய் இருந்தது!

அந்தக் கையை இழுத்து, தன் மேனியில் படர விட்டுக் கொள்ளலாமா என்று நினைத்த பெண்ணின் மனதை அவளது நானா சுரபிகள், அமிலத்தால் நிரப்பி விட, ஓர் பரிதவிப்புடன் பார்த்திருந்தாள்!

ஐந்து நிமிடங்கள் கடந்த பின்னரும், ஸ்ரீராமன் நிமிராமலே இருக்க, ''அத்தான்...'' என்று மெல்ல இழுத்தாள் ஜானகி.

ஒற்றை விழி உயர்த்திப் பார்த்தான் அவன்!

''தேவையில்லாம மனசைப் போட்டுக் குழப்பிக்காதீங்க அத்தான்!'' என்றாள் மெல்ல.

அவன் மறுத்துப் பேச எத்தனிக்க, ''வாழ்க்கை முழுக்கும் புரிஞ்சுக்காமலே இருந்தா தான் அத்தான், தப்பு! மூணு வருஷம் தானே அத்தான் ஆகுது... இன்னும் காலம் கிடக்கு! மெதுவா... உங்களைப் பத்தி நானும், என்னைப் பத்தி நீங்களும் தெரிஞ்சுக்கலாம்!'' என்றாள் அவள், அவன் வேதனையைப் போக்கிவிடும் வேகத்துடன்.

''ஒருத்தரை ஒருத்தர் புரிஞ்சுக்கிட்டு தான் புள்ள பெத்துக்கணும்ன்னா, நான் இந்த உலகத்தில ஜனிச்சிருக்கவே மாட்டேன் அத்தான்! எங்க அப்பாரை எல்லாம்... மனுஷ ஜென்மத்தால புரிஞ்சுக்க முடியாது!'' - அவன் மேல் குற்றமில்லை என்பதை புரிய வைத்தே ஆக வேண்டும் போலிருந்தது அவளுக்கு!

''ம்ம்'' என்றான் அவன்.

தன் வருத்தத்தைப் போக்க, அவள் வெகுவாய் முயல்வது அவனுக்கும் புரிந்தது! இந்த ஒரு



சந்தோஷத்தையாவது அவளுக்குக் கொடுப்போம் என்ற எண்ணம் தோன்றிவிட, ''சரி.. ஜானகி! நீ சொன்ன மாதிரி... நம்மளோட வாழ்க்கை நேத்தோட முடியலை... இன்னும் இருக்கு! கூடிய சீக்கிரமே, அதை அர்த்தமுள்ளதா வாழப் பார்ப்போம்!'' என்றான் சிறு கீற்றாய் உதயமான புன்னகையுடன்.

அவனது குரலிலிருந்த நம்பிக்கை, தன்னுள்ளும் வந்தது போல் உணர்ந்த ஜானகி, தன் மதி முகத்தைக் கிண்ணமாக்கி புன்னகையைப் பழரசமாய் தவழவிட்டாள்.

புன்னகையையும் மீறி அவன் முகத்தில் களைப்பே பிரதானமாய் தெரிய, ''கண்ணெல்லாம் சிவந்து போய் கிடக்கு! கொஞ்ச நேரம் தூங்குங்க, அத்தான்!'' என்றாள் அக்கறையாக! தாய் மனம் அல்லவோ!

''ம்ம். நீயும் படு!'' என்றவன், அப்படியே படுக்கையில் விழுந்துவிட, கட்டிலை விட்டு இறங்குவதா வேண்டாமா என்று சடுகுடு ஆடிக் கொண்டிருந்தாள் ஜானகி.

வெட்கம் கெட்ட மனம்... ''கட்டில்'' என்ற பதிலை பந்தையக் கட்டையில் உருட்டிவிட, ஜானகியின் நெஞ்சினுள் புது வெள்ளமாய் பரவசம் பிரவேசித்தது! தாம்பத்தியம் என்ற புதுமனைக்குள் கால் பதிக்கும் நன்னாள் அல்லவோ!

தாம்பத்தியம் என்பது உடலுறவு என்ற ஹைக்கூ கவிதை அல்லவே! உடல் தாண்டி உள்ளம் உருக்கும் மரபுக்கவிதை அல்லவோ தாம்பத்தியம்!

செந்தமிழின் இனிமை கொண்டு, பைந்தமிழின் தெளிவு கொண்டு, இசைத்தமிழின் இனிமை கொண்டு, கலைத்தமிழின் நளினம் கொண்டு, பேச்சுத் தமிழின் எளிமை கொண்டு, கவிதைத் தமிழின் நேர்த்தி கொண்டு, உரைநடைத் தமிழின் சுத்தம் கொண்டு... செம்மையும் செழுமையுமாய் அமையப் போகும் வாழ்வைப் பற்றிய கனவுகளுடன் படுக்கையில் தலை சாய்ந்தாள் ஜானகி.

தூக்கம் தான் வருவேனா என்றது?

கணவனின் இதழ் பட்ட இடத்தை மெல்ல வருடிக் கொடுத்துக் கொண்டவள், சட்டென திரும்பி கணவனின் முகம் பார்த்தாள்!

அவனோ, நித்திரையைக் குத்தகைக்கு எடுத்தவன் போல் அயராது அதில் உழைத்துக் கொண்டிருந்தான்!

''ப்ச...'' - மிட்டாய்க்கு ஏங்கும் சிறு பிள்ளைக்கு ஏற்பட்ட ஏமாற்றம் போல், ஜானகியின் மனமும் லேசாய் சிணுங்கி, சிந்து பாடியது!

அந்த இரவு நேர நிசப்தத்தில், கணவனின் மூச்சை இனம் காண அவள் முயல, அதை கடிகாரத்தின் டிக்-டிக் ஓசை மெல்ல கலைத்தது!

கட்டிலின் எதிர் சுவற்றில் மாட்டப்பட்டிருந்த கடிகாரத்தைப் பார்த்த ஜானகிக்கு, இப்போது அதன் அமைப்பே வேறு மாதிரியாகப் பட்டது!

மனைவியைத் தொடரும் கணவனின் வேகத்துடன் வினாடி முள் நிமிட முள்ளை நோக்கி நகர, இரண்டும் இணைந்து செயல்பட்டு நேரம் எனும் பொக்கிஷத்தை உலகிற்குக் கொடுப்பது போன்ற பிரமை தோன்றியது!



என்ன, மனிதன் வாழ்வில் பிள்ளை பெற பத்து மாசம்! கடிகார வாழ்வில் நேரம் நகர அறுபது வினாடிகள்!

''அட... அட... அட... உனக்குக் கொஞ்சம் மூளையிருக்கு, ஜானகி!'' என்று ஜானகிக்கே தன் கற்பனையை எண்ணி, சிரிப்பும் பெருமையுமாய் இருந்தது!

இதுநாள் வரையிலும், அவளுக்கு இப்படிப்பட்ட கற்பனைகள் வந்ததே இல்லை! உயிருள்ள மனிதனின் உள்ளமே தனக்கில்லை என்ற எண்ணத்தில் இருந்தவளுக்கு, உயிரற்ற பொருட்களைப் பற்றி என்ன கவலை?

இப்போதோ... சம்பந்தமே இல்லாமல்... ஆயிரத்தெட்டு கற்பனைகள்! காதல் கொண்ட மனதின் கலாம் சமோ!

என்ன வாய் இருந்தபோதும், அடி நெஞ்சு வரை தித்தித்தது!

கண்கள் கனவின் பிடிக்குச் செல்லத் துடிக்கவே, நித்திரா தேவிக்குத் தூதுவிட்டு அவளை மெல்லத் தழுவினாள் ஜானகி!

## மணி அதிகாலை 6:00

**ஊ**ரில் இருக்கும்போது நான்கு மணிக்கு எழுந்து பழகிய ஜானகியின் உடம்பு, மும்பைக்கு வந்ததும்

கொஞ்சம் கொஞ்சமாய் ஐந்து மணிக்குத் தன்னை நகர்த்திக் கொண்டிருந்தது!

ஊரில் செய்வது போல் அநியாய வேலைகள் அல்லவே! அன்றாட சமையலும் வீட்டுக் கவனிப்பும் மட்டும் தானே! ஐந்து மணிக்கு எழுந்தாலே அனாசயமாய் செய்துவிடுவாள்!

இன்றோ, தேனுண்ட மயக்கத்தில் இருந்த வண்டாய் கண்கள் ஆறு மணி வரை சொக்கிப் போயிருந்தன!

உள்ளுணர்வு உறுத்த, சட்டென தலை தூக்கி கடிகாரத்தைப் பார்த்தால் - ஆறு மணி, ஐந்து நிமிடங்கள், ஏழு நொடிகள்!

''கடவுளே! எவ்வளவு நேரம் தூங்கிட்டேன்... இன்னைக்கு சப்பாத்தி வேற போடணும்... காலைக்கு பொங்கல் போடணுமே... நேரமாச்சே!'' என்று பதறி அவள் எழ, முடியாத வண்ணம் அணையிட்டிருந்தன ஸ்ரீராமனின் கரங்கள்.

கனத்துக் கிடந்த கையை விலக்கவும் மனமில்லை... அதற்காகவும் படுக்கவும் மனமில்லை!

தன்னைக் கட்டிப் போட்டிருக்கும் இவனே, இன்னும் அரை மணி நேரத்தில் எழுந்து கொண்டு, ''எனக்கு நேரமாச்சு... நேரமாச்சு...'' என்று தகதிமி தா நடனமாடி விடுவான்!

அவனும் தான் என்ன செய்வான்? பத்து மணி அலுவலகத்திற்கு, இங்கிருந்து ஏழே முக்கால் மணி வண்டியைப் பிடித்தால் தான் சரியாக வரும்!



ஆசை ஆசைப்பட்ட போதும், கடமை கண்ணியம் காக்க, கணவனின் கரங்களை மெல்ல விலக்கிவிட்டு, சமையலறைக்குள் வேகமெடுத்தாள், ஸ்ரீராமனின் அன்புக்குப் பாத்திரமாகப் போகிறவள்.

அடுத்த அரை மணி நேரத்தில், பாதி சமையல் முடிந்திருக்க, அவளது கணவன் எழுந்து வந்தான் - கையில் பிள்ளையுடன்.

லேசாய் சிணுங்கிய பெண்ணைப் பார்த்தும் ''அம்முக்குட்டி... முழிச்சாச்சா? அம்மாகிட்ட வரீங்களா?'' என்றாள் ஜானகி, பரபரப்பின் ஊடேயும்.

''ம்ஹூம்... வத மாட்டேன் போ! அப்பா... வேணும்!'' என்று தந்தையின் கழுத்தைக் கட்டிக் கொண்டு, தாயை உதாசீனப்படுத்தியது கன்று!

நேற்றிரவு, தாயை விடாத அழுகை என்ன... இப்போது தந்தை மட்டுமே பிரதானம் போல் பேசுவது என்ன... வர வர ரொம்பக் கழுதையாய் போய்விட்டது என்றெண்ணிய தாய்க்கு, கோபம் என்ற உணர்வு சுத்தமாய் இருக்கவில்லை. மாறாக, ஓர் பெருமிதப் புன்னகை!

''ஓகே. குட்டி! தூங்கினது போதும்! அப்பாக்கு குட் மார்னிங் சொல்லு...'' - என்று மகளின் முகத்தை நிமிர்த்திச் சொன்னான் தந்தை.

''குட் மார்னிங்!'' சொல்லிவிட்டால், அதற்கு மேல் தூங்கக்கூடாது என்ற பழக்கத்தை தந்தை உண்டு பண்ணியிருந்தால், ''ம்ஹூம்... தாச்சு...'' என்று சிணுங்கினாள் மகள்.

''அப்போ... கட்டில்ல போய் படுங்க! அப்பாகிட்ட இருந்தா குட் மார்னிங் சொல்லணும்!'' என்றவன், படுக்கையறை நோக்கி நடக்கவும்,

''ல்ல... குட் மார்னிங் சொல்லுதா பாப்பா!'' என்றாள் ஸ்ரீஷா வேகமாய்.

''அதுதானே பார்த்தேன்! என்னடா... காலை நேரத்தில அப்பாவைத் தொங்காம குட்டி தூங்கப் போகுதேன்னு!'' என்று உள்ளுக்குள் சிரித்துக் கொண்டாள் ஜானகி.

ஸ்ரீராமன் வீட்டில் இருக்கும் வரை, ஸ்ரீஷாவிற்கு அவன் பின்னாடியே சுற்ற வேண்டும். அவன் குளியலறையில் இருந்தால் கூட, கதவருகே நின்று கொண்டு ''அப்பா... டென் மினிட்ஸ்... நைன் மினிட்ஸ்...'' என்று கவுன்ட்டவுன் நடத்திக் கொண்டிருப்பாள்.

இன்று மட்டுமென்ன விதிவிலக்கா?

''குட் மார்னிங்'' என்று மழலையில் மிளற்றிவிட்டு, தான் முழித்துக் கொண்டேன் என்று தந்தைக்குக் காட்டும் விதமாக, கண்களை நன்றாக தேய்த்து விட்டுக் கொண்டு, அவனை உற்றுப் பார்த்தாள்.

அதில் கலவரப்பட்டவனாய் ''என் புஜ்ஜு குட்டி!'' என்று அவன் முத்தம் கொடுக்க,

''ஐயோ அப்பா... பல்லு விளக்காம கிஸ் பண்ணக் கூடாது... இது கூட தெய்யலை!'' என்று தலையில் அடித்துக் கொண்டாள், மகள்.

சட்டென, ஸ்ரீராமனின் பார்வை ஜானகியின் முகத்தைப் பார்த்தன! முக்கியமாய் உதடுகளை!



பெண்ணின் பேச்சில் சிரித்துக் கொண்டிருந்த ஜானகி, இப்போது சிவந்து போனாள்!

அவனது பார்வையின் வீச்சைத் தாங்க முடியாமல், அவள் நின்றிருக்க, அவனும் பார்வையை விலக்காமல் மொழிகளற்ற மௌனத்தில் மோக இசை வாசித்துக் கொண்டிருந்தான்.

இதைப் பற்றியெல்லாம் கவலை கொள்ளாத சின்னச் சிட்டு,

''அப்பா... வாங்கப்பா... பல்லு விளக்கலாம்... மிக்கி பெஷ் எடுங்க!'' - தந்தையை ஏவியது.

''இதோ மகாராணி!'' என்று சிரித்த ஸ்ரீராமன், மகளுடன் குளியலறைக்குள் நுழைந்தான்.

அடுத்த பத்து நிமிடங்கள், அங்கே சலசலப்புக்குப் பஞ்சமில்லாமல் கழிய, இருவரும் வெளியே வந்ததும் கையில் பானத்துடன் அவர்களை எதிர்கொண்டாள், அந்த இல்லத்தின் அரசி!

தனது பால் சிப்பரை வாங்கிக் கொண்ட ஸ்ரீஷாவிடம், ''அம்மாக்கு குட் மார்னிங் சொன்னீங்களா, குட்டி?'' என்று வினவினான் தந்தை.

''ம்ம்... அம்மாக்கா?'' - தலை சரித்துக் கேட்டது சின்னச்சிட்டு! இதென்ன புதுப்பழக்கம்? என்ற கேள்வியைக் கண்ணில் வைத்து அவள் கேட்ட அழகே அழகு!

''அம்மாக்குத்தான்!'' - தந்தையும் தலை சரிக்க,

''ஓகே!''

''அம்மா... குட் மார்னிங் அம்மா! நீயும் சொல்லு...'' என்றாள் மகள், தாயிடம்.

நேற்று வரை, தந்தை - மகள் இருவருக்கும் மட்டுமே பிரத்யேகமாய் இருக்கும் நேரங்களில், உன்னையும் இணைத்துக் கொள்கிறோம் என்ற அறிவிப்பை அவன் சொல்லாமல் சொல்ல, ஜானகி சந்தோஷத்தில் திளைத் தாள்!

மகளும் கணவனும் உரையாடும் அழகைத் தூர இருந்து ரசித்தத் தருணங்கள் மாறி, தானும் அதில் ஒருத்தியாய் கலக்கப் போவது அவளை வானில் சிற கடிக்க வைத்தது!

மனமெல்லாம் பூரிப்பாய் அவள் நின்றிருக்க, ''ம்மா... நா குட் மார்னிங் சொன்னே இல்ல... நீயும் சொல்லு!'' என்றாள் மகள்.

''காலை வணக்கம்டா குட்டி!'' - ஜானகி சொல்லவும்,

''அய்யே! குட்மார்னிங் சொல்லும்மா.. இப்படி சொல்லக்கூடாது... கு...ட்...மா...னி..இ..ங்..'' - ஒரோர் எழுத்தாய் மகள் பாடம் நடத்த, அங்கே சிரிப்பொலி பீறிட்டுக் கிளம்பியது.

''அம்மா... தமிழ்-ல குட் மார்னிங் சொல்றாடா!'' என்று மகளுக்கு விளக்கிய ஸ்ரீராமன், வரவேற்பறைக்குள் நுழைந்தான்.

டீப்பாய் மேலிருந்த நேற்றைய பேப்பர், பழைய பேப்பர் இருக்கும் இடத்திற்குச் சென்றிருக்க, இன்றைய பேப்பர் டீப்பாய் மீதமர்ந்து அவனை வரவேற்றது!

மகளிடம், பேப்பருடன் வந்த இலவச இணைப்பைக் கொடுத்துவிட்டு, அன்றைய செய்திகளில் மூழ்கியவன், கையிலிருந்த காபியை உறிஞ்சினான்!



என்றுமில்லாமல், இன்று காபியின் சுவை நெஞ்சு வரை சென்று சுண்டி இழுத்தது!

''கடமைக்காகச் செய்கிறாள்'' என்ற எண்ணத்துடன் பருகிய முந்தைய தின காபிக்கும், ''அன்புடன் செய் கிறாள்'' என்ற எண்ணத்துடன் பருகும் இன்றைய காபிக் கும் ஆறு வித்தியாசம் இருப்பது போல் தோன்றியது, அவனுக்கு!

நேற்று வரை, பாலுடன் சேர்த்து அவளிட்டிருந்த சர்க்கரை... டிக்காஷன் போல அவளது இருப்பையும் ஜடப்பொருளாய் நினைத்தவனுக்கு, இன்று அவளிட் டிருந்த அன்பு தனித்துத் தெரிந்தது!

சிறு புன்னகையுடன் காபியை அருந்தி முடித்தபோது, ஜானகி காபி டம்ளரை வாங்க வந்து விட்டாள்.

சிப்பரை அங்கேயும் இங்கேயும் ஆட்டிக் கொண்டு, பாலை சிந்திக் கொண்டிருந்த மகளிடம் ''ஒழுங்கா குடி, குட்டி! பாதி பால்... சட்டையிலேயே சிந்திடுச்சு!'' என்று லேசாய் கண்டித்தவாறே, டீபாய் மேலிருந்த காலி டம் ளரை அவள் எடுக்க,

''இன்னைக்கு காபி ரொம்ப நல்லா இருந்துச்சு!'' என்றான் ஸ்ரீராமன், புன்னகை மாறாமல்.

அவனிடமிருந்து இதை எதிர்பார்த்திராத ஜானகிக்கு, இன்ப அதிர்ச்சியே!

சற்று நேரம், திகைத்த நிலையிலேயே நின்றிருந் தவள், அவன் அவள் முகத்தின் முன்னே சொடக்குப் போடவும் ''தேங்க்ஸ் அத்தான்!'' என்றாள் வெட்கத் துடன்.

தந்தை செய்ததைப் பார்த்த ஸ்ரீஷா, ''நானும்... நானும்...'' என்று கத்திக் கொண்டு, கையை மடக்கி மடக்கிப் பார்த்ததில், அடுத்த நிமிடங்கள் சிரிப்பில் கழிந்தன.

மணி ஏழைத் தொட்டதும், பரபரப்பிற்குப் பிள்ளை யாகிப் போனான் ஸ்ரீராமன்.

மின்னல் வேகத்தில் குளித்துவிட்டு வந்தவனுக்கு, சூடாய் பொங்கல்... சாம்பார்... சட்டினி என்று அவள் பரிமாற, வேகமாய் உண்டவன், ஏதோ எண்ணியவனாய் வயிற்றில் கை வைத்துப் பார்த்துக் கொண்டான்.

காலியாய் இருந்த தட்டில் ஒரு கரண்டி பொங்கலை வைத்துவிட்டு நிமிர்ந்த ஜானகிக்கு, புன்னகையை மீறிய சிரிப்பு!

''இப்படியே போச்சுன்னா... பிள்ளையார் சாமி மாதிரி ஆகிடுவேன்!'' - அவன் ஏகமாய் வருத்தம் கொள்ள,

''ம்ஹ்ஹூம்! உங்களுக்கு எலும்பு உடம்பு அத் தான்! என்னதான் அதிகமா சாப்பிட்டாலும்... எலும்பு தான் உரம் ஏத்தின மாதிரி வளருமே தவிர, சதையே வைக்காது!'' என்று தீர்க்கமாய் பதில் சொன்னாள், ஜானகி.

அப்போதும் அவன் முகம் தெளியாமலே இருக்க, ''சாப்பிடும்போது... சாப்பிட்ட சாப்பாட்டோட அளவைக் கணக்குப் பண்ணக் கூடாது! ஒட்டாமலே போய்டும்!'' என்றவளின் குரலில், சிறு திணறல் கூட இல்லை!

''பேசுவது தான் தானா?'' என்றிருந்தது அவளுக்கே!

ஆனால், உண்மையைப் பகிர்வதற்கு எதற்கு தயக்கம்! அதுவும், உன்னோட வாழ ஆசைப்படுகிறேன்



என்று பறைசாற்றிய கணவனிடம் பேச என்ன தயக்கம்! வார்த்தைகள்... தீர்க்கமாகவே வெளிவந்தன!

முகம் தெளியாத போதும், ஸ்ரீராமனால் தட்டிலிருந்த பொங்கலின் சுவையை நிராகரிக்க முடியவில்லை! உண்டுவிட்டே எழுந்தான்!

இதில் எதிலும் தலையிடாமல், இன்றைக்குச் செல்லப் போகும் கடற்கரையைப் பற்றிய இனியக் கற்பனையில் ஆழ்ந்திருந்தாள் ஸ்ரீஷா!

''தண்ணி... ஜில்லுன்னு இதுக்கும் ல்ல...''

''நிறைய மண்ணு இதுக்கும்... வீடு கட்டலாம்... பெத்த வீடு கட்டலாம்...''

''அப்புதம்... ஐஸ் கிரீம் சாப்பிடலாம்...'' - என்று அவள் உலகமே தனியாய் இருந்தது.

மகளுக்கு ஏற்ற பதிலைச் சொல்லியவாறே, அலு வலக உடை மாற்றி அவன் வருவதற்குள், அவனது டப்பர்வேர் டப்பாவை ஏந்திக் கொண்டு மகள் கதவருகே நின்றிருந்தாள்!

''அப்பாக்கு லஞ்ச்சா-டா! தேங்க்ஸ்டா குட்டி!'' என்று மகளின் பஞ்சுக் கன்னங்களிலும், டப்பர்வேரின் கனத்தைத் தாங்கியிருந்த அவளது பிஞ்சு விரல்களிலும், மதிமுகத்தின் முகவரியாய் இருந்த பிறைநெற்றியிலும் முத்தமிட்டு நிமிர்ந்தான் தந்தை.

''டாட்டா... அப்பா! இன்னைக்கு... பீச் போவோம் தானே!'' - மீண்டும் ஒரு முறை உறுதி செய்து கொண் டாள், மகள்.

''கண்டிப்பாடா!''

''அப்போ... ஏஞ்சல் தெஸ் போடவா?''

''இன்னைக்கு வேணாம்டா... தண்ணில நனைஞ்சு போய்டும். கோவிலுக்குப் போகும் போது போடலாம்...''

''எப்போ கோவிலுக்குப் போவோம்?''

''சன்டே போலாம்டா...''

''அதுக்குள்ள, அம்மாக்கும் ஏஞ்சல் தெஸ் வாங்கிட்டு வந்துடுங்க...''

''கண்டிப்பாடா.''

''ஓகே பா! பை!'' - வேலை முடிந்ததும், தந்தைக்குக் கையாட்டிவிட்டது கன்று.

செல்லமாய் அவளது கன்னம் தட்டியவன், ''பைடா குட்டி!'' என்றுவிட்டு வெளிக்கதவு வரை சென்றான்.

இதுநாள் வரை, மகளுக்குச் சொல்லும் ''பை'' தான் அவனது காலைப் பேச்சு வார்த்தையின் கடைசி வரியாய் இருக்கும்! ஆனால், இன்று ஜானகியின் மனம் கூடுதலாய் ஏதோ ஒன்றை எதிர்பார்த்து ஏங்கியது!

அவளது எண்ணத்தின் தாக்கம் அவனை ஆட்கொண்டதன் விளைவோ! இல்லை நேற்றைய பேச்சின் நிழலோ! ஸ்ரீராமன் நின்றான்!

''இன்னைக்கு சாயங்காலம், பத்திரமா கிளம்பி வந்திடுங்க! ட்ரைன்-ல யார்கிட்டயும் அனாவசியமா பேச்சுக் கொடுக்க வேண்டாம்! பொம்பளைங்களா இருந்தாலும் சரி... ஒதுங்கியே இருந்துக்கோ!'' - என்று நீண்ட அறிவுரைப் பட்டியல் வாசித்தான் அவன்.

தான் எதிர்பார்த்துக் காத்திருந்தது நடக்கவில்லை என்றதும் ஜானகிக்கு மனம் லேசாய் சுணங்கியது!



ஆனால், அதை மறைத்துக் கொண்டு ''சரி அத்தான்...'' என அவள் தலையாட்ட, ஸ்ரீராமன் அங்கிருந்து நகர்ந்தான்!

ஏமாற்றத்தை ஏற்றே பழகியவள் என்றபோதும், இன்றைக்கு ஏனோ வலித்தது!

தொங்கிய முகத்துடன் அவள் அடுக்களைக்குள் நுழைய, ''ஜானகி!'' என்ற குரல் வெளியிருந்து கேட்க, சட்டென திரும்பியவளிடம் ''நான் ஆபீஸ் போயிட்டு வரேன்! பை!'' என்றான் ஸ்ரீராமன், புன்னகையுடன்.

தவமிருந்த பெற்ற வரம் போல், அந்த விடைபெறும் படலம் பொக்கிஷமாகிவிட, ''சரி அத்தான்! பார்த்துப் போயிட்டு வாங்க!'' என்று நவின்ற ஜானகியின் வார்த்தைகளில், வர்ணிக்க முடியாத சந்தோசம்!

## மணி பின்காலை 11:00

நேற்று இரவு சரியாக உறங்காததால், தாய் தலைக்குக் குளிப்பாட்டியதுமே, கண்கள் சொக்கத் தொடங்கி விட்டது ஸ்ரீஷாவுக்கு.

தூங்கி வழிந்த பிள்ளைக்கு உணவூட்டும் ஓர் பிரம்மப்பிரயத்தன வேலையை ஒருவழியாகச் செய்தவள், அவளைப் படுக்கையில் விட்டு, சற்று நேரம் உடனிருந்துவிட்டு, மற்ற வேலைகளைச் செய்ய ஆரம்பித்திருந்தாள்.

உதட்டில் இருந்து புன்னகை மறையாதிருக்க, வேலைகள் வேகமாகவே நகர்ந்தன!

கணவனின் கைபட்ட மேனியும், உதடுகள் செய்த மாயமும், அவளை ஓர் மாயலோகத்தில் ஆழ்த்தின! அவனது முந்தைய அணைப்பிற்கும், நேற்றைய அணைப்பிற்குமான வித்தியாசம் அவளுக்கு நன்றாகவே புலப்பட்டது!

கல்லோ மண்ணோ பாறையோ என்பது போன்ற அவனது முகத்திற்கு மாறாக, தாபம் மேலோங்கிய ஆசை முகம்!

''இவள் என் மனைவி, நான் என்ன வேண்டுமானாலும் செய்வேன்!'' என்ற உணர்ச்சி மாறி, ''இவளது ஸ்பரிசம் எனக்குத் தேவை!'' என்ற காமம் கூட, அழகாய் தன் இருந்தது!

அதை விடவும், ''இந்த முறையும் உன்னிடம் கேட்காமல்...'' என்று அவன் பட்ட வருத்தம்... அவளுள் தேனாய் இனித்தது! தன்னை ஓர் மனுஷியாய்... உணர்ச்சிகள் கொண்ட உயிராய் அவன் மதிக்கத் துவங்கியதே போதும் என்று மனம் நிம்மதி அடைந்தது!

துணி துவைத்துக் கொண்டிருந்தவளின் நெஞ்சமெல்லாம் அவனாய் இருக்க, அவன் நேற்று போட்டிருந்த சட்டை அவள் கையில் துவைப்பதற்காக சிக்கியது!

சட்டையை இரு கைகளாலும் விரித்துப் பார்த்தவளுக்கு, அந்தச் சட்டையினுள் சண்டியனாய் கணவன் இருப்பது போன்ற பிரம்மை!



அந்த அடர் ஊதச் சட்டையின் கைகளை எடுத்துத் தன் மேல் போட்டுக் கொண்டவளுள், வெட்கத்தை மீறிய சிரிப்பு!

முந்தைய இரவு, நிஜத்திடம் செய்ய எண்ணி செய்ய முடியாமல் போனதை... நிழலிடம் சாதித்துக் கொண்ட மிதப்பு, அவளது கண்களில்!

தோளில் இருந்த சட்டையின் கைகளை, மெல்ல இறக்கி இடுப்பிற்கு அவள் இட்டுவர, ''ம்மா... என்ன செய்யுதமா?'' என்று கண்ணைக் கசக்கிக் கொண்டு வந்து நின்றது, அவளது சின்னக் கழுதை!

மின்னல் வேகத்தில், தன் மீது படர்ந்திருந்த சட்டையை எடுத்து, சோப்பு தூளில் ஊற வைத்த துணிகளுக்குள் போட்டவள், ''ஏன்டா எழுந்துட்டீங்க? தூங்கலையா?'' என்றாள் மகளிடம்.

குளியலறைக்கு வெளியே நின்றிருந்த கன்று ''ம்ம்ம்... தாச்சு பாட்டு பாடு...'' என்றவாறே உள்ளே வந்தது.

''ம்ஹூம். தண்ணில வராத ராஜாத்தி! அம்மா வரேன்!'' என்றவள், வேகமாய் கையைக் கழுவிக் கொண்டு, பிள்ளையைத் தூக்கினாள்.

பெண்ணைத் தோளில் சாய்த்தவளின் வாய் தாலாட்டுப் பாடியபோதும், மனம் கணவனிடமே இருந்தது.

''விழித்து எழுந்தது முதல், அவனது நினைவாகவே இருக்கும் தன்னைப் போலவே கணவனுக்கும் இருக்

குமா?'' என்ற எண்ணம் அவளுள் உதிக்க, அவளது கணவனும் அதே நிலையில் தான் இருந்தான்.

## மணி மதியம் 12.00

''டேய் ஸ்ரீராம்! என்னோட கொஞ்சம் நகைக்கடை வரைக்கும் வரியாடா?'' - ஃப்ளோரில் நின்ற ஸ்ரீராமனிடம் வினவினான் அவனது அலுவலக நண்பன் கோகுல்.

''என்னடா விஷயம்? ஆபீஸ் நேரத்தில நகைக் கடைக்கு? அதுவும்... பகல் பன்னிரண்டு மணிக்கு?'' - தன் கீழ் இயங்கும் ஆட்களின் மீது பார்வையை வைத்தவாறே, ஸ்ரீராமன் கேட்க,

''ரொம்ப முக்கியமான விஷயம், மச்சான்! இன்னைக்கு மட்டும்... நான் எதுவும் வாங்காம வீட்டுக்குப் போனேன்... அப்புறம் ரோட்டிலேயே தூங்க வேண்டிய நிலைமையாகிடும்டா... ப்ளீஸ் டா வா...'' - தலையும் இல்லாமல் வாலும் இல்லாமல், ''விஷயம்'' என்ற பெயரில் ஒன்றைக் கக்கினான் அவன்.

''புரியிற மாதிரி பேசேன்டா!'' - ஸ்ரீராமனின் முகத்தில் எரிச்சல் கோடுகள்.

சரியான பதில் வரவில்லை என்றால், அவனும் நகைக்கடைக்கு வராதிருப்பதோடு, போகின்ற தனக்கும்



ஏதாவது ஆப்பு வைத்து விடுவான் என்று தோன்ற, புரியும்படி பேசலானான் கோகுல்.

''இல்ல மச்சான், நேத்து... ஆபீஸ்ல இன்க்ரிமென்ட் பத்தி சொன்னாங்க இல்ல...'' - ஸ்ரீராமனுக்கு ஒரு வருடம் ஜூனியர் இந்தக் கோகுல். அதனால், கோகுலுக்கு வேலை உயர்வு இந்த வருடம் வரவில்லை.

''ஆமா... அதுக்கு என்ன? அது அடுத்த மாச சம்பளத்தோட தானே வரும்!''

''உனக்குத் தெரியுது... எனக்குத் தெரியுது... பூஜாவுக்குத் தெரியலையேபா... தெரியலையே!'' - பூஜா கோகுலின் ஆருயிர் மனைவி. நல்ல படிப்பு... நல்ல வேலை... கூடவே நல்ல 'திமிரும்' கூட!

''என்னடா ஒரேடியா அலுத்துக்கிற?''

''என் நிலைமை அப்படி! நீயேன் பேச மாட்டே! உன்னை மாதிரி எல்லாருக்கும் லக் அடிக்குமா 'பா?'' - அவன் குரலில் லேசாய் பொறாமை இருந்ததோ?

''என்னதான்டா விஷயம்? ஒழுங்கா சொல்லித் தொலையேன்!'' என்ற ஸ்ரீராமன்,

''உன்னோட புலம்பலைக் கேட்கிற அளவுக்கு... நான் வெட்டியா இல்லை!'' என்றான் கறாராக.

''சரி... சரி... கோச்சுக்காதே மச்சான்! நேத்து இன்க்ரிமென்ட் விஷயம் கேள்வி பட்டதும்... நீயும் நானும் தானே குழந்தைகளுக்கு டிரஸ் எடுத்திட்டு, ஸ்வீட்ஸ் வாங்கிட்டு வீட்டுக்குப் போனோம்!''

''ஆமா... ஸ்ரீ குட்டிக்கு அந்த டிரஸ் ரொம்பப் பிடிச்சுடா.. ஏஞ்சல் டிரஸ்... ஏஞ்சல் டிரஸ்ன்னு அதே

நினைப்பாவே இருந்தா குட்டி!'' - பெண்ணின் கனவு மிதந்த கண்களும், ''அம்மாக்கு ஏன்பா ஏஞ்சல் டிரஸ் வாங்கிட்டு வரலை?'' என்ற அவளது கேள்வியும் நெஞ்சுக்குள் நிழலாடியது.

தலையை உலுக்கிக் கொண்டு ''ப்ரவீனுக்கு (கோகுலின் மகன்) பிடிச்சதாடா?'' என்றான் நண்பனிடம்.

''ஹ்ம்ம். அதெல்லாம் பிடிச்சது!'' - நண்பனின் குரலில் லேசாய் சோகமிருக்க,

''என்னாச்சுடா!'' - பரிவாய் வந்தது வார்த்தை.

''உன்னோட வந்ததால, பூஜாக்கு ஏதாவது வாங்கிட்டுப் போகணும்ங்கிற நினைப்பே இல்லாமப் போச்சுடா...''

தன்னை நண்பன் குத்திக் காட்டுவது போல் உணர்ந்தான் ஸ்ரீராமன்.

ஸ்ரீராமனின் கன்றிய முகத்தைக் கவனிக்காமல் கோகுல் பேசிக் கொண்டே சென்றான். ''அதெப்படி வெறும் ஸ்வீட் பாக்ஸ் மட்டும் வாங்கிட்டு வருவீங்க? பிள்ளைக்கு டிரஸ் வாங்கும்போது.... பொண்டாட்டிக்கும் வாங்கணும்ங்கிற நினைப்பே இல்லையா? அப்படி இப்படின்னு ஆடித் தீர்த்துட்டாடா! இன்க்ரிமென்ட் வாங்கின சந்தோஷமே போச்சு!'' என்றான் அவன் வருத்தத்துடன்.

பூஜாவின் இடத்திலிருந்த ஜானகியின் முகத்தில் சிறு எரிச்சல் கோடுகள் கூட இல்லையே!



''ஏன் எனக்கு வாங்கிட்டு வரலைன்னு?'' - சின்ன தாய் கூட முகம் சுளிக்கவில்லையே!

மகள் கேட்ட பின்னரும், ''அவளாய் தான் கேட்டாள். நான் சொல்லிக் கொடுக்கவில்லை'' என்று தன்னிடம் மண்டியிட்டாளே! சை... அவளைப் போய்!

''அதான்டா, இன்னைக்குப் போகும் போது, சின்னதா ஏதாவது தங்கத்தில் வாங்கிட்டுப் போயிட்டா கொஞ்சம் கூல் ஆகிடுவா! ஈவ்னிங் நமக்கு ஒரு முக்கியமான மீட்டிங் இருக்கில்ல... அதுக்கு அப்புறம் எனக்கு ஒரு கஸ்டமர் டீலிங் இருக்கு... அது முடிஞ்சு நகைக் கடைக்குப் போறதுன்னா ரொம்ப லேட் ஆகிடும். இப்பவே போயிட்டு வந்துட்டா, ராத்திரி நிம்மதியா வீட்டுக்குப் போகலாம்... அதான்! வரியாடா!'' என்றான் கோகுல்.

நண்பனின் குரலிலிருந்த கெஞ்சலை விடவும், உள்ளுக்குள் இருந்து மனதைத் துண்டு துண்டாய் வெட்டிக் கொண்டிருந்த குற்ற உணர்வு உந்த, ''சரி! வா போகலாம்!'' என்று நண்பனுடன் நடந்தான்.

இருவருமாய், ஓர் பெரிய நகைக்கடைக்குள் நுழைந்ததும் ''மச்சான், ரிங் செக்ஷன் போகலாம்டா'' என்று கோகுல் நகர,

''நீ அங்க பார்த்திட்டு இருடா... நான் செயின் செக்ஷன்ல இருக்கேன்!'' என்று ஸ்ரீராமன் நகர்ந்தான்.

சிறு வியப்புடன் பார்த்த கோகுல், ''ஹே, யாருக்குடா செயின்? ஸ்ரீ குட்டிக்கா?'' என்று வினவ,

'இல்ல, ஜானகிக்கு!'' என்றான் ஸ்ரீராமன், பளிச்சென!

''வாட்! நீயா... உன் வைஃப்-க்கா?'' - இதுநாள் வரை, மனைவியை அவன் வெளியே அழைத்து வந்ததுமில்லை... நகை துணி என்று அவளுக்கு வாங்கியதும் இல்லை... ஸ்ரீஷா மட்டும் தான் அவன் கண்ணுக்குத் தெரிவாள்!

''இதென்னடா வம்பா இருக்கு! நீ உன் வைஃப்க்கு வாங்கலாம்... நான் என் வைஃப்க்கு வாங்கக் கூடாதா?'' - புருவம் உயர்த்திக் கேட்டவன், திகைத்து நின்ற நண்பனின் தோளில் தட்டிவிட்டு, தங்கச் சங்கிலிகள் தோரணமாய் தொங்கிக் கொண்டிருந்த பகுதிக்குச் சென்றான்.

தமிழ் பெண்களின் தாலிச் சங்கிலி போல் ஒன்றை அவன் தேர்ந்தெடுத்து பில் போடவும், ''மச்சான், பெரியாள் ஆகிட்டேடா... அஞ்சு பவுனுக்கு தாலிச் சங்கிலியே... ஹ்ம்ம் கலக்கு!! கலக்கு!! இன்னைக்கு நைட் ஐயாவுக்கு செம கவனிப்பா இருக்கும் போலவே... என்ஜாய்டா மச்சான்!'' என்று கோகுல் கண் சிமிட்ட, ஸ்ரீராமனுக்கு லேசாய் வெட்கம் எட்டிப் பார்த்தது.

இன்றைய இரவு, இந்த சங்கிலியை ஜானகியின் கழுத்தில் இடும்போது, அவள் முகம் திகைப்பதையும்... ஜொலிப்பதையும்... நாணத்தில் சிவப்பதையும்... பெருமிதத்தில் பூரிப்பதையும்... ஆசையில் ஆரவாரமடைவதையும்... காணவேண்டும் போல் நெஞ்சம் குட்டிக்கரணம் அடித்தது, வேலை செய்ய விடாமல் சதி செய்தது.

ஒரு நிலைக்கு மேல் பொறுக்க முடியாமல், வீட்டு எண்ணிற்கு அழைத்தான் ஸ்ரீராமன்.

காலையில் வந்ததுமே, டெலிபோன் டிபார்ட்மெண்டில் தொலைப்பேசி வேலை செய்யவில்லை என்று கம்ப்ளைண்ட் கொடுத்திருந்தான். நேற்று... அதற்கு முன்தினம் என்று அவனும் தினமும்தான் கம்ப்ளைண்ட் கொடுக்



கிறான்... ஆனால் ஒன்றும் நடந்தபாடாய் இல்லை. ஆனால், இன்று அவன் அழைத்தபோது, அந்தப் பகுதியில் உள்ள பிரச்சனையை சீர் செய்து கொண்டிருப்பதாகவும், மதியம் ஒரு மணிக்குள் லைன் சரியாகிவிடும் என்றும் தெரிவித்திருந்தனர்.

''சரியாகி இருக்க வேண்டுமே!'' என்ற வேண்டுதலுடன் அவன் அழைக்க,

''ஹலோ! யாரு பேசுறது?'' என்ற ஜானகியின் குரல், அவனுள் நிம்மதியை விதைத்தது.

''நா தான்!'' என அவன் அறிமுகப்படுத்த,

''என்ன அத்தான் இந்த நேரத்தில் போன் பண்றீங்க? எதுனா முக்கியமான விஷயமா?''

''ம்ஹூம். சும்மா தான்! பாப்பா என்ன பண்றா?''

''பாப்பா தூங்குறா. நேத்து தூக்கம் முழிச்சதுல்ல...''

''ஹ்ம்ம். நீ என்ன பண்றே?''

ஜானகிக்கு வியப்புக்கு மேல் வியப்பு. ''நா... நா... மதியத்துக்கு சமைச்சிட்டு இருந்தேன்... அதுக்கு முன்னே துணி துவைச்சேன்... பாப்பாக்கு சோறு ஊட்டினதுக்கு அப்புறம் வீடு பெருக்கணும்...'' அவள் இழுக்க,

''என்ன சமையல் செய்தே?''

''என்னவாகிற்று இவனுக்கு? வேலை நேரத்தில் வெட்டிக் கதை பேசுகிறான்? அதுவும் தன்னோடு?'' என்றெண்ணியவளுக்கு, அவனோடு பேசுவது பிடித்தே இருந்தது.

''சாதம்... பருப்பு மசியல்... காரட் துவட்டல்... வெண்டைக்காய் குழம்பு, அத்தான்!''

''ஹோ... ஏன் இன்னைக்குக் காலையிலேயே செய்யலையா?''

''உங்களுக்கு சப்பாத்தி கொடுத்துவிட்டேன்... அதான் காலையிலேயே காய் செய்யலை...'' என்றவள், ''நீங்க இன்னும் சாப்பிடலையா? மணி ஒண்ணாகப் போகுதே?'' என்றாள் அக்கறையுடன்.

''இதோ சாப்பிடணும். ஹ்ம்ம் கோகுல் டிபன் பாக்ஸை தூக்கிட்டு வந்துட்டான். போனை வைக்கிறேன்... நீயும் பாப்பாவும் கரெக்ட்டா நாலரைக்கு வீட்டை விட்டுக் கிளம்பிடுங்க...''

''சரி அத்தான்... ஆனா நீங்க அஞ்சு மணின்னு சொன்னீங்களே?''

''அஞ்சு மணின்னா அஞ்சு மணிக்கே கிளம்பணுமா? அரை மணிநேரம் முன்னாடிக் கிளம்பினா தான்... டிக்கெட் வாங்கிட்டு அஞ்சு மணி ட்ரைன் பிடிக்க சரியா இருக்கும்!'' - சட்டென கோபம் போல் குரல் உயர்ந்தது.

''ஆமா இல்ல! கரெக்ட்டா நாலரை அடிச்சதும் கிளம்பிடுறோம்!'' என்றாள் வேகமாய்.

மனைவியின் பதிலைத் தொடர்ந்து, அவள் வேக வேகமாய் தலையாட்டுவது போன்ற கற்பனை நெஞ்சினுள் வந்து சென்றதில், உதடுகள் சிரிப்பில் விரிந்தன.

''சரி... சரி... வைக்கிறேன்! பார்த்து வந்துடுங்க!'' என்று விட்டு அழைப்பை வைத்தான் கணவன்.

மதிய உணவை உண்ணும் வேளையில், ஸ்ரீராமனின் எண்ணம் பின்னோக்கிப் பயணித்தது!



மாமாவின் அழைப்பு வந்ததும் ஊருக்குச் சென்றவன் கையோடு ஜானகியை அழைத்து வந்திருக்க வேண்டுமோ?

ப்ச்... அப்போது பார்த்து, சில தமிழ் நண்பர்கள் அவனுடன் வீட்டைப் பங்கிட்டுக் கொண்டிருந்தனர். அவர்களை உடனடியாக காலி செய்யச் சொல்ல முடியாது என்பதற்காக, அடுத்த மாசம் வந்து ஜானகியை அழைத்துச் செல்கிறேன் என்று சொல்லிவிட்டு வந்தது தப்போ?

இங்கே (மும்பைக்கு) வந்தால், தீபாலியின் திருமணம் பற்றி அறிய நேர்ந்து, ''எந்தப் பெண்ணைக் கண்டாலும்... காம வெறி கொண்டு அலையும் அளவிற்குத் தாம் தரம் இறங்கிவிட்டோமோ!? முன்னர், தீபாலியைப் பார்த்ததும்... காதல் கொண்டோம்! இப்போது... ஜானகியின் பெண்மையை சூறையாடி இருக்கிறோம்!'' என்று தன்னைத் தானே வெறுத்தது, சூழ்நிலையின் வண்ணக்கோலமோ!?

அந்த வெறுப்பின் விளைவாய், ''தனது சம்மதம் கேட்காமல் தொட்ட கணவனை ஜானகிக்கு அறவே பிடிக்காது!'' என்று தானே கணக்கிட்டது மிகப்பெரிய தவறோ!?

அவளும் தான், அடுத்த முறை ஊருக்குச் சென்ற போது, அவன் பேச முற்பட்ட வேளைகளில் எல்லாம் ஒதுங்கி ஒதுங்கிப் போய்... இருவருக்குமான இடைவெளியை அதிகரித்து விட்டாளோ!?

''பிள்ளை உருவாகி இருக்கிறது'' என்று தெரிந்துமாவது, அவளிடம் பேசியிருக்க வேண்டுமா!?

அவளது பயத்தை 'வெறுப்பு' என்று எண்ணிக் கொண்டு, முழுதாய் நான்கு ஆண்டுகளை வீணடித்து விட்டானே!?

எண்ணங்களின் விளைவாய், ''சை... எவ்வளவு வேஸ்ட்!'' என்று வாய் விட்டே சொல்லிவிட்டான், ஸ்ரீராமன்.

''என்னடா வேஸ்ட்? சாப்பாடா? ஹே... சப்பாத்தி சூப்பர்ரா இருக்குடா... செம சாப்ட்... அதோட இந்தக் கடலைக் கறி சூப்பர் மச்சான்... இதைப் போய் வேஸ்ட்ன்னு சொல்றியே?'' என்று கோகுல் பேசியது, ஸ்ரீராமனை நிகழ்காலத்திற்கு இட்டு வந்தது!

## மணி முன்மாலை 3:30

''அம்முக்குட்டி, மணி ஆகிட்டே இருக்குடா... சீக்கிரமா டிரஸ் போட்டு கிளம்புடா...'' மகளிடம் கெஞ்சிக் கொண்டிருந்தாள் ஜானகி.

''ம்ம்... ம்ம்... இந்த எல்லோ தெஸ் வேணாம்... ஜீன்ஸ் போடு...'' தாயின் கெஞ்சலை சற்றும் சட்டை செய்யாமல், அவளது விருப்பத்திற்குத் தாயை வளைத்துக் கொண்டிருந்தாள் ஸ்ரீஷா.

''பாண்ட் போட்டா... கடல்ல நிக்கும் போது நனைஞ்சு போய்டும் கண்ணு. பாண்ட் எல்லாம் மண்ணும்... தண்ணியுமா சகசகன்னு இருக்கும். இந்த கவுனைப்



போட்டுக்கோ குட்டி. இது வேணாம்ன்னா... தீபாவளிக்கு அப்பா வாங்கித் தந்தாங்களே அந்த சிகப்பு கவுன் போட்டுக்கோடா'' - ஜானகியும் காரணக் காரிய விளக்கங்களுடன் போராடித்தான் பார்த்தாள்.

''இல்ல... இல்ல... ஜீன்ஸ்... ஜீன்ஸ்...'' என்று விடாது முழங்கிய பிள்ளை, தன் துணிகள் அடுக்கி வைக்கப் பட்டிருந்த தட்டின் நடுவிலிருந்து ஜீன்ஸ் பாண்ட்டை ஒரே உருவாய் உருவி எடுத்தது.

''அச்சோ... எல்லாத்தையும் களைச்சுப் போடாதே குட்டி!'' என்று அதட்டியபோதும், பெண்ணின் விருப்பத்திற்கு வளைந்து கொடுத்துத் தான் போனாள், அந்தத் தாயரசி.

ஜீன்ஸ் பாண்ட்டை எடுத்ததோடு ஸ்ரீஷாவின் அட்டகாசம் முடியவில்லை. அதற்கு மேல் போடும் சட்டைக்கு அடுத்ததாய் ஓர் ஆர்ப்பாட்டம் செய்தாள் சின்னவள்.

பொறுமையின் சிகரமான ஜானகியே ''இன்னைக்கு ரொம்பப் படுத்துறே குட்டி!'' என்று மகளைக் கடிந்து கொள்ளும் அளவிற்கு, ஒவ்வொன்றுக்கும் அடம் செய்து பார்த்தாள் அவள்.

ஒரு வழியாக மகளைக் கிளப்பிவிட்டு, தன்னைத் தயார் படுத்திக் கொள்ள எத்தனித்தாள். தனது துணிகள் இருந்த சிறு பெட்டியைத் திறந்தவளுக்கு, ''என்ன சேலை கட்டலாம்?'' என்று ஆழ்ந்த சிந்தனை ஓடியது. அதுவும் வாழ்க்கையில் முதன்முறையாக.

சிறு வயது முதல் கல்யாணம் வரையிலும், ஜானகியின் கையிருப்பாய் இருந்தது இரண்டு அல்லது மிஞ்சிப்

போனால் நான்கு செட் உடைகள் தான். அதிகம் கிழிசல் இல்லாததாய் பார்த்து எடுத்து அணிவதே அங்கே பிரம்மப் பிரயத்தனம்! அதில் எங்கே நிறத்தையும்... வேலைப்பாட்டையும் பார்த்து தேர்ந்தெடுப்பது!

கல்யாணத்திற்கு பின்னரோ, மாட்டோடு மாடாக இருந்தவளுக்கு குளிப்பதற்குக் கூட நேரம் இருந்ததில்லை!

மும்பை வந்தபின்னர், வருடம் நான்கு சேலைகள் என்ற கணக்கில் ஸ்ரீராமன் அவளுக்கு வாங்கித் தருவான் தான். ஆனால், யார் பார்த்து ரசிக்கக் கட்டுவது?! கொண்டவன் கண் கொண்டு பாராத அழகை, வெளியுலகப் பகட்டிற்காக பறைசாற்ற அந்த ஏழைப் பெண்ணுக்கு மனம் வரவில்லை!

கோடைக் காலத்தில் பெய்யும் மழையைப் போல் கணவனுடன் வெளியே செல்லும் வேளைகளில் கூட, அவனது கவனம் அவளது உடையிலோ அழகிலே படிந்து அவள் பார்த்ததே இல்லை!

கடமை கணவனாய் மேடு... பள்ளம் பார்த்து நடக்கச் சொல்பவன், அவளது மேனியின் வளைவுகளில் தன் மன்மத ரசம் வழுக்கிக் கொண்டு ஓடுவதை அனுமதித்ததே இல்லை!

மற்றோர் பெண்ணை மனதில் வைத்துக் கொண்டு அவளைத் தொட்ட கணவனிடம், ஜானகியும் பெரிதாய் எதிர்பார்த்ததில்லை! ஏழைக்கும் எதிர்பார்ப்பிற்கும் சூரியனுக்கும் சந்திரனுக்குமான இடைவெளி அல்லவா!



ஆனால், இன்றோ ஜானகியின் மனம் பதினாறு வயது பாவையின் மனநிலையில் அல்லவோ இருந்தது! நேற்றிரவு முதல் நல்ல விதமாய் நிகழத் தொடங்கியிருந்த மாற்றங்கள் செய்த கோலத்தினால், அப்பெண் பாவையின் மனம் பட்டாம்பூச்சியாய் சிறகடித்தது!

அவளது தேர்விற்காக, பெட்டியிலிருந்த எட்டு புடவைகளும் ஆவலாய் காத்திருந்தன! காலையில் ஸ்ரீராமனின் அணைப்பிற்காக ஜானகி காத்திருந்தது போல்!

தங்களுக்குள் நடந்த கடும் போட்டியின் பின்னர், இள நீல வண்ணப் புடவை வெற்றி வாகை சூடி, ஜானகியின் மேனி எனும் சிம்மாசனத்தில் தங்கக் கிரீடமாய் அலங்கரித்தது.

சேலையைப் பின் செய்து பழக்கமில்லாததால், அழகான மடிப்புகளை அழுத்தமாய் எடுத்து விட்டு அவள் திரும்பியபோது, அவளது செல்வச் சீமாட்டி இடுப்பில் கை வைத்துக் கொண்டு முறைத்தபடி நின்றிருந்தாள்.

அவள் நின்ற தோரணையில் சிரித்தவாறே, "என்னடா..." என ஜானகி கேட்க,

"இந்த வைட் கிளிப் நல்லாவே இல்ல... ப்ளூ கிளிப் போடும்மா..." என்று சண்டைக்கு நின்றது கன்று.

"மேல் சட்டை வெள்ளைக் கலர்ல தானே கண்ணு இருக்கு... அதாண்டா அழகா இருக்கும்..." என்றவாறே, பெண்ணின் கையில் படாதபாடு பட்டுக் கொண்டிருந்த கிளிப்பை சரியாக மாட்ட முயன்றாள் ஜானகி.

''ஐயோ... டீ-ஷர்ட்ல மிக்கி தானே இக்கு... ஆனா... இந்த கிளிப்ல பட்டர்ஃப்ளை இக்கு... மாட்சே இல்ல... மாத்து மா...'' - அழுத்தமாய் மறுத்தாள் பெண்.

''ஹப்பப்பா! இந்த வயசிலேயே என்ன ஒரு அழுத்தம்... அதிகாரம்...'' என்று சலித்துக் கொண்ட ஜானகி பெண்ணின் அலங்கார கிளிப்கள் இருந்த டப்பாவை எடுத்து ஆராய்ந்தாள்.

ஒருவாறாக, அடர் நீல நிறத்தில் ஓர் கிளிப்பை ஸ்ரீஷா முடிவு செய்தபோது, அதனருகே இருந்த இள நீல நிறக் கிளிப்பின் மீது ஜானகிக்கு ஆசை வந்தது.

ஐந்து இதழ் கொண்ட இரண்டு பூக்களும், அதே மாதிரியான ஹேர் பேண்ட்டும் கொண்ட செட் அது!

தன் சேலைக்கு ஏற்றாற் போலிருக்குமே என்ற எண்ணம் தோன்ற, ''அம்முக்குட்டி... அம்மா இதைப் போட்டுக்கட்டுமாடா...'' என்று மகளிடம் அனுமதி கேட்டாள் தாய். மகளே என்றாலும் அவளது பொருளை அனுமதியின்று எடுப்பது தப்பென்று எண்ணியது அந்தத் தூய உள்ளம்!!

''கிளிப்பா?? நீயாமா??'' என்று ஏகமாய் ஆச்சரியப் பட்டது கன்று! பின்னே, இது நாள் வரை நேர் வகு டெடுத்து சீவிய பின்னலின் அடியில் சிறு ரப்பர் பேண்ட் மாட்டியதில்லை ஜானகி! அவளது அதிகபட்ச அலங் காரப் பொருள் சீப்பு மட்டும் தான்! கண்ணாடி கூட பார்க்கமாட்டாள்.

சின்னக் குழந்தை தான் என்றாலும், தினமும் தாயின் செயல்பாடுகளைப் பார்த்துப் பழகிய ஸ்ரீஷாவிற்கு இன்று அதிசயமாய் இருந்தது!



தானாய் சென்று எதையாவது தாயின் தலையில் மாட்டினாலும், ''அம்மாக்கு இதெல்லாம் வேண்டாம்டா கண்ணு... நீ தான் சின்னப் பொண்ணு... உனக்குத் தான் அப்பா வாங்கிட்டு வந்திருக்காங்க... நீயே போட் டுக்கோ!'' என்று கன்னம் வழித்துக் கொஞ்சம் தாயையே பார்த்தவள், இப்போது வியப்பில் தவறேதும் இல் லையே!

பெண்ணின் கேள்வியில் வெட்கம் சூழ்ந்து விட, ஜானகி சிறு சங்கோஜத்துடன் நின்றிருக்க,

''ஹையோ அம்மாவும் கிளிப் போட்டுக்கப் போதாவே!'' என்று குதித்து, தாயின் மனநிலையை குளிர வைத்தாள் சிறுமி.

அத்தோடு நில்லாமல் ''இது போட்டுக்கோமா... இது... அந்த வைட்... இது வேணாவா...'' என்று தன்னிட மிருந்த எல்லா கிளிப்களையும் அம்மாவிற்கு எடுத்துக் காட்டி மகிழ்ந்தாள், ஸ்ரீஷா!

ஒருவாறாய் பெண்ணும் தாயும் அவர்களது அலங் காரத்தையே முடித்தபோது, மணி நாலை நெருங்கி யிருந்தது.

கிளம்புவதற்கு முன்னர், பெண்ணின் வயிற்றுக்கு ஏதாவது ஈய எண்ணி, அடுப்பின் பக்கம் ஜானகி நகர்ந்த சமயம் தொலைப்பேசி அடித்தது.

''ஹையா ஹலோ அடிக்குது... ஹலோ... ஹலோ...'' என்று ஸ்ரீஷா துள்ளிக் கொண்டு ஓட, அவளது ஓட்டத் திற்கு ஈடு கொடுத்து ஜானகியும் ஓடினாள்.

''நா தா... நா தா...'' என்று கத்திக்கொண்டே, தொலைப்பேசியை எடுத்து ஸ்ரீஷா ''ப்பா... ப்பா

பேசுதாங்க...'' என்று மிளற்ற, ஜானகி சிரிப்புடன் அங்கிருந்து நகர்ந்தாள்.

ஸ்ரீஷா பேச ஆரம்பித்ததிலிருந்து இது வழக்கமே! அவளை விட்டுப் பிரிந்திருக்கும் பத்து மணி நேரத்தைக் கூடத் தாங்க முடியாதவன் போல, தினம் ஒரு முறையேனும் வீட்டிற்கு அழைத்து, பெண்ணின் மழலை மிளற்றலை ரசித்து விடுவான் ஜானகியின் மணாளன்!

நேற்றைய தினம் போல், தொலைப்பேசி சதி செய்யும் நேரங்களில் வீட்டில் ஸ்ரீஷா தொலைப்பேசியை எடுத்து எடுத்துப் பார்த்துக் கொண்டிருக்க, அலுவலகத்தில் ஸ்ரீராமன் என்ன செய்வான் என்று ஜானகி யோசித்ததுண்டு.

யோசனையின் விளைவாய், என்ன செய்வான்... தன்னைத் திட்டுவது போல் தொலைப்பேசி நிறுவனத்தினரை வைவானோ? இல்லை அவர்களிடம் முகத்தை நீட்டுவானோ? என்று மண்டையை உடைத்துக் கொண்டதுமுண்டு!

கணவனைப் பற்றி ஏதும் அறிந்துகொள்ளாத பேதை மனம் கண்டதையும் என்ன வைத்தது! என்ன செய்வது!?

தந்தையும் மகளும் உரையாடும் நேரத்தில், இருவருக்குமே ஜானகி ஓர் வேற்று கிரகத்து மனுஷி! மருந்துக்குக் கூட, அவளை ஆட்டத்தில் சேர்த்துக் கொள்ள மாட்டார்கள்! அவர்களது பேச்சில் இணைந்து கொள்ள வேண்டும் என்ற ஏக்கத்தை, தூரமாய் நின்று மகளின் மழலையை ரசிப்பதில் தீர்த்துக் கொள்வாள் அவள்!

அதே போல் இன்றும், மகளைக் கணவனுடன் பேச விட்டு, அடுக்களைக்குள் அவள் நுழைய, சரியாக ஐந்து



நிமிடத்தில் ''ம்மா... அப்பா கூப்புடுதாங்க.. வா...' என்று கூவினாள், மகள்.

மதியம் அவன் பேசிய தொலைப்பேசி அழைப்பின் இன்ப அதிர்ச்சியையே நெஞ்சினுள் மீட்டுக் கொண்டிருந்தவளுக்கு, இப்போதைய அழைப்பு தேனமுதாய் தித்தித்தது!

இரண்டே வினாடிகளில் தொலைப்பேசியை அவள் காதிற்கு இட்டிருக்க, ''அத்தான்...'' என்ற அவளது அழைப்பு, மறுமுனையிலிருந்தவனுக்கும் தேனமுதாய் தான் தெரிந்தது!

அதற்குள், ''நானு... நானு...'' என்று ஸ்ரீஷா கைகளை உயர்த்திக் கொண்டு, தன்னைத் தூக்கச் சொல்ல, மகளை இடுப்பில் ஏந்திக் கொள்ள குனிந்த ஜானகியின் காதுகளில் அவனது ''ஜானு...'' என்ற அழைப்பு விழாது போனது!

அவளது ''அத்தான்'' என்ற அழைப்பில் இருந்த ஆசையும், ஆர்வமும், ஆவலும் அவனுள் எதையோ அசைத்துப் பார்க்க, தன்னையும் மீறி ''ஜானு...'' என்று விட்ட ஸ்ரீராமன், லேசாய் சிரித்துக் கொண்டான்.

''என்னத்தான் சொன்னீங்க...'' என்று ஜானகி மீண்டும் பேசியதும் தான், அவனது சிரிப்பும் அதன் பின்னே மறைந்திருந்த வெட்கமும் விடை பெற்றன!

''ஒண்ணுமில்ல... பீச்ல சாப்பிடுறதுக்கு ஏதாவது செஞ்சு எடுத்திட்டு வரியான்னு கேட்டேன்'' என்றான் அவன்.

''செஞ்சு எடுத்திட்டு வரவா?? இப்போவா?? - ஜானகி திகைத்தே போனாள்! கிளம்புவதற்கு இன்னும்

இருபது நிமிடங்களே இருக்கும் நிலையில் என்ன செய்வது என்று மனம் வேகமாய் யோசித்தது!

''என்ன பதிலையே காணோம்?!'' - ஸ்ரீராமன் மீண்டும் கேட்க,

''இல்ல அத்தான்... இன்னும் கால் மணி நேரம் தான் இருக்கு... அதுக்குள்ளே என்ன செய்றதுன்னு யோசிச்சிட்டு இருந்தேன். சேமியா கிச்சடி பண்ணி எடுத்திட்டு வரட்டுமா?'' என்றாள் ஜானகி பதிலாக.

''நானும் அதான் யோசிச்சேன்... ஆனா... உனக்கு அங்க பானிப்பூரி சாப்பிடக் கஷ்டமா இருக்குமேன்னு தான் செஞ்சு எடுத்திட்டு வரியான்னு கேட்டேன். வேற சாட் ஐட்டமும் நீ விரும்பி சாப்பிட்டு நான் பார்த்ததில்லை... அதான்...'' என அவன் இழுக்க, இங்கே மனைவிக்கோ இனித்தது!

''தனக்காய் பார்த்திருக்கிறான்'' என்ற எண்ணமே மனசை லேசாக்க, ''பாப்பாக்கும் உங்களுக்கு அங்க விக்கிற சின்னப் பூரி தானே அத்தான் ரொம்பப் பிடிக்கும்... அதையே சாப்பிடலாம்... என்னைக்கோ வெளியே போறோம்... அன்னைக்கும் வீட்டில செஞ்ச சாப்பாடுன்னா உங்களுக்கும் சலிச்சுப் போகும் அத்தான். எனக்காக பார்க்காதீங்க'' என்று வழக்கத்துக்கு மாறாய் நீளமாய் பேசி முடித்தாள், ஜானகி.

அதற்குள், ஸ்ரீஷாவும் ''ப்பா... ப்பா... பூரி சாப்புடுவோம்... குட்டி குட்டி பூரி'' என்று கைகளில் சின்ன வட்ட பூரிகளை இட்டுக் காண்பித்தாள்.

அவளது ஆரவாரத்தில் சிரித்த ஸ்ரீராமன், ''அங்கேயும் சாப்பிடலாம்... நீயும் ஏதாவது செஞ்சு எடுத்திட்டு வா...



சேமியா கிச்சடியே பண்ணு!'' என்றான் சிரிப்பின் முடிவில், சிநேகத்தின் ஆரம்பமாய்!

சிரித்த முகம் இனித்த மனதிற்கு அடையாளமாய் அமைய, ''ம்ம்! சரி அத்தான்! வச்சிடட்டுமா?'' என்றாள் ஜானகி, இனிய குரலில்.

உடனேயே, ''வச்சிடட்டுமா?'' என்ற தனது கேள்வி அவனை வருத்திவிடக் கூடாதே என்ற பதட்டம் சூழ்ந்து கொள்ள, ''நாலரை மணிக்கு வீட்டை விட்டுக் கிளம்பினா தான் சரியா இருக்குமில்லையா? அதான் வைக்கவான்னு கேட்டேன்'' என்றாள் பதட்டத்துடன்.

''ம்ம். புரிஞ்சது!'' என்றவன், ''சரி... சரி... லேட் ஆகிட்டே இருக்கு... சீக்கிரமா சமையலை முடிச்சிட்டு கிளம்பி வாங்க! நானும் கரெக்ட்டா வந்துடுறேன்!'' என்றான்.

''சரி அத்தான்...'' என அவள் வைக்க எத்தனிக்க,

''ஏய், ஒரு முக்கியமான விஷயம்!'' எனக் கூறி சிறு இடைவெளி விட்டவன், ''உன்னோட சமையல் ஒண்ணும் சலிச்சு போற அளவுக்கு மோசமில்லை!'' என்ற கூற்றோடு, தொலைப்பேசி இணைப்பைத் துண்டித்து விட்டான்.

வெடித்துக் கிடந்த பூமியில் வெள்ளிச் சதங்கையாய் மழை பெய்தது போலிருந்தது ஜானகியின் மனது!

திளைத்த நெஞ்சத்தை திண்ணமாய் அடக்கி, ''அம்முக்குட்டி... அம்மா பால் ஆத்தித் தர்றேன். சமத்தா குடிச்சிடணும் சரிய? அம்மா வேகமா சேமியா கிச்சடி பண்ணிடுறேன்...'' என மகளிடம் கூறி, சமையலில் இறங்கினாள்.

கைகள் ஒரு புறம் காயை அரிந்து கொண்டிருக்க, மனமோ ''பானிப் பூரி''யை சுற்றி வந்தது!

முன் ஒரு தரம் கடற்கரையில் அமர்ந்திருந்துவிட்டு திரும்பி நடந்தபோது, ''குட்டிம்மா... பானிப் பூரி சாப்பிடுவோமா?'' என்றான் ஸ்ரீராமன்.

''ஹோ...'' என மகள் மண்டையை உருட்டியதும், அருகிலிருந்த தள்ளுவண்டி கடைக்கு இட்டுச் சென்றவன்,

''தீன் ப்ளேட் பானிப் பூரி!'' என்றுவிட்டு, மகளுடன் பேச ஆரம்பித்துவிட்டான். ஒப்புக்கு கூட மனைவியிடம் ''வேண்டுமா?'' என்று ஒரு வார்த்தை கேட்கவில்லை.

அந்தக் கடைக்காரன், மூன்று சிறு தட்டுகளில் ஒரு சின்ன பூரியில் கொஞ்சம் உருளைக் கிழங்கு மசாலை நிரப்பி, தண்ணீருக்குள் முக்கிக் கொடுக்க, முதல் பிளேட்டை கையில் எடுத்துக் கொண்டவன், மகளுக்கு அதைப் புகட்ட முற்பட்ட வாறே மனைவியிடம் ''எடுத்துக்கோ'' என்றான்.

''குட்டிம்மா... வாயைத் திறங்க... அப்பா கொஞ்சம் பூரியும் கிழங்கும் வைக்கிறேன்... அப்புறமா கொஞ்சூண்டு தண்ணீ ஊத்துறேன்... ரெண்டையும் சேர்த்து சாப்பிடணும்...'' என்று மகளுக்கு அவன் அறிவுறுத்த, பெண்ணும் ஆர்வமாய் வாய் திறந்து காத்திருந்தாள்.

சொன்னது போலவே அவன் செய்ய, ''சூப்பர்!'' என்று பெண்ணரசி நாக்கை மடக்கி, சப்புக் கொட்டியது ஜானகிக்கு இன்னும் நினைவில் இருக்கிறது!



கையிலிருந்த பானிப் பூரியை எப்படி உண்பது என்று தெரியாமல், கணவன் மகளுக்குப் புகட்டிய விதத்திலேயே அதை உண்ண முற்பட்டதும் கூடவே நினைவில் வந்தது!

அது மட்டுமா? ''பட்டிக்காடு... பட்டிக்காடு... குழந்தைக்கு சாப்பிடத் தெரியாதேன்னு கொஞ்சம் கொஞ்சமா கொடுத்தேன். நீயும் அப்படியா சாப்பிடுவே?!'' என்று கணவன் எரிந்து விழுந்ததும்!

கூடவே, ஒரு முழு பூரியை வாய்க்குள் இட்டவன், அதை வாயில் வைத்துக் கொண்டே ''இப்படி சாப்பிடு...'' என்று பாடம் நடத்தியதும்!

ஆனால், அவன் சொன்னது போல் சாப்பிட முற்பட்ட ஜானகி, பூரிக்குள் இருந்த 'பானி' முழுவதையும் சேலையில் சிந்திவிட, அதற்கும் ''பட்டிக்காடு... பட்டிக்காடு!'' என்று முணுமுணுத்தான் அந்த மும்பைக்காரன்!

அந்த சம்பவத்திற்கு பிறகு, கடற்கரைக்குச் செல்லும் போது பானிப் பூரி கடைக்குச் செல்வார்கள் தான்... ஆனால் ''மூன்று ப்ளேட் பானிப் பூரி!'' - ''இரண்டு ப்ளேட் பானிப் பூரி!''யாக மாறிப் போயிருந்தது!

அவனிடம் ''பட்டிக்காடு'' என்று திட்டு வாங்குவதை விட, பானிப் பூரியின் சுவை ஒன்றும் பிரமாதமாய் இல்லாததால் ஜானகியும் நிம்மதியாகவே இருந்தாள்!

திட்டுக்குக் காரணமான அதே பானிப்பூரி இப்போது கரிசனத்துக்கும் அன்றோ காரணமாகிப் போனது! என்ன விந்தை இது! என்று மனம் கணக்கு போட்டு

முடித்தபோது, கைகள் கிச்சடியை டப்பாவில் அடைத்திருந்தது!

சிறு பாட்டில் ஒன்றில் தண்ணீர், குழந்தைக்கு ஓர் மாற்றுடை, சிறு பிஸ்கட் பாக்கெட் ஒன்று, விரித்து அமர ஓர் பெரிய சைஸ் டவல், கிச்சடி டப்பா, இரண்டு ஸ்பூன்கள், கை துடைக்க சின்னத் துண்டு என்று ஓர் பையை தயார்படுத்தியவள், பிள்ளையைக் கூட்டிக் கொண்டு வீட்டை விட்டு வெளியேறினாள்.

ஒருமுறைக்கு இருமுறையாக கதவின் பூட்டை சரி பார்த்துவிட்டு, மாடிப்படி நோக்கி அவள் நகர, ஸ்ரீஷாவோ ''அம்மா... லிஃப்ட்ல போவாம்...'' என்று எதிர்திசை நோக்கி ஓடினாள்.

ஜானகிக்கு மின்தூக்கி என்றாலே ஏக பயம்! ஏனென்றால், அவர்கள் வளாகத்தில் இருந்த மின்தூக்கியின் உள்ளிருந்து ஓர் பெண் எப்போதும் பேசிக் கொண்டே இருப்பாள்!

''தயவு செய்து கதவை மூடவும்'' - இது தான் அவள் பேசுவது! ஆனால், பேசும் மொழியோ தூய ஆங்கிலம் தொடர்ந்து தூய ஹிந்தி! என்ன சொல்கிறாள் என்றே தெரியாமல், ஜானகிக்கு அதற்குள் காலை வைக்கவே பயமாய் இருக்கும்! அதனால், என்ன அவசரம் என்றாலும் படி தான்... நடராஜா சர்வீஸ் தான்! இதற்கும், ஸ்ரீராமனிடமிருந்து ''பட்டிக்காடு! மண்ணாந்தை! ஊர் நாட்டான்!'' என்ற ஏகப்பட்ட வசவுகள் பரிசாய் குவிந்த போதும், ஜானகிக்கு லிஃப்ட் என்றால் ஒரு நடுக்கம் தான்!



தாயின் நடுக்கத்தை பற்றி மகளுக்கு என்ன கவலை! என்றும் போல் இன்றும் ''லிஃப்ட்! லிஃப்ட்!'' என்று துள்ளிக் குதித்துக் கொண்டிருந்தாள் ஸ்ரீஷா!

''கண்ணு பாப்பா... சமத்து தானே! லிப்ட் வேணாம்டா... படில போலாம்டா...'' என்று மண்டியிட்டுக் கெஞ்சாத குறையாக அவள் மன்றாட, பெண்ணோ ''ம்ஹூம்... நடக்க மாட்டேன்! லிஃப்ட்லதான் போவணும்!'' என்றாள், தீர்மானமாய்.

பெண் விடமாட்டாள் என்று தோன்றிவிட்டபோதும், ஜானகியால் மின்தூக்கியின் மீதிருந்த பயத்தை மின்னல் வேகத்தில் தூக்கிப் போட முடியவில்லை.

வேறுவழியாய் ''அம்முக்குட்டி, பாப்பாவை அம்மா தூக்கிக்கிறேன்டா... பாப்பா நடக்கவே வேண்டாம்... அம்மா மட்டும் நடக்கிறேன்! படியிலேயே போலாம்டா'' என்றாள் தன் பக்க விவாதமாய்.

''ம்ம்... ம்ம்ம்...'' என்று பெண் இழுத்ததிலேயே, அவள் அரை மனதாய் ஒத்துக்கொள்வது புரிய, விருட்டென அவளை அள்ளிக் கொண்டு படியிறங்கினாள், ஜானகி.

பாதி தானாய் நடந்தும், மீதி அம்மாவைத் தூக்கச் சொல்லியும் ஒருவழியாய் ரயில் நிலையத்தை அடைந்தனர், மகளும் தாயும்!

கணவன் சொல்லிக் கொடுத்தபடியாக, பயணச்சீட்டு வாங்கி ரயிலில் ஏறி அமர்ந்தது வரை எந்தவித அசம்பாவிதமும் நடந்தேறவில்லை! ரயில் அந்தேரி ரயில் நிலையத்தை அடைந்து, ஜானகியும் ஸ்ரீஷாவும் கீழே இறங்கும் வரையிலும் கூட எந்தப் பிரச்சனையுமில்லை!

## மணி மாலை 5:00

''டேய் கோகுல்! நான் கிளம்புறேன்டா! பை!'' - கையில் லேப்டாப் பை, டப்பர்வேர் பை சகிதமாய் கோகுலின் கேபின் முன்னே நின்றிருந்தான் ஸ்ரீராமன்.

''ஹே என்னடா இவ்வளவு சீக்கியரம்?'' - சில பேப்பர்களை சரி பார்த்துக் கொண்டிருந்த கோகுல், வேலையிலிருந்து தலையை நிமிர்த்திக் கேட்க,

''இன்னைக்கு நாங்க பீச்சுக்குப் போறாம்டா... ஸ்ரீ குட்டியும் ஜானகியும் அந்தேரில வெயிட் பண்ணிட்டு இருப்பாங்க... போகணும்!'' என்றான் ஸ்ரீராமன்.

''ஹோ... ஹோ... ஒரு பத்து நிமிஷம் வெயிட் பண்ண முடியுமாடா?'' என்றான் கோகுல் கெஞ்சுதலாக.

''ஏன்டா? நீயும் அந்தப் பக்கமா வரப் போறாயா? ஆனா... எனக்கு லேட் ஆகுதே... அவங்க ரெண்டு பேரும் இந்நேரம் கிளம்பி இருப்பாங்களே!'' - கேள்வியும் குழப்பமுமாய் ஸ்ரீராமன் நிற்க,

''இந்த டாகுமென்ட்ஸ் மட்டும் கொஞ்சம் சரி பார்த்துக் கொடுத்திட்டுப் போயேன்... ப்ளீஸ்...'' என்ற கோகுல், ஸ்ரீராமின் முகம் மறுப்பைக் காட்டவும்

''இந்த கிளையன்ட் மீட்டிங்ல மட்டும் ஏதாவது சொதப்பினா... என்னை பீஸ் பீஸா ஆக்கிடுவாங்கடா... ப்ளீஸ்டா... ப்ளீஸ்டா...'' என்றான் மேலும் கெஞ்சலாக.



''நீ ஒரு வாட்டி இதை ரெவ்வியூவ் பண்ணிட்டேன்னா எனக்கு கொஞ்சம் நிம்மதியா இருக்கும்டா... ஸ்ரீ ப்ளீஸ்!'' - கிட்டத்தட்ட காலில் விழாத குறை.

அதற்கு மேல் ஸ்ரீராமனால் நண்பனை அம்போ என விட்டுச் செல்ல முடியவில்லை. ''சரி குடு!'' என்று அரை மனதாய் உள்ளே நுழைந்தான்.

''தேங்க்ஸ்டா ஸ்ரீ! கிளையன்ட் மீட்டிங் கூட தாதர் பக்கத்தில தான்டா... நான் போகும்போது உன்னை ஸ்டேஷன்ல விட்டுப் போறேன்...'' என்று சந்தோசம் பொங்கச் சொல்லிய கோகுல், கோப்புகளை எடுத்து ஸ்ரீராமனிடம் கொடுத்தான்.

வேகமாய் அவற்றை ஆராய்ந்தபோதும், ஏனோ தானோ என்று எந்த வேலையையும் செய்து பழக்க மற்றவன் என்பதால் கவனமாகவே ஆராய்ந்தான் ஸ்ரீராமன்.

அவற்றில் விடுபட்டிருந்த சில தகவல்களை நண்பனிடம் சுட்டிக் காட்டியவன், வேகமாய் அதை சேகரிக்கவும் உதவினான்.

இரண்டு பேராய் செய்ததால், வேலை வேகமாய் முடிந்தபோதும், அரை மணி நேரம் மின்னல் வேகத்தில் பறந்திருந்தது!

''சரி கோகுல்! லேட் ஆகிடுச்சு! நான் கிளம்புறேன்!'' என்றான் ஸ்ரீராமன் எழ,

''ஹே இரு இரு! இதை பாஸ்கிட்ட ஒரு வாட்டி காட்டிட்டு... கிளம்ப வேண்டியது தான்! ஜஸ்ட் அ ஃபார்மாலிட்டி! கம்பெனி கார்க்கு போன் பண்ணிட்டேன்... கீழே வெயிட் பண்ணுவான்... வந்ததும் கிளம்பிடலாம்! ஜஸ்ட் 5 மினிட்ஸ்'' என்று கோகுல் விரைய,

''இவனோட!'' என்று தலையில் அடித்துக் கொள்வது தவிர ஸ்ரீராமனால் எதுவும் செய்ய முடியவில்லை.

ஐந்து நிமிடம் என்பது பதினைந்து நிமிடங்கள் ஆன வேளையில் ஸ்ரீராமனின் பொறுமை பறந்தது! இன்னும் அரை மணி நேரத்தில் அந்தேரி ரயில் நிலையத்தில் வந்திறங்கும் பெண்ணையும் மனைவியையும் பற்றியே சிந்தனை ஓடிக் கொண்டிருந்தது!

''சை... இவனை நம்பினால் நட்டாத்தில் நிற்க வேண்டியது தான்! காரியம் ஆனதும் கழட்டி விட்டுட்டான்!'' என்று நண்பனை சபித்தவாறே, அலுவலகத்தை விட்டு வெளியே வந்தான்.

ஓட்டமும் நடையுமாக நரிமன் பாயிண்ட் ரயில் நிலையம் நோக்கி அவன் விரைய, ''ஸ்ரீராம்... ஸ்ரீராம்... சாரிடா... வா வா... வண்டில ஏறு!'' என்ற குரல் அருகில் வந்து நின்ற காரிலிருந்து கேட்டது.

''உன்னோட சாரியைக் கொண்டுபோய் குப்பைல போடு. நான் ட்ரைன்லேயே போய்க்கிறேன்...'' - எரிச்சலும் கோபமும் நிரம்பிய குரலில் மொழிந்துவிட்டு, ஸ்ரீராமன் வேகமாய் நடக்க, வண்டியிலிருந்து இறங்கிய கோகுல், அவன் கை பிடித்து வண்டியினுள் ஏற்றினான்.

''கோச்சுக்காதே மச்சான். என்னைக்குமில்லாத திருநாளா இன்னைக்குன்னு பார்த்து... அந்த வானலி மண்டையனுக்கு ஆயிரத்தெட்டு கேள்வி கேட்கத் தோணுது... நான் என்ன செய்யட்டும்...''

''அவன் மண்டையைக் குடைய ஜல்லிக்கரண்டியும்... பணியாரக் கரண்டியும் செய்யு... போடாங்க!''



''ஓகே. ஓகே. கூல் டௌன்!''

''என்னத்த கூல் டௌன்!? ஏற்கனவே அரை மணி நேரம் லேட் ஆகிடுச்சு... அங்க பாப்பாவை ஓரிடத்தில பிடிச்சு வைக்க முடியாம ஜானகி கிடந்து திண்டாடிட்டு இருப்பா... சை...'' - ஸ்ரீராமின் கோபம் குறைவதாய் இல்லை.

''ஆனாலும் இன்னைக்கு உன் பொண்டாட்டி மேல உனக்கு ஏகப் பாசமா இருக்கேடா மச்சான்?! சூனியம் கீனியம் வச்சுட்டானுங்களா?'' - கோகுல் சீண்ட,

''ஏன்? ஏன்? நா என் பொண்டாட்டி மேல பாசமா இருந்த உனக்கு ஏன்டா எரியுது? தேவையில்லாம என் வாயைக் கிளறாத கோகுல்!'' - ஸ்ரீராமன் கடுமையாய் எச்சரித்தான்.

''ஹே... எதுக்குடா இவ்வளவு கோபம்? இத்தனை வருஷத்தில ஒரு தடவை கூட... நீ உன் வைஃப் பத்தி பேசினதே இல்லை! இன்னைக்கு என்னடான்னா செயின் என்ன? அவங்க மேல கரிசனம் என்ன?'' - சமாதானம் என்ற பெயரில் மேலும் ஸ்ரீராமனை வம்பிற்கு இழுத்தான் அவன்.

''இதுநாள் வரை பேசினது இல்லைன்னா... வாழ்நாள் முழுக்க பேசக் கூடாதுன்னு ஏதாவது சட்டமா? நீ கூட தான்... உன் வைஃப் கூட சண்டை போடற நாளில அவளை டைவர்ஸ் பண்ணப் போறவன் மாதிரி பேசுவே?! அடுத்த நாளே அவளுக்குப் புடவையும் பூவும் வாங்கிட்டுப் போறதில்லை?! அது மாதிரி தான் இதுவும்!'' - ஏகத்திற்கும் கோபம் வர, சரமாரியாய் நண்பனிடம் பொரிந்து விட்டான் ஸ்ரீராம்.

கோகுலுக்கும் கோபம் ஏறியது! ''உன்னையும் என்னையும் கம்பேர் பண்ணுதுங்கிறது சுத்த ஹம்பக்! நா காதலிச்ச பொண்ணையே கல்யாணம் பண்ணிக் கிட்டவள்... நீ காதலிச்ச பொண்ணை உதறிட்டு வேற ஒருத்தியை கட்டினவன்!'' - சூடாய் திருப்பிக் கொடுத் தான் அவனும். கூடவே கர்வமாயும்.

''ஹோ அப்படியா? பூஜாவை காதலிக்கிறதுக்கு முன்னாடி உன்னோட லிஸ்ட்ல இருந்த மினாதி... ஷாலினி... பூனம்... இவங்கெல்லாம் உனக்கு தங்கச்சியா இருந்தாங்களோ? தேவையில்லாம என் வாயைக் கிளறினா, உனக்குத் தான் சேறும் சகதியும் பரிசா கிடைக்கும்!'' - நக்கலாய் வெளிவந்தன ஸ்ரீராமின் வார்த் தைகள்.

''ஸ்ரீராம்! திஸ் இஸ் தி லிமிட்!'' - கோகுல் கை உயர்த்திக் கண்டிக்க.

''சும்மா நிறுத்துடா! நா ஜானகியைக் கல்யாணம் பண்ணிக்கிட்டது ஓர் இக்கட்டான நிர்பந்தத்தில! ஆனா, அந்தக் கல்யாணத்திற்குப் பிறகு... இன்னொரு பொண்ணை வேற மாதிரி எண்ணத்தோட பார்த்தது கூட கிடையாது! ஆனா... நீ... பூஜா கூட நிக்கும் போதே எத்தனை பேரை சைட் அடிக்கிறேன்னு எனக்குத் தெரி யும்!'' - கோகுல் திருப்பிப் பேச முடியாத அளவுக்குத் திருப்பிக் கொடுத்தான் ஸ்ரீராமன்.

காருக்குள் சற்று நேரம் அமைதி நிலவியது!

அதை முதலில் கிழித்தவன், ஸ்ரீராமன் தான்!

''சாரிடா கோகுல்! லேட் ஆகிடுச்சேங்கிற கடுப்பில ஏதேதோ பேசிட்டேன்! மன்னிச்சுடுடா!'' என அவன் தன்மையாய் பேசவும்,



''என் மேலையும் தப்பிருக்குடா... உன்னோட பர்சனல் லைஃப்ல நடந்த மாற்றங்கள் பத்தி நானும் அளவுக்கு அதிகமா கிண்டல் பண்ணியிருக்கக் கூடாது! சாரிடா!'' - கோகுலும் இறங்கி வந்தான்.

''சே! சே! நீ பேசினதை நானும் கேலியா எடுத்திட்டு இருந்திருக்கணும்... அதை விட்டுட்டு நானுமே நிறைய வார்த்தைகள் பேசிட்டேன்!'' என்ற ஸ்ரீராமின் குரலில் உண்மையான வருத்தம் இருந்தது. இப்படித் தானே ஜானகியையும் பல தடவை புண்படுத்தி இருக்கிறோம் என்ற எண்ணமும் கூடவே வந்தது!

''ஓகே! ஓகே! லீவ் இட்! இன்னைக்கு வெளியே போற மூடை கெடுத்துக்க வேண்டாம்! நல்லா என்ஜாய் பண்ணிட்டு வா!'' - நண்பனின் தோள் மீது கையிட்டு இயல்புக்கு மீட்டு வந்தான் கோகுல்.

''ஹ்ம்ம். தேங்க்ஸ்டா!'' என்றான் ஸ்ரீராம்.

சில நிமிடங்களில் ஏதோ உள்மனதை உந்த, ''இத்தனை வருஷக் காலமும், பிரச்சனையை என்னோட கோணத்தில இருந்து மட்டுமே பார்த்திட்டு இருந்துட் டேன்டா... ஜானகி என்ன நினைப்பா... அவ மனசில என்ன இருக்குன்னு தெரிஞ்சுக்காமலே இருந்துட்டேன். அதை இப்போ திருத்திக்கலாம்னு பார்க்கிறேன்'' என்றான் நண்பனிடம் தன் மனதைத் திறந்து காட்டி.

''நல்ல விஷயம்டா மச்சான்! கோபம் இருக்கிற இடத்தில தான் குணம் இருக்கும்ங்கிறதுக்கு நீ ஒரு நல்ல எக்சாம்பிள்டா... இது நாள் வரை கோபத்தைக் காட்டினே... இனி மேல் குணத்தைக் காட்டு... லைஃப் ரொம்ப நல்லா இருக்கும் மச்சான்! ஜானகி ரொம்ப

கொடுத்து வச்சவங்களா மாறிடுவாங்க!'' என்றான் கோகுலும் ஓர் நல்ல நண்பனாய்.

மீண்டும் உள்ளே அமைதி!

இப்போது அதைக் கிழித்தது கோகுல்!

''மச்சான். நான் ஒண்ணு சொன்னா தப்பா எடுத்துக்க மாட்டியே?'' - பீடிகையுடன் ஆரம்பித்தவன், ஸ்ரீராமின் பதிலை எதிர்பார்க்காது மேலே பேசினான்.

''உன்னோட கேரக்டர்க்கு தீபாலி ஒத்தே வர மாட்டாடா! என்னா, அவளும் உன்னை மாதிரி கேரக்டர் உடையவ தான்! சயின்ஸ்'ல மட்டுமில்ல வாழ்க்கையிலும் எதிர் திசைகள் தான்டா ஒண்ணோடு ஒண்ணு ஒத்துப்போகும்!'' என்றவன் சிறு இடைவெளிவிட்டு மீண்டும் தொடர்ந்தான்.

''நீ சொன்னதை வச்சு பார்த்தா... ஜானகி உன்னோட விலகலை சரியான கோணத்தில புரிஞ்சுகிட்டு இருக்காங்கன்னு தோணுது. அப்படியிருக்கவங்க, உனக்கு ஒரு நல்ல வாழ்க்கைத் துணையா இருப்பாங்கடா'' என்றான் முடிவாக.

நண்பன் பேசுவதைக் குறுக்கிடாமல் கேட்டிருந்த ஸ்ரீராமனுக்கு, அவனது கூற்றை மறுத்துப் பேச வாயெழவில்லை! உண்மையை அல்லவா பேசினான்!

சிறு தலையசைப்புடன் அதை ஆமோதித்தவன், மனதிற்குள் கடவுளுக்கு நன்றி கூறினான்! கூடவே, ''இனிமேலாவது வாழ்க்கை அதற்குரிய புரிதலோடும் அன்போடும் செல்ல வேண்டும்'' என்ற வேண்டுதலையும் முன் வைத்தான்!



அந்நேரம் கார் தாதர் ரயில் நிலையத்தருகே இருக்கும் பாலத்தைக் கடந்து கொண்டிருந்தது.

மாலை நேரத்தின் அதீத டிராபிக்கினால், வண்டிகள் நத்தைகளாய் ஊற, பத்தடி கடக்க பத்து நிமிடம் பிடித்தது. அது மட்டுமில்லாமல், கோகுல் செல்ல வேண்டிய இடம், ரயில் நிலையத்திற்குச் செல்வதற்கு முன்னிருக்கும் சிக்னலில் வலது பக்கம் அமைந்திருந்ததால், நடந்து செல்வதே உசிதம் என்று தீர்மானித்தான் ஸ்ரீராமன்.

''ஹே கோகுல்! நா இங்கேயே இறங்கிக்கிறேன்டா... கொஞ்சம் வேகமா நடந்தா ஆறே காலுக்கு வர வண்டியைப் பிடிச்சிடலாம்.. நீ கிளையன்ட் மீட் நல்லா பண்ணு... ஆல் தி பெஸ்ட்!'' என்றவாறே நண்பனிடம் விடை பெற்றான்.

வேகமாய் எட்டுக்களை எட்டு வைத்து அவன் விரைய, ரயில் நிலைய வாசலில் அவன் கால் வைப்பதற்கும் உள்ளிருந்து ஓர் குண்டு வெடிப்பதற்கும் சரியாக இருந்தது!

## மணி மாலை 6:20

அந்தேரி ரயில் நிலையத்தில் இறங்கி, கணவன் சொல்லிக் கொடுத்திருந்தபடி, அங்கே இருந்த புத்தகக் கடை ஒன்றின் அருகே சென்று நின்று கொண்டாள் ஜானகி. வந்திறங்கிய ரயிலுக்கு முதுகு காட்டி நின்றது அவளது தோற்றம்!

கணவன் வரும் திசை நோக்கி நின்றவளின் இடுப்பில் ஸ்ரீஷா சிம்மாசனமிட்டிருக்க, வலது தோளை சாமான்கள் அடங்கிய பை ஆக்கிரமித்திருந்தது.

''ம்மா... கீல நிக்குதேன்...'' என்ற சொல்லுக்கு ஏற்ப, இடுப்பை விட்டு இறங்கத் துடித்த பிள்ளையை இறங்கவிடாமல் செய்வதே பெரும் பிரம்மப் பிரயத் தனமாய் இருக்க, பை வேறு சறுக்கிக் கொண்டே இருந்தது.

''எக்காரணத்தைக் கொண்டும் பிள்ளையை கீழே விடக் கூடாது'' என்பது ஸ்ரீராமின் கட்டளை! எதை எப்படி மீறுவது!?

''அப்பா வரவரைக்கும் பேசாம இரு கண்ணு!''

''கீழே இறக்கிவிட்டா... நீ அங்கேயும் இங்கேயும் ஓடுவ, என்னால பிடிக்க முடியாது!''

''சொன்னாக் கேளு ராஜாத்தி! அப்பா பார்த்தா என்னைத் தான் வைவாங்க!'' - விதவிதமாய் மகளுக்கு எடுத்துச் சொல்லிக் கொண்டிருந்த ஜானகிக்கு உள் ளுணர்வு உறுத்த, லேசாய் பின்னால் திரும்பிப் பார்த் தான்.

அங்கே ஓர் நடுத்தர வயதுக்காரன், தாயையும் மக ளையும் வெறித்துப் பார்த்துக் கொண்டே நின்றிருந்தான். உள்ளுக்குள் ஓர் பயம் ஓடி மறைய, சட்டென பிள் ளையை அள்ளிக் கொண்டு சற்றே தள்ளியிருந்த பழரசக் கடை அருகே சென்றாள் ஜானகி.

அவனது வெறித்தப் பார்வை மட்டுமல்லாது, கறுத்த உடலும் அவர்களைப் பின்தொடர்ந்து அக்கடை அருகே வந்தது.



அந்நேரம் பார்த்து ஓர் ரயில் வந்து நிற்க, அதிலிருந்து இறங்கிய கூட்டம் அவ்வாடவனை முன்னே நகர்த்த, ஜானகியை நெருங்கி முன்னேறினான் அவன். மனதில் தோன்றிய பயம் முகத்தில் பரவிவிடாமல் காத்தபடி, ஜானகி அவனை விட்டு விலகுவதை எண்ணி, எதிர் புற நடைமேடை நோக்கித் தன்னையும் பிள்ளையையும் நகர்த்தினாள்.

தாயின் பயப்போராட்டங்களை உணர்ந்திராத ஸ்ரீஷாவோ, ''கீல... கீல...'' என்று ஜானகியின் இடுப்பி லிருந்து நழுவ முற்பட, மூன்றாம் மனிதன் மேலிருந்த கோபம் ஈன்றெடுத்த முத்தின் மேல் முழுதாய் திரும் பியது.

சுள்ளென்ற ஓர் அடியை பெண்ணின் முதுகில் இறக் கியவள், ''இப்போ அம்மா சொல்றதைக் கேட்கப் போறியா இல்லையா? ஒழுங்கா நான் சொல்ற பேச்சு கேட்கலைன்னா... அப்பா வந்ததும் இப்படியே ட்ரைன் ஏறி வீட்டுக்குப் போயிறலாம்... பீச்சும் வேணாம்... ஒரு மண்ணும் வேணாம்ன்னு சொல்லிடுவேன்... வர வர ரொம்ப அடம் பண்றே! நினைச்சதை சாதிக்கணுமா என்ன? வெளி எடத்துக்கு வரும்போது அம்மா பேச்சைக் கேட்டு நடந்தா என்ன?'' என்று சரமாரியாய் திட்டுக் களையும் வாரியிறைத்தாள்.

தாயின் அடியிலும் கோபத்திலும் ஸ்ரீஷா மிரண்டு போனாள்!

பாதி வரை இறங்கியிருந்த பிள்ளையை, முழு பலம் கொண்டு தூக்குவதற்காக ஜானகி குனிய,

வலது கையிலிருந்த பை முழுதாய் நழுவி கீழே விழ,

பெரும் குரலெடுத்து பிள்ளை அழ,

அப்போது வந்து நின்றிருந்த ரயிலின் ஓர் பெட்டி பெரும் சப்தத்துடன் வெடித்துச் சிதறியது!

வெடித்த பெட்டி - ஜானகி முன்னர் நின்றிருந்த (அதாவது அந்தப் புத்தகக் கடைக்கு எதிரே இருந்த பெட்டி) இடத்துக்கு எதிரே இருந்த பெட்டியாய் மாறிப் போனது. விதியின் கோலமோ!''

என்னவென்று யூகிப்பதற்கு முன்னர், பல அவலக் குரல்கள் காற்றைக் கிழித்துக் கொண்டு ரயில் நிலையத்தை நிரப்பின!

அடுத்ததாய் மற்றொரு பெட்டியினுள்ளிருந்தும் பெரும் சப்தம் எழும்ப, அந்த ரயில் நிலையமே மயானக் கோலம் பூண்டிருந்தது!

## மணி மாலை 6:25

நின்ற இடத்திலேயே சமைந்து நின்றான் ஸ்ரீராமன்! அவன் எடுத்து வைத்து வைத்திருந்த வேக எட்டுக்களால் அல்லாமல் உள்ளிருந்து கேட்ட அழு குரலால் உடம்பு மேலும் மேலும் தூக்கிப் போட்டது!

இரண்டே நிமிடம்... என் ஒரு நிமிடம் போதும்... ஒரு நிமிடம் முன்னதாய் அவன் வந்திருந்தான், அவனும் அந்த ரயில் பெட்டியினுள் இருந்திருப்பான்...

பெட்டியினுள் இருந்திருப்பான்... ஆனால்... உயிரோடு?!



போன ஜென்மத்திலோ இந்த ஜென்மத்திலோ... தெரிந்தோ தெரியாமலோ ஏதோ புண்ணியம் பண்ணியிருக்கிறானோ?! வினாடி கணக்கில் உயிர் மீட்டெடுக்கப் பட்டுள்ளதே!

அதிர்ஷ்டம்... அதிர்ஷ்டம்... என்று சொல்கிறார்கள்... அது இது தானோ?

ஆனால், ஸ்ரீராமனால் தனது அதிர்ஷ்டத்தை எண்ணி மகிழ முடியவில்லை! பலரின் உயிர் தன் கண் முன்னே போய்க் கொண்டிருப்பதைக் கண்டவனால்... அவர்களது அழுகையில் தன் அதிர்ஷ்டத்தை மெச்சிக் கொள்ள முடியவில்லை.

பலரது அவலங்களில் தனது சந்தோஷத்தைக் கொண்டாடுவது ஏதோ மனித மாமிசத்தை உண்பது போல், மிக கொடூரமாய் பட்டது.

தன்னால் முடிந்த உதவியைச் செய்யலாம் என்றெண்ணியவள், வேகமாய் உள்ளே ஓடினான்.

வெடித்துச் சிதறிய பெட்டியில் பயணம் செய்த பலரது உயிர்கள் தீக்கு இரையாகி இருக்க, மண்ணுலகத்தை விட்டுப் பிரிய மனமில்லாமல் தவித்துக் கொண்டிருந்தன மற்ற பெட்டியிலிருந்த சிற்சில உயிர்கள்.

பெட்டியின் இடிபாடுகளின் ஊடே சிக்கித் தவித்த அவர்களது கடைசி நேரப் போராட்டத்தை ஓர் முடிவுக்குக் கொண்டு வரும் போராட்டத்தில், ஸ்ரீராமனைப் போல் பலரும் ஈடு பட்டிருந்தனர்.

கம்பிகளும், தகடுகளும் சில்சில்லாய் தகர்ந்திருக்க, அதனுள் சிக்கியிருந்தவர்களை மீட்கிறேன் பேர்வழி

என்று மேலும் அவர்களைத் துன்புறுத்தி விடக் கூடாதே என்ற கவனத்துடன் செயல்பட்டதில், கடைசி மூச்சிற்காக போராடிக் கொண்டிருந்த உயிர்கள் மீட்கப் பட்டன.

ரயில் நிலையத்தின் வெளியே நின்றிருந்த ஆம்புலன்ஸ் வண்டிகளில் அவர்களை ஏற்றுவதும், சிறு காயம் பட்டிருந்தவர்களுக்கு அங்கேயே முதலுதவி செய்வதுமாய் பணிகள் வேகமாய் நடந்தேறின.

அவனைத் தமிழன் என்று அடையாளம் கண்டு கொண்ட ஒருவர், சார்... சார்... அங்க லேடீஸ் கம்பார்ட்மென்ட்ல என்னோட வைஃப் மாட்டிட்டு இருக்காங்க சார்... கொஞ்சம் உதவி பண்ணுங்க சார்...'' என்றார் மன்றாடலாக.

வினாடி தாமதிக்காமல் அவன் விரைய, அங்கே அவன் கண்ட அவக்கோலங்கள் வார்த்தைகள் எனும் புள்ளியில் அடங்காது.

அழகு பிம்பங்களாய் மும்பை வீதிகளை வலம் வந்த பெண்கள், இப்போது அவல பிம்பங்களாய் உருமாறிப் போயிருந்தனர்.

அன்றைய நாளின் வேலை முடித்தோ, அல்லது படிப்பின் முடிவாகவோ, அல்லது காதலனைக் காணவோ, அல்லது வீட்டில் விட்டு வந்திருக்கும் பிஞ்சு முகத்தைத் தேடி ஓடவோ, அல்லது வீட்டில் காத்திருக்கும் வேலைகளுக்கு அஞ்சியோ, வேலையில் மட்டுமல்லாது வீட்டிலும் காத்திருக்கும் வசவுகளுக்குப் பயந்தோ பயணிக்கும் பல பெண்களின் முகத்தில் இப்போது குடியிருந்தது ''பயம்'' மட்டுமே!!



கூட வந்தவர், அவரது மனைவியைத் தேடி பாதி இடிந்த பெட்டியினுள் கண்களைத் துழாவ, அந்த நேரத்தில் சில பெண்களை அப்பெட்டியினுள்ளிருந்து வெளியே இழுத்தான் ஸ்ரீராமன்.

''அம்மாமாமாமா!!!''

''கணபதி பாபா!!!''

''ஜீசஸ்!!''

''கடவுளே!!''

''அப்பனே... பழனி ஆண்டவா!!''

''ம்மாஆஆஆஆஆ'' போன்ற கதறல்களுடனே மீண்டு வந்த பெண்மணிகளின் மத்தியில் ''என் பிள்ளை... என் பிள்ளை... அவனைக் காப்பாத்துங்க... என் குழந்தை...'' என்று கதறினாள் ஓர் பெண்.

அரை மயக்கத்திலிருந்த நிலையிலும், தன் உயிரை விடவும் பிள்ளையின் மீது அன்பு கொள்வது தான் தாய்மையோ!?

இன்னும் சிற்சில நிமிடங்கள் இந்த இடிபாடுகளின் ஊடே சிக்கியிருந்தால், பரலோகம் போய்விடுவோம் என்று தெரிந்தே இருந்தபோதும், தான் பெற்ற மகவைக் காப்பற்றச் சொல்லி வேண்டுவது தான் தாயவளின் பாசமோ!?

கண்களில் நீர் துளிர்க்க, ''நீங்க முதல்ல வெளில வந்திடுங்க... நா உங்க பையனைக் கூட்டிட்டு வரேன்!'' என்றான் ஸ்ரீராமன்.

''இல்ல சார். எனக்... எனக்கு என்... னா... னாலும் பர... ரவா... யில்லை... அவனைப் பாருங்க சார்... அந்த இ...

இட... து பக்க... மா அவனோடே முனங்கல் கேக்... கிற மாதி...ரி இரு... க்... கு... ப்ளூ டீ-ஷர்ட்டும், ஜீன்ஸ் டிராயரும் போட்... டு... டிருந்தான்...'' - விட்டுவிட்டு வந்த மூச்சின் ஊடே பேசினாள் அவள்.

ஸ்ரீராமன் இடப்பக்கமாய் திரும்பவும், ''சார்... சா... ர்... அவன் நெத்தி... யில ஒரு வெட்டுக் காயமிருக்கும்...'' என்றாள் அடையாளமாய்.

அவள் வெளிப்படுத்திய தாய்மை அவனுள் ஓர் சிலிர்ப்பை ஓடச் செய்ய, அந்தக் குழந்தை உயிரோடு இருக்க வேண்டுமே கடவுளே என்ற பிரார்த்தனையுடன் வேகமாய் இடது பக்க இடிபாடுகளுள் பிரவேசித்தான் ஸ்ரீராமன்.

மனம் பிரார்த்தித்திருக்க, கண்கள் தேட, கைகள் அங்கிருந்த கம்பிகளை அகற்ற, கால்கள் தகர்ந்திருந்த தகடுகளைக் களைய, ஸ்ரீராமன் நடத்திய ஐந்து நிமிடத் தேடல் அச்சிறுவனின் சிறு அசைவில் முடிவுக்கு வந்தது.

மெல்ல அவனைத் தூக்கிய ஸ்ரீராமன், அவனது ''ஆஅ... ஆ...'' என்ற அலறலில் அரண்டு போய், கைகளைத் தளர்த்தினான்.

என்னவென்று ஆராய்ந்தால், ரயில் பெட்டியின் ஜன்னல் கம்பிகளுக்கு இடையே அவனது வலது கால் மாட்டியிருந்தது!

கூடவே, கீழிருந்து வந்த மூன்றாவது கம்பி, அவனது கால்களை உரசினாற் போல் சென்று கொண்டிருந்தது! ஆதலால், ஸ்ரீராமன் இழுக்கவும் உரசிக் கொண்டிருந்த



கம்பி அவனது காலை பதம் பார்த்திருக்க வேண்டும்... பிள்ளை அந்த வலி தாங்காமல் கத்திவிட்டான்.

''கொஞ்சம் பொறுத்துக்கோ! அங்கிள் எடுத்து விடுறேன்!'' என்று பிள்ளைக்கு சமாதானம் சொல்லி யவன், கம்பிகளை மெல்ல ஆராய்ந்தான்.

மூன்றாவதாய் உரசிக் கொண்டிருந்த கம்பியை நீக்கிவிட்டால், பிள்ளையை மீட்டு விடலாம் என்ற எண் ணம் பிறக்க, மூன்றாவது கம்பியை மெல்ல இழுத்தான்.

ஆனால், அதுவோ பிள்ளையின் தளிர் மேனியை பதம் பார்க்க, பிள்ளை மேலும் அழுதான். பயத்தை மீறிய வலியின் அலறல்!!

''ஒண்ணுமில்லைடா கண்ணா... ரெண்டே செகண்ட் பொறுத்துக்கோ! அவ்வளவு தான்!'' என்று சொல்லிய வாறே, ஸ்ரீராமன் மீண்டும் இழுக்க, பையன் மீண்டும் அழ, அந்த அழுகைக்குப் பயந்து ஸ்ரீராமன் கம்பியை விட்ட தினுசில் அது மீண்டும் பையனையே பதம் பார்த்தது.

பிள்ளையின் அழுகை கூடிக் கொண்டே செல்ல, ஓர் முடிவுக்கு வந்தவனாய், தன் முழு பலத்தையும் திரட்டி அக்கம்பியை இழுத்தான் ஸ்ரீராமன்.

இழுத்த வேகத்தில் பிள்ளையின் கால்களில் காயம் ஏற்பட்டபோதும் பெரும் சேதம் ஏதுமிருக்கவில்லை. ஆனால், ஸ்ரீராமனின் உள்ளங்கை தான் அக்கம்பியின் தாக்குதலில் ரத்த ஊற்றாய் மாறிப்போனது.

உயிர் போவது போல் தோன்றிய வலியை மறைத்துக் கொண்டு, பிள்ளையை தூக்கியவன், அதன் தாயிடம் விரைந்தான்.

பிள்ளையைக் கண்டதும், அப்பெண்மணிக்கு எங்கிருந்து தான் பலம் வந்ததோ!? இரண்டு ஆளின் உதவி இல்லாமல் வெளி வந்திருக்க முடியாத நிலையில் இருந்தவள், இப்போது தானாகவே தன்னை மீட்டாள்.

ஸ்ரீராமனும் உதவி செய்ய, ரயில் பெட்டியை விட்டு வெளியே வந்தவளின் கரங்கள், பரவசத்தோடு பிள்ளையைத் தழுவிக் கொண்டன!

ஆயிரம் முத்தங்களால் அவள் தன் பிள்ளையைக் குளுப்பாட்ட, ஸ்ரீராமனின் கண்களில் அவளும் அவளது பிள்ளையும் ஜானகியும் ஸ்ரீஷாவுமாய் பட்டனர்!

அப்போது தான், அவனுக்கு மனைவி மகளின் நினைவே வந்தது!

''கடவுளே, என்னைக் காணவில்லை என்று பதறிப் போயிருப்பார்கள்!'' - நெற்றியைத் தேய்த்துவிட்டுக் கொண்டவன்,

''ஆஹா, இங்கே நடந்த விபத்தைப் பற்றிய விவரம் தெரிந்திருந்தால்... அதிர்ந்து போயிருப்பாளே!''

''ஹய்யோ... எனக்கு ஒன்றுமில்லை என்று அவளுக்குச் சொல்லவேண்டுமே!''

''ஆனால்... எப்படி? அவளிடம் செல்போன் கூட இல்லையே?!''

''ஒருவேளை... ஜானகி அவனை அழைத்திருப்பாளோ?'' - சட்டென தோளில் தொங்கிய லேப்டாப் பையினுள் இருந்த கைப்பேசியை எடுத்து அழைப்புகளை ஆராய்ந்தான்.

''ம்ஹூம்.. வந்த அழைப்புகளின் சுவடுகளே இல்லாமல் வெறுமே இருக்கிறதே செல்போன்!''



''என் கண்மணிகளை எப்படி தொடர்பு கொள்வேன்!?''

''இப்போதிருக்கும் நிலையில் ரயில் ஓடுவது என்பது சாத்தியமே இல்லாத விஷயம்... வேற வழியில் தான் அந்தேரியை அடைய வேண்டும்...''

''எப்படி... எப்படி...'' - அந்தேரி ரயில் நிலையத்தில் காத்திருக்கும் மனையாளையும் மகவையும் எப்படி பார்ப்பது / தொடர்பு கொள்வது என்பதிலேயே கவனமாய் இருந்தவனுக்கு, அங்கேயும் இப்படியொரு கோர விபத்து நடந்திருக்கிறது என்பதே தெரியவில்லை. தெரியவும் வாய்ப்பில்லை.

இங்கே விபத்து நடந்து அடுத்த பத்து நிமிடங்களில் அந்தேரி ரயில் நிலையம் வெடிகுண்டுகளால் தகர்க்கப் பட்டிருந்தது. ஆனால், இதை அறியாத ஸ்ரீராமனோ மீட்பு பணிகளில் அல்லவோ ஈடுபட்டிருந்தான்.

ஆதலால், விபத்து பற்றிய எண்ணமே இல்லாமல், தாதர் ரயில் நிலையத்தை விட்டு வெளியேறியவன், அந்தேரி ரயில் நிலையத்திற்கு செல்ல ஆயத்தமானான்.

''சர்... சர்...'' என்று விரைந்த காவல் நிலைய வாகனங்கள்,

''ஸ்வைங்... ஸ்வைங்...'' என்று ஒலி எழுப்பிய ஆம்புலன்ஸ்கள்,

''பீன்... பீன்...'' என்று அந்த இக்கட்டான நேரத்திலும் ஹாரன் அடித்துக் கொண்டிருந்த கார் காரர்கள்,

நத்தை வேகத்தில் நகர்ந்த ட்ராபிக்,

''குய்யோ... முறையோ'' என்று கத்தியபடி ஓடிக் கொண்டிருந்த மக்கள் கூட்டம், மும்பை நகரமே தன்

வழக்கமான நிலையைவிட்டு மிகுந்த பரபரப்பில் மிதந் திருந்தது.

நடைபாதையில் விரைந்து கொண்டிருந்த ஓர் நடுத்தர வயதுக்காரரை நிறுத்திய ஸ்ரீராமன், ''அந்தேரி போகணும்... ரயில் தவிர வேற ஏதாவது வழியிருக்கா? பஸ் போகுதா?'' என்று விசாரித்தான்.

''அந்தேரியா? இப்போ தானே அங்கே ஒரு குண்டு வெடிச்சது... அங்கேயும் கலவரமாதான் இருக்கு... பஸ் போகுமான்னு தெரியலை..ட்ரை பண்ணிப் பாருங்க...'' -தகவல் என்ற பெயரில் ஓர் குண்டை அவன் தலையில் தூக்கிப் போட்டார்.

''என்னது? அந்தேரிலேயும் குண்டு வெடிச்சதா? எங்க சார்? எங்க வெடிச்சது? இங்க மாதிரி....ரயில்வே ஸ்டேஷன்லேயா?''-உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு அவன் கேட்க,

''ஆமா சார், உங்களுக்குத் தெரியாதா? இங்கேயாவது ஒரு பெட்டியில் வெடிச்சது சார்... அங்க ரெண்டு பெட் டில...ஃபஸ்ட் கிளாஸ்ல ஒன்னு...லேடீஸ் கம்பார்ட் மெண்ட்ல ஒன்னு...படுபாவிங்க..அப்பாவி ஜனங்களை கொல்லுறதில இவங்களுக்கு என்ன தான் சந் தோஷமோ? வெறி பிடிச்சவனுங்க!''

ஸ்ரீராமன் பாதி செத்துவிட்டிருந்தான்!

அவன் குடும்பம் என்ன ஆனதோ!?

''கடவுளே!! எங்க இருந்து வந்த ட்ரைன் சார்?''-. உயிரின் மீதியைக் கையில் வைத்துக் கொண்டு அவன் கேட்க,



''ஜரோலி!''

''கடவுளே! ஸ்ரீ குட்டி!!!!!!!!!!!!!!''

''சார்...சார்...என்னாச்சு....''-அந்த அந்நியர் பதற,

''ஜானகி..ஜானும்மா....''

''கடவுளே, எனக்கு ஏன் இந்த சோதனை!'' - உணர்வுகள் மங்கி, கண்கள் இருட்டிக் கொண்டு வர, கால்கள் பலமிழந்து தொய்ந்தான் அவன்.

''சார்....சார்....ரிலாக்ஸ்....தைரியமா இருங்க... ஒன்னும் ஆகியிருக்காது!'' - சக மனிதனின் துன்பம் பொறுக்காமல், அவனைத் தாங்கினார் வந்தவர்.

தன் கையிலிருந்த தண்ணீர் பாட்டிலைத் திறந்து, சிறிது தண்ணீரை அவன் முகத்தில் அடித்தவர், ''நீங் களும் இப்படித் துவண்டுட்டா எப்படி? அங்க போய் பாருங்க... அவங்களைத் காப்பாத்திடலாம்...'' என்றார் திடமூட்டும் விதமாக.

முகத்தில் அடிக்கப்பட்ட நீரை விட, அவரது வார்த் தைகள் அவனுள் சிறு பொறியை உண்டு பண்ண, வேகமாய் எழுந்தான் அவன்.

''தேங்க்ஸ் சார்.. நான் போய் பார்க்கிறேன்... அவங்க ரெண்டு பேரும் நல்லபடியா இருக்கணும்... அவங்க தான் சார் என்னோட உலகமே.. கடவுள்.. என் பொண்ணு...'' - தெளிவாய் ஆரம்பித்த அவனது பேச்சு, கதறலில் முடிந்தது.

''பயப்படாதீங்க சார். அசம்பாவிதமா எதுவும் நடந் திருக்காது... சீக்கிரம் போங்க... பஸ் கிடைக்குமான்னு தெரியலை..ஆட்டோவும் இந்த டிராபிக்ல எப்படி

வருவான்னு தெரியலை....எப்படியாவது போய்டுங்க...'' உடைந்தவனை ஒட்டவைக்க முயன்று, அவனை ஓடவும் வைத்தார் அம்மனிதர்.

## மணி மாலை 7:30

தாதர் ரயில் நிலையத்திலிருந்து அந்தேரிக்கு விரைந்து கொண்டிருந்த ஸ்ரீராமன், தனது நிலையை மிகப் பயங்கரமாய் உணர்ந்தான்.

மகளரசியும், மனையாளும் மாண்டு போகாதிருக்க வேண்டுமே என்ற வேண்டுதலை வைக்கவே அவன் மனம் பயப்பட்டது! அப்படியொரு வேண்டுதலை வைக்கும் நிலைக்குத் தன்னைக் கடவுள் தள்ளிவிட்டாரே என்று மனம் பொருமியது!

''கடவுளே, சில உயிர்களின் கடைசி நேர மூச்சை இழுத்துப் பிடித்து, அவர்களை மீட்டெடுத்த தனக்கு ஏன் இந்த நிலை? இது தான்...எனது மனிதாபிமானத்திற்கு நீ கொடுக்கும் பரிசா?'' என்று கடவுளைச் சாடிய மனம்,

உடனேயே ''கடவுளே,

ஜானகிக்கு நான் செய்த கொடுமைக்காகவா இந்த தண்டனை??'' என்று தன்னிடமே பழியை மாற்றிக் கொண்டது!

''ஸ்ரீகுட்டி... ஜானகி... ஸ்ரீமா... ஸ்ரீகுட்டி... ஸ்ரீஷா... ஜானகி..... ஸ்ரீ... ஸ்ரீ...'' என்று நெஞ்சம் அரற்ற, நினைவுகள் முழுதும் அவள் மகளால் நிரப்பப் பட்டது!



அவனது செல்லக் குழந்தை ஸ்ரீஷா...

உலகின் அழகு முழுதையும் ஒன்று சேர்ந்தாற்போல் பிறந்த பால் வண்ணக் குழந்தையன்றோ அவள்!

படைக்கும் ஆற்றல் தனக்கும் உண்டென்ற கர்வத்தை அவனிடம் விதைத்த முதல் உயிர்!

பிறந்த சில மாதங்களிலேயே, தன் முகம் பார்த்து சிரிக்கும் பூச்செண்டு அன்றோ அவன் மகள்!

''ங்கா...'' என்ற அவளது அர்த்தமற்ற அழைப்பில் தான் எத்தனை ஆயிரம் அர்த்தங்கள்!

அவளது பிஞ்சு விரல்கள் மார்பில் நடத்திய விளையாட்டில் அவனது அடிநெஞ்சம் வரை இனித்த தினங்கள் தான் எத்தனை!

''ப்பா.....'' என்ற ஒரே வார்த்தையில்,

அழைப்பு... ஆசை... கோபம்... வேண்டுதல்... அடம்... பிடிவாதம் என்று எத்தனை எத்தனை உணர்ச்சிகளைக் காட்டும் அப் பைங்கிளி!

வயதுக்கு மீறிய அறிவையும் தன் அழகுக்கான கிரீடமாய் அவள் அணியும் அழகே அழகு!

அவள்...அவள்...என் செல்லப் பெண்...என் வாழ்வில் ஆதாரம்...உயிரின் மூச்சு....எப்படி இருக்கிறாளோ!?!

''இறைவா! உனக்கு ஒரு உயிர் வேணுமாயின் எனது உயிரை எடுத்துக் கொள்! என் பெண் நன்றாக இருக்க வேண்டும்!''- பெண்ணிடமே சுற்றி வந்த நெஞ்சம் அவளுக்கான வேண்டுதலில் விம்மி வெடித்தது!

நெருப்பில் காட்டப் பட்ட இரும்புக் கம்பி, ஓர் கட்டத்தில் இருக்கும் நிலையை விட்டு சட்டென

வேறுருவம் புகுமே. அதைப் போல ஸ்ரீராமனின் நெஞ்சமும் ''என் பெண் நன்றாக இருக்கவேண்டும்!'' என்ற வேண்டுதலிலிருந்து, ''என் பெண் நன்றாக இருப்பாள். கடவுள் கண்டிப்பாக காப்பாத்துவார்'' என்ற நம்பிக்கைக்கு இடம் பெயர்ந்தது!

அம்மாற்றம் நிகழ என்ன காரணம் என்று அவனால் வரையறுக்க முடியவில்லை!

ஆனால், ''என்ன நடந்திருக்கும்...என்ன நடந்திருக்கும்...'' என்று கெடுதலாய் தவிப்பதை விட, ''நல்லதே நடக்கும்!'' என்ற நம்பிக்கை அவனுக்கு சற்று தெம்பை ஊட்டியது என்றே சொல்லவேண்டும்!

''என் பெண்ணிற்கும்...என் மனைவிக்கும் ஒன்றும் ஆகியிருக்காது!'' என்று மனதில் திரும்பத் திரும்பச் சொல்லியவன், நேற்றைய இரவு நினைவு வர, சட்டென தன்னை மீறி அழுதான்!

எத்தனை நாட்கள்... எத்தனை மாதங்கள்...எத்தனை வருடங்கள்...எத்தனை எத்தனை மணி நேரங்கள் சென்று நானும் ஜானகியும் மனம் விட்டுப் பேசினோம்....

''இனி வசந்தமே!'' என்று எண்ணிய வேளையில் பெரும் சூறாவளியே சுழற்றி அடித்துவிட்டதே..

தன் அன்பை முழுதாய் அவளிடம் காட்ட முடியாமலே போய்விடுமோ என்ற பயம் நெஞ்சை அடைக்க, கண்கள் இருட்டிக் கொண்டு வந்துவிட்டது அவனுக்கு!

ஆனால், குடும்பத்தைக் கண்டு விடவேண்டும் என்ற உந்துதல் மூளைக்கு மணி எழுப்ப, பலவாறாய் முயன்று தன்னைச் சமாளித்துக் கொண்டான் ஸ்ரீராமன்!



கஷ்டப்பட்டு வரவழைத்த தெம்பு மீண்டும் வடிந்துவிடும் முன்னர், கால்களை அந்தேரி நோக்கி ஓடவிட்டவன், கைகளைப் பையினுள் விட்டு, இன்றைய தினம் வாங்கிய தாலிச் சங்கிலியை எடுத்துப் பார்த்தான்!

''துவண்டு போகாதே மனமே!'' என்ற அவனது உருப்போடலையும் மீறி, கண்கள் நீர் நிரம்பும் தொட்டியாய் மாறிவிட,

''இதுநாள் வரை, அவளை... அவளது விருப்பங்களை...அவளது உணர்ச்சிகளை மதிக்காத கணவன் அவளுக்காய் ஒரு செயின்... அதுவும் தங்கத்தில் வாங்கி வந்திருக்கிறான் என்றால் ஜானகி நிச்சயம் சந்தோஷப்படுவாள். கடவுளே, அந்த சந்தோஷத்தை அனுபவிக்க அவள் இருக்கவேண்டுமே...'' என்று பிரார்த்தித்தது மனம்!

''ஆனால், ஜானகி ஒன்றும் நகை பணத்திற்கு மயங்கும் ரகமல்ல! நகைக்காக அல்லாமல் நகை வாங்க வேண்டும் என்ற எண்ணம் கணவனுக்கு வந்ததே என்று தான் சந்தோஷப்படுவாள்! அவள் அப்படித்தான்!''- வாழ்வில் முதன்முறையாக ஜானகியின் குண நலன்களை ஆராய்ந்து பார்த்தான் கணவன்!

ஆராய்ந்தலின் விளைவாய், ''சை...இந்தத் தெளிவு இத்தனை நாள் வராமல் போனதே! ஸ்ரீஷாவின் நேற்றைய பேச்சு மட்டும் இல்லாதிருந்தால்...இன்னும் எத்தனை எத்தனை ஆண்டுகளோ தொடர்ந்திருக்க வேண்டிய துன்பமாய் அல்லவா மாறியிருக்கும்!''-மீண்டும் தன்னையே கடிந்து கொண்டான் ஸ்ரீராமன்!

அதுமட்டுமா, ஓர் சகமனுஷியை நடத்துவது போல கூட அவன் ஜானகியை நடத்தவில்லையே! எப்போது

பார்த்தாலும் கடுகடுவென்ற முகமும், காரமான வார்த்தைகளும், அலட்சியப் பார்வைகளும், உதாசீன ஒதுக்கல்களும்....! கோபமாய் பேசினாலும், சின்னதாய் ஒரு மன்னிப்பு... அன்பான சமாதானம்... ம்ஹூம் இல்லையே... மூன்றாம் மனிதனான கோகுலிடம் இட்ட சண்டையைக் கூட நிமிடங்களில் மறந்த தன்னால் வாழ்வின் ஓர் பாதியாய் இருந்த ஜானகியுடம் மன்னிப்பு கேட்கத் தோன்றியதில்லையே! என்ன ஒரு மடத்தனம்!

தன்னைத் தானே குற்றவாளியாக்கிக் கொள்ளும் படலத்தின் உச்சக்கட்டமாய், ஜானகியைத் தன்னை மணக்காது இருந்திருந்தால் என்ற ரீதியில் மனம் பயணப்பட்டது!

''தன்னைப் போன்ற பணக்காரனாய் இல்லையென்றாலும் ஏழையாய் ஒருவனை மணந்திருந்தாலும்... அவளது கருத்துக்கள் மதிக்கப் பட்டிருக்குமே...உயிருள்ள உணர்ச்சி நிரம்பிய ஓர் மனுஷியாய் வாழ்ந்திருப்பாளே...'' - சட்டென தன் கற்பனையை நிறுத்திவிட்டு, தலையை உலுக்கிக் கொண்டான் அவன்!

''சை...சை...ஜானகியா...இன்னொருவனோடா? சை...சை...நீயும் உன் கற்பனையும்''- ஸ்ரீராமனால் அந்த நேரத்திலும் அப்படியொரு கற்பனையில் ஆழ முடியவில்லை....

''ஜானகி எனக்கானவள்.... கற்பனைக்காகக் கூட அவளை என்னால் விட்டுக் கொடுக்க முடியாது!''-மனம், மூளை,உடல் என்று சகலமும் சிலிர்த்துக் கொண்டு நின்றது!

அந்த வினாடியில், ஸ்ரீராமனுக்கு ஒன்று உறைத்தது! தீபாலியின் கல்யாணப் பத்திரிகையைப் பார்த்த



போதோ, ஏன் அவளை அவளது கணவனுடன் நெருக்கமாய் பார்த்தபோதோ ஏற்படாத உரிமை உணர்வு...ஓர் கற்பனைக் காட்சியில் சிலிர்த்து எழுவதென்றால்... அவன்... அவன் ஜானகியை நேசிக்கிறான் என்று தானே அர்த்தம்!

ஹ்ம்ம்...உண்மையிலேயே நேசிக்கிறானா? இல்லை இது வெறும் ''கணவன்'' என்ற உரிமை உணர்வா?- மனம் பட்டிமன்றமே நடத்திக் கொண்டிருந்தது!

''உரிமை இருக்கும் இடத்தில் தான் நேசம் பிறக்கிறது'' என்பதை பகுத்தறியும் பக்குவமில்லாத மனம்,அலைந்து தவித்தது!

''உரிமையோ நேசமோ, எதுவானாலும் ஜானகி அவனது வாழ்வின் ஆதாரம்...அவள் எனக்கு வேண்டும்!'' என்று உறுதியாய் நின்றது மனம்!

ஒரு நிலைக்கு மேல், ''இது நாள் வரை சரியாக நடந்துகொள்ளவில்லையே!'' என்று மறுகுவதை விடவும், ''இனி வரும் நாட்களில், புரிதல் நிறைந்த இல்லறத்தை நடத்துவேன்! அதற்கான ஆதாரமாய் என் மனைவியையும் மகளையும் மீட்டுக்கொடுத்துவிடு!'' என்று கடவுளிடம் வேண்டுதல் நடத்துவதே உசிதமாய் பட, கடவுள் என்ற ஓர் சக்தியை மட்டும் நம்பி அந்தேரி நோக்கி விரைந்தான் ஸ்ரீராமன்.

தாதர் ரயில் நிலையத்திலிருந்து அந்தேரி செல்ல ரயிலிலேயே அரை மணி நேரமாகும் எனும் போது, கால்நடையாய் சென்றால் இரண்டு மணி நேரத்திற்கும் மேல் பிடிக்கும்! ஆனால், மனதின் உந்துதலும், ஓயாது நடத்திய வேண்டுதலும், பெண்ணைக் கண்டு

விடவேண்டும் என்ற பாசமும், மனைவியிடம் தோன்றிய நேசமும் அவனை அதிவேகமாய் நடக்க வைத்தது!

சக்தி இருந்தால், மின்னலின் வேகத்தை விடவும் மிகுதியான வேகத்தில் பறந்திருப்பான்! ஆனால், இல் லையே!

சாமானிய மனிதனின் சிக்கல்களும், நடந்த குண்டு வெடிப்பின் பாதிப்பில் மிதந்த நகரத்தின் சந்தடியும் அவனது வேகத்தை குறைத்தது!

கிட்டத்தட்ட ஆறு கிலோமீட்டர் தூரத்தை அவன் கடந்தபோது, ஒரு மணி நேரம் நிமிடமாய் கரைந்து போயிருக்க, உடல் வேர்வையின் ஊற்றாய் மாறிப் போயிருந்தது!

அவனைக் கடந்து சென்ற எந்தவொரு வாகனமும் அவனை ஏற்றிக் கொள்ளும் நிலையில் இல்லை!

அவரவர் வலியும், வழியும் அவர்கட்கு!

அதையும் மீறி, அந்தப் பக்கமாய் சென்று கொண் டிருந்த பேருந்தில் ஏறிவிட்டு, பதினைந்து நிமிடங் களிலேயே அதிலிருந்து இறங்கிவிட்டான் ஸ்ரீராமன். இரண்டே நிமிடங்களில் அவன் கால்நடையாய் கடக் கும் தூரத்தை, பதினைந்து நிமிடங்களுக்கும் மேலாய் கடந்து சென்றால்... எவனுக்குத் தான் பொறுமை இருக் கும்!? அதுவும் அங்கே இரண்டு உயிர்களின் நிலை என்ன என்று தெரியாத பட்சத்தில்...ஒரோர் நிமிடமும் ஒர் பொக்கிஷமாய் தெரிந்தது!

படியில் தொத்திக் கொண்டு சென்றவன், துரிதமாய் அதிலிருந்து இறங்கி, மீண்டும் ஓடினான்!



கால்கள் அத்து விடுவது போல் வலித்தபோதும், அவனது ஓட்டம் நிற்கவே இல்லை! உயிரைத் தேடி ஓடும் கடைசி ஓட்டம் அன்றோ!

வாழ்வே வலியாகிப் போகுமோ என்ற பயத்தில் வலிகள் மறந்து வழிகள் பிறந்து விடாதா என விழிகளும், மனமும் ஏங்கித் தவித்தன!

நொடிக்கொரு முறை, கையிலிருந்த கைப்பேசியை எடுத்துப் பார்த்தவனுக்கு, ஒரு மணி நேரத்திற்கு மேலாகி யும், அது உயிரிருந்தும் உணர்ச்சிகள் காட்டாத ஜடமாய் இருப்பது கண்டு மிகுந்த பயம் பற்றிக் கொண்டது!!

''ஜானகிக்கு ஏதும் ஆகவில்லை என்றால் கண்டிப் பாக அவனைத் தொடர்பு கொண்டிருப்பாளே! இத்தனை நேரம் தொடர்பின்றி இருக்கிறாள் என்றால்... ஹய்யோ....'' - ஸ்ரீராமனால் அதற்கு மேல் சிந்திக்கவே முடியவில்லை.

''ஸ்ரீ பாப்பா!''-நெஞ்சம் விண்டு விடும் போலி ருந்தது!

''என்னவாகிற்று...என்னவாகிற்று... என் பிள்ளைக்கும் என் மனைவிக்கும் என்னவாகிற்று...'' என்று மனம் ஓயாது தவித்ததில், கண்ணிலிருந்த நீர் கூட பாரமாய் தெரிந்தது ஸ்ரீ ராமனுக்கு!

இறுக கண் மூடி, அதை அவன் வெளியேற்ற, மீண் டும் கண்கள் நீரின் குளமானது!

''இப்படிப்பட்ட கொடுமையான நிலைமை தன் எதிரிக்குக் கூட வரக்கூடாது!'' என்று மனதார எண்ணிய வனுக்கு, ''தனக்கு வந்து விட்டதே!'' என்பதிலேயே

சப்த நாடியும் ஓர் வினாடி நின்று துடிக்க, கண்களை இருட்டிக் கொண்டு விழப் போனான்.

கால்கள் தளர, அப்படியே துவண்டு விழப் போன வனை, அவன் கடந்து கொண்டிருந்த பாலத்தின் நடை பாதை தாங்கிகள் தாங்கி நிறுத்த, ''இல்லை ஸ்ரீ! எப் போதும் காத்திருக்கும் இடத்தில் ஜானகியும் பிள்ளையும் உனக்காய் காத்திருப்பார்கள்! கண்டிப்பாக! சீக்கிரம் போ! சீக்கிரம்! சீக்கிரம்! மொழி தெரியாத ஊரில், கலவரம் மேலோங்கிய நிலையில் அவள் அங்கே உனக்காய் தவித்துக் கொண்டிருப்பாள்!

எவ்வளவு சீக்கிரம் முடியுமோ...அவ்வளவு சீக்கிரம் அங்கே சென்று விடு!'' என்று மூளை கட்டளை பிறப் பித்து, அவனை உயிர்ப்பித்தது!

கை முஷ்டிகள் இறுக, உதடுகள் தீர்க்கமாய் அழுந்த, இமைகள் கருவிழிகளுடன் சங்கமிக்க, தன்னை வெகு சிரமப்பட்டு மீட்டெடுத்தவன், மீண்டும் தன் உயிர் தேடும் படலத்தைத் தொடர்ந்தான்.

அவனது தவிப்புக்கு சிறு வடிகால் இடுவது போல, அந்தப் பக்கமாய் போன ஓர் ஆட்டோக்காரன், ''சார்... எங்கே போகணும்?'' என்று ஹிந்தியில் வினவ,

''அந்தேரி! கொஞ்சம் சீக்கிரம் போக முடியுமா? ரொம்ப அர்ஜண்ட்!'' என்றான் அவசரமாக.

''வாங்க சார். மெயின் ரோடுல போனா கண்டிப்பா... சீக்கிரம் போக முடியாது. குறுக்கு வழில முயற்சி பண்ணலாம்'' என்றவாறே வண்டியை எடுத்தான்.

குறுக்கு வழி என்று அவன் சொன்ன வழி வருவ தற்கே மெயின் ரோட்டில் இருபது நிமிடம் நத்தையாய் ஊற வேண்டியிருந்தது.



''என்ன பாஸ்? இப்படியே தான் போகப் போறோமா? நான் நடந்தே போய்டவா? அங்க வைஃப்பும் பொண் ணும் தவிச்சுக்கிட்டு இருப்பாங்க...ப்ளீஸ் பாஸ்...''- அந்த இருபது நிமிடமும் ஸ்ரீராமனுக்கு நரக வேதனையாய் இருந்தது-

''பொறுமையா இருங்க சார்...போய்டலாம்...இதோ வந்திடுச்சு!'' - என்ற ஆட்டோக்காரன் தன்னால் முடிந்த அளவு வேகமாகவே வண்டியைச் செலுத்தினான்.

ஒருவாறாக அவன் மெயின் ரோட்டைக் கடந்து குறுக்கு வழிச் சாலையைப் பிடித்தபோது, ஸ்ரீராமன் மீண்டும் கைப்பேசியை எடுத்துப் பார்த்தான்.

அப்போதும் அது ஜடமாகவே இருக்க, கைப்பேசியை எடுத்து நெற்றியில் வைத்துத் தேய்த்துக் கொண்டவன், ''ஜானு என்னாச்சும்மா....ப்ளீஸ் ஒரு போனாவது பண் ணேன்... ப்ளீஸ்... என்னால் இந்தத் தவிப்பைத் தாங்க முடியலம்மா... நீங்க ரெண்டு பேரும் எப்படி இருக்கீங்க? போன் பண்ணுடா... பண்ணுடா...'' என்றான் அழுகை நிரம்பிய குரலில்.

அவன் பேசியது தமிழில் என்றாலும், அந்த வட மாநில ஆட்டோக்காரனால், ஓர் தொலைப்பேசி அழைப் பிற்காக ஏங்கி நிற்கும் அவனது தவிப்பைப் புரிந்து கொள்ள முடிந்தது!

''சார்... டெலிபோன் நெட்வொர்க் எல்லாமே ஜாமாகி இருக்கு சார்... பாம்ப் ப்ளாஸ்ட் காரணமா எல்லாரும் அவங்கவங்க சொந்தக்காரங்களுக்கு கூப்பிட்டுட்டு இருப்பாங்க இல்ல... அதான்!'' என்றான் விளக்கம் போல.

''ஹோ!!!''- இந்த ஒற்றை வார்த்தை தவிர ஸ்ரீராம னால் வேறேதும் பதில் தரமுடியவில்லை. ஏனென்றால், அவனது வேதனை சற்றும் குறையவில்லை! மாறாய் கூடிப்போயிருந்தது! அதுவும் வேற விதமாக!

''தன் இனிய குடும்பத்திற்கு என்னவாயிருக்குமோ'' என்ற தவிப்பு ஒரு புறமிருக்க, ''தன் எண்ணிற்கு அழைத்து அழைத்து தொடர்பு கிடைக்காமல் துவண்டு போயிருப்பாளே! தனக்கு ஏதோ நிகழ்ந்துவிட்டது என்று பயப்பட்டுக் கொண்டிருப்பார்களே!'' என்ற தவிப்பும் இப்போது சேர்ந்து கொண்டது!

நேற்று கிட்டத்தட்ட இதே நேரத்தில்... தன் கைப் பேசிக்கு அழைத்தாள் என்பதற்காக அவளிடம் கோபப் பட்டோமே! இப்போதோ...!? இது தான் விதியின் விளையாட்டா?!

''அத்தான்... என்ற அவளது அழைப்பை இனிமேல் கேட்கவே முடியாதோ...ஸ்ரீகுட்டி...என்னோட செல்லக் குட்டி...'' - என்ன முயன்றும் ஸ்ரீராமனால் தன் கற்பனை யின் விபரீதத்தைத் தடுக்க முடியவில்லை. உடைந்து போய், ஓவென்று அழுதுவிட்டான் அவன்!

''சார்...ரிலாக்ஸ் சார்! உங்க குடும்பத்துக்கு ஒண்ணுமா கிடாது! இன்னும் இருபதே நிமிஷம் அந்தேரிக்குப் போய்விடலாம்!'' என்றான் அந்த ஓட்டுனர் ஹிந்தியில்.

''இல்ல சார்...என் பொண்ணு...மூணு வயசு கூட ஆகலை...நான்னா அவளுக்கு உயிரு...நா இல்லாம சாப்பிடவே மாட்டா...அவளுக்கு எல்லாமே நான் தான்...''-கைகளில் முகம் புதைத்து, குலுங்கினான் அவன்.



''ப்பா...'' என்ற மகளின் அழைப்பிற்காக பாச மனம் ஏங்க, ''அத்தான்...'' என்ற மனைவியின் அழைப்பிற்காக நேச மனம் ஏங்கியது!!

பாசம் பெரிதா? நேசம் பெரிதா? என்று கேட்டால் என்ன பதில் சொல்வது!?

அவனுக்கு இருவருமே வேண்டும்! அது மட்டும் தான் ஸ்ரீராமனின் மனதில் ஓடிக் கொண்டிருந்தது!

ஆட்டோக்காரனும் மனிதன் தானே, சக மனிதனின் தவிப்பு புரிந்தவனாய், தன்னால் முடிந்த அளவு வேகமாய் அந்தேரி ரயில் நிலையத்தை அடைந்தான்.

கையில் அகப்பட்ட இரு நூறு ரூபாய்களையும், இரு நூறு கோடி நன்றிகளையும் அவனிடம் பயின்று விட்டு, வில்லிருந்து புறப்பட்ட அம்பென அந்தேரி ரயில் நிலையத்தினுள் நுழைந்தான் ஸ்ரீராமன்!

## மணி மாலை 6:30

(ஒரு மணி நேரம் முன்பு- அந்தேரி ரயில் நிலையம்)

தனது அழுகுரலுக்கு எதிரொலியாய் வெடித்த குண்டுகளின் சத்தத்திலேயே சப்த நாடியும் ஒடுங்கிவிட, வினாடிகளுக்கும் மேலாய் உறைந்து நின்ற ஸ்ரீஷா எனும் மூன்று வயது கூட நிரம்பாத குழந்தை, வீரிட்டு அழ ஆரம்பித்தது.

''ம்மா...ம்மா...'' என அவள் கதறியதைக் கேட்க, அங்கே அவளது தாய் நினைவுடன் இருந்திருக்கவில்லை.

உடம்பு முழுதும் தூக்கித் தூக்கிப் போட, தன்னருகே மயங்கிச் சரிந்திருந்த தாயை ஒழுக்கி எழுப்பினாள் ஸ்ரீஷா.

''ம்மா... எலுந்தி... ம்மா... பாப்பாக்கு பயமா இக்கு... ம்மா...''- தாயின் அருகே குத்துக்காலிட்டு அமர்ந்து, அவளது கன்னங்களில் தட்டினாள்.

''வீட்டுக்குப் போவாம்மா... வா... இங்க வேணாம்... இது பிடிக்கலை... வேணாம்... போவாம்...''

''ம்மா... அப்பா காணோம்மா... ப்பா...ப்பா...''

''ம்மா... பாப்பாக்கு பயம்... பயமா இக்கு... வாம்மா...''

தாயிடம் அசைவே இல்லாமல் போக, பிள்ளைக்குப் பயம் பற்றிக் கொண்டது!

''ம்மா... ம்மா... ம்மா வேணும்... ம்மா வா... எலுந்தி... ம்மா.. ம்மாஆஆஆஆஆஆஆஆ...'' என்ற அவளது அழுகை,

''ப்பா வா...ப்பா வா...ம்மா முளிக்கவே இல்ல... வா... ப்பா... ம்மா... ப்பா... அம்மா...'' என்று தந்தையையும் தேடி விரிவடைந்தது.

என்ன அழுது கரைந்தாலும், தாயிடம் அசைவே இல்லாமல் போக, அச்சிறு பிஞ்சிக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை.

மேலும் தாயின் இடது கையிலிருந்து ரத்தம் வழிவதைப் பார்த்தவளுக்கு, பெரும் அச்சம் குடி கொண்டது.

''அம்மா...வலிக்குதா? என்னாச்சும்மா? ம்மா... எலுந்தி... அச்சோ... த்த்மா (ரத்தமா) வதுதே... எலுந்திமா...''



''ம்மா... வலிக்குதா? ம்மா... ம்மா...''

குத்துக்காலிட்டிருந்த கால்களை மடக்கி, அன்னையின் அருகே படுத்துக் கொண்டவள், கருவாய் தான் உதித்த தினம் முதல் தன்னைப் பேணிப் பாதுகாத்து வந்தவளின் மேனியை ஒட்டி ஒட்டிப் படுத்துக் கொண்டாள்.

நெற்றி, கண், மூக்கு, கன்னம், காது, உதடுகள், கழுத்து என்று தொடர்ந்த அப்பிஞ்சு விரல்களின் வருடல், தனக்குப் பால் புகட்டிய மார்பை எட்டியதும், அதனுடன் தன்னை இறுக்கிக்கொண்டது.

''ம்மா... இழுந்தி.. ம்மா... பாப்பாக்கு பயமா இக்கு..ச்கு விதக்கா இக்கு... தீப மங்கள ஜோதி பாடுத ச்குவா இக்கு... ம்மா...''-குழந்தைக்கு அங்கிருந்த தீ ஜுவாலைகள் மேலும் பயத்தை ஏற்படுத்த, மார்போடு ஒண்டிக் கொண்டு அழுதது.

சற்று நேரத்திற்குப் பின்னர், மீண்டும் எழுந்து அமர்ந்து கொண்டவள், தாயின் முகத்தருகே சென்று ''ம்மா... ம்மா...'' என்று மீண்டும் அழைக்க ஆரம்பித்தாள்.

தாயின் முகத்தைத் திருப்பி, அவளது காதுகளுக்குள் மீண்டும் பேசினாள், அந்த அறிவாளிக் குழந்தை.

மீண்டும்!

மீண்டும்!

பெற்றவளிடம் அசைவின்றியே போக, பெண்ணிற்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை!

பயந்த அழுகையுடன் சுற்றும் முற்றும் பார்த்தால், தந்தையையும் காணவில்லை!

தெரிந்த முகமாய் யாரையும் காணாமல் அழுகையில் உதடு பிதுங்கியது!

மேலும், அங்கு கண்ட காட்சிகள் வேறு அவளுக்குப் பிடித்தமானதாய் இல்லை! எங்கு பார்ப்பினும் அழுகுரல்... ஓலங்கள்...கதறல்கள்...வேகமான காலடி ஓசைகள்...எதுவுமே அவளுக்குப் பழக்கப் பட்டதாய் இல்லை!

கண்ட காட்சிகளுள் ஒன்றாய், ஓர் பெண் ஓர் ஆணின் தலையைத் தன் மடியில் போட்டுக் கொண்டு அழுவது கண்ணில் பட்டது!

அது போல் தானும் செய்தால், தாயிடம் ஏதும் மாற்றமிருக்குமோ என்று அந்தக் கன்றுக்குத் தோன்றியது போலும்!

மெல்ல நகர்ந்து தாயின் தலையைத் தன் சின்னஞ்சிறு மடி மீது இருத்திக் கொண்டவள்,

தாயின் கன்னங்களை மெல்ல தொட்டாள்,

பின்னர் தடவினாள்...

மெதுவாய் அடித்தாள்...

அடித்தது வலிக்குமோ என்ற பயத்தில் மீண்டும் தடவிக் கொடுத்தாள்...

முத்தம் வைத்தாள்...

மீண்டும் தடவினாள்...

முகத்தோடு முகம் வைத்துக் கொண்டவள்...

இவ்வளவு நேரத்திலும், அந்த இளம்கன்றின் கண்கள் கண்ணீரை மட்டும் நிற்காது சொரிந்து கொண்டே இருந்தன.



அவளது கண்ணிலிருந்து வடிந்த துளிகள் ஒன்று ஜானகியின் இமைகளில் பட்டது.

அடுத்த துளி அவளது புருவங்களில்....

பின்னர் கண்ணுக்குக் கீழே....

அப்புறமாய் கன்னத்தில்...

அடுத்தது கண்ணில்...

அடுத்ததும் கண்ணின் இமையில்...

ஒரோர் சொட்டாய் வடிந்த அக்கண்ணீர், அத்தாயிடம் சிறு அசைவை உண்டு பண்ணியது!

தன் உதிரத்தை உடலாக்கி, உயிர் புகட்டி பெண்ணாக்கியவள், இன்று அப்பெண்ணின் கண்ணீர் துளிகளில் தன்னைப் பிறப்பித்தாள்!!

பெண்ணின் குரலும், அவளது கண்ணீரும் அவளை உயிர்த்தெழச் செய்ய, மெல்ல மெல்ல கண் விழித்தாள் ஜானகி!!

கால் மணி நேரத்திற்கும் மேலாக தொடர்ந்த அந்தப் பாசப் போராட்டத்தின் விளைவாக, ஸ்ரீஷாவின் கண்ணீர் துளிகள் ஜானகியின் முகத்தில் பாச நீரூற்றாய் ஓடியிருக்க, ஜானகி தன்னுணர்வு அடைந்தாள்.

தாய் சற்றே அசைவதை உணர்ந்த ஸ்ரீஷா, தாயின் முகத்தை இப்படியும் அப்படியுமாய் திருப்பி, அங்கொன்றும் இங்கொன்றுமாய் முத்தங்களை நிரப்பி, ''ம்மா.. எலுந்தி...'' என்றாள். அப்பிஞ்சிற்கு எங்கே தாய் மீண்டும் அசைவற்று போய்விடுவாளோ என்ற பயம்!

''அ... அம்... ம்ம...மு...''- பலகீனமாய் வந் ஜானகியின் குரல், பெண்ணின் கலவரமடைந் முகத்தைக் கண்டதும்,

''அ...ம்...ம்மாக்கு ஒண்... ணு... ம்மி... ல்ல்... லை... டா... பயப்படாதே!'' என்றாள் திக்கலாய். இடது கை இத்து விடுவது போல் வலித்தபோதும், பெண்ணின் பயந்த முகம் அதை விட வலியைக் கொடுத்தது!

தாய் மனமன்றோ! தன் வலி நீக்கிப் பிள்ளையின் வலி போக்கும் தூய மனம்!

''ம்மா...ச்சு...ச்சு...பாப்பா பயமா இக்கு...''-பிள்ளை இதையே திரும்பிப் படிக்க,

''ஒண்...ணு...ம்மி..ல்ல்...லை...டா...'' என்று பிள்ளைக்குச் சொல்லியவாறே, கண்களை மெல்ல சுழல விட்டாள்.

சற்று தள்ளி விழுந்திருந்த பையைச் சுட்டிக் காட்டி, ''பா...ப்.ப்பா... அ... அந்...தத பை..யை எடு..த்..த்திட்..ட்டு வா....டா...'' என்றாள்.

ஸ்ரீஷாவுக்கு சந்தோசம் தாங்க முடியவில்லை! அம்மா விழித்துவிட்டாளே! தன்னை ''அம்மு'' என்று அழைத்து விட்டாளே! அப்பெண் பூவிற்கு அதுவுமே மிகுதியாய் தெரிந்தது!

கூடவே, தாய் சொன்னதை செய்துவிடும் சமர்த்தும் சேர்ந்து கொள்ள, தன் மடி மீதிருந்த தாயின் சிரசை மெல்ல இறக்கி வைத்தவள், ''இதாம்மா...'' என்றாள் தங்கள் பையைக் காட்டி.

தாய் தலையசைக்கவும், வேகமாய் ஓடிச் சென்று சற்று தொலைவில் விழுந்திருந்த பையை எடுத்து வந்தாள் (இழுத்து வந்தாள் என்று சொல்ல வேண்டுமோ?)

நின்ற நிலையில் பையை அவள் பிடித்திருக்க, உட்காரும்படி பெண்ணிற்கு சைகை காட்டினாள் ஜானகி.



''என்னம்மா? என்ன வேணும்?'' என்று அழுகை முழுதாய் மறையாத குரலில் பெண்ணரசி வினவ,

''ஒன்றுமில்லை'' என்பது போல் கையசைத்துவிட்டு, தன் வலது கையால் பையைத் திறக்க முயன்றாள் ஜானகி.

தாய் சிரமப்படுவதைக் கண்ட கன்று'' பாப்பா தொதக்கிதேன்...கொடு...'' என்று பையைத் திறந்தாள்

''என்னம்மா எடுக்கணும்? தண்ணி வேணுமா?''- பையைத் திறந்துவிட்டுப் பெண் வினவ, அந்த நேரத்திலும் ஜானகிக்கு தன் பெண்ணின் புத்தி கூர்மை பற்றிய பெருமை தான் மேலோங்கிய உணர்வாய் இருந்தது!

''ஆ..ஆ..மா...டா...'' அவள் கூற,

பெரிதாய் இருந்த தண்ணீர் பாட்டிலை தூக்க முடியாமல் தூக்கி, அதை மெல்ல திறந்து, ''ம்மா... ஆஅ... சொல்லு... பாப்பா ஊத்துறேன்...'' என்று ஸ்ரீஷா கூறிய போது, தன் தாயின் சாயலைத் தன் மகளிடம் கண்டாள் ஜானகி.

தாயிடம் தண்ணீரைக் கொண்டு வர முயன்று, அதில் தோற்று, தாயின் வாய்க்குப் பதிலாக முகமெங்கும் தண்ணீரைச் சிந்தினாள் ஸ்ரீஷா.

அதிலேயே ஜானகியின் முழு உணர்வும் மீட்டெடுக்கப் பட்டது! அத்துடன் சேர்த்து, தன்னை மட்டுமல்லாது பிள்ளையையும் சேர்த்துப் பார்த்துக் கொள்ள வேண்டும் என்ற பொறுப்புணர்வும் விழித்திருக்க வேண்டும்! ஜானகி தெளிந்தாள்!

இடது தோள் பட்டைக்கும் முழங்கைக்கும் இடையே இருந்த இடத்தில் பெரிதாய் வலித்தபோதும், ஜானகியால் எழுந்து கொள்ள முடிந்தது.

மெல்ல வலது கையை ஊன்றி அவள் எழ, ஸ்ரீஷா ''பாத்து... பாத்து எலுந்திமா...'' என்றாள் கவலையுடன்.

பெண்ணின் அக்கறைக்குப் பதிலாய் சிறு புன்னகை ஒன்றை உதிர்த்த ஜானகி, எழுந்து அமர்ந்தாள். வலது கையால் பெண் வைத்திருந்த தண்ணீர் பாட்டிலை வாங்கி வறண்டிருந்த தொண்டையை நனைத்தாள். அதுவே, அவளது பாதி பலத்தை மீட்டு வந்தது போலிருந்தது.

உடலும் மனமும் ஒருங்கிணைய மெல்ல கண்களைச் சுழல விட்டவளுக்குத் தனக்கு என்ன நேர்ந்தது என்பதைப் புரிந்து கொள்ள முடிந்தது.

குண்டு வெடிப்பதற்கு முன்னர், தன்னைத் தொடர்ந்த கரிய உருவம் அவள் விழுந்த இடத்திற்கு இருபது அடி தள்ளி, தலை குப்பற விழுந்திருந்தது. பின் மண்டையில் ரத்தம் வழிந்ததன் அடையாளத்தோடு.

தான் சற்று முன்னே நகர்ந்து எதிர் நடைமேடையின் அருகே இருந்ததாலும், இறங்கியிருந்த பிள்ளையைத் தூக்குவதற்காக குனிந்திருந்தாலும், அதுவும் வலப்பக்கமாய் முழுதாய் குனிந்திருந்ததாலும், எங்கிருந்தோ பறந்து வந்த தகடு ஒன்று அவளது இடது கையை பதம் பார்த்துச் சென்றிருக்கிறது.

கூரிய பொருளொன்று மிகுந்த வேகத்துடன் தன்னைத் தாக்கிய காரணத்தினால், தான் உடனே மூர்ச்சையாகி இருக்கவேண்டும் என்பதை உணர்ந்தாள் ஜானகி.



அதுமட்டுமல்லாது, பிள்ளையைத் தூக்குவதற்காக குனிந்தமையால் அவளது மேனி, பிள்ளைக்கு அரணாகி விட, ஸ்ரீஷா பாப்பா அடி ஏதுமில்லாமல் தப்பியிருக்கிறாள்!

எல்லாம் கடவுள் சித்தம்!?!

சட்டென, தான் எப்போதும் நிற்கும் புத்தகக்கடையை திரும்பிப் பார்த்தவள் திடுக்கிட்டாள்! பாதி எரிந்து....மீதி எரிந்து கொண்டு....கடவுளே!

அங்கே நின்றிருந்தால்....என்னாவாகி இருக்கும்?!!

தானும் பிள்ளையும்...நினைக்கவே அச்சமாய் இருந்தது!

அந்த முரடன் வந்ததும்...தான் நகர்ந்ததும்...பிள்ளை கீழே இறங்கியதும்... தான் குனிந்ததும்...ஏதோ தேவனின் ஆணைப்படி நடந்தது போலிருந்தது அவளுக்கு!

ஆண்டவன் அரணிட்டு இருக்கிறான்!

மனதார கடவுளுக்கு நன்றி பகன்றவள், தன்னையே பார்த்துக் கொண்டிருந்த பிள்ளையைத் தன்னிடம் இழுத்துக் கொண்டாள்!

''என் செல்லச் சிட்டு, என்ன தவி தவித்ததோ!? இந்த வயதில் பார்க்கக் கூடாததெல்லாம் பார்த்துவிட்டு, மனதளவில் என்ன மாதிரி பாதிக்கப் பட்டிருக்கிறாளோ!? கடவுளே, நீ தான் இந்த பிஞ்சு மனதிலிருந்து இச்சம்பவத்தைச் சுவடின்றி அழித்துவிட வேண்டும்'' என்று தாய் மனம், உளமார வேண்டியது.

''அம்... அம்முக்குட்டி... ஒண்ணு... மில்லைடா... பயப்படக் கூடாது! நாம இங்கிருந்து போய்டலாம்! அப்பாட்ட போய்டலாம்...வா!''

''ம்ம்ம்...போலாம்...வா...வா...''-ஸ்ரீஷாவுக்கும் அங்கே இருக்கவே பிடிக்கவில்லை.

மெல்ல எழுந்து கொண்ட ஜானகி, ஸ்ரீஷாவைத் தூக்கிக் கொள்ளக் குனிய, ''வேணாம்மா...பாப்பாவே நடந்து வதேன்...'' என்றாள் அவள், தாயின் வலி உணர்ந்த பிள்ளையாய்.

ஆனால், ரத்தக் களரியாய் இருக்கும் இப்பூமியில் பிள்ளையை நடக்கவிட ஜானகிக்கு மனமே இல்லை.

அங்கொன்றும் இங்கொன்றுமாய் தீக்கிரையாகி இருந்த உடல்கள், உயிருக்குப் போராடிக் கொண்டிருக்கும் மனிதர்கள், தூக்கி வீசப்பட்ட கைகள்... கால்கள்... குழந்தையை நடுங்க வைக்க மேலும் பற்பல.

பெரியவர்களே அஞ்சிக் கூச்சலிடும் அளவிற்கிருந்த அவல நிலையில், மூன்று வயதைக் கூட எட்டாத பிள்ளையின் மனம் பக்குவம் எந்த மூலைக்கு!?

''வேணாம்டா... அம்மாவே தூக்கிக்கிறேன்... அப்பாகிட்ட போய்ட்டா சரியாகிடும்...'' என்றவள், பலத்த சிரமத்துக்கு இடையே பிள்ளையைத் தூக்கிக் கொண்டாள். ஆனால், அடிபட்ட இடக்கையில் பையைத் தூக்க முடியவில்லை.

பிள்ளையை இறக்கிவிட்டு, பையை முதலில் தோளில் மாட்டிக் கொண்டு, மீண்டும் பிள்ளையைத் தூக்கியவளுக்கு கஷ்டமாய் தான் இருந்தது! ஆனாலும், அந்த இடத்தைக் காலி செய்யவேண்டும் என்ற உந்துதல் அவளைச் செயல்பட வைத்தது!

''அம்மு... அம்மா தோள் மேல சாஞ்சுக்கோ கண்ணு... இங்கிருந்து போற வரைக்கும் தலையை நிமித்தக்



கூடாது!''- பெண்ணிடம் நவின்றுவிட்டு, வேகமாய் அங்கிருந்து நகர ஆரம்பித்தாள்.

''கணவனிடம் சென்றுவிட்டால்...எல்லாம் சரியாகி விடும்!'' என்ற எண்ணம் மட்டுமே பலம் சேர்க்க, வேகமாய் வெளியேறினாள்.

கணவன் வந்திருப்பானோ... தங்களைத் தேடினானோ... எங்கே சென்றிருப்பான்... என்ற கேள்விகளால் மூளையை நிரப்பியவள், கணவனைத் தேடிக் கண்களை நாலாபுறமும் அலைய விட்டாள்.

எங்கும் கணவனைக் காணாது மனம் சோர, மேலும் சிந்தனை ஓடியது!

''இங்கே குண்டு வெடித்த காரணத்தினால், அவனால் வர முடியாமல் போயிருக்குமோ?!''

''அவனும் ரயிலில் தானே வரவேண்டும்... இப்போதிருக்கும் நிலையில் கண்டிப்பாக ரயில் வந்திருக்க முடியாது!''

பலவாறாய் ஓடிய சிந்தனை, ''கடவுளே, இப்போது வெடித்த ரயில் ஒருவேளை அவன் வந்த ரயில்!'' என்ற எண்ணத்தில் அப்படியே உறைந்து போனது.

உடனேயே, ''இல்லை...இல்லை...அவன் வரும் ரயில் தடம் இந்த நடைமேடையில் நிற்காது...அவர்கள் வீட்டிலிருந்து வரும் ரயில் மட்டும் தான் இங்கே நிற்கும்... அவன் தான் சொல்லிக் கொடுத்திருக்கிறானே?! மேலும் தானுமே பார்த்திருக்கிறோமே... அவன் வேறு நடைமேடையில் இறங்கி...படி வழியே நடந்து இங்கு வருவான்... ரயிலில் இறங்கியதும் உடனேயே அவர்களிடம்

வரமாட்டான்... இல்லை... இல்லை அவன் வந்த ரயிலாய் இருக்காது!''-தனக்குத் தானே மனம் சமாதானம் செய்து கொண்டது.

ஆனாலும், பயமாய் இருந்தது!

யாரிடமாவது கேட்டு உறுதி செய்து கொள்ள வேண்டும் போல் தோன்ற, சுற்றும் முற்றும் பார்த்தாள்.

பல பேர் இருந்தபோதும், யாரிடம் கேட்பது என்று மனம் தயங்கியது.

தயங்கிக் கொண்டு நிற்க இது நேரமில்லை என்பதை சில வினாடிகளிலேயே உணர்ந்தவள், அங்கிருந்த போலீஸ் காரப் பெண்மணியிடம் சென்று ''மேடம்...'' என்றாள் மெல்ல.

அப்பெண் கேட்கும் விதமாய் திரும்ப, ''இந்த ரயில் எங்கிருந்து வந்ததுங்க மேடம்'' என்றாள் ஜானகி, தமிழில்.

மும்பைக்கார பெண் போலீஸ்க்கு எங்கிருந்து தமிழ் தெரியும்?!

''கியா?! கியா போல்தா தூ?!''-ஹிந்தியில் ''என்ன? என்ன பேசுறே நீ?'' என அவள் வினவ, ஜானகிக்கு பதில் சொல்லத் தெரியவில்லை.

''தமிழ் மேடம்...தமிழ்...யாராவது தமிழ் தெரிஞ்சவங்க இருக்காங்களா?''- சட்டென அழுகை எட்டிப் பார்த்தது ஜானகிக்கு. தாயின் அழுகையில் ஸ்ரீஷா விசுக்கென முகத்தை நிமிர்த்திப் பார்க்க, ''ஷ், பாப்பா... படுத்துக்கோ... எழுந்துக்கக் கூடாது!'' என்று பெண்ணை அதட்டினாள் தாய். படிக்காத தன் மூடத்தனத்தை



எண்ணி வேறு. ஜானகிக்கு மேலும் அழுகை பொங்கியது!

''ஹ்ம்ம். தமிழ் ஹேன்?'' என்ற அப்பெண், அங்கு நின்றிருந்த ஓர் ஆண் மகனிடம் ஏதோ பேசினாள்.

சிறிது நேரத்தில், ''என்னம்மா வேணும்?'' என அவர் தமிழில் வினவ,

''சார்...சார்... நீங்க தமிழா சார்? இப்போ வெடிச்சதே அது எங்கிருந்து வந்த ரயில் சார்? எங்க வீட்டுக்காரர் இங்க வரேன்னு சொல்லியிருந்தார் சார்.... அதான்.... அவர்... அவர் வந்ததோன்னு...''- நாக்கு மேலண்ணத்தில் ஒட்டிக்கொள்ள, வார்த்தைகள் தடுமாறின.

''இது ஹார்பர் லைன் மா....''

ஜானகிக்கு அவர் சொல்லியது புரியவில்லை. ''எங்கிருந்து சார் வருது? ஐரோலி பக்கமிருந்து தானே?'' என்று கேட்டாள் தனக்குத் தெரிந்த அறிவுக்கு உட்பட்டு.

''ஹ்ம்ம் ஆமாமா...'' என்றவர், ஜானகியின் முகத்தில் படர்ந்த நிம்மதியையும் மீறி சிறு பயமிருப்பதை உணர்ந்து கொண்டார்.

''உங்க வீட்டுக்காரர் எங்கிருந்து வருவார்மா?'' என்றார் மேலும் தகவல் சொல்லும் பொருட்டு.

''அவர்... அவர்.... அவர் வேலை பார்க்கிற இடம்... ஹய்யோ...என்ன அது... கடவுளே.... ஹான்... நரிமன்... நரிமன் பாயிண்ட் சார்...''- என்றாள் பதற்றம் மேலோங்க.

''ஹோ!!''- ஓர் வினாடி ஸ்தம்பித்தவர்,

''அந்தப் பக்கமும் நிறைய ஸ்டேஷன்ல குண்டு வெடிச்சிருக்குமா....''- பெரும் குண்டு ஒன்றை அலுங்காது தூக்கி அவள் தலையில் போட்டார்.

''கடவுளே!!!!!!!!!!!!!!!!!!!!''- ஜானகிக்கு இருட்டிக் கொண்டு வந்தது.

''அவள் கணவனுக்கு என்ன ஆனது?!''

''இப்போது தானே, கடவுள் தங்களது உயிரை மயிரிழையில் காப்பாற்றினார் என்று சந்தோஷப் பட்டேன்... இப்போது பார்த்தால்...''

''அத்தாதாதாதாதாதாதாதாதாதாதாதாதான்!!!!!!!!!''- நெஞ்சுக் கூடு காலியானது போல் உணர்ந்தாள் ஜானகி.

''ஐயோ...இப்போ என்ன செய்வேன்!?''- அவள் மறுக,

''உடனே உடைஞ்சு போகாதீங்கமா...நல்லதையே நினைங்க....உங்க வீட்டுக்காரர் போன் நம்பர் இருந்தா அதுக்குக் கூப்பிட்டுப் பாருங்க...கடவுள் இருக்கார்'' என்றார் அந்தப் போலீஸ்காரர்.

''சரி சார்...''- காற்றோடு காற்றாய் உறைந்தன ஜானகி யின் வார்த்தைகள்.

அந்நேரம் பார்த்து ஸ்ரீஷாவும், ''ம்மா...அப்பாக்கு என்னம்மா?'' என்று கண்ணீருடன் கேட்க, அவளால் பதில் சொல்ல முடியவில்லை.

''இல்லடா... அப்பாக்கு ஒண்ணுமாகியிருக்காது...நீ அப்பாவோட போன் நம்பர் சொல்லு... நாம கூப்பிட்டுப் பார்ப்போம்... அப்பா வந்திடுவாங்க... பயப்படாதே!'' - குழந்தைக்குத் தைரியம் சொல்வது போல் தனக்கும் சேர்த்து தைரியம் சொல்லிக் கொண்டாள் ஜானகி.

''இங்க... போன்...'' என அவள் அலைபாய,

''வெளிய இருக்கும்மா... போய் பண்ணிப் பாருங்க...'' என்று கை காட்டிய போலீஸ்காரர், ''முதல்ல, உங்க



கையை முதலுதவி'ல காட்டிக் கட்டுப் போட்டுட்டுப் போங்கம்மா...'' என்றார் கரிசனமாய்.

ஆனால், கணவனின் நலனை விட, வெட்டுப் பட் டிருந்த கை ஒன்றும் பெரிதாய் தெரியவில்லை ஜான கிக்கு.

அவரிடம் அரைகுறையாய் தலையாட்டிவிட்டு, தொலைப்பேசி இருக்குமிடம் என்று அவர் கை காட்டிய இடத்துக்கு விரைந்தாள் அவள்.

அங்கே தொலைப்பேசி இருந்த இடத்தில் பார்த்தால், வெறும் தலைகள் மட்டுமே தெரிந்தன! அத்தனை கூட்டம்! அவரவர் கவலை அவரவர்க்கு!

கூட்டத்தினுள் முண்டி அடித்துக் கொண்டு நகர முடி யாமல், வலக்கையில் பிள்ளை இருக்க, இடக்கையோ அந்த இடிபாடுகளில் சிக்கி பெரும் வலிக்கு ஆளானது!

கண்ணீர் கண்களை முட்டியதில், கன்னம் தாண்டி நெஞ்சம் வரை வழிந்தது வேதனை!

''சார்..ஒரு போன் மட்டும் பண்ணிக்கிறேன் சார்... தயவு செஞ்சு சார்... தயவு பண்ணுங்க சார்...'' என்று அவள் கெஞ்சியதைக் கேட்கும் மனநிலையில் கூட யாருமில்லை.

மேலும், அவளது பாஷை தமிழ் என்பதால்... பலருக்கும் அது புரியவுமில்லை! ''ரோமில் ரோமானிய னாய் இரு'' என்பது ஏட்டுக்கு மட்டுமே சொல்லப் பட்டது அல்லவே!

''கொஞ்சம் தள்ளுங்க சார்... ஒரு போன்...''- அங்கு நின்றிருந்த ஒரொருவரிடமும் கெஞ்சிய நேரம் சுத்தமாய் பயனற்றதாய் போக,

இனிமேல் தாமதிக்க முடியாது என்ற எண்ணத்துடன், கூட்டத்தினுள் முன்னேறினாள் ஜானகி!

வலி தான் என்றாலும் வாழ்க்கையன்றோ அந்தரத்தில் நிற்கிறது!

ஒருவாறாக தொலைப்பேசிக் கருவியின் அருகே சென்றவளுக்கு, அக்கருவி கைக்குக் கிடைக்க மேலும் பதினைந்து நிமிடங்கள் பிடித்தன.

"பாப்பா.... அப்பா நம்பர் சொல்லுடா... வேகமா சொல்லு.... ம்ம்... சொல்லும்மா...." எனப் பெண்ணை உலுக்கி, அவள் சொல்லச் சொல்ல அவற்றை அழுத்தி விட்டு அவள் காத்திருக்க,

"இந்தத் தடத்திலுள்ள எல்லா இணைப்புக்களும் உபயோகத்தில் உள்ளன!" என்ற அறிவிப்பு மட்டுமே அவளுக்குப் பதிலானது! ஹிந்தியில் வெளிப்பட்ட அந்த அறிவிப்பில், மறத் தமிழச்சியான அவளுக்குக் கண்ணீரைத் தவிர வேறொன்றும் வரவில்லை.

மேலும் ஒரு முறை எண்களை அழுத்திவிட்டு, படபடத்த நெஞ்சோடு அவள் காத்திருக்க, "பீன்...ப்ப் பீன்..." என்ற சத்தம் இப்போது பரிசாய் வந்தது.

மேலும் ஒரு முறை முயன்றாள்! அப்போது, ஒலியற்ற நிசப்தம் நெஞ்சினுள் தீயென பரவ, வாழ்வின் ஒளி தெளிவற்ற பிம்பமாய் மங்கித் தெரிந்தது!

நான்காம் முறையாக தொடர்ந்த அவளது முயற்சியை, அங்கிருந்த யாருமே அங்கீகரிக்கவில்லை! வலுக்கட்டாயமாய் அவளிடமிருந்து தொலைப்பேசி பறிக்கப் பட்டது!



அடுத்துப் பேசிய இரண்டு பேருக்குப் பிறகு, ஜானகி தொலைப்பேசியை வாங்க முயற்சி செய்ய, பெரிதாய் கத்தி விட்டனர் குழுமி இருந்தவர்கள்! கூடவே, அவளைக் கூட்டத்தை விட்டு வெளியேயும் தள்ளினர்!

"தள்ளாதீங்க... தள்ளாதீங்க.... ஒரு வாட்டி மட்டும்...." - ஜானகி இறைஞ்ச,

"அம்மாவைத் தள்ளினா அடிப்பேன்...." என்று ஸ்ரீஷா எகிறினாள்.

கூட்டத்தை விட்டு ஒதுக்கப்பட்டப் பின்னரும், மீண்டும் அதனுள் புக முயன்ற தாயை, "ம்மா...இங்க வேணாம்....இங்க எல்லாரும் பாட்...வேற எங்கயாவது போலாம்..." என்று தடுத்தாள் ஸ்ரீஷா.

"எங்கடா போறது? வேற எங்கேயும் போன் இல்லையே!"- ஜானகி மறுகிக் கொண்டிருக்கும் போதே,

அங்கு வந்த தன்னார்வ தொண்டு நிறுவனத்தின் மருத்துவர்கள் சிலர், காயம்பட்ட அவளது கையைப் பார்த்துவிட்டு, அவளை அங்கிருந்த அவசர உதவிக்கு இட்டுச் செல்ல முயன்றனர்.

தன்னை யாரோ இழுப்பதை உணர்ந்து, "ஹய்யோ விடுங்க.... நான் போன் பண்ணனும்...எங்க வீட்டுக்காரருக்கு போன் பண்ணனும்...விடுங்க..." என்று திமிறினாள்.

அவர்களோ, "முதலுதவி செய்து கொண்டு செல்லலாம்" என்று வலுக்கட்டாயமாய் இழுத்தனர். மருத்துவக் கல்லூரி மாணவர்கள் பலரும், தங்களாலான உதவியாய் இதைச் செய்து கொண்டிருந்தனர்.

"அவருக்கு என்னாச்சன்னு தெரியாம... நான் எதுவும் பண்ணிக்க மாட்டேன்... விடுங்க... நா அவர்கிட்ட பேசிட்டு வரேன்... அத்தான்... அத்தான்... அவருக்கு போன் பண்ணனும்!" - ஜானகியும் பலம் கொண்ட மட்டும் அவர்களிடமிருந்து திமிறினாள்.

அவளது தமிழ் உச்சரிப்பில், "போன்" என்பதற்கு மட்டும் அர்த்தம் புரிய, அங்கிருந்த மாணவன் ஒருவன், தனது கைப்பேசியை எடுத்துக் கொடுத்து "இதுல பேசங்க் மேடம்" என்றான்.

"கடவுளே! ரொம்ப நன்றி சார்! ரொம்ப ரொம்ப நன்றி!" என்றுவிட்டு, மகளிடம் நம்பர் கேட்டு, கணவனுக்கு முயன்றாள்.

பத்து முறைக்கும் மேலாக தொடர்ந்த அவளது முயற்சிகளின் ஊடே, அவளது கை காயத்திற்குக் கட்டுப் போட்டு முடித்திருந்தனர் மாணவர்கள்.

உதடுகள் அழுகையில் பிதுங்க, கையாலாகாத் தனத்துடன் "லைன் கிடைக்கவே இல்லை சார்... இந்தாங்க..." என்று கைப்பேசியை அவர்களிடமே நீட்டிவிட்டு, அங்கிருந்து நகர்ந்தாள் ஜானகி.

கை வலி பெரிதும் குறைந்திருந்த போதும், மனதின் தேடல் ரணமாய் அவளைக் கீறியது!

"நாய்க்கு முழு தேங்காய் ஒட்டுமா?" என்ற பழமொழிக்கு எற்ப, எந்த ஒரு சந்தோஷமும் தன் வாழ்வில் நிலைத்திருக்கக் கூடாது என்று கடவுள் முடிவு செய்து விட்டாரோ என்று மனம் தவித்தது!



"எவ்வளவு இனிமையாய் ஆரம்பித்தக் காலை வேளை! இப்படி ஓர் துயரத்தில் இட்டு வந்து நிறுத்தி விட்டதே!"

"ஒருவேளை, கணவன் தன்னிடம் அன்பாய்... பிரியமாய்... ஆசையாய் நடந்து கொண்டிருக்காவிட்டால் இந்தக் கஷ்டமே வந்திருக்காதோ!? எல்லாம் என் ராசி! நான் சந்தோஷமாகவே இருக்கக் கூடாது என்று கடவுள் எண்ணிவிட்டார் போல!

"நான் சந்தோஷமாய் இல்லாவிட்டாலும் பரவாயில்லை... என் கணவன் நன்றாக இருக்கவேண்டும்... காதல் கணவனாய் இல்லாவிடினும்... என் கணவனாய்... என் மகளுக்குத் தகப்பனாய்.... உயிருள்ள ஓர் மனிதாய் அவனை வாழவிடு இறைவா!" - ஜானகியின் எண்ண அலைகள், பிரார்த்தனை அலைவரிசைகளாய் மாறி கடவுளை எட்ட முயன்றது!

மீண்டும் ஓர் முயற்சியாய், பொது தொலைப்பேசி இருந்த இடத்திற்குச் சென்று பார்த்தாள். ம்ஹூம்... கூட்டம் கூடியிருந்ததே ஒழிய, குறைந்த பாடாய் இல்லை!

வீட்டுக்குள்ளேயே முடங்கி இருந்தவளுக்கு, மேற்கொண்டு என்ன செய்வதென்றும் தெரியவில்லை.

சோர்ந்து துவண்டப் பிள்ளையைத் தூக்கிக் கொண்டு, ரயில் நிலைய வாயிலுக்கும், எப்போதும் அவர்கள் காத்திருக்கும் இடத்திற்குமாய் அல்லாட ஆரம்பித்தாள் அவள். தீக்கிரையாகி இருந்த இடங்களைக் கடக்கும் போதும், உயிருக்குப் போராடிக் கொண்டிருந்தவர்களைக் கடக்கும் போதும், "பாப்பா... தலையை நிமிர்த்தாதே...

அம்மா தோளிலேயே சாஞ்சுக்கோ!!!'' என்று பிள்ளையை அறிவுறுத்த மறக்கவில்லை.

## மணி இரவு 9:20

தேடலின் முடிவு நோதலில் முடியுமா அல்லது கூடலில் திளைக்குமா என்ற பதற்றத்துடன், அந்தேரி ரயில் நிலையத்தினுள் நுழைந்தான் ஸ்ரீராமன்!

கடற்கரையில் இருக்கும் களங்கரை விளக்கம், நாலா பக்கமும் சுழன்று பிறருக்கு விடியலாய் நிற்குமே, அதைப் போலவே ஸ்ரீராமனின் பார்வையும் நாலா புறமும் சுழன்றது! பிறருக்கு விடியலாய் அல்ல! தனது விடியலைத் தேடி!

ரயில் நிலையத்தில் வாசல் தொடங்கி, ஒரோர் அடியாய் அவன் அலசிக் கொண்டே வர, கடந்து சென்ற ஒரோர் ஸ்ட்ரெச்சரும் நெஞ்சினுள் அமிலத்தைக் கக்கியது!

மனதின் ஓர் ஓரம் ''வழக்கமாய் அவர்கள் காத்திருக்கும் இடத்திற்குச் செல்'' என்று உந்தித் தள்ள, போகும் வழியைக் கவனமாய் ஆராய்ந்தவாறே (பெண்ணும் மனைவியும் இருக்கிறார்களா என்று தான்) வேகமாய் நடைமேடை நோக்கி விரைந்தான்.

ஸ்ரீராமனை உந்திய அதே உள்ளுணர்வு ஜானகியிடம் தன் வேலையைக் காட்டியதன் விளைவாக, அவளும் அங்கே தான் நின்றிருந்தாள்.



வெளியே விரிந்து கிடந்த அவலங்களைப் பெண் கண்டு விடக் கூடாதே என்பதற்காக அவளது தலையைத் தோளில் அழுத்தியவாறு நின்றிருந்தவளின் முதுகு மட்டுமே, அங்கே விரைந்தோடி வந்த ஸ்ரீராமனின் கண்களில் பட்டது!

கூடவே, பெண்ணின் நீல வண்ணக் காலணிகள் இரண்டும், தோகைகள் என இருபுறமும் விரிந்திருக்க, கிட்டத்தட்ட இரண்டு மணி நேரமாய் உள்ளத்தை அறுத்துக் கொண்டிருந்த உயிர் வாதனை முடிவுக்கு வந்ததில், கண்கள் குளமாகின - ஆனந்தமாய்!!

வேக எட்டுக்கள் இட்டு அவர்களை நெருங்கியவனுக்கு, கடைசி வினாடியில் ''இது ஆசை கொண்ட மனதின் கற்பனையோ!? நிஜமற்ற பிம்பமோ!'' என்ற பயம் பற்றிக் கொண்டது!

''இல்ல... இல்ல... இருக்காது! இது நிஜம் தான்!'' என்று தனக்குத் தானே சொல்லிக் கொண்டவன், ஒரு முறை தலையை உலுக்கி விட்டுக் கொண்டான்.

''என் குடும்பமாய் இருக்கவேண்டுமே!'' என்று உதடுகள் பிரார்த்திக்க,

''வேராளாய் இருந்துவிடுமோ?!?'' என்ற பயத்தில் உடம்பு குலுங்க,

கைகள் நடுங்க,

மெல்ல தன் முன்னே நின்றிருந்த பெண் பாவையின் தோளில் கை வைத்தான் ஸ்ரீராமன்.

அந்த ஸ்பரிசத்தில் ஜானகி திரும்புவதற்கு முன்னர், ஸ்ரீஷா தலையை உயர்த்தித் தந்தையை அடையாளம்

கண்டு கொண்டதில், ''அப்பா...'' என்று அழைப்பும், ''அத்தான்...'' என்ற அழைப்பும் ஒருங்கே சங்கமித்து, அமுதகீதமாய் ஸ்ரீராமனின் காதுகளில் பொழிந்தது!

''ஸ்ரீ குட்டி!!!!!!!!!!'' - மகளைக் கைகளில் அள்ளிக் கொண்ட ஸ்ரீராமன், ''அத்தான்... அத்தான்...'' வேறு வார்த்தைகளே தெரியாதவள் போல் தவித்து மருகி நின்ற ஜானகியைத் தோளோடு அணைத்துக் கொண்டான்.

''கணவன் உயிரோடு இருக்கிறான்!'' என்பது மட்டுமே மனதில் பதிய, சுற்றுப்புறம் மறந்து கணவனிடம் ஒண்டினாள் ஜானகி!

ஸ்ரீராமனாலும் எதுவும் பேச முடியவில்லை!

ஒருவர் மற்றவரின் அணைப்பில் கட்டுண்டு இருப்பதே, அவர்கள் எடுத்த ஜென்மத்தின் மோட்சமாய் பட, அதை அனுபவித்தபடி மௌனம் காத்தனர்!

ஸ்ரீஷாவும் கூட, ''ப்பா... ப்பா... ப்பா...'' என்பதைத் தவிர எதையும் பேசாமல், தந்தையின் கழுத்தை இறுகப் பற்றிக் கொண்டு வாளா இருந்தாள்!

அவர்கட்குள் நிலவிய அந்த மௌனம், ஆயிரமாயிரம் அர்த்தங்களை பறைசாற்றியது!

ஜானகியின் கைகள் கணவனது முதுகை இறுகப் பற்றியிருக்க, கண்கள் அவன் மேனியை அங்குலம் அங்குலமாய் வலம் வந்தது! உயிருக்கு ஆபத்தின்றி இருக்கலாம்... ஆனால் காயம் பட்டிருந்தால் என்று தாய்மனம் தவித்தது!

முகம் முதல் கால் வரை அவனை அலசியவளின் பார்வையில், கடைசியாகத் தான் அவனது உள்ளங்கைக்



காயம் பட்டது! ஸ்ரீஷாவை நெஞ்சோடு அணைத்திருந்ததால் பாதி காயம் மட்டுமே தெரிய, ''என்ன அத்தான் இது... ஹய்யோ கையில காயம்... என்னாச்சு... என்னாச்சு... எப்படிப் பட்டுச்சு அத்தான்... ஹய்யோ எவ்வளவு ரத்தம்!'' என்று பரிதவித்துவிட்டாள், அந்த அன்பு மனைவி!

அப்போது தான் ஸ்ரீராமனுக்குத் தன்னுணர்வே துளிர்த்தது!

அலைபாய்ந்த மனைவியைத் தன் தோள் வளைவில் அழுத்தி, ''ஒண்ணுமில்லைடா. தோலைத்தான் லேசா கிழிச்சிருக்கு... மத்தபடிக்கு ஒண்ணுமில்லை... பயப்படாதே!'' என்றான் ஆறுதலாக.

''இல்ல அத்தான்... அப்படி சாதாரணமா இருக்கக் கூடாது... வாங்க இந்த காயத்துக்கு மருந்து போட்டு கட்டுற இடமிருக்கு... அங்க போகலாம்... போய் ஒரு கட்டுப் போட்டுக்கலாம்...'' என்றவள் அவனை வாயில் புறம் நகர்த்த முயன்றாள்.

கூடவே, ''அம்முக்குட்டி, அப்பாக்குக் கையில் காயம் பட்டிருக்குடா... உன்னைத் தூக்கிட்டு வரது கஷ்டமா இருக்கும்... வா அம்மாகிட்ட வந்திடு...'' என்று மகளை அவனிடமிருந்து வாங்க முயன்றாள்.

''இல்லமா... அவ என்கிட்டேயே...'' என்று சொல்லத் தொடங்கிய ஸ்ரீராமன், ஜானகியின் இடக்கையில் போடப்பட்டிருந்த பெரிய கட்டை அப்போதுதான் கவனித்தான்!

எவ்வளவு பெரிய கட்டு! இதை மறந்து... எனது சின்னக் காயத்திற்கு எத்தனை தூரம் பரிதவித்து விட்டாள்!

என்ன விதமான அன்பு இது! இதற்குத் தான் தகுதி யானவனா! - மனம் அவனைக் கூறு போட்டது!

அவனது வாக்கியம் முழுமையடையாமல் நின்றதைக் கூட கவனிக்காமல், பிள்ளையை அவனிடமிருந்து வாங்கும் முயற்சியில் ஈடுபட்டிருந்த மனைவியை, இடக்கையால் இழுத்து மார்போடு அழுத்திக் கொண்டவன்,

''என்ன ஜானு இது? இவ்வளவு பெரிய காயம்? என்னாச்சு மா? ரொம்ப வலிக்குதா? கடவுளே! இவ்வளவு நேரம்... இதைக் கூட கவனிக்காம இருந்துட்டேனே!'' என்று மறுகித் தவித்துப் போனான்.

''பயப்பட எதுவுமில்லை அத்தான்... மருந்து வச்சு கட்டெல்லாம் போட்டுட்டாங்க... முதல்ல உங்களைப் பாப்போம் வாங்க...'' என்றவள், அவனது அணைப்பிலிருந்து விலக முயன்றாள்.

''இல்லை... எங்கேயும் போகாத. இங்கேயே என் கைக்குள்ளேயே இரு... அப்போ தான், உனக்கும் ஸ்ரீக்கும் எதுவுமில்லைன்னு என் மனசு ஒத்துக்கும்! ரெண்டு மணி நேரமா ரொம்பவே தவிச்சுப் போயிட்டேன்மா...'' என்றான் ஸ்ரீராமன், சட்டென எட்டிப் பார்த்தக் கண்ணீருடன்.

அவளும் அனுபவித்தவள் தானே! கண் மூடி நின்றிருந்தவளின் நெற்றியில் அவனது கண்ணீரின் ஒரு சொட்டு விழுந்து மீண்டது!

சட்டென தலையுயர்த்திப் பார்த்தவள், ''அத்தான்!'' என்றாள் பிரமிப்பாய்!



''ஆமாடா... உங்களை முழுசா பார்க்கிற இந்த நிமிஷம் வரைக்கும் என் உயிர் என்கிட்டேயே இல்லை... இது நாள் வரைக்கும் என்னோட வறட்டுப் பிடிவாதத்தால் தொலைச்ச வாழ்க்கையை இனிமேல் விதி வசத்தால முழுசா தொலைச்சிட்டேனோன்னு ரொம்ப பயந்து போயிட்டேன்மா...'' என்றான் உண்மையான வருத்தம் மேலோங்கிய குரலில்.

''ச்சே... ச்சே... ஏன் அத்தான், அப்படியெல்லாம் பேசறீங்க?!'' என்று வேகமாய் அவனை இடையிட்ட ஜானகி,

''நானும் தான் ரொம்பப் பயந்துட்டேன் அத்தான்... அதைவிட பாப்பா...'' என்று தொடங்கி, தந்தையின் மார்பில் சாய்த்திருந்த தலையை நிமிர்த்தக் கூடப் பயந்து அவனுடனே ஒண்டிக் கொண்டிருந்த ஸ்ரீஷாவின் முதுகை வருடி, இங்கே நடந்ததை விவரித்தாள்.

மூன்று வயது கூட நிரம்பாத அச்சின்னச் சிட்டு பார்த்த கொடூரங்கள் மனதில் படமாய் ஓட, தன் மார்பில் புதைந்திருந்த பெண்ணை நிமிர்த்தி ''ஸ்ரீ பாப்பா... ரொம்பப் பயந்து போயிட்டாளா? ஒண்ணுமில்லைடா ராஜாத்தி! இதோ அப்பா இருக்கேன்... அம்மா இருக்கா... ஒண்ணுமே நடக்கலை என்னடா?'' என்றான் அவளது நெற்றியில் அழுத்தமான முத்தம் ஒன்றை வைத்து.

''ம்ம்... தொம்பப் பயமா இதுந்துச்சுப்பா... இங்க வேணாம்பா... பீச் வேணாம்... சில்லு தண்ணி வேணாம்... போலாம்... எனக்குப் பிடிக்கவே இல்லை...'' - உதடு பிதுங்க, கண்ணீர் உகுத்தாள் மகள்.

''போலாம்... இங்கிருந்து போய்டலாம் சரியா? அழக் கூடாது! என்னோட ஸ்ரீ பாப்பா... குட் கேர்ள் இல்லையா?

அழக் கூடாது! இனிமேல் இப்படி நடக்கவே நடக்காது! நாம இங்க வரவே வேண்டாம்! என்ன சரியா? அழாதீங் கடா... வாங்க போய்டலாம்!'' என்றவன், வாயில் நோக்கி நடக்க ஆரம்பித்தான்.

கண்ணீரை மீறிய சிரிப்புடன் கணவனைப் பின் தொடர்ந்த ஜானகி, சட்டென அவன் நிற்கவும், என்ன வென்று விழித்தாள்.

''அந்த பையை என்கிட்டே கொடு!'' என்று ஜானகி யின் கையிலிருந்த பையை வாங்க முயன்றான்.

''ம்ஹூம். விடுங்க அத்தான்... உள்ளதே கையில அடி பட்டிருக்கு... அதோட பாப்பா வேற... உங்க பை வேற இருக்கு... வேணாம் அத்தான்... கை வலிக்கும்... விடுங்க...'' - ஜானகி பின்னடைய,

''லேசான கீறலுக்கு எல்லாம் ஆஸ்பத்திரில போய் பத்து நாள் படுத்துக்கச் சொல்வே போலிருக்கே... சும்மா குடுடி... கையே தெரியாம ஒரு முழத்துக்கு கட்டுப் போட்டிருக்காங்க... இதில பையை தூக்கிட்டு வர்ராலாம்... குடுன்னு சொல்றேன்... குடுடி...'' - பிடுங்காத குறை யாக அவளிடமிருந்து பையை எடுத்துக் கொண்டான், ஸ்ரீராமன்.

இதற்கு முன்னாடியும் ''டி'' போட்டிருக்கிறான். ஆனால், இந்த ''டி'' மிகவும் தித்திப்பாய் இருந்தது, ஜானகிக்கு!

இரண்டடி முன்னே சென்று கொண்டிருந்த கண வனை ஒரே எட்டில் நெருங்கியவள், அவனது வலக் கையோடு தன் கரங்களைப் பிணைத்துக் கொண்டாள் உரிமையோடு!!



உரிமை மிகுந்த அந்தத் தீண்டல் தனக்கும் பிடித்தது என்பதற்கு சான்றாய், ஸ்ரீராமனின் பார்வை ஜானகியைத் தீண்டிச் சென்றது!!

பொது தொலைப்பேசி இருந்த இடத்தை அவர்கள் கடக்கும் போது, ''ப்பா... இங்க தான் அம்மாவைத் தள்ளி விட்டாங்க.. அம்மா டொம் கீல விலுந்துட்டாங்க!'' - தன் பெரிய விழிகளாலும் கைகளாலும் குற்றம் சாற்றும் குரலில் கூறினாள் ஸ்ரீஷா.

''அப்படியாடா? ஏன் ஜானுமா... இங்க வந்த? வேற எங்கேயும் அடி பட்டுடுச்சா?'' என்று அவன் மனை யாளைக் கேட்க,

அவனது கேள்வியை விடவும், ''ஜானு'' என்ற அழைப்பே ஜானகியின் மனதில் ரீங்காரமிட்டது! இரண்டு முறைக்கும் மேலாக அவனிடமிருந்து அந்த அழைப்பு வந்திருந்தபோதும், அவளது செவிகளில் அது நிறைவது இது தானே முதல் தடவை!!

கண்ணில் காதல் பொங்க நின்றிருந்தவளின் முன்னே சொடக்குப் போட்டவன், ''என்ன கனவு? எங்கே யாவது அடி பட்டிருக்கான்னு கேட்டேன்?'' என்றான் மீண்டும்.

''இல்லையே... எங்கேயும் அடி படலை அத்தான்... உங்களுக்குக் கூப்பிடத் தான் இங்க வந்தேன். ஆனா லைன் கிடைக்கவே இல்லை.. அப்படியே கிடைச்சாலும் ஏதோ ஹிந்திலேயே பேசினா... நீங்க இல்ல... வேற யாரோ ஒரு பொண்ணு... எனக்கு என்ன பண்றதுன்னே தெரியலை... மூணாங் கிளாஸ்க்கு மேல படிச்சிருந்தா ஏதாவது புரிஞ்சிருக்கும்... ம்ம்ம்..'' - நடந்ததை

விவரித்தவள், அவனது ''மக்கு, மண்ணாந்தை'' என்ற திட்டிற்காக காத்திருக்க,

அவனோ, ''இங்க குண்டு வெடிச்சதில எல்லோரும் எல்லோருக்கும் போன் பண்ணி விசாரிச்சுட்டே இருந் திருப்பாங்க இல்ல... அதான்டா உனக்கு கிடைக்கலை... இதுக்குப் போய் உன்னை எதுக்கு திட்டிக்கிறே!!'' என்று அவளைத் தேற்றினான்.

ஜானகிக்கு அனைத்துமே வியப்பாய் இருந்தன! தன் கணவனா... தன் கணவனா என்று நெஞ்சம் பலமுறை தனக்குத் தானே கேட்டுக் கொண்டது!

கணவனின் அன்பில் திளைத்தபோதும், தன்னுள் இருக்கும் தாய் மனதின் ஈரத்தை அவள் தொலைக்க வில்லை!

முதலுதவி செய்யும் இடத்தைக் கடந்தபோது, ''அத் தான்... உங்க காயத்தைக் காட்டி மருந்து போட்டுட்டுப் போய்டலாம் அத்தான்...'' என்றாள் கெஞ்சலாக.

''இல்லைம்மா... எனக்கு ஒண்ணுமில்லை...'' என்று தொடங்கியவன், அவளது இறைஞ்சல் பார்வையில் ''சரி வா...'' என்று அங்கே நடந்தான்.

''இங்க உயிர் போற நிலையில பல பேர் இருக்கும் போது, இந்தக் காயத்துக்காக போய் நின்னா சிரிப்பாங்க ஜானு!'' என அவன் சொன்னதை அவள் காதிலேயே வாங்கிக் கொள்ளவில்லை. தனக்கு கட்டுப் போட்ட மாணவனிடம் சென்று, ''சார்...'' என்று அழைத்தாள்.

ஆனால், அவனிடம் மேற்கொண்டு என்ன பேசுவது என்று தான் தெரியவில்லை. கையால் கணவனைக் காட்டி, அவனது காயத்திற்கு மருந்திடுமாறு சைகையால் காட்டினாள்.



அதற்குள் ஸ்ரீராமனே ''சின்னக் காயம் தான். ஜஸ்ட் ஒரு ஆயின்ட்மென்ட்டும்... பிளாஸ்டரும் தாங்க'' என்றான் ஹிந்தியில்.

மருந்திடுவதற்கு ஏதுவாக, மகளை அவனிடமிருந்து தூக்கிக் கொள்ள முயல, ''ஸ்ரீகுட்டி... கொஞ்ச நேரம் கீழ நில்லுடா... பாப்பா பிளாஸ்டர் போட்டுட்டு உன்னைத் தூக்கிக்கிறேன்'' என்று மகளிடம் பயின்றவன், ''அவளைத் தூக்காதே! கை அலண்டு போய்டும்!'' என்றான் ஜானகி யிடம் கண்டிப்புடன்.

அந்த கண்டிப்பு கூட, ஜானகிக்கு இனித்தது! தன் நலம் பேணி வந்த கண்டிப்பல்லவோ!

ஐந்தே நிமிடத்தில் ஸ்ரீராமனின் வைத்தியம் முடிந்து விட, ''என்ன அத்தான்... அவ்வளவு தானா? நல்லா பார்க்கச் சொல்லுங்க அத்தான்... எவ்வளவு பெருசா கீறி இருக்கு... வேற யாரையாவது கூப்பிடுவோமா?'' என்று அஞ்சினாள் மனைவி.

''நான் சொன்னா நீ நம்பலை... இந்த காயத்துக்கு இதுக்கு மேல் வைத்தியம் பார்த்தா என்னைப் பைத் தியம்ன்னு நினைப்பாங்க.. .சும்மா நட ஜானுமா...'' என்று சிரித்தான் ஸ்ரீராமன்.

கணவனின் சிரிப்பில் ஜானகியின் அதரங்கள் விரிந்த போதும், அவளது கண்கள் கவலையுடன் கைகளை மீண்டும் ஆராய்ந்தன!

''இந்த அன்புக்கு முன்னே நான் வாங்கி வந்த தங்க மும்... வைரமும் ஈடாகுமா?'' என்று விம்மியது ஸ்ரீராம னின் நெஞ்சம்!

அவனது பார்வை உணர்ந்து, கைகளிலிருந்து கண்களுக்கு முகத்தைத் திருப்பிய ஜானகி, கண் வழியே தன் நெஞ்சை எட்டிய அவனது தீண்டலில் ''என்ன அத்தான்!'' என்றாள் சிறு கூச்சத்துடன்.

அதில் உடல் சிலிர்த்து, தோள் குலுக்கியவன், ''வீட்டுக்குப் போய்ச் சொல்றேன்!'' என்றான், பிள்ளையைத் தூக்கியவாறே.

மகளுமே, ''போலாம்... போலாம்...'' என்று ராக மிழுத்துக் கொண்டிருந்த படியால், மேலே ஏதும் பேசாமல் ரயில் நிலையத்தை விட்டு வெளியே வந்தனர்.

அங்கிருந்து வெளியேறிய பின்னரும், ஸ்ரீஷாவின் அழுகை குறையாமல் இருக்க, ''என்னம்மா... என்ன பண்ணுது? ஏன்டா புரியாம அழறே?'' என்று தந்தை வினவ,

''அம்முக்குட்டி, பசிக்குதாடா?'' என்று நாடியைப் பிடித்தாள் தாய்.

''ம்ம்...'' - பிள்ளை லேசாய் முனங்கியதும், கணவனிடமிருந்து பையை வாங்கி, அதிலிருந்த பிஸ்கட் பாக்கெட்டை பிரித்து ஊட்டினாள்.

''உங்களுக்கும் பசிக்குமே அத்தான்... இந்தக் கிச்சடியை சாப்பிடுங்க...'' என்று கிச்சடி டப்பாவையும் ஸ்பூனையும் அவனிடம் நீட்டியவள், பெண்ணைத் தன்னிடம் வாங்கிக் கொண்டாள்.

தன் பசி மறைத்து, பிள்ளை பசி போக்கியவளின் வாயருகே ஒரு ஸ்பூன் கிச்சடியைக் கொண்டு சென்றவன், ''இந்தா... நீயும் சாப்பிடு!'' என்றான்.



''அய்யே! என்னத்தான்... நடு ரோட்டில...'' ஜானகியின் முகம் வெட்கத்தில் சிவக்க,

''நாகரீகம் பார்க்கிற நேரமில்லை இது! ஹ்ம்ம் வாங்கு! உனக்கும் தானே பசிக்கும்... அதுவும் கை வலியோட இருக்கிற உனக்குத் தான் கண்டிப்பா சாப்பாடு தேவை!'' என்றவன், வலுக்கட்டாயமாய் ஊட்டினான்.

பாதிக்கும் மேலாய் அவளுக்கு அவன் கொடுக்க, ''நீங்களும் சாப்பிடுங்க... அங்க இருந்து ஓடியே வந்திருக்கீங்களே!'' - அன்புப் பரிமாறலாய் மாறிப்போனது அவர்களது உரையாடல்.

அதற்கொரு முடிவாய், ''ம்மா போதும்மா... கொஞ்சூண்டு தண்ணி தா... அப்தம் வீட்டுக்குப் போலாம்...'' என்று தன் ''போலாம்'' பாட்டைத் தொடங்கிவிட்டாள் ஸ்ரீஷா.

பெண்ணின் அழுகையுடன், இரவை நெருங்கிக் கொண்டிருந்த நேரமும் ஸ்ரீராமனை வேகமாய் நகர வைத்தது.

''இங்க இருந்து நம்ம வீட்டுக்கு எப்படி போறதுன்னு தெரியலை... பஸ்... ஆட்டோ ஏதாவது இருக்கான்னு பார்க்கலாம்... இல்லைன்னா நடந்து தான் போயாகணும்.. எல்லா பக்கமும் ஒரே டிராபிக் ஜாம்...ஹ்ம்ம் சீக்கிரம் வாம்மா... நட... நட...'' என்று மனைவியை விரட்டியவாறே, வேக எட்டுக்கள் வைத்தான்.

அரை மணி நேரம் நடந்திருப்பார்கள். அதற்குள் ''ஜானு... ரொம்ப வலிக்குதாடா... நடக்க முடியலையா... ஏதாவது லாட்ஜ் இருந்தா பார்க்கட்டுமா...'' என்று ஐம்பது முறைக்கும் மேலாய் கேட்டிருப்பான்.

"இல்லத்தான்... வீட்டுக்கே போய்டலாம்..." என்ற ஜானகி, கடைசியாய் அவன் கேட்டபோது, அவனை நெருங்கி நடந்தவாறே "எனக்கு ஒண்ணுமில்லை அத்தான்! பயப்படாதீங்க!" என்றாள் சிறு புன்னகையுடன்.

அதில் நடை தடைபட, ஓர் நிமிடம் நின்றவன், இடக்கையால் மனையாளைத் தன் அணைப்பிற்குள் கொண்டு வந்து "ம்ம். இது நாள் வரைக்கும் உன்னைக் கஷ்டப்படுத்தினது போதும்டா. இனிமேலும் நீ கஷ்டப் படக்கூடாது!" எனக் கூறியபோது அவனது குரலில், உண்மையான நேசம் வெளிப்பட்டது!

அதில் சிலிர்த்த ஜானகியும், "நீங்களும் ஸ்ரீகுட்டியும் இருக்கும் போது, நான் ஏன் கஷ்டப்படப் போறேன்!" என்றாள் பதிலுக்கு, ஆத்மார்த்தமாய்!

கூடவே, அவனுக்குத் தெரியாத ஒன்றை நினைவு படுத்துவது போல் "அத்தான்... இது ரோடு!" என்றாள் சங்கோஜத்துடன்.

"இன்னைக்கு ரோடு... வீடு... போறவன்... வரவன்னு நாகரீகம் பார்க்கிற நிலமையில நான் கண்டிப்பா இல்லை! ஏன்னா, நான் அனுபவிச்ச வேதனை அப்படி!" என்ற ஸ்ரீராமன், அவளைக் கையணைப்பில் வைத்த வாறே தன் நடையைத் தொடர்ந்தான்.

## மணி இரவு 10:45

அந்தேரியிலிருந்து அவர்கள் கிளம்பி ஒரு மணி நேரத்திற்கும் மேலாகி இருந்தது! ஆனால், பேருந்தோ ஆட்டோவா கிடைக்கும் பாடாய் தான் இல்லை!



காடோக்பர் பேருந்து நிலையம் வரைச் சென்றுவிட்டால், அங்கிருந்து ஏதேனும் பேருந்து இருக்கக் கூடும் என்று வழிப்போக்கர்கள் கூற, அதை நோக்கித் தன் குடும்பத்துடன் நடந்து கொண்டிருந்தான் ஸ்ரீராமன்.

மாலையில் தாதரிலிருந்து அந்தேரி வந்தபோது வலித்ததை விடவும் இப்போது கால்கள் அதிகமாய் வலித்தன தான்! ஆனால், இந்த வலியை வலியற்றதாய் ஆக்கும் வண்ணம் அவனது வாழ்க்கை மீட்கப்பட்டிருந் ததே! அதுவே ஸ்ரீராமனுக்குப் போதுமானதாய் இருந்தது! இந்த சந்தோஷ சங்கமத்திற்காக எவ்வளவு வலியையும் பொறுக்கலாம் என்று கூடத் கவித்துவமாய் தோன்றியது!

தன் வலி பொறுத்து நடந்தவனுக்கு, ஜானகியின் சோர்ந்த முகத்தைக் காண சகிக்கவில்லை! அன்பு மனையாள் ஆகிப் போனவள் அன்றோ! அவள் தன்னிடம் காட்டிய... காட்டும்... காட்டிக் கொண்டே இருக்கப் போகும் அன்பிற்கு இணையாய் அவனால் எதையும் செய்யமுடியாது என்றாலும், அதே அன்பை அவளிட மும் செலுத்துவது என்று முன்பே முடிவு செய்திருந்தான்!

அன்பின் வெளிப்பாடாய், போகும் வழியில் ஏதேனும் நல்ல தங்கும் விடுதி இருக்கிறதா என்று ஆராய்ந்தான் அவன்.

அப்படியொரு விடுதியின் பலகையைப் பார்த்து விட்டு அவன் நிற்கவும், "எவ்வளவு நேரமானாலும் வீட்டுக்கே போய்டலாம் அத்தான். பாப்பா ரொம்ப பயந்திருக்கா... புது இடம்... புது சூழல்ன்னா இன்னும் பயம் தான் கூடும்... வேணாம் அத்தான்... நம்ம வீட்டில நம்ம கட்டில்ல போய் படுத்தாலே அவளுக்குப் பாதி

சரியாகிடும்... அதுவுமில்லாம, ஊர் முழுசும் சூழ் நிலையே சரியில்லை... எங்க எப்போ என்ன நடக்கு மோன்னு திக்கு திக்குன்னே இருக்கு... எதுக்கு அத்தான் வீண் வம்பு... வீட்டுக்குப் போய்டலாம்...'' என்றாள் ஜானகி, காரணக் காரியங்களுடன் கூடவே, பாதி தூக்க மும் பாதி பசியுமாய் முனங்கிக் கொண்டிருந்த பெண் ணின் முதுகை வருடி விட்டன அவளது விரல்கள்.

தான் என்றல்லாது கணவன், குழந்தை என்று குடும் பத்தை முன்னிலைப் படுத்தும் குணம், பெண்கட்கு தாலி ஏறியதுமே வந்துவிடுமோ!?

மனைவியின் வார்த்தைகளில் மறுக்க எதுவுமே இல்லாததால், ஸ்ரீராமனும் வீடு நோக்கிப் பயணப்பட் டான்.

ஆனால், ''வெளியில தங்கவேண்டாம்மா... ஆனா, வெளிய எங்கேயாவது சாப்பிட்டுப் போய்டலாம்... பஸ் பிடிக்கவே இன்னும் இருபது நிமிஷத்துக்கும் மேல நடக்கணும் போல... அப்புறம் எவ்வளவு நேரமாகுதோ தெரியலை... வீட்டுக்குப் போய் சமைச்சு... சாப்பிட்டு... கண்டிப்பா விடிஞ்சிடும்... சொன்னா கேளு... இங்கேயே பக்கத்தில சாப்பிடலாம்... என்ன?'' என்றான் ஸ்ரீராமன், அனைவரது பசி போக்கும் விதமாய்.

சுற்றும் முற்றும் ஒரு முறை பார்த்துவிட்டு, ''ம்ம் சரி அத்தான்!'' என்றாள் ஜானகி, அரை மனதாக.

''சாப்பிடலாம்'' என்று சொல்லிவிட்டானே தவிர, ஒரு சின்னக் கையேந்தி பவனைக் கண்டு பிடிப்பதற்கே கிட்டத்தட்ட பதினைந்து நிமிடங்கள் பிடித்தன. ஆனால், அதில் பீஃபும் மட்டனும் கமகமக்க, ஸ்ரீராமன் சலித்துப் போனான்.



''ப்ச்... ஒரே நான்-வெஜ்ஜா இருக்கே...'' என அவன் புலம்ப,

''நீங்களும் பாப்பாவும் சாப்பிடுங்க...'' என அவள் சமாதானம் செய்ய,

''அப்புறம்... நீ என்ன பட்டினியா கிடப்பியா? லூசாடி நீ! பெரிய பதி விரதைன்னு மனசில நினைப்பு!'' என்று பொறுமையற்று எரிந்து விழுந்தான் கணவன்.

அவனுக்கு அசைவம் உண்டு பழக்கம் தான்... ஆனால் ஜானகி... ம்ஹூம்... அவனுக்கும் பெண்ணிற்கு மாய் சமைப்பாளே ஒழிய, அன்றைய தினம் வெறும் தயிர் சாதம் தான் அவளது உணவு.

ஜானகிக்கு அவனது கோபத்தில் முன்பு போல அழுகை வரவில்லை. புன்னகையே அரும்பியது. ''தொட்டுக்கிறது இல்லாம... வெறும் சப்பாத்தி தரச் சொல்லுங்க அத்தான்...'' என்றாள் மீண்டும் ஓர் முயற்சி யாய்.

''வறட்டு வறட்டுன்னு இருக்கும்... ம்ஹூம்... வேணாம்... சைவம் இருக்க இடமா பார்ப்போம்... கொஞ்ச தூரம் நடப்போம்...'' என்று அவன் முன்னேறியபோது,

கடையில் நின்றிருந்த ஒருவர் ''என்ன சார்? சைவமா? அந்த ரெண்டாவது டியூப் லைட் தெரியு தில்லை... அங்க ஒரு தமிழ்நாட்டுக்கடை இருக்கு... உங்க நேரத்துக்குத் திறந்திருக்கான்னு பாருங்க...'' என்று வழி சொன்னார்.

நன்றியை சத்தமாகவும், ''ஹப்பாடா! இதை இவர் முன்னாடியே சொல்லக் கூடாது!'' என்ற புலம்பலை முணுமுணுப்பாகவும் வெளியிட்ட ஸ்ரீராமன், அவனைப்

பார்த்துச் சிரித்த மனைவியிடம் லேசாய் கண்ணடிக்கவே, அடர்ந்த காட்டின் நடுவே ஓடும் பால் வண்ண அருவியாய் மாறிப் போனாள் ஜானகி!!

அவர்களது நல்ல நேரமாய், அந்தத் தமிழ்நாட்டு சாப்பாட்டுக் கடை திறந்திருக்க, அந்த நாளின் ஆயிரமாவது முறையாய் கடவுளுக்கு நன்றி சொல்லிவிட்டு உள்ளே நுழைந்தான் ஸ்ரீராமன்.

''இட்லி மட்டும் தான் இருக்காம்... சரியா ஜானு?'' என அவன் மனைவியின் ஒப்புதல் கேட்க, விஷமே என்றாலும் கணவனின் கையால் உண்பதெனில் அதை அமுதாய் உணரும் குணமுடைய ஜானகி என்ன சொல்லப் போகிறாள்!? இன்று காலை, பானிப் பூரியை பற்றி எண்ணியபோது வந்த துள்ளலை விட இப்போது இரட்டிப்பாய் தித்தித்தது அவளுக்கு!

''பசிக்குத் தானே அத்தான்... ஏதோ ஒண்ணு!'' என்று அவனிடம் மொழிந்தவள்,

''அம்முக்குட்டி! இட்லி மம்மம் சாப்பிடலாம்... வாங்க... வாங்க... என் பிள்ளைக்கு வயித்த ரொம்பப் பசிச்சுப் போச்சே!'' என்று பிள்ளையை வாங்கினாள்.

பெண்ணோ தாயின் பாசத்தை விடவும் தந்தையின் ஸ்பரிசத்தை விரும்பி, ''ம்ம்... வத மாட்டேன் போ! அப்பா கிட்டே இதுக்கேன்!'' என்றாள், கோபமாய்.

''என்கிட்டே இருக்கட்டும். நீ முதல்ல உள்ளே உட்காரு...'' என்று மனைவியை அங்கிருந்த மரப் பெஞ்சில் அமரச் சொன்னான், கணவன்.

''உங்களுக்கு வலது பக்கமா உட்கார்ந்தா தான் அவளுக்கு ஊட்ட முடியும்... அவளும் சுவரோடு சாஞ்சு



உட்கார்ந்துப்பா... அதனால, நீங்களே உள்ள உட்காருங்க...'' என அவனுக்கு வழிவிட்டு அமர்ந்தவள், தன் தட்டில் வைக்கப் பட்ட இட்லியை மகளுக்கு ஊட்டலானாள்.

சின்ன விஷயத்திற்குக் கூட, எத்தனை யோசனைகள்! இவற்றையெல்லாம்... ஒரு காலத்தில் கட்டுப்பட்டித் தனமென்று நினைத்து, தான் அடித்திருக்கும் கிண்டல் கேலிகளை எண்ணினால்... ஸ்ரீராமனுக்கே சின்னத் தனமாய் பட்டது!

''மாமியார் உடைத்தால் மண் குடம். மருமகள் உடைத்தால் பொன் குடம்!'' என்ற பழமொழிக்கு ஏற்ப வாழ்ந்த காலங்களின் நினைவில் அவன் இருக்க,

''என்னத்தான் யோசனை? சாப்பிடுங்களேன்! இட்லி... கொஞ்சம் கல்லு போல தான் இருக்கு... ஆனா சாம்பாரை கொஞ்சம் குளிர ஊத்தி சாப்பிடுங்க... உங்களுக்குப் பிடிச்ச மாதிரி தான் இருக்கு... அப்புறம் அந்தச் சட்னி வேணாம்... சலிச்சுப் போச்சு... அப்படியே ஒதுக்கி வச்சுடுங்க... இட்லியோட சேர்ந்தா உங்களுக்குப் பிடிக்காது...'' என்றாள் ஜானகி, அவன் சுவையுணர்ந்து!

அதற்குப் பதிலாய், சாப்பாட்டிலிருந்த ஓர் கையை எடுத்து அவளது தோள்களை வளைத்து, அவளைத் தன்னருகே லேசாய் இழுத்துக் கொண்டவன், ''என்னை ரொம்ப ரொம்ப கூனிக் குறுக வைக்காத ஜானுமா! இதுவே, மூச்சு முட்டுது!'' என்றான் வருத்தமாய்.

''அய்யே! என்னத்தான்... இது! நீங்க எதுக்கு கூனிக் குறுகணும்? நீங்க எந்தத் தப்பும் செய்யலை அத்தான்... உங்க நிலையில வேறோர் மனுஷன் இருந்திருந்தா நான்

உருவில்லாம போயிருப்பேன்...'' என்றவள், அவன் முகம் அப்போதும் தெளியாமல் இருக்க,

''எனக்கு என்ன குறை வச்சுட்டீங்கன்னு இப்படி மறுகுறீங்க? உங்க மனைவிங்கிற அந்தஸ்த்தில இருந்தப்பவோ, நான் ரொம்ப சந்தோஷமா இருந்தேன் அத்தான்... இப்போ உங்களோட அன்பும் சேர்ந்து என்னை ரொம்ப ரொம்ப சந்தோஷமா வச்சுக்கப் போகுது! இந்த நேரத்தில, யாராவது பழசையே நினைச்சு நினைச்சு வருத்தப்படுவாங்களா? ம்ஹூம்... கூடவே கூடாது!'' என்றாள் அவன் துயர் போக்கிவிடும் அழுத்தத்துடன்.

அவள் சொல்வதும் சரியெனப் பட்டது ஸ்ரீராமனுக்கு! கொட்டிய பாலுக்கு வருந்துவதை விட, சுரக்கவிருக்கும் அன்பிற்கு உரமிடுவது நல்லதன்றோ!

அதன் தொடக்கமாய், ''ம்ம். மகாராணி சொல்லிட்டா சரி தான்! அப்படியே நடந்துக்கிறேன் அரசியாரே!'' என்றான் விடியலாய் எட்டிப் பார்த்த சிரிப்புடன்.

''ச்சு... போங்கத்தான்...'' - வெட்கம் கொண்டு, அவனது கைகளை மெல்ல விளக்கினாள் ஜானகி.

''இன்னைக்கு உங்களுக்கு என்னாச்சுன்னே தெரியலை... பொது இடம்ன்னு ஒரு ஒதுக்கம் இல்லாம... கையை அங்க இங்க போடறீங்க...'' என்று மெல்ல முணுமுணுக்க வேறு செய்தாள்.

''அங்க இங்கன்னா எங்க எங்க ஜானும்மா?'' - கையை எடுத்துக் கொண்டபோதும், அவள் புறம் சரிந்து ஸ்ரீராமன் கிசுகிசுக்க,

''ஐயோ அத்தான்! என்ன இது? பாப்பா வேற அரைக் கண் திறந்து பார்க்கிறா... சும்மா இருங்க... அந்தக்



கடைக்காரர் வேற குறுகுறுன்னு நம்மளையே பார்க்கிறார்...'' என்றாள் மிகுந்த வெட்கத்துடன்.

''அவனுக்கு என்ன தெரியும்... நான் தவிச்ச தவிப்பு? உங்களோட இப்படி ஒண்ணா உட்கார்ந்து சாப்பிடுவேன்னான்னு கூட எனக்கு சந்தேகமா இருந்துச்சு! தலைவலியும் காய்ச்சலும் அவனவனுக்கு வந்தாதான் தெரியும்...'' என்றான் ஸ்ரீராமன் லேசான சிரிப்பும், மிகுந்த ஆதங்கமுமாய்.

''அதுக்காக இப்படியா?! சாப்பிடுங்களேன் அத்தான்! அவரு வேற... இட்லி குண்டா வச்சுட்டு... வரதா வேணாமான்னு தடுமாறிட்டு இருக்காரு!'' என மொழிந்த போது, ஜானகியின் அதரங்கள் கூச்சச் சிரிப்பில், குறுந்தோட்டமாய் மலர்ந்திருந்தன.

''இங்க வச்சு... சாப்பிட மட்டும் தான் முடியும்! அதுவும் இந்த இட்லியைத் தான்... சா... ப்... பிட... முடியும்...'' என்று ராகமிழுத்தவனுக்கு, இளம் சிவப்பு வண்ணத்தில் தோய்க்கப் பட்டிருந்த மனைவியின் கன்னங்கள் குங்கும வண்ணத்திற்கு குடி பெயர்ந்த போது, ''இதற்கு மேல் தாங்கமாட்டாள்!'' என்பது புரிய, உணவில் பார்வையைப் பதிக்கத் திரும்பினான்.

அதற்குப் பின்னர், பத்து நிமிடங்களில் பத்து இட்லிகள் அனாவசியமாய் காலியாக, பசியின் வேகம் புரிந்தது அவனுக்கு.

''போதும்...'' என அவன் எழப் போக,

''இன்னும் ரெண்டு இட்லி சாப்பிடுங்க அத்தான்... பசி அடங்கி இருக்காது...'' என்றாள் ஜானகி.

''அதெப்படிடி... என் பசியைப் பத்தி உனக்குத் தெரியுது?! இன்னும் ரெண்டெல்லாம் முடியவே முடியாது... எனக்குப் போதும்!'' என அவன் மறுக்க,

''உங்க கண்ணைப் பார்த்தாலே எனக்குத் தெரியும்... இன்னும் கொஞ்சம் பசியிருக்கு!'' என்றவள், ''அவரை வைக்கச் சொல்லுங்க அத்தான்'' என்றாள்.

''இருக்குமோ!?'' என்ற சந்தேகத்தில் வைக்கச் சொன்னவன், அவை வயிற்றுக்குள் சென்ற பின்னர் தான் ''இனிமேல் இவ சொல்றதைக் கேட்கவே கூடாது! நம்மளை... தொந்தி பிள்ளையார் ஆக்குறதில வல்லவி!'' என்ற ஞானோதயத்தை அடைந்தான்.

அவனது உணவு ஒருவாறாய் முடிந்த போது, ஸ்ரீஷா இரண்டு இட்லிகளின் பாதியில் தான் இருந்தாள்.

ஜானகியிடம் ஒரு வாய் உணவு வாங்க, இப்படியும் அப்படியும் முகத்தைத் திருப்பி, அவளை உதைத்து, உதட்டை இறுக மூடி, கையைத் தட்டிவிட்டு என்று அநியாயம் செய்து கொண்டிருந்த ஸ்ரீஷா, தந்தையின் கையில் அவளது உணவுண்ணும் படலம் ஆரம்பமாகவும் கப்-சிப் ஆகிவிட்டாள்.

''என் கிட்ட என்ன அலுச்சாட்டியம் பண்ணுச்சுல... அத்தான்! உங்ககிட்ட மட்டும் ஒழுக்க சீலமா இருக்குது பாருங்க...'' என்றாள் ஜானகி, சிறு கோபத்துடன். சாதாரணமாய் பெண்ணைப் பற்றி கணவனிடம் குறை கூற முடிவதே, அவனுடன் தாய் இயல்பாய் ஒன்றிவிட்டதை அவளுக்கு உணர்த்தியது.

''ஏன்னா... ஸ்ரீ குட்டி அப்பாவோட பாப்பா இல்லைடா..'' என்று பெண்ணைக் கொஞ்சியவாறே, அவன் உணவை அள்ளிக் கொடுக்க, ஸ்ரீஷாவும் ''ம்ம். அப்போவோட பாப்பா'' என்று தந்தையின் கழுத்தைக் கட்டிக் கொண்டு, தாயிடம் அழகு காட்டினாள்.



அவளிடம் மெல்ல மெல்ல பேச்சு கொடுத்து, அவளது இயல்பு நிலையை மீட்டெடுக்கும் முயற்சியில் இறங்கினான் ஸ்ரீராமன்.

அவனது, ''காலையில பாப்பா என்ன சாப்பிட்டா?'', ''இன்னைக்கு அம்முக்குட்டி ரொம்ப நேரம் தூங்கினாளா?'', ''அம்மா என்ன சூப் வச்சு தந்தா?'' போன்ற கேள்விகள் ஸ்ரீஷாவை அவளது அழுகையை முற்றிலுமாய் மறைய வைத்தது.

பெண்ணின் அழுமூஞ்சித் தனம் மறைந்ததில் ஜானகி சந்தோஷப்பட்டுக் கொண்டிருக்க, அவளை வெட்கத்திற்கு மேல் வெட்கம் பட வைக்க, ஸ்ரீஷா நடந்தது எல்லாவற்றையும் தந்தையிடம் ஒப்பித்தாள் - ஆம், துணி துவைக்கும் போது ஜானகி ஸ்ரீராமனின் சட்டையைத் தன் மீது போட்டுக் கொண்டது. அப்புறம் அவளிடம் ரப்பர் பாண்டும் கிளிப்பும் கேட்டது... சகலமும் ஒப்பித்தானது!

''அப்படியாடா?'' என்று பெண்ணிடம் கதை கேட்டவனின் கண்கள், மனைவியை ஓரப் பார்வையால் மேய்ந்தன!!

பதிலுக்கு, ''அச்சோ... அவளுக்குத் தான் விவரமில்லைன்னா... நீங்களும்...'' என்று ஜானகியால் முணுமுணுக்க மட்டுமே முடிந்தது!

உண்டு முடித்த நான்கு இட்லிகளில் அடங்காத பசி, அவனது பார்வையில் அடங்கிவிட, கை கழுவ எழுந்தவளை, ''என்னமோ பெருசா டயலாக் அடிச்சே?

உங்களை விட எனக்குத் தான் உங்களோட பசி தெரியும் அப்படி இப்படின்னு... இப்போ எனக்குத்தான் உன்னோட பசி நல்லாத் தெரியுது. ஒழுங்கா இன்னும் நாலு இட்லியை சாப்பிட்டு முடிக்கிற வழியைப் பாரு'' என்ற வாறு பிடித்து நிறுத்தினான், கணவன். கண்களில் குறும்பு கூத்தாடியது!!

''இன்னும் நாலா? ஹய்யோ முடியவே முடியாது அத்தான்!'' - அவள் மிரள, அவன் மீற, ஒருவாறாய் அவனே ஜெயித்தான்.

ஜானகி உணவை முடித்தபோது, ஸ்ரீஷா மாலை நினைவுகளுக்குள் பயணித்திருக்க, ''ஷ், பாப்பா! வேண்டாம்டா... அதைப் பத்திப் பேசாதேடா'' என்றாள் பெண்ணின் அரண்ட முகத்தைப் பார்த்து.

''ம்ஹூம். அவ மனசில இருக்கிறது வெளிய வரணும் ஜானு! அப்போ தான் அவ கொஞ்சம் ஃப்ரீயா ஃபீல் பண்ணுவா... மனசிலேயே வச்சுக்கிட்டு இருந்தா விபரீதம் தான்!'' என்று மனைவியைக் கண்டித்துப் பேசிய ஸ்ரீராமன், மகளைப் பேசச் சொன்னான்.

ஸ்ரீஷா ஒன்று விடாமல் சொல்லி முடித்தபோது, ஸ்ரீராமின் முகம் ஓர் நிமிடம் இறுகியபோதும், பெண் தனது பதிலுக்காய் காத்திருக்கிறாள் என்பது புரிய,

''அடடா! என்னோட குட்டிமா எவ்வளவு சமத்தா அம்மாக்கு தண்ணியெல்லாம் கொடுத்திருக்கா?! வெரி குட் டா!'' என்று பெண்ணைப் பாராட்டினான்.

வெற்றிப் புன்னகை ஒன்றை தன்னிடம் பூசிக் கொண்ட ஸ்ரீஷா, ''ம்ம். ஆனா, ஏன்பா டொம் வெடிச்சது? பாப்பா பயந்துட்டேன்!'' என்றாள் பீதியுடன்.



''அதுவா? அதெல்லாம் அனிமல்ஸ்சோட வேலைடா குட்டி... பாப்பாக்கு இருக்கிற மாதிரி அறிவு அந்த அனிமல்ஸ்க்கு எல்லாம் இல்லைடா... அதான் அப்படி செஞ்சுடுங்க... அவங்களை எல்லாம் சாமி அடிச்சிடு வார்... நீ கவலைப்படாதே!'' என்றான் தேறுதலாய்! ஆனால், இந்த மனித மிருகங்களை எந்தக் கடவுள் வந்தாலும் திருத்த முடியாது என்று மனம் அடித்துச் சொன்னது!

''அனிமல்ஸ் ஏன்பப்பா இங்க வதுது? காட்டிலேயே இதுக்க வேண்டியது தானே?'' அந்த அறிவாளிப் பெண் ணின் கேள்விகளால் தந்தை திணறிப் போனான்.

ஸ்ரீராமன் யோசித்துக் கொண்டிருக்கும் போதே, ''ஹ்ம்ம். அதுக்கு காவலுக்கு இருப்பாங்க இல்ல வாட்ச் மேன்... அவங்கெல்லாம் ஒழுங்கா வேலை செய்யலை... அதான் வந்துடுச்சுங்க...'' என்றாள் ஜானகி, பதிலாய்.

ஸ்ரீஷா தலையை ஆட்டி ஒத்துக்கொள்ள, ஸ்ரீராமனுக் கும் அது சரியென்றே பட்டது! நாட்டைக் காக்கும் அரசியல்வாதிகள் ஒழுங்காய் இருக்கும் பட்சத்தில், இந்த மிருகத்தனங்கள் ஏன் நடத்தப் படுகின்றன!!

அதற்குள், சாப்பாட்டிற்குப் பணம் கொடுத்துவிட்டு, மெல்ல நடந்து, காடோக்பர் பேருந்து நிலையத்தை அடைந்திருந்தனர் மூவரும்.

அங்கே கிளம்புவதற்குத் தயாராய் இருந்த ஓர் பேருந் துக்குள் மூவரும் புக, மெதுவாக என்றாலும் முக்கால் மணி நேரத்தில் அடுத்தக்கட்ட பேருந்து நிறுத்தத்திற்கு வந்து சேர்ந்திருந்தனர். முதல் பேருந்திலேயே, முழுதாய் தூக்கத்தின் பிடிக்குச் சென்றிருந்த பிள்ளையை தோளில்

ஏந்திக் கொண்டு, பாதி தூக்கத்தில் மிதந்து கொண்டிருந்த ஜானகியை மறு தோள் வளைவில் இருத்தி நடத்தியவாறே அடுத்த பேருந்துக்காக காத்திருக்க ஆரம்பித்தான்.

''முடியவே இல்லைத்தான்... ரொம்ப நேரமாகுமா வீடு வர?'' - வாழ்வில் முதன் முறையாக, தன் கஷ்டத்தை வாய்விட்டு வெளியிட்டாள் ஜானகி.

''இல்லைடா... இன்னுமொரு ஒரு மணி நேரம் பிடிக்கும்... அவ்வளவு தான்... வீட்டுக்குப் போய்டுவோம்!'' என்றான் கணவனும், அவளது கஷ்டம் புரிந்து.

நல்லவேளையாக, இப்போது வந்த பேருந்தில் இருவருக்கும் அமர இருக்கைக் கிடைத்தது. ''தெய்வமே!'' என்று மனைவியை அமர்த்திவிட்டு, பெண்ணை மடியில் வைத்துக் கொண்டு அவன் அமரக் காத்திருந்தவள் போல், ஜானகியின் தலை அவன் மீது சாய்ந்தது!

அவளது நெற்றியை விரல்கள் வருடிக் கொடுக்க, ஸ்ரீராமின் கண்களும் சொருகத் தொடங்கியபோது, அவனது கைப்பேசி கிணுகிணுத்தது.!

எடுத்துப் பார்த்தால்... கோகுல்! பரஸ்பரம் இருவரது குடும்பமும் நன்றாக இருக்கிறது என்பதைப் பகிர்ந்து விட்டு, அவன் கைப்பேசியை வைத்தது தான் தாமதம்.

''ச்சே. மறந்தே போயிட்டேன், பார்த்தீங்களா? ஊர்ல இருந்து அத்தை-மாமா, அண்ணி எல்லோரும் நாம எப்படி இருக்கோமோன்னு தவிச்சுப் போயிருப்பாங்க... ஒரு போன் பண்ணி, நமக்கு ஒண்ணுமில்லைன்னு சொல்லிடுங்க அத்தான்! சீக்கிரம்! ச்சே... என்ன மாதிரி மறதி பாருங்களேன்... சீக்கிரம் அத்தான்...'' என்று



கணவனை உந்தினாள் ஜானகி. தூக்கம் இருந்த இடத்தைத் தவிப்புப் பற்றிக் கொண்டிருந்தது.

''சரி... சரி... இரு போடறேன்!'' என்றவன், வீட்டு எண்ணை அழுத்திவிட்டுக் காத்திருந்தான். அவனை சோதிப்பது போல், பல முயற்சிகளுக்குப் பின்னர் தான், மறு பக்கத்தில் மணி அடித்தது.

உடனேயே, ''ஹ்ம்ம் இந்தா... பேசு'' என்று மனைவியிடம் அவன் நீட்ட, ''இன்னும் உங்க கோபம் குறையலையா அத்தான்?'' என்றாள் ஜானகி பரிதாபமாக.

ஊரிலிருந்து வந்த இந்த மூன்று வருடத்தில், ஸ்ரீராமன் அவனது குடும்பத்திடம் பேசிய தருணங்களின் எண்ணிக்கை என்ன தெரியுமா? முட்டை!

ஆம், தீபாலியை மறுத்தக் காரணமா... இல்லை ஜானகியைக் கட்டி வைத்தக் காரணமா... இல்லை அவனது ஆம்பிளைத் திமிரை தூண்டிவிட்டக் காரணமா? ஏதோ ஒன்று, அவனை அவர்களுடன் பேச விடாமலே செய்தது!

அதன் விளைவாய், மகனுடன் விட்டுப் போன நெருக்கத்தை மருமகளிடம் ஏற்படுத்திக் கொண்டிருந்தனர் அவர்கள்!

வாழ்வு இனிமையாய் மாறியிருந்த இந்த வேளையில், ஸ்ரீராமன் கைப்பேசியை அவளிடம் நீட்டவும், ஜானகியின் முகம் வாடிவிட்டது.

அவளது வார்த்தையும் வாடலும் பொறுக்காமல், ''நீ தான் ரொம்பத் தவிச்சுப் போயிருக்கே... நீ முதல்ல

பேசு... அப்புறம் நான் பேசுறேன்'' என்றான் கணவன், சமாதானமாக.

''பேசுவீங்க தானே?'' - அவள் மேலும் தயங்க, ''பேசுடி...'' என்றான் சற்றே காரமாய்.

அவ்வளவு தான். குபுக்கென கண்ணீர் முட்டிக் கொண்டு வந்துவிட்டது ஜானகிக்கு! அதற்கும் வைவானோ என்ற பயத்தில், முகத்தை அவள் வேறு புறம் திருப்பிக் கொண்டு, கைப்பேசியை மூடியிருந்த கைகளை விலக்கிப் பேசினாள்.

அவள் அழுத விதத்தில் மட்டுமல்லாது, அதை அவள் மறைத்த விதத்திலும் சிரிப்பு மூண்டுவிட, செல்லமாய் அவளது உச்சந்தலையில் முட்டி, விலகிச் சென்றிருந்த வளைத் தன் தோளில் சாய்த்துக் கொண்டான் கணவன்.

''அத்தே!'' என்று வார்த்தைகள் அங்கே திக்கிக் கொண்டிருக்க, கண்கள் இங்கே கணவனைக் கவ்வி நின்றது!

''நான் கண்டிப்பா பேசுறேன்!'' என்று அவன் சைகையில் சொல்லும் போதே, அந்தப் பக்கம் பரபரத்து விட்டார்கள்.

''நாங்க எல்லோருமே நல்லா இருக்கோம் அத்தை! கவலைப்பட ஒண்ணுமில்லை!''

''.....''

''இன்னைக்கு பீச்சுக்குப் போகலாம்ன்னு வெளிய வந்தோம்... அதான் வீட்டு போன் எடுக்கலை...''

''.....''

அத்தானுக்குத் தான் சின்னதா கையில ஒரு கீறல்... மத்தபடிக்கா எந்தப் பிரச்சனையுமில்லை... எல்லார்கிட்



டயும் சொல்லிடுங்க... இதோ அத்தான் கிட்ட தரேன்'' என்றவள், கைப்பேசியை அவனிடம் நீட்டினாள். எங்கே பேசாமல் வைத்துவிடுவானோ என்ற பயத்தில் அவசர அவசரமாய் பேசியவளைப் பார்க்கப் பார்க்க சிரிப்பாய் வந்தது ஸ்ரீராமனுக்கு.

ஆனால், அவள் அஞ்சுவது போலல்லாமல், அவன் அனுபவித்த இரண்டு மணி நேரத் தேடல், பெரும் ஆசானாய் நின்று, உறவுகளின் மேன்மையை அவனுக்கு உணர்த்தி இருந்தது! இரண்டு மணி நேரத்தில் இரண்டு கோடி ஞானோதயங்கள்!

கைப்பேசியை வாங்கியவன் ''தம்பி... நல்லா இருக்கியா...'' என்ற தாயின் தழுதழுத்த குரலில், முற்றிலுமாய் உடைந்துவிட்டான்.

''அம்மா...'' - மூன்று வருடமாய் வைராக்கியம் என்ற பெயரில் உச்சரிக்காமல் இருந்த வார்த்தை, தேன் கொண்டு தடவினாற் போல் வெளிவந்தது.

''அய்யா... என் ராசா... என் கிட்ட பேசிட்டியா... என்னால நம்பவே முடியலையே... என்னை மன்னிச்சிட்டுயாப்பா'' - அவர் அரற்ற,

''ஷ் அம்மா! என்ன இது? நான் தான் உங்ககிட்ட மன்னிப்பு கேட்கணும்... ஆனா அதையெல்லாம் இப்போ பேசி மனசை வருத்திக்க வேண்டாம்... விட்டிருங்க...'' என்றான் மகன் ஆறுதலாய்.

''சரிய்யா... சரி! நீங்க நல்லா இருக்கீங்க தானே? கையில காயம்ன்னு ஜானகி சொல்லுச்சே?''

''சின்னக் காயம் தான்மா... அவளுக்குத் தான் இடது கையில நல்ல காயம்... ஹ்ம்ம்... ஹ்ம்ம்... பயப்படா

தீங்க... கட்டெல்லாம் போட்டாச்சு... நான் ரெண்டு நாள் லீவ் போடப்போறேன்... வீட்டில இருந்து பார்த்துக் கிறேன்...''

மேலும் சிறிது நேரம் பேசிவிட்டு, அவன் வைத்த போது, உதட்டில் ஓர் முறுவலுடன் ஜானகி அவன் தோளில் உறங்கிப் போயிருந்தாள்!

## மணி நள்ளிரவு 1:00

ஒருவழியாக அவர்கள் வீடிருக்கும் வளாகத்திற்குள் காலடி எடுத்து வைத்தபோது மணி ஒன்று.

ஆனால், நள்ளிரவின் அமைதியில் மூழ்காது, கலவர முகம் பூண்டிருந்தது தமிழர்கள் அதிகம் வாழும் அந்த வளாகம்.

வேலை முடிந்து வராத கணவன்மார்களும், பள்ளி-கல்லூரி முடிந்து வராத பிள்ளைகளும், ஷாப்பிங்-கோவில்-நண்பர்கள் வீடு சென்று திரும்பாத மக்களும், அங்கிருந்தோரின் இதயத் துடிப்பை எகிற வைத்துக் கொண்டிருக்க, நடந்த கோரத்திலிருந்து விடு பட்ட குடும்பங்களில் ஒன்றான ஸ்ரீராமனின் குடும்பம் மெல்ல உள்ளே நுழைந்தது.

கையணைப்பிலிருந்த மகளோடும் மனையாளோடும் ஸ்ரீராமன், லிஃப்ட் அருகே செல்ல, தூக்கத்தின் பிடியிலிருந்து மெல்ல மெல்ல வெளிவந்து கொண்டிருந்த



ஜானகி, அந்த நிலையிலும் லிஃப்ட்டைப் பார்த்துத் தயங்கினாள்.

''அத்தான்... அது... அது வந்து... நா வேணும்ன்னா படி வழியா வரட்டுமா? நீங்க போங்க...'' என அவள் மென்று முழுங்க,

''அதெல்லாம் முடியாது! லிஃப்ட்டைப் பார்த்தா உனக்கு அப்படியென்ன பயம்? ம்ம்?'' - ஸ்ரீராமனுக்கு ஒரே குறுகுறுப்பு! இது நாள் வரையிலும், அவள் பயத்தைக் கிண்டல் செய்திருக்கிறானே ஒழிய, அதற்கான காரணத்தைக் கேட்டதே இல்லை.

''அது... அதுவா... இல்ல ஒரு பொம்பளை எப்போ பார்த்தாலும் ஏதோ சொல்லிட்டே...'' - அவள் வாக்கியத்தை முடிக்கவில்லை. இந்த களைப்பையும் மீறி ஸ்ரீராமன் உரக்கச் சிரிக்க ஆரம்பித்துவிட்டான்!

''ஷ்... என்னத்தான் இப்படிச் சிரிக்கிறீங்க? ஐயோ... வெட்கம் பிடுங்கித் திங்குது... எல்லோரும் பார்க்கிறாங்க...'' அவள் விதவிதமாய் தவிக்க, ''ஹய்யோ... ஹய்யோ! லூசுப் பொண்ணுடி நீ! லிஃப்ட்டுக்குள்ள போனதும், சில பிரகஸ்பதிங்க கதவைச் சரியா சாத்த மாட்டாங்க... அதுக்காக ரெகார்ட் பண்ணின வாய்ஸ்சை ஓட விடுவாங்க... அதைப் பார்த்துப் பயந்து போய்... ஹய்யோ.... ஹய்யோ... சின்னப் பாப்பாவா ஜானு நீ!'' என்றான் அவன் சிரிப்புடன்.

''ஹோ... அப்படியா? ஆனாலும்... எனக்குப் பயம் தான்...'' என்றாள் ஜானகி, மிக மிக இறங்கிவிட்ட குரலில், அசடு வழிந்த முகத்துடன்.

''அடடே! இந்த மாவீரன் துணைக்கு வரும் போது... நீ எப்படி பயப்படலாம்? அதெல்லாம் கூடாது! வா

என்னோட!'' என்று கை பற்றி, லிஃப்ட்டினுள் இட்டுச் சென்றான் கணவன்.

கதவைத் திறந்த வினாடியில், பதிவு செய்யப்பட்ட குரல் கேட்க, ஜானகியின் கால்கள் தானாகவே பின்னடைந்தன. வலுக்கட்டாயமாய் அவளை உள்ளிழுத்து, கதவை அவன் அடைக்க, குரலும் நின்றது.

''ஹய்யே! நின்னு போச்சு அத்தான்!'' - ஜானகி வெகுவாய் அதிசயிக்க,

''என் செல்லப் பட்டிக்காடு!'' என்று அவள் தலையில் லேசாய் தட்டினான் கணவன். முன்னர் போல், முகம் மூஞ்சூராய் சுருங்கிவிடாமல் மயில் தோகையென மலர்ந்தது. மலர்ந்த சிரிப்புடனும், தூங்கிய பிள்ளையுடனும் அவர்கள் வீட்டுக் கதவைத் திறந்து கொண்டிருக்கும் போது, பக்கத்து வீட்டு மஞ்சுளா ஆன்ட்டி ஓடி வந்தாள்.

''ஜானகி... ஜானகி... ஸ்ரீஷா அப்பாகிட்ட போன் வாங்கித் தாயேன்... என் வீட்டுக்காரர் இன்னும் வீடு வந்து சேரலை... வீட்டு போன்ல இருந்து ஒரு முறை அவரோட பேசினேன்...குரல் ஒரு மாதிரி ஒலிச்சது... வந்துடுறேன்னு சொன்ன மாதிரி இருந்தது... அப்புறம் லைன் கிடைக்கவே இல்லை... இப்போ வீட்டு போனும் கெட்டுப்போச்சு... வேற யாரும் கொடுக்க மாட்டேங்கிறாங்க... எல்லோரும் போன் பேசிக்கிட்டே இருக்காங்க...'' என்றாள் மிகுந்த தவிப்புடன்.

''கவலைப்படாதீங்க அக்கா! அவருக்கு ஒண்ணுமிருக்காது! ஊரெல்லாம் பஸ் ஓடலை இல்லையா... அதான் வர நேரமாகுது'' என்று அவரை சமாதானம்



செய்தவள், கணவன் நீட்டிய கைப்பேசியை அவரிடம் கொடுத்தாள்.

''லைன் கிடைக்க நேரமானாலும் பரவாயில்லை. நீங்க வச்சிருந்து பேசிட்டே தாங்க... நாங்க பேச வேண்டியவங்களுக்கு எல்லாம் பேசிட்டோம்!'' என்றவள், கணவனை ''சரிதானே?'' என்று பார்வையால் வினவினாள்.

அவன் சம்மதம் கூடிய கண்ணசைவுடன் உள்ளே சென்றுவிட, ''ரொம்ப நன்றி ஜானகி!'' என்று கண்ணீர் வழியப் பேசினாள் மஞ்சுளா.

''இதில் என்னக்கா இருக்கு? பக்கத்து வீட்டு மனுஷங்கன்னு எதுக்கு இருக்கோம்?'' என்று ஜானகி மறுத்துப் பேசியபோது, நேற்றைய தினம் தான் பேசிய... ம்ஹூம் குத்திய வார்த்தைகளை எண்ணி, மஞ்சுளாவின் தலை கவிழ்ந்தது!

''யானைக்கு ஓர் காலம் வந்தால், பூனைக்கு ஓர் காலம் வரும்!'' என்று சும்மாவா சொல்லி வைத்திருக்கிறார்கள்!?

மஞ்சுளாவிடம் பேசிவிட்டு ஜானகி உள்ளே வந்த போது, ஸ்ரீராமன் ஸ்ரீஷாவின் உடைகளை மாற்றிக் கொண்டிருந்தான். அதில் உறக்கம் களைந்த பிள்ளையை அவன் உறங்க வைத்துக் கொண்டிருந்தபோது, ஜானகி குளித்து முடித்து வந்திருந்தாள்.

சேலையை சரி செய்து கொண்டு அவள் உள்ளே நுழைந்தபோது, ''அறிவிருக்காடி உனக்கு!?'' என்று சுள்ளென விழுந்தான் ஸ்ரீராமன்.

''ஏன் அத்தான்?'' - என அவள் திக்க,

''கையில கட்டை வச்சுட்டு, அதில தண்ணி படர மாதிரி குளிச்சியா? கட்டுக்குள்ள தண்ணி போய்டுச்சோ என்னவோ? எங்க காட்டு!'' என்று கையை இழுத்துப் பார்த்தான்.

''இல்லைத்தான்... கையைத் தூக்கி பிடிச்சிட்டுத்தான் குளிச்சேன்...'' - அவள் விளக்கம் சொல்ல,

''கிழிச்ச! பாதி வரைக்கும் நனைஞ்சு போயிருக்கு! ப்ச்!'' -தலையில் அடித்துக் கொண்டான், ஸ்ரீராமன். உடனேயே, ''ஹால்ல போய் ஃபேனுக்குக் கீழே உட்காரு... நான் குளிச்சிட்டு வந்து, பஞ்சு வச்சு துடைச்சு விடுறேன்...'' என்றான் கட்டளையாக.

''ஹ்ம்ம் சரி அத்தான்'' - சட்டென பணிந்து வரவேற்பறைக்குச் சென்றவள், ஏதோ நினைவு வந்தவளாக படுக்கையறைக்குள் வேகமாய் நுழைந்தாள்.

வெளியே வந்து கொண்டிருந்த ஸ்ரீராமன் மேல் நேருக்கு நேராய் மோதி அவள் நிற்க,

''அப்படியென்ன அவசரம்? மெதுவா வாயேன் ஜானு!'' என்றான் அவன்.

''இல்ல... உங்களுக்கு மாத்திக்க துணி எடுத்து வைக்காம போயிட்டேன்... அதான்...'' காரணம் கூறியவளிடம்,

''அதெல்லாம் நான் பார்த்துக்கிறேன்... நீ முதல்ல போ...'' எனக் கூறி, வெளியே விரட்டினான்.

சிறு தயக்கத்துடனே சென்றவள், அவன் குளித்துவிட்டு வரும்போது, வரவேற்பறையில் இருந்திருப்பாளா என்ன?



அடுப்பின் முன்னே நின்று பாலைக் காய்ச்சிக் கொண்டிருந்தாள். அதுவுமல்லாது, ஸ்ரீராமின் இரவு உடைகள் கட்டிலின் மேல் அணிவகுத்து நின்றன!

'இவளைத் திருத்தவே முடியாது!' என்றெண்ணிய ஸ்ரீராமன், வேகமாய் உடை அணிந்து வெளியே வந்தான்.

பால் டம்பளருடன் ஜானகியும் இணைந்து கொள்ள, ''என்ன குடும்பத்தலைவி அம்மா... எல்லா வேலையையும் கடமை தவறாம செய்துட்டீங்களா?'' என்று கிண்டல் செய்து கொண்டே, கோப்பையை அவளிடமிருந்து வாங்கிக் கொண்டான்.

அதற்குப் பதிலாய் சிறு புன்னகையை அவள் உதிர்க்க, அதுவே ஸ்ரீராமனின் தாப உணர்வுகளை சுண்டி எழுப்பப் போதுமானதாய் இருந்தது!

பொது இடமென்றும் பாராமல் கையணைப்பிலேயே மனைவியை வைத்திருந்தவன், தனிமை கிடைத்த பின்னர் தேமே என்றா இருப்பான்! கைகள் அவளது இடுப்பை வாகாய் வளைத்து!!

''அச்சோ... பால் கொட்டிடப் போகுது!'' என்று பதறிய போதும், ஜானகியும் அதில் திளைத்தாள்!

அணைப்பின் போர்வையிலேயே அவளை சோபா வரை அழைத்துச் சென்று அமர்ந்தவன், பால் டம்பளரை டி-பாயில் வைத்துவிட்டு, ஜானகியை நெருக்கமாய் இழுத்துக் கொண்டு, அவளது நெற்றியில் ஓர் முத்தம் வைத்தான்.

''உன்கிட்ட நிறைய விஷயத்துக்கு மன்னிப்பு கேட்கணும்ன்னு நினைச்சிட்டு இருந்தேன்.. ஆனா... மேடம்

தான் பழசைப் பத்திப் பேசவே கூடாதுன்னு சொல் லிட்டீங்களே!'' என்று அவன் கூறவும்,

''ஆமா அத்தான்... அதைப் பத்திப் பேசுறது உங்களுக்கு கஷ்டமா இருக்கும் என்கிற போது எதுக்குப் பேசணும்? விட்டுடலாம்!'' என்றாள் ஜானகி, கெஞ்சும் குரலில்.

''அதோட... மன்னிப்பு கேட்கிற அளவுக்கு நீங்க ஒண்ணும் தப்பு பண்ணலை... அப்படியே நீங்க அதைத் தப்பா நினைச்சாலும் நான் நினைக்கலை... சரியா?'' என்றாள் அதே குரலில், தொடர்ச்சியாக.

''சரிடா... உனக்குப் பிடிக்கலைன்னா பேச வேண் டாம்!'' என்று உடனே ஒப்புக் கொண்டாலும், ''ஆனா, ஒரே ஒரு விஷயம்'' என்றான் தொடர்ச்சியாக. பதிலின்றி அவள் காத்திருக்க, அவளை இழுத்துத் தன் மார்பில் அழுத்திக் கொண்டு,

''இனிமேல், என்னால முடிஞ்ச அளவுக்கு உன்னை சந்தோஷமா வச்சுப்பேன் ஜானகி! அதே மாதிரி நீயும்... எதுக்குமே... எதைப் பேசறதுக்குமே என்கிட்டே தயங்கக் கூடாது! என்கிட்டே உனக்கு தயக்கம்... ஒதுக்கம்... ஒளிவு... மறைவுன்னு எதுவும் இருக்கக் கூடாது! சகஜமா இருக்கணும்! நானும் அது போலவே இருப்பேன்!'' என்றான் உறுதியான குரலில்.

நேசம் மேலிட்ட அவனது குரலும், நெருக்கம் துளிர் விட்ட அவனது அணைப்பும் அவளுள் ஏதோ செய்ய, ''தனக்கும் இதில் சம்மதம்'' என்பது போல் கணவனின் மார்பில் மேலும் புதைந்து கொண்டாள், அந்த அன்பு மனைவி!



சற்று நேரம், அந்த அணைப்பு மௌனத்தின் போர் வையில் அழகோவியமாய் மிளிர, அதற்கு மெருகூட் டுவது போல் ''உன் மேல எனக்கிருந்தது வெறும் கடமை உணர்வுன்னு நேத்து வரைக்கும் நினைச்சிட்டு இருந்தேன் ஜானகி. ஆனா... இப்போ... நீ இல்லாம என்னோட வாழ்க்கையைக் கற்பனை பண்ணிக் கூடப் பார்க்க முடியாதுன்னு திகைச்சு நின்னப்போ தான்... அது கடமை இல்லை... காதல்ன்னு புரிஞ்சது! அதுவும் உண்மையான காதல்ன்னு!'' என்று நவின்றான் ஸ்ரீராமன்.

இதற்கு மேல், ஓர் மனைவிக்கு என்ன வேண்டும்!?

''அத்த்த்தாதான்ன்ன்ன்...'' என்ற அழுத்தமான அழைப்பும், மென்மேலும் இறுகிக் கொண்டே சென்ற அவளது அணைப்புமென, அவளது காதல் வார்த்தை யின்றி விஸ்தாரமாய் வெளியானது!!

காது மடல்களில் தவழ்ந்த கூந்தலை மெல்ல ஒதுக்கி விட்டு, பாதி மலர்ந்தும் பாதி மலராமலும் இருக்கும் இளஞ்சிவப்பு ரோஜாவாய் இருந்த காதுகளில் ஓர் முத்தம் வைத்தான் கணவன்.

முத்தத்தின் தொடர்ச்சியாய், ''என்ன ஜானும்மா, சத்தத்தையே காணோம்?'' என்றான் அவன், சத்தமே எழும்பாத குரலில்.

அதற்குப் பதிலாய், முகமெனும் நிலவு மறைவிடம் தேடி அவனது மார்பெனும் வானத்தில் மனமெனும் பூமிக்கு மகிழ்வெனும் மணம் பரப்பினாள்!

''என்னடா வெட்கமா?'' என்றவன், அவளை மேலும் இறுக்கி, தன் மடி மீது இருத்திக் கொண்டு,

''கொஞ்சம் யோசிச்சுப் பார்த்தா... இன்னைக்கு நடந்த பாம்ப் ப்ளாஸ்ட்டால நம்ம வாழ்க்கை முறை நிறையவே மாறியிருக்குன்னு தோணுது!'' என்றான் எதையோ உணர்ந்தவன் போல்.

அவள் கேள்வியாய் கண்ணுயர்த்திப் பார்க்க, அக்கரு விழிகளில் இரு கனத்த முத்தங்களை இட்டவன்,

''நேத்து நிலமைய வச்சுப் பார்த்தா.. நாம ரெண்டு பேரும் ஒண்ணு சேர்ந்திருப்போம்தான்... ஆனா... அது இயல்பா... இது போல இருந்திருக்காது... உள்ளுக்குள்ள ஒரு உறுத்தல்... ஒரு குறுகுறுப்பு... ஒரு தயக்கம்ன்னு ஏதோ ஒண்ணு இருந்துட்டே இருந்திருக்கும்... மனசு விட்டுப் பேசியிருந்தாலும் இந்தளவு புரிதலும் நெருக்கமும் வந்திருக்குமோ என்னமோ?'' என்ற போது, அவன் தோள்களில் இருந்த ஜானகியின் தலை சம்மதத்துடன் மேலும் கீழும் அசைந்தது.

சின்னதாய் ஒரு முத்தத்துடன் மேலும் பேசினான் கணவன். ''ஆனா, இப்போ... ரெண்டு பேருமே மத்தவங்க இல்லாத வாழ்க்கையை யோசிச்சுக் கூடப் பார்க்க முடியாத நிலைக்கு வந்துட்டோம்... அதை மறைக்காம வெளிப்படுத்தவும் செய்துட்டோம்... இனிமே, தயக்கம்ங்கிற பேச்சுக்கே நம்ம வாழ்க்கையில இடமிருக்காது இல்லையா? அதான் சொன்னேன்!'' என்றான் நீண்ட விளக்கமாய்.

விளக்கம் கூறிய நொடிகள் முழுதும், விலகாமல் இருந்த அவனது கைகளில் தீண்டல், விளங்கா கவிதைகள் படித்து, ஜானகியின் உடல் அணுக்களில் விளக்க



முடியா ஓர் தவிப்பை விலக்குகள் இன்றி குடியேற்றியது!!

சிறிது நேரம் ஆமோதிப்பிற்கான மௌனத்தில் கழிய, ஜானகி மெல்ல தலை உயர்த்தி அவனை ஏறிட்டாள்.

''என்னமா?'' என அவன் உருக,

அந்த உருகலுக்குப் பதிலாய் குரலெழுப்பவே இல்லை மனையாளுக்கு! ஆனால், பேசுவதும் இருக்க முடியவில்லை! அதுவும், என்ன விஷயமென்றாலும் என்னிடம் தயங்கக் கூடாது என்று கணவன் சொல்லிய பிறகு, தயங்குவது என்பதே அவனது காதலை மதிக்காமல் இருப்பது போன்ற உணர்வை ஏற்படுத்தியது!

முயன்று குரலை அவள் சீர் செய்ய, அவளது முயற்சிக்கு உதவுபவன் போல் அவளது வெண் சங்கு கழுத்தில் ஓர் மென் முத்தத்தைப் பதித்தான் ஸ்ரீராமன்.

அவ்வளவு தான், தொண்டைக் குழி வழியே வெளி வந்து கொண்டிருந்த ஜானகியின் குரல், கடகடவென பின்னோக்கிப் பயணித்து வயிற்றுக்குள் சென்று புதைந்து கொண்டது!!

''என்னம்மா சொல்லு? ஏதோ சொல்ல வந்தியே!'' என அவன் மேலும் உந்த,

''ஹ்... ஹ்... ஹ்... ம்ம்... அ... து... நீங்... க... நா... ன்...'' - ஜானகியால் சத்தியமாய் முடியவில்லை. வார்த்தைகள் திக்கும் போதே, கண்கள் அவள் மேனியில் படர்ந்திருந்த ஸ்ரீராமின் கைகளின் மீது படர்ந்து மீண்டன.

அவளது செய்கையைப் புரிந்து கொண்டவன் போல், கைகளை அவன் சட்டென தளர்த்த,

''ஹய்யோ... இல்லை... இல்லை.. நீங்க வச்சுக் கோங்க... நான் அதுக்காக சொல்லலை!'' மிக மிக அவசரமாய் மொழிந்துவிட்டு, தான் மொழிந்ததன் அர்த்தம் விளங்கிய மாத்திரத்தில் கைகளால் முகத்தை மூடிக் கொண்டாள் ஜானகி.

''அடடா!! எனக்கென்னமோ நமக்கு மூணு வயசில பொண்ணு இருக்க மாதிரியே தோணலை... ஃபஸ்ட் நைட் ரூம்ல இருக்க ஃபீலிங் வருது!'' என்றவன், அவளை மீண்டும் அணைத்துக் கொள்ளத் தயங்கவில்லை.

''போங்கத்தான்!'' என்று சிணுங்கிய போதும், தயக் கத்தின் ஓர் பகுதி அவளை விட்டு மறைந்து போயிருந் தது!!

''ஹ்ம்ம். இப்போ கொஞ்சம் தைரியம் வந்திருச்சு போலவே? சொல்ல வந்ததை ராகம் இழுக்காம சீக்கிரம் சொல்லி முடிச்சா ஜானுக்கு ஓர் கிஃப்ட் இருக்கு!'' என்றான் ஸ்ரீராமன், அவளது கன்னத்தில் கோலமிட்ட வாறே.

''அது... அ... து...''

''ராகம் இழுக்கக் கூடாதுன்னு சொன்னேன்... ஹ்ம்ம் ஒழுங்கா சொல்லு!''

''அது... நான்... எனக்கு.. ஹ்ம்ம்... இல்லை எனக்கும் உங்களுக்கும் ஏணி வச்சா கூட எட்டாது... அப்படி யிருக்கும் போது... இன்னைக்கு சாயங்காலம் கூட நாய்க்கு முழு தேங்கா ஒட்டுமான்னு நினைச்சேன்...'' - அவனது முகத்தைப் பாராமலே தன் தயக்கத்தை முன் வைத்தவள்,



அவனிடம் பதிலில்லாமல் போகவும், மெல்ல நிமிர்ந்து ''நிஜமாவே என்னை உங்களுக்குப் பிடிச்சிருக்கா அத்தான்?'' என்றாள் பரிதாபமாய்!!

அவனது பதிலுக்காய் அவள் காத்திருக்க, அவனோ அவளது காதுகளைப் பற்றி இந்தப் பக்கமும் அந்தப் பக்கமும் பார்த்துக் கொண்டிருந்தான்.

அவளது காதுகளில் ''ஒ...'' என்று ஒரு முறை சத்தமாக கத்தினான்.

காதைத் தேய்த்துவிட்டுக் கொண்டு ''என்னத்தான்?'' - அவள் புரியாமல் வினவ,

இப்போது தலையை இந்தப் பக்கமும், அந்தப் பக்கமும் திருப்பி, உச்சந்தலையில் கை வைத்துப் பார்த்தான்.

மேலும் குழம்பி, ''என்னத்தான்?'' என்றான் ஜானகி, விளங்காத பார்வையுடன்.

''இல்லை... உனக்கு காது சரியா கேட்குதான்னு பார்த்தேன்... காது கேட்கிற மாதிரிதான் இருக்கு... கேட் டதைப் புரிஞ்சுக்க முடியாத அளவுக்கு மூளை குழம்பிப் போச்சோன்னு ஒரு சந்தேகம்!'' என்று விட்டு, மேலும் அவளது தலையை ஆராய்வது போல் பாவனை செய் தான்.

தன்மீது அவன் கொண்ட காதலை அவன் வாய் வழியே அறிந்திருந்த நிலையிலும், இந்தக் கேள்வியைக் கேட்பது தப்பென்று தோன்றியது ஜானகிக்கு! தன் தவறு புரிந்த வினாடி, ''மன்னிச்சுக்கோங்க அத்தான்!'' என்றான் மென் குரலில்.

அப்போதும் அவன் அசையாமலிருக்க, மீண்டும் ''மன்னிச்சுக்கோங்க அத்தான்'' என்றாள் மனைவி.

அப்போதும் மௌனமே!

மீண்டும் மன்னிப்பு!

மீண்டும் மௌனம்!

மீண்டும் மன்னிப்பு! இப்போது லேசான கண்ணீருடன்!!

மீண்டும் மௌனம்! இப்போது கண்ணில் சிறு கனலுடன்!!

மீண்டும் மன்னிப்பு! இப்போது கன்னம் நனைந்த கண்ணீருடன்!!

மீண்டும் மௌனம்! இப்போது கண்ணில் பெரும் கனல்!!

மீண்டும் மன்னிப்பு!! இப்போது, ஜானகியின் கைகள் அவனது கழுத்தைக் கோர்த்திருக்க, உதடுகள் அவனது கன்னத்தில் மாறி மாறி முத்தம் வைத்துக் கொண்டிருந்தன!!

ஸ்ரீராமனின் மௌனம் சட்டென கலைந்தது! ''இது நல்ல பிள்ளைக்கு அழகு!!'' என்றவன், அவளது செயல்களை தனதாக்கிக் கொண்டான்.

முத்தங்கள் சற்றே மௌனிக்க, ''எனக்கு நீ தகுதியானவளா என்ற பேச்சை இத்தோட விட்டுடணும் ஜானகி! அப்படிப் பார்த்தா... உன்னோட குணத்திற்கும், நீ காட்டுற பாசத்துக்கும், நாலையும் யோசிச்சு நீ எடுக்கிற முடிவுக்கும், பிள்ளை வளர்க்கிற உன்னோட நேர்த்திக்கும், வீட்டைப் பராமரிக்கிற உன்னோட



திறமைக்கும்... நான் கால் தூசி கூடப் பெறமாட்டேன்! புரிஞ்சுதா?'' என்றவன்,

''புருஷன் - பெண்டாட்டி உறவுங்கிறது தராசு கிடையாது... ரெண்டு பேரும் எல்லாத்திலையும் சரிக்கு சரி இருக்கிறதுக்கு! ஒரு விஷயத்தில... நான் தாழ்ந்து நின்னா, இன்னொண்ணுல உயர்ந்து நிக்கப் போறேன்! எல்லாமே, அளவா அளந்து வைக்கப் பட்டிருந்தா அது வாழ்க்கையில்லை! மளிகை கடை!!'' என்றான் முடிவு போல.

''ம்ம். சரி அத்தான்!'' என்றவளின் கண்கள், சட்டென கடிகாரத்தின் மீது பதிய,

''ஹய்யோ, மணியைப் பார்த்தீங்களா அத்தான்? ரெண்டே கால் ஆகப் போகுது! தூங்கப் போலாமா?'' என்று கூறியவாறே, அவசரம் காட்டி அவனது மடியிலிருந்து எழுந்தாள்.

''தூங்குறதா? லூசாப்பா நீ!?'' என்பது போல் அவளைப் பார்த்த ஸ்ரீராமன்,

''தூங்கறது இருக்கட்டும்! முதல்ல நான் உனக்கு ஒரு கிஃப்ட் கொடுக்கிறேன்னு சொன்னேனே... அது என்னன்னு கேட்டியா?'' என்று எடுத்துக் கொடுத்தான்.

''ஆமா இல்ல... ஏதோ தரேன்னு சொன்னீங்களே? தாங்க அத்தான்!'' என்றாள் ஜானகியும் ஆசையாக.

''சரி... அதுக்கு சில பல மரியாதைகளை நீ எனக்கு செஞ்சாகணும்... அந்த மரியாதைகளை அப்புறம் பார்க்கலாம்... முதல்ல என்னோட லேப்டாப் பேக்கை எடுத்திட்டு வா...'' என்று மனைவியை ஏவினான்.

அவனது வாக்கியத்தின் முன் பாதி புரியாவிட்டாலும், பின் பாதியை அச்சுப் பிசகாமல் செய்தாள் மனையாள். கடமை மனைவியன்றோ!!

அவள் வந்ததும், ''அந்த பேகை கீழ வச்சுட்டு, இப்படி வந்து உட்காரு'' என்றான் ஸ்ரீராமன், தன் மடியைக் காட்டி.

சற்றே தயங்கினாலும், கணவனின் பார்வையில் கனல் கூடுவதைக் கண்ட ஜானகி அவனது மடியில் அமர்ந்தாள்.

''ம்ம். கண்ணை மூடு!!''

ஜானகி கண் மூடி காத்திருக்க, ஸ்ரீராமின் கரங்கள் வாங்கி வந்திருந்த தங்கச் சரடை எடுத்து, மனையவளின் மென் கழுத்தில் அணிவித்தன!! அணிவித்தலுக்கு முன்னே ஓர் முத்தம், பின்னே இரு முத்தம்!! மொத்தமாய் மூன்று முடிச்சுக்களும் முத்தத்தால் போடப்பட்டன!!

தங்கத்தின் ஸ்பரிசத்தை விடவும் அவனது ஸ்பரிசத்தில் சிலிர்த்த, கண் திறந்த ஜானகிக்கு ஏகப்பட்ட வியப்பு!!

''அத்தான்... இது... இது...'' என அவள் திக்க, வார்த்தைகளின்றி கண்களால் ஆமோதித்தான் கணவன்!

''நன்றிங்க அத்தான்... ஹய்யோ... ரொம்ப அழகா இருக்குது அத்தான்... எப்ப வாங்குனீங்க... காலையிலேவா... ரொம்ப அழகு அத்தான்...'' - சிறு பெண்ணாய் அவள் குதூகலித்ததைக் கண்களில் ஆசையுடன் பார்த்திருந்தான் கணவன்.



ஆனால், சற்று நேரத்திலேயே அந்தக் குதூகலத்தின் இடத்தை தாய்மை பற்றிக் கொள்ள, ''அம்முக்குட்டிக்கு எதுவும் வாங்கி இருக்கீங்களா? எனக்கு மட்டும்ன்னா... பிள்ளை ஏங்கிப் போயிரும்!'' என்றாள் சிறு வருத்தத்துடன்.

அவளது மூக்கைப் பிடித்து ஆட்டியவன், ''சீ, லூசு! இந்தத் தங்கச் செயினைப் பார்த்தா... உன்னை விட அவ தான் துள்ளிக் குதிப்பா! அந்தப் பக்கத்து வீட்டு ஆன்டியோட மூக்கை எப்படா உடைக்கலாம்ன்னு காத்திட்டு இல்ல இருக்கு, நம்ம செல்லக் குட்டி! இப்படியொரு வாய்ப்பை விடுவாளா என்ன?'' என்றான் சிரிப்புடன்.

அவன் சொன்னது சரியென்று படவே ஜானகியும் சிரித்தாள்.

''அச்சோ... ஆமா அத்தான்! அவங்களைப் பார்த்தாலே இதுக்குப் பிடிக்கலை! பட்டு பட்டுன்னு எதுனா சொல்லிடுது! ரொம்பத் துடுக்குத் தனம்... சொல்லி வைக்கணும்!'' என்று பெண்ணின் துடுக்குத் தனத்தை எண்ணிக் கவலையும் பட்டாள்!

பெற்றோர் இருவருமாய் பெண்ணைப் பற்றிய இனிய கற்பனையில் சிறிது நேரம் மூழ்கி இருந்தனர்.

சிறிது நேரத்தில் ''அத்தான்... மணி ஆகிட்டே இருக்கே? படுக்கப் போலாமா?'' என ஜானகி எழ.

''எங்க போறே? நான் உனக்கு கிஃப்ட் கொடுத்தேன் இல்ல... நீ எனக்குப் பதிலுக்கு ஏதாவது கிஃப்ட் கொடுக்க வேணாம்? நீ பாட்டுக்குப் போய்ட்டே இருக்கே?''

என்றான் கணவன், அவளது கைகளைப் பிடித்து, தன் மீது சாய்த்துக் கொண்டவாறே.

''நானா? கிஃப்ட்-டா? என்கிட்டே ஏது அத்தான்... காசு? நீங்க இல்லாம நான் எங்க போய்... என்ன வாங்கு வேன்?'' - மிகவும் குழம்பிப் போனாள் ஜானகி.

''வாங்கித் தான் கொடுக்கணும்ன்னு இல்லையே? உன்கிட்ட இருக்கிறதைக் கொடு!'' - ஸ்ரீராமன் விடாது கேட்க,

''என்கிட்டே இருக்கிறதா? என்கிட்டே என்ன இருக்கு? என்ன வேணும்னாலும் கேளுங்க அத்தான்... தரேன்!'' - அவன் கேட்பது புரியாத போதும், தயங்காமல் உறுதி கொடுத்தாள் மனைவி.

கையணைப்பில் இருந்தவளின் முகத்தோடு முகம் வைத்து, காதோடு ரகசியம் பேசியவன், ''நீ!'' என மொழிந்தான்!

ஓர் நிமிடம் திகைத்த மனையாள், அவன் கேட்டது புரிந்ததும், சந்தோஷமும் வெட்கமும் சம பங்காய் சங்கமிக்க, அவனுடன் தன்னைக் கலந்தாள்!

வருடங்கள் பல கடந்தும் உணரப் படாத அவர்களது நேசம், நிமிடங்களுள் உணரப்பட்டு, வருடங்கள் தாண்டியும் காலைப்பனியாய் சிரிக்கட்டும்!!